உ

[illegible]

தத் சத் பரப்பிரம பரிபூரணம.

ஸ்ரீ ஆத்துமாநந்த சுவாமிகளியற்றிய

# ஆத்துமாநந்த விளக்கம்

மூலமும்

ஷெடி சுவாமிகள் மாணாக்கரா

மூலனூர்

எ. ஜெனமல்லுக்கவுண்டரவர்களியற்றிய

## காண்டிகை உரையும்

---

மதுரை

மீ. முருகேசம்பிள்ளை அவர்களால்

பார்வையிடப்பெற்று

---

திண்டுக்கல்

ஆத்துமாநந்தா அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

---

இரண்டாம் பதிப்பு.

---

1930.

1105-ம் ஆண்டு சுக்கில வருட

காப்பி ரிஜிஸ்தர் செய்யப்பட்டது] [விலை ரூ. 1--4--0.

கணபதி துணை.

# ஆத்துமாநந்த விளக்கம்.

## நூல் உரைகளின் வரலாறு.

இந்நூலானது ஆத்துமாநந்தர் என்னும் ஆசிரியரால் செய்யப்பட்டது. இந்நூற்குப் பெயர் ஆத்துமாநந்த விளக்கம் என வழங்குகின்றது. ஆத்துமாநந்தராற் செய்ததுபற்றி இது கர்த்தாவாகுபெயரன்று. வேறு யாது பெயர்? எனின், இந்நூலாசிரியரது ஆசிரியரால் இனிக் கூறப்படுங் காரணம் பற்றி இடப்பட்ட காரணவுண்மையாகு பெயரென வுணர்க.

இந்நூல் ஆசிரிய விருத்தம், வெண்பா, கட்டளைக்கலித் துறை, என்னும் மூவகைப்பாக்களாலமைந்து ஒன்பது இயல்களாகப் பிரிவையடைந்திருக்கின்றது. அவற்றின் பெயர்கள் ஞானசாதனவியல், நிலையியல், பயனியல், அடைக்கலவியல், பொய்வேடவொழிபியல், அவிவேகியியல், இரங்கலியல், உற்றுரைத்தலியல், உறுவதுகூறலியல், என்பனவாம். இவற்றுள் ஒவ்வோரியலோடும் அவ்வவ்வியற் பாக்களின் கருத்து ஒருவாறு ஒத்திருப்பனவன்றி முழுவதும் ஒத்திருக்கமாட்டா. அஃது உணர்த்துவதற்காகவே இவ்வரலாறு எழுதப்பட்டது. தனது மதுர ரசத்தால் வியாபிக்கப்பட்ட கோணற்கரும்பு அக்கோணுதற்றன்மையால் தின்போர்க்கு வெறுப்பு விடயமாகாமல் விருப்பு விடயமேயாகுமோ, அதனைச் சுகக்கிற்கேகா

வாகிய ஆன்மஞானத்தில் உபயோகிகளாகிய அருத்தங்களால் விபாகிக்கப்பட்ட அப்பாக்கள் பொருளைக்கத்தால் அவ்வவ் வியற்பெயரோடு ஏகதேசம் வேறுபடுதல் காரணமாகச் சிறு ஞாநிகளுக்கு வெறுப்பு விடயமாகாது. விருப்பு விடயமே யாமெனவறிக. இங்ஙனமிருத்தற்குக் காரணம் இக்கவிகளை ஆரம்பிக்கும்போது நூலாக்கக்கருதி ஆரம்பிக்கவில்லை. மற்றியாதுபற்றி ஆரம்பித்தனெனின்? இந்நூலாசிரியர் திருநெல்வேலிக்கடுத்த குறுக்குத்துறையில் வசிக்குங்கால் அதற்குப் பிற்காலத்து அக்குறுக்குத் துறையில் வசித்துத் தற்காலம் பரிபூரணமாகிய பிரம நிஷ்ட பண்டித பிரஹ்மஸ்ரீ சிவானந்த சுவாமிகள் தமக்கு நண்பாய் விளங்கும் இந்நூலாசிரியரது குருமூர்த்தியாகிய ஆன்மாராம பராந்த சிந்துவாக விளங்கிய ஸ்ரீஸ்ரீ முத்தானந்த சுவாமிகளுக்கு க்ஷேம சமாச்சாரங்களைக் குறிக்க எழுதுங் கடிதங்களும் முதலிற் றுதிரூபமாகத் தலைப்பில் ஒவ்வொரு செய்யுள் வரைந்து பின்னர்க் குறித்த விஷயங்களை யெழுதுவது வழக்கம். அவற்றுள் ஒரு செய்யுள் வருமாறு "முன்னமே நம்மையாண்ட முத்தனுஞ் சுகவையன்றிப், பின்னையா ருள்ளா ரிந்தப்பெருங்கடற் புவியிற் கீழ்மே, லன்னவனடியே தஞ்சமென்னயா மடைவேமானுன்" மன்னியவின்ப வீட்டில் வாழ்வது திண்ணந்தானே" எனவரும். மற்றும் பலவுள. இவை இப்பாயிரத்துள்ள சாதுக்களுக்கும் அன்பர்களுக்குந் தெரியாததன்று. இங்ஙனம் மேற்கூறிய சுவாமிகள் எழுதக்கேட்டிருந்ததாலும் ஸ்ரீமுத்தானந்த தேசிகர்மீது துதிரூபமாக இந்நூலின் மூன்றாவது முதல் பன்னிரண்டாவது வரையுள்ள பத்துச் செய்யுட்கள் கூறினர். பின்னர் அதுகாரணமாக ஒவ்வொரு காலங்களில் தமக்குத்

தோன்றிய வநுபவங்களை அப்போதப்போது கவிகளாக்கிச் சுமார் ஐந்தாறு மாசங்களானபின் அவற்றைக் கூட்டிப் பார்க்குமிடத்து நூற்றைம்பது கவிகளுக்கு மேலாயின. அப்பால் அவற்றைக்கொண்டு சென்று தமது ஆசிரியராகிய ஸ்ரீ முத்தானந்த சுவாமிகளது திருவடியில் வைத்துவணங்க, அப்பாக்களின் கருத்துக்களைத் தம்மோடு சகவாசியாகிய ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலைச் சுவாமிகளுந் தாமும் உய்த்துணர்ந்து அவ்வொவ்வொரு பாக்களும் நேராகவாவது பரம்பரையாகவாவது ஆனந்த சொரூபமாகிய ஆத்துமாவையே விளக்குந் தன்மையையறிந்து இப்பாக்களை ஓர் நூலாக்கி அதற்கு ஆத்துமாநந்த விளக்கமெனக் காரணப்பெயரிட்டுக்கொண்டு வருகவென்று ஆஞ்ஞாபிக்க அவ்வாறே இவ்வாசிரியர் அப்பாக்களின் பொருணோக்கங்களை ஒருவாறநுசரித்துப் பிரிக்குமிடத்து ஒன்பது வகையாகப் பிரிவுபட்டமையால் அவ்வொன்பதிற்கும் மேற்கூறிய முறையே ஞானசாதனமுதல் உறுவது கூறல்வரையும் பெயர்களைக் கற்பித்துச் சாதனவியலிற் குறைவுபட்டிருக்கின்ற உறுப்புக்களைச் சில கவிகள் சொல்லி நிரப்பி இச்குருமூர்த்தியைத் துரியவாச்சிரமத்தின்பொருட்டு அடைதற்கு முன்னரே வாக்கியோபதேசத்தாலும், சாஸ்திரசிரவணத்தாலும் முறையேயடையப்பட்ட திருப்போரூர் ஸ்ரீ சிதம்பர தேசிகர், சோழவந்தான் ஸ்ரீ சிவப்பிரகாச தேசிகர் ஆகிய இவர்களின் தோத்திரப் பாக்களையியற்றி முறையே முன்னைத் [illegible] ஈற்றில் வாழ்த்துக்களைப் பொருந்தவமைத்து நூற்றொருபது பாக்களாற் பூர்த்திசெய்து ஆத்துமாநந்த விளக்கமெனப் பெயர்வைத்தனர். அக்காலத்தில் இவற்றைக் [illegible] இவ்வாசிரியரால் அறிந்த எனது பிரேரணையால் முத்தாந்

மாயூரம் மகா-ள-ள-ஸ்ரீ மு. சு. சி. ஆ. சுப்பாசெட்டியாரவர்கள் செய்த பொருளுதவியைக்கொண்டு இந்நூல்மூலம் 1910 வது வருஷத்தில் அச்சிட்டு கொல்லம் 1086.ம் ஹூ சித்திரை மீ சிங்கிலிபட்டி மடத்தில் நடந்த ஸ்ரீமத்சங்கராச்சாரிய சுவாமிகள் ஜயந்தி மஹோற்சவத்தில் ஸ்ரீமத் முத்தானந்த சுவாமிகள், ஸ்ரீமத் அருணாசலச் சுவாமிகள் முன்னிலையில் சாதுக்களும் அன்பர்களும் நிறைந்த சபையில் பொன்மயபுரம் மகா-ள-ள-ஸ்ரீ இலக்கண முத்துக்கவிராயரவர்கள், சேற்றூர் கணபதிக் கவிராயரவர்கள் ஆகிய இருவர்களாலும் அரங்கேற்றி வெளியிடப்பட்டது.

அப்பால் ஆசிரியர் திருப்புடைமருதூரில் வசிக்குங்கால் தேசயாத்திரைபண்ணி அவ்விடத்திற்கு வந்த வடமதுரை ஸ்ரீ கன்னியப்பச்சுவாமிகள் இந்நூற்கருத்தை முற்றுஞ் சிரவணஞ்செய்து மிகுந்த வியப்படைந்து இக்காலத்திலேயே (சுவாமிகள் காலத்திலேயே) இதற்கு உரையெழுதி முடித்துவிடவேண்டும். இல்லாவிடில் பொருள்கள் மாறுபட்டுப் போமென்று பலகாற் கேட்டுக்கொண்டதற்கிணங்கி 1095-ம் ஹூ தமது மாணாக்கராகிய முள்ளூர் செனமல்லுக்கவுண்டரவர்களால் அக்கன்னியப்பச்சுவாமிகள் கேட்டுக்கொண்டபடியே பதவுரை, பொழிப்புரை, கருத்துரை என்று கூறுகின்ற மூவகையுரையுஞ் செய்வித்துத் தாமே பரிசோதித்துச் சிற்சில பாக்களுக்கு உதாரணத்தோடு விசேடவுரையுமெழுதி அவ்வியாக்கியானக்க விளக்கவுரையைப் பிரஹ்ம நிஷ்ட பண்டித பிரஹ்மஸ்ரீ சிவானந்த சுவாமிகளிடங்காட்ட அவர்கள் இவ்வாசிரியரைக் கூட வைத்துக்கொண்டு முற்றும் பரிசோ

தித்துச் சிறப்புக்கவியுங் கொடுத்துக் காண்டிகையுரை யென்று சிறப்புப் பெயரிட்டு வழங்கச் செய்தார்கள். முற்றும் பரிசோதித்திருக்கிறார்களென்பது அவர்கள் கூறிய உரைச்சிறப்பு மூன்றாவது கவியால் நன்குவிளங்கும்.

அப்பால் நூலாசிரியர் அரிகேசநல்லூரில் வசிக்குங்கால் 1098ம் ௵ பங்குனி மாசத்தில் அரிகேசநல்லூர் இயலிசை உபயபாரதி முத்துச்சுப்பையரவர்கள், பிரஹ்ம ஸ்ரீ ஹரிஹர ஐயரவர்கள், மகா-ள-ள-ஸ்ரீ பிரமநாயகம் பிள்ளையவர்கள், வீரவநல்லூர் மகா-ள-ள-ஸ்ரீ வை. சு. ந. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள் ஆகிய இவ்வுத்தமர்களுக்கு இந்நூலை அச்சிட்டு முடிக்கவேண்டுமென்று மிகுந்த விருப்பமுளதாய்த் தாங்களே பொருள் யாசிக்கத்துணிந்து நூலாசிரியரைச் சாக்ஷிமாத்திரமாகச் சகாயத்திற்கு வரவேண்டுமென்று உடம்படுத்திக் கொண்டு அவ்விடங்களில் யாசித்தது சுமார் ரூபா இருநூறும் நூலாசிரியரவர்கள் உத்திரவின்படி யானும் முள்ளூர் சென்னமல்லுக் கவுண்டரவர்களுமாகத் தூற்றுக்குடி, முதலிய இடங்களில் யாசித்தது சுமார் ரூபா இருநூறும் ஆக ரூபா நானூற்றால் இந்நூல் முதல் பதிப்பு பாளையங்கோட்டை பிரிண்டிங் ஆபீசில் என்னால் புரூப் பார்த்து அச்சிடப்பட்டது.

இந்நூலின் விஷயமாக ஓர் வியப்புத் தோன்றுகின்றது. அஃதியாதெனில் இந்நூலுக் குரையெழுதி சுமார் நாலைந்து வருடங்களாயின. இதுவரையும் இந்நூலிலுள்ள இரண்டொரு செய்யுட்களைத் தவிர மற்றவைகளுக்கு மேற்கோள் காட்டவில்லை. இந்நூல் முதல் பதிப்பு அச்சாகுங்காலமாகிய 1099 ௵ ஐப்பசி மீ" முதல் நூலாசிரியர் பஞ்சதசி யென்னும் வே

தாந்த சாஸ்திர ஆராய்ச்சி பண்ணியதன் மேல் மேற்கூறிய கவிகளுக்கு உதாரணங்களை ஷெடி பஞ்சதசி முதலிய சிற்சில சாஸ்திரங்களிலிருந்து எடுத்துக் காட்டியிருக்கின்றனர். ஆகவே அவ்வுதாரணங்கள் முன் பார்க்காததாக இருந்து தற்காலப் பார்வையால் விளங்கினதாகத் தோற்றுகிறது. அவ்வாறின்றி முன்னமே தெரிந்திருக்குமானால் உரையெழுதிய முதற்காலத்திலேயே எடுத்துக்காட்டியிருக்கக்கூடும். அங்ஙனமில்லாமையால் தற்காலமே தெரிந்திருக்கிறது. பெரும்பாலும் பஞ்சதசியே உதாரணமாக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு நூல் பார்க்காதிருக்கவும் அந்நூலிலுள்ள அருமையான அருத்தங்களெல்லாம் அக்கவிகளில் பெரும்பாலும் நிறைந்திருக்கின்றன. இதுவே இங்கு எனது மனத்திற்றோன்றிய வியப்புக்குக் காரணமாம்.

இங்ஙனம்,

வீ. வீரவாகு பிள்ளை.

வீரபாண்டியபுரம்.

சிவமயம்.

# நூற்சிறப்புக்கவி.

அம்மழ்ப் பிரஹ்ம ஸ்ரீ சிவானந்த சுவாமிகளியற்றிய

## அறுசீர்க்கழி நெடிலடியா சிரிய விருத்தம்.

சொல்லாருஞ் சிருங்கைவளர் துறவியர் கோன் பதமலரே
சூடுந்தூயோ, னெல்லாருந் தனைப்போல வின்பமாக் கடலாட
வினிய சொல்லாற், கல்லாரு மனமுநனி கசிந்துருக வருள்
புரிவோன் காமமாதிப், பொல்லாத குணங்களை யடைந்த
வர் பாற் புகாதுகொலை புரியும் வீரன். (1)

வந்தோரா மிவன்றிருமுன் மனமகிழ்க்காண் கிலமின்ப வாரி
யாறே, மந்தோரின் நாளளவு மண்ணலிவன் றனையடையா
தாயுளீர்ந்தோர், சிந்தோதா னிவன்கருணைத் திவமான மிலை
யினியான் செய்வதென்னே, தந்தோமென் றேறிவன் றன்
பாடியா டுவெமெனத் தக்கோரெல்லாம். (2)

சந்ததமும் புகழ்ந்துபணி தன்மையினோன் சந்திரனேர் வதனத்
தோங்கு, மந்தநகை யான்மறையீ ரொளிர்வசனம் வழங்கி
யன்பர் மனத்துணின்ற, வந்தகா ரங்கொலைத்தவ் வானந்தப்
பேரொளியே யாக்கி யாள்வோ, னெந்தமா ருயிராமே யிலங்
குழுத்தா னந்தனென் போனிணையில் வள்ளல். (3)

அன்னவன்பொன் னடிசூடு மாத்துமா நந்தனெனு மறவோன்
யாரு, மின்னலொழிந் தானந்த வீடெய்த நான்மறையி னீறு
சொன்ன, பன்னருநற் பொருளையெலா நன்காய்ந்து பகர்ந்த
னன்றன் பெயரா லோர் நூல், சொன்னலமும் பொருணல
முந் துலங்கவின் னோர் சிறந்துளங்கச் சுகமாய் மாதோ. (4)

சிவஞானபுரம்

மகா-ள-ள-ஸ்ரீ இலக்கணமுத்துக் கவிராயரவர்களியற்றிய

## அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

கடிமனவன் சுறவொன்றே பிறவுமுறைந் தருந்துயரங் காட்டும் பொல்லாக், கொடும்பவசா கரத்திடைவீழ்ந் துழன்றுதுணை யறியாது குலைவோர்க் கம்மா, நெடுங்கதியாங் கரைசேய்த்தன் றணிக்காமற் றதற்கேகு நெறியீ தாமென், றடிமயற்கச் சனமொழிக்கு மொளியாநன் மொழியாங்காங்கணி பெற்றோங்க. (1)

புலமையியான் மாநக்க விளக்கமெனப் புகலுமியற் புனை பொன்றிக்கக், தலமையச் செய்தளித்தான் விராகமுப ரதிபிரண்டுந் தழுவ வாய்ந்த, வலமைஞா னம்படைத்துச் சிவவேடப் பொலிவுமுள பாறுவுண்மை, நலமுமலி தவனுன்மா நந்தனெனப் புவிபுகழ்நன் னுமன் மாதோ. (2)

இராஜவல்லிபுரம் என்று வழங்கிவருஞ் செப்பறை

மகா-ா-ா-ஸ்ரீ சங்கரசுப்பிரமணியபிள்ளையவர்க ளியற்றிய

## நிலைமண்டில ஆசிரியப்பா.

பூமக ளுதற்கொரு வாமநற் றிலகமா ய்
நாமகள் வளர்வுறு சேமநல் லரங்கா ய்
வாதவூரடிகளி னீதமெய் வாக்கா ற்
பழம்பதி யென்ன விளம்பிடப் பெற்றதாய் ப்
பொலிதரு பாண்டிப் புண்ணிய நாட்டி ன்
மலிவள நெல்லையின் வடகீழ் பாலி ற்
காவத மைந்தினின் மேவுறு மகுட ய
பட்டினத் தின்கட் பட்டினத் தடி கா
ளெனத்துற வியல்பு மனத்தினு முடைத்தா ய்
வதிதரு முத்தானந்தனவண் சீடரு ட்
கதிதரு ஞான கனநா விறுதியா ப்
பல்பல வுணர்ந்த வலகிலாப் புகழோ ன்
ஆத்துமாநந்தன் ஆத்துமாநந் த
விளக்கமென் றெருநூ லுளக்கந்த மக ளி
லேற்றியில் வுலகி னுற்றிசை யிருளை ந்
நீக்கின னம்மநிகழ்ச்சியீ தோர்ந் து
பாக்கிய மனைத்தும் பயிலுமெட் டயபு ரங்
குலவிய முத்துக் குமார புரத்தி னி
னிலவிய ரெட்டியார் நிலைமா புதிக் க
ஆண்டிலே டனைய னீண்டதொல் லிசை ய
னற்குண மோருரு நண்ணியில் வுலகி ற்
புக்கது பொன்றலோ புருடனே யாத லி

ஞெப்பய லெவருமில் சப்பைய வாண்ட கை
தவறிலிந் நூலின் புவரிகு மூல கு
புகரதொன் றின்றி நுகர்வுறக் கரு தி
எழுதா வெழுத்தினில் விழுமிதா வெழு தி
யுதவினன் கைம்மா றெதுவிகற் குள தே

---

வண்ணார் பேட்டை

வெள்ளைக்கோவில் கர்ணம் மகா-ள-ள-ஸ்ரீ சோணாசலம்

பிள்ளையவர்களியற்றிய

நிலைமண்டில ஆசிரியப்பா

திருந்திய வேதச் சிரப்பொரு ளதனை ப்
பொருந்தியின் புற முயல் புண்ணியர்க் குதவி யா
யமைத்த விவேக மாதிய வுறுப்பு ள
சாதன நிலைப்ப னடைந்தார் தன்மையு ம்
பொய்வே டமுமடம் பெய்பவி வேகமு ம்
இறந்த தெய்தவ தற்கிரங் கியலு ந்
துறவுறு வார்க்குத் தூய்மை பொருந் த
வுற்ற துரைக்கவு முறுவது கூற லு
மொன்பா னியலா வமைத்துத் தட னை
செந்தமிழ்ச் செய்யுளிற் சீர்பெறத் தெரிந்தி ங்
கந்தமி லாத்தாமா ந்த விளார் க
மெனப்பெய ரிக்குழுக் கானந்த னிரு தா
னாத்தினி லமைத்துயா மாத்தாமா நந்த ன்

கூறிய நூலினைக் குறைவற வோர்ந் து
தேறிய சாதன சீலரெந் நாளு ம்
அத்து விதமா மமலவா னந் த
சித்தின் மயமாத் திதியுற றிண்ண மே

---

மகா-ள-ள-ஸ்ரீ ரெ. வேலாயுதம் பிள்ளையவர்களியற்றிய

## பதினான்கு சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

உலகெலாந் தானா யோங்கிய வாத்து மாநந்த விளக்க நல்லறிஞ ருளங்களில் விளங்கி யவர்களுந் தன்போ லுயர்பத மடைகு வான் கருணை, இலகவே யாத்து மாநந்த விளக்க மென்ன வோர் நூலியற்றினான, வீசனை யுருமூன் றாய்க்குரு வடிவா யெழுந்தருள் சிதம்பர சுவாமி, விலகலி லருள்கூர் சிவப்பிர காச வித்தகன் விமலதே சிகனாய், மேம்படு முத்தா னந்த னின் னவர்கண் மெய்ம்மையை விளக்கிட வுணர்ந்து, கலைமார் கருவிப் பகையெலாங் கடந்து காவிநீ றக்கமாமணி மேற், கவினுற விளங்கு மாத்துமா னந்த னென்னு மோர் கருணை மாதவனே.

---

௨

சிவமயம்.

## உரைச் சிறப்புக் கவி.

அரிமழூர் பிரம்மஸ்ரீ சிவானந்த சுவாமிகளியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சீராருந் திருக்கைலவளர் தேசிகபா தமலரே சென்னி சூடும், பேராரு முத்தானந் தக்கருணைப் பெருங்கடலிற் பிறங்குவானந், நாராரு மெய்ஞ்ஞானி யாத்துமா நந்தனவி னல்லைநூற் றுக், காராரும் பொழின் முள்ளூர்ச் செனமல்லூர்க் கவிஞ னுரை கழறி னேனே. (1)

கழறியதன் காரணந்தான் கதிகற்றுத் தனைமதிக்கக் களங்க டோது, முழறி புண்மை யறியாது விடயமதி லுளம்வீழ்த்தி யுழலின்னென்றே, சற்றுமன படக்கியுண்மைச் சுகமுறலே நலமென்று சொரூபந் தோய்பு, மழகுறுநல் வடமதுரைக் கள ளியபடி யடிகள் செய்த வாணைதானே. (2)

நூலுமுரை யுந்தாமே நுவன்றவர்தம் பெருமையினை நோக்கு வோர்க்கு, மேலுமேலும் வியக்க விளக்குமெனில் யாமுரைக் கன் மிகையே யன்றோ, ஆறுமா ணவராத்து மாநந்த னூ லொரிரை யமைந்து நிற்றல், பாலுடன்றேன் கலந்துநிற்கும் பண்பாதும் பண்புகர் சேர்பண்பு மாமே. (3)

---

அரிகேச னல்லூர்

பிரஹ்மஸ்ரீ பு. வ. முத்துச்சுப்பபாரதி யவர்களியற்றிய

## எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

உளக்கசடு களைநீக்கி முத்தானந்த னுபதேச வமுதருத்தி
யொளிர்ஞானத்தை, முளைக்கவைத்த பெருமைவியந் தான்
மாநந்தன் முமுக்ஷுகளைப் பியசிக்க முத்தர் மோலி, துளக்கி
யுவப் புறத்தமிழின் செய்யுளாகச் சொல்லியவான்மாநந்த
விளக்க நூற்குக், களக்கமற வியாக்கியான முரைத்தான் முன்
னூர்க் கலைஞானி செனமல்லுக் கவிஞன் மாதோ.

மகா-ள-ள-ஸ்ரீ கந்தசாமியாரவர்களியற்றிய

## நிலைமண்டில ஆசிரியப்பா.

பைங்காற் கொன்றையுஞ் செங்கால் வெட்சியு ஞ்
சேடலுஞ் செருந்தியுங் கோடலும் பகன்றையு ம்
பாசிலைக் குளவியு மாசில்செவ் வந்தியு ம்
மயிலையு மௌவலும் பயில்பூந் தாழையு ங்
குரவமு நரவமுங் குராவுடை யதிரலு ம்
நந்தியுஞ் செயலையுஞ் சந்துமல்லிகையு ம்
சித்திரக் கைவினை வித்தகர் தமது ன்
மெய்த்திறம் விளக்கிய வுய்த்துணர் வோ டு
நன்னிறக் கிழியிற் பன்னிறக் குழம்பி ன்
பொறித்த வெழினியை நெறிப்பட விரித்தெ ன
பன்மலர் துறுத்த நன்மலர்த் தொடைவகு ழ்
பூவிற் பொலிமகன் மேவித் திகழு ங்

கோயிற் பதியுறு சேவற் கொடியுடை ப்
புண்ணியன் றந்தையாங் கண்ணுதற் பரனை ன
மண்ணுள மாந்தர் கண்ணுறு முயர்வு று
முக்கா ணந்தன் கொத்தார் மலர்ப்பு னை
சேவடி படர்ந் தாவுறு முளத்த ன்
உலகு மதனிடை நிலவிய பொருளு ங்
காண்முயற் கொம்பும் வான்முக முளரியு ங்
கதிர்ரிடை யரவு மயிர்றலை யுறீஇ ய
கட்டையிற் கன்வனும் வட்டைசெல் லுநரு க்
கூசாபூமியின் மாசறக் கோன் று
முராத் தினைக் கேருங் காத்தாறு மிலைசே ர்
மராவிடை யுற்றுத் திரவொளி வீச ர்
வெண்பொறும் போலப் பண்பில்பொய் யாமொ ன
ழினைரி யாறு மோனமா ருறுவ ர்
திருந்திய நனிக் தார் பொருந்துமாற் றறு ங்
கண்ணிக் கண்ணி கண்ணுமெய்த் தூறவி ற்
சென்றவன் புலனை வென்றவன சந்த பூ.
யற்றவ னகனைப் பற்றனைப் பற்றி ய
வேதவி றைலை கோதிலா வுறுவ ர்
ஆக்குமா நந்தனன் றேத்திய பெயரா ன்
என்னையு நன்பரு முன்னிய புனித ன்
இம்பர்ச் செய்ந் செம்பொருட் செல்வ ன்
ஆகமி றைவன் காமி றைவ டை
செப்புதற் கரிய வயிராகி பந்த
சமரசத் துடன்வர மபோதசு சாகா த்
சமரா னந்தி மாமுற் றடைந் த

மக்களு மடைந்து தக்கவின் புற வெ
சீர்த்தியுற் றிலகு மாத்தும நந் த
விளக்கமென் றெருநூ றுளக்கறச் செய்தான்
அன்னவன் கண்ட நன்னர்மெய் பிழைக்கு
தெளிவுரை பொன்று வெளிவர வேண்டுமெ ன்
றுள்ளுநர்க் குதவு நள்ளியேய் கொடையுடை க்
கள்ளி யடியுறாஉந் தெள்ளிய முனிவன்
ஆணைதந் தருளத் தாணுவினடி தொழூஉம்
மனநல னுடைய செனமனுக் கொடன்
காண்டிகை புறப்பின் மாண்புரை பியற்றின ன்
இந்நிலம் புகழவஃ தென்றும்வா ழியவே ன

## நூல் உரைச்சிறப்புப் பாயிரம்.

இந் நூலாசிரியர் மாணாக்கர் அரிகேசவல்லூர் பிரஹ்மஸ்ரீ.

M ஹரிஹர ஐயரவர்கள் இயற்றிய

கொச்சகக் கலிப்பா.

சீரார்ந்த நான்மறையுந் செம்முனி யுரைபலவு ம்
காரார்ந் திருமேனிக் கடவுளும்போற் றெடுப்பதிக ம
வாரார்ந் தகிற்கயற்கண் மங்கைபிர விழிகளிப் ப
ஏரார்ந் திரசகத்தா ளிபன்றசபை யினினடிப்போன். (1)

கட்டெட்டு விளையாட விளிதுமகிழ்ந் தியற்றிய தை
நெட்டிற்ற வரைகளுநன் னீர்களுநின் றறிவித்து ம்
மட்டுற்ற மலர்ப்பொழிலின் வளம்வயலின் வளமலிபு ம்
முட்டற்ற மொழிப்புலவர் முத்தமிழ்ச்சங் கம்முழங்கூர். (2)

பாண்டியனாட் டினிலரிகைப் பதியதனி லொளிர்மடத் தே
காண்டகைய கருணையொரா காரமுற்ற தெனக்கதிப்போன்
சேண்டருநாட் டினர்பதமுஞ் சீரியதன் றனையதித்து ப்
பூண்டதற வினன்பூதி பொலிதிரிபுண் டரநுதலான். (3)

கண்பெற்ற நெற்றியினன் கறைபெற்ற கண்டத்த ன்
பெண்பெற்ற பாகத்தன் பிறைபெற்ற செஞ்சடில ன்
வெண்பெற்ற வூர்தியினன் விரைபெற்ற கொன்றையினன்
மண்பெற்ற புன்சமய மருணீக்க மனங்கொண்டு (4)

சங்கரன்கங் காளன்றூர்ச் சடிதானை மானிடனாய் ச்
சங்கரப்பேர்ப் புங்கவனாய்த் தரணிதனிற் சன்மித்தா ப்
பொங்கியபுன் சமயவிருள் போகவறு சமயவொ ளி
யெங்கும்வியா பித்துநிலைத் திலகவெழு ஞானவெல்லோன். (5)

காதார்ந்த கருவிழியார் காமமெனுங் கண்ணிப டா
வேதாந்தி வேதாவும் வெள்ளைநிறத் தியுமாகு ம்
போதார்ந்த மின்னைவினை போற்றுமண்ட னமிசிர னை
வாதால்வென் றயர்சிருங்கை வண் பதியிற் சாரதைக்கு. (6)

பீடமொன்று நிறுவியிந்தப் பேருலகிற் சகற்குருவா ம
பீடுகெழு பெயர்பெற்ற பேரருளா ளன்பத மே
சூடுமுடி யினன்றேற்றத் துடைக்குமுயர் வேதாந்த
வீடில்கடற் குளித்தழியா வின்பமுத்தங் கண்டெடுத்தோன்.
(7)

தான்கண்ட வின்புலகந் தான்காணக் கருணையொடு
வான்கொண்ட வெனப்பொழிவோன் வரகுணன்முத்தானந்
தன்

தேன்கொண்ட காபமையின் செவ்வியநன் மலரடிகள்
ஊண்கொண்ட வுயிர்க்கமுதா வுளங்கொண்டு *சரணடைந்து
(8)

தினைபோற்றி வேதத்தின் சிரப்பொருளைச் சிரவணித் தே
அனம்போன்மற் றதன்பொருளை யாசகற்றிச் சிந்தித் து
மனம்போலும் புலன்வசமா வரத்தெளிந்து புதைத்துளதன்
றனம் போற்றோன்றிய வின்ப சாகரத்தின் மூழ்கினேன். (9)

ஆத்துமா நந்தன்றற் கத்துவிதப் பொருளுரைத் த
சாத்துவிகன் ரௌத்திரமாய்ச் சாற்றவிரைம் பாவத ஞ
னாத்துமவி சாரணையி னன்றெழுந்த வருபூ. தி
பூத்த தமிழ்ப் பாக்கள் பல புகன்றசான் பாற்காட்ட. (10)

கண்டனைத்துப் பாக்களினுட் கருத்தனைத்து நுனித்துணர்ந்து
உண்டுகொண்மற் றிவைக்குரைப்ப வுவமையென வுண்மகிழ்ந்து
கண்டுமொழிக் குறுவிவற்றைக் காரணப்பேர் நூலாக்கி க்
கொண்டுவர வென்றனைக் கொடுக்கமறை மொழியாக (11)

அந்தமொழி யகங்கொண்டாங் கரெடுமுன் றியலாக்கி ச்
செந்தமிழ்ப்பா சிலசேர்த்துச் சீவபரச் சேர்க்கையினை
மந்தமுழு கூடக்களுமுண் மகிழ்ந்தறியச் சாதனமாய்ச்
சந்தமறை யீறறிந்தோர் தங்களுள மின்புறவே. (12)

இயற்றியவந் நூலறிவோர்க் கிறிவின்ப மீவதுவாய்
மயற்றிமிர மகற்றுவதாய் மணிவிளக்கின் வயங்குதலா
லியற்றிருப்பே ரிட்டனனன் மாநந்தவிளக்கமென
வயற்றனடி யவர்களுள்ளத் தார்த்தியும்பூர்த் தியையுறவே (13)

* சரண் - புகலிடம்

அந்நாலை யவனிபுளா ரனைவோரு மறிந்தவித் தை
துன்றுமற் கடக்கேறத் தோற்றஞ்செய் திடவெண்ணி
பொன்னைநும் பூம்பொழில்கள் பொலியுமுத்துக் குமரபு ர
மன்னுஞ்சுப் பையமலோன் மகிழ்ந்தச்சிற் பதிப்பித்தான் 14
தனக்குவமை யிற்சாந்தற் சார்ந்துதமிழ் பயின்றேமு
னெனக்கினிய நண்பன்முன்னூர் எழிற்கவுண்டர் குலதிலகன்
கனக்குழலார் முதன்மூன்று காமமுங்கண் காணுதான்
மனக்குவகை யுறக்கற்ற மாண்வேதாந் தக்கலைஞன். (15)

தனமல்ல தனமுலகிற் றவம் போலத் தக்கதெனு
முனைகல்ல குரவனுரை யுயர்தமிழ்நூ லுட்கருத்தைக்
கனமுள்ள மூன்றுறுப்பிற் காண்டிகையு ரையின்விளக்கிச்
சனமல்லு சகமுழுதுஞ் செறிபுகழ்பெற் றனன்மன்னே. 16)

திருப்போரூர் ஸ்ரீ சிதம்பரதேசிகர்.

சோழவந்தான் ஸ்ரீ சிவப்பிரகாச தேசிகர்.

கோவில்பட்டி ஸ்ரீ முத்தானந்த தேசிகர்.



நூலாசிரியர் ஸ்ரீ ஆத்துமாநந்தர்.

உ

சிவமயம்.

# ஆத்துமாநந்த விளக்கம்.

## மூலமும் உரையும்.

(ஆசீர் வாதரூப மங்கலம்.)

(கலிவிருத்தம்.)

யாவுந் தோன்றி யிருந்தழி வுற்றி டு
மேவன் பாலவ் விணையில்க ணேசனு ம்
தேவ தேவனென் சிற்றறி வுள்ள மு
மேவி நின்று விளம்புக மெய்மை யே

இதன் பதப்பொருள். யாவும் - [சராசரப்பிரபஞ்சங்கள்] எல்லாம், ஏவன்பால் - எவனிடத்தில், தோன்றிஇருந்து அழிவு உற்றிடும் -உண்டாகி நிலைபெற்று நாசத்தையடையுமோ, அ இணையில்- அந்த வொப்பற்ற, கணேசன் ஆம் - விநாயகக் கடவுளாகிய, தேவ தேவன் - தேவர்களுக்கெல்லாந் தேவனானவன், என் சிற்றறிவு உள்ளமும் - எனது கிஞ்சிஞ்ஞஅந்தக்கரணத்திலும், மேவிநின்று- [பெருங்கருணையினால்] விருப்பமுற்றிருந்து, மெய்மை விளம்புக ஆன்ம சொரூபத்தின் உண்மையை அறிவிப்பானாகுக. என்றவாறு,

பொழிப்புரை: சராசரப் பிரபஞ்சங்களெல்லாம் எவனிடத்தில் உண்டாகி நிலைபெற்று நாசத்தையடையுமோ அந்த வொப்பற்றவிநாயகக் கடவுளாகிய தேவர்களுக்கெல்லாந் தேவனானவன் எனது கிஞ்சிஞ்ஞ அந்தக்கரணத்திலும் பெருங்கருணையால் விருப்பமுற்றிருந்து ஆன்மசொரூபத்தின் உண்மையைஅறிவிப்பானாகுக. எ—று

கருத்துரை-விநாயகப்பெருமான் என்னுடைய இருதயத்தில் விளங்கி நின்று உண்மை ஞானத்தை அறிவிப்பானாகுக என்பதாம்.

## [குரு வணக்கம்]

### [திருப்போரூர் ஸ்ரீ சிதம்பர தேசிகர்]

### [விருத்தம்]

1. மனம்வேறு வத்துவினு மென்பரறி யாரதன்று வாகி யத்துந், துனுமொலியா தியி லொன்றுந் தோயாத வதன்வடிவந் தோட மின்றி, யனுபவமா மெனிலதுவத் தனுபவமா மதனு லென் றறைந்தான் ஞான, தினகரனு யமரபுரி விளங்குசிதம் பரகுருவென் சிந்தை யானே (1)

இ-ள். அறியார் - [சுருதிகுரு சுவானுபவங்களால்] உணராதவர்கள், மனம்-அந்தக்கரணத்தை, வத்துவினும்-பிரஹ்மத்தினும், வேறு என்பர்- அந்நியமென்று சொல்லுவார்கள், அது அன்று-அப்படியல்ல [எதனுலெனின்] வாகியத்தும் - [உள்ளிலும்] வெளியிலும், துனும் ஒலியாதியின் - பொருந்துகின்ற சத்தாதி விஷயங்களில், ஒன்றும் தோயாத-ஒன்றையுமடையாத, அதன் வடிவம்- அவ்வந்தக்கரணத்தின் சொரூபமானது, தோடமின்றி-சந்தேகமில்லாமல், அனுபவம் ஆம் எனில்-[ஒருவனுக்கு] அநுபவமாகுமானுல், அது- அவ்வநுபவம்,வத்து அநுபவம்[ஏ]ஆம்-பிரஹமாநுபவமேயாம்,அதனுல் என்று-அக்காரணத்தினுல், [பிரஹமத்திலும் அந்த மனத்தை அந்நியமென்று சொல்வது உண்மையல்ல]என்று, அறைந்தான் - [எனக்கு] உபதேசித்தவராகிய, ஞான தினகரனுய்- ஞானசூரியனுகி, அமரபுரி விளங்கு-திருப்போரூரின்கண்ணே பிரகாசிக்கின்ற, சிதம்பரகுரு - சிதம்பரதேசிகர், என் சிந்தையான் - என்னுடைய இருதயமே கோவிலாக வாழ்வாராக. எ-று.

பொ-ரை. சுருதிகுருசுபானுபவங்களாலுணராதவர்கள் அந்தக் காரணத்தைப் பிரஹ்மத்தினும் அந்நியமென்று சொல்வார்கள் அப்படியல்ல ஏதனுலெனில் உள்ளிலும் வெளியிலும் பொருந்துகின்ற சத்தாதி விஷயங்களில் ஒன்றையுமடையாத அவ்வந்தக்காரணத்தின் சொரூபமானது சந்தேகமில்லாமல் ஒருவனுக்கு அனுபவமாகுமானல் அவ்வநுபவம் பிரஹ்மாநுபவமேயாம் அக்காரணத்தினல் பிரஹ்மத்தினும் அவ்வந்தக்காரணத்தை அந்நியமென்று சொல்வது உண்மையல்லவென்று எனக்குபதேசித்தவராகிய ஞானசூரியனுகித் திருப்போரூரின் கண்ணே பிரகாசிக்கின்ற சிதம்பர தேசிகர் என்னுடைய இருதயமே கோவிலாக வாழ்வாராக. எ—று

அநுபவமே என்பதின் ஏகாரம் பிரிநிலை? — அநுபவமே என்பதின் தேற்றேகாரம் விகாரத்தாற்றெக்கது. அறைந்தான் என்பது வினையாலணையும் பெயர். உபதேசித்தவராகிய என்னுங் குறிப்புப் பெயரெச்சம் சிதம்பர தேசிகர் என்னும் பெயர்கொண்டது. ஞானத்துக்குச் சாதனமாகிய குணங்களை ஞானமென்றாற்போல பிரஹ்மானுபவத்திற்குச் சாதனமாகிய அருவமனத்தின் அநுபவத்தை பிரஹ்மாநுபவம் என்றார்.

க-ரை. சிதம்பர தேசிகர் என் சிந்தையே கோவிலாக வாழ்வாராக. எ-ம் (க)

[வெண்பா]

2. இன்னங் கருவா யிடாவழிபோ ரூரிறைவா
முன்னங் கருவாய் மொழிந்தனையே-என்னுழையும்
பள்ளத்து நீர்போலப் பாய்ந்த சருணைநலம்
விள்ளுந் தரத்ததல வே.

இ—ள். போரூர் இறைவா-திருப்போரூரின்கண் ணெழுந்தருளிய எனது முதல்வராகிய சிதம்பரதேசிகரே, இன்னம்-இனி

மேல், கருஆய்இடாவழி-பிறப்படையாத மார்க்கத்தை, முன்-முன்னொரு நாளில், அங்கு—அத்திருப்போரூரின்கண்ணே, அருவாய்—அருவாய், மொழிந்தனை-[சொப்பனத்தில் எனக்கு] உபதேசித்தருளினீர், என்னுழையும்-[எளியனாகிய] என்னிடத்திலும், பள்ளத்துப்பாய்ந்த—தாழ்ந்த நிலத்தினிடத்து [விரைவிற்] செல்லுகின்ற, நீர்போல-ஜலத்தையொப்பாக, கருணைநலம் [விரைவிற்] செய்த கிருபையாகிய அந்நன்றியானது, விள்ளும் தரத்தது அல-[என்னாற்] சொல்லுந் தரத்தையுடையதல்ல. எ—று.

பொ—ரை. திருப்போரூரின்கண் ணெழுந்தருளிய எனது முதல்வராகிய சிதம்பர தேசிகரே! இனிமேற் பிறப்படையாத மார்க்கத்தை முன்னொருநாளில் அத்திருப்போரூரின்கண்ணே அருவாய்ச் சொப்பனத்தில் எனக்குபதேசித்தருளினீர். எளியேனாகிய என்னிடத்திலும் தாழ்ந்த நிலத்தினிடத்து [விரைவிற்] செல்லுகின்ற ஜலத்தையொப்பாக விரைவிற் செய்த கிருபையாகிய அந்நன்றியானது என்னாற் சொல்லுந்தரத்தையுடையதல்ல. எ—று.

க—ரை. திருப்போரூரின்கண் சிதம்பர தேசிகர் சொப்பனத்தில் விளங்கித் தனக்கு ஞானஉபதேசஞ் செய்த பெருங் கருணையை வியந்தது. எ—ம். (2)

## [சோழவந்தான் ஸ்ரீ சிவப்பிரகாச தேசிகர்]

## [விருத்தம்]

3. தவப்பிரகா சகருளத்துந் தவமுயல்வா ருளத்துமொன்றுச் சாக்ஷியாகி, யெவெப்பிரகா சங்களையு மிலகுவிக்குங் காரணமா யென்றுமொன் றுமாய், நவப்பிரகா சங்களுமாய் நாமடையும் புகலிடமாய் நண்ணு நின்ற, சிவப்பிரகா சன்சரண சிந்தனைவந் தனைகடனஞ் செய்கு வாமே. (3)

இ—ள். தவம்-[இந்திரிய நிக்கிரக முதலிய] தபசையுடைய, பிரகாசகர் உளத்தும்-சுயம்பிரகாச சொரூபராகிய ஜீவன் முத்தர்களுடைய அந்தக்கரணத்திலும், தவம்முயல்வார் உளத்தும்- [இந்திரிய நிக்கிரக முதலிய] தபசில் முயற்சி செய்பவர்களாகிய முமுக்ஷுக்களுடைய அந்தக் கரணத்திலும் [இவ்விருவகையினருமல்லாத பாமரர் முதலிய சர்வப்பிராணிகளுடைய அந்தக்கரணத்திலும்],ஒன்றுச்சாக்ஷியாகி-பொருந்தாமல் [எல்லாவற்றையும் ஏற்றத்தாழ்வின்றி] அறிபவராகியும், எ எப்பிரகாசங்களையும் - [சூரியன் முதலாகிய] எந்த எந்த ஒளிப்பொருள்களையும், இலகுவிக்கும் காரணமாய் - பிரகாசிப்பிக்கும் அவற்றின் காரண வஸ்துவாயும், எல்முன் ஆம்-சூரியன் முதலாகிய, அந்தவப்பிரகாசங்களும் ஆய்-அந்தப்புதுமையாகிய பிரகாச வஸ்துக்களுந்தானே யாகியும், நாம் அடையும் - [சமுசார துக்கத்துக்குப்பயந்த] நாமனைவருஞ் சாருதற்குறிய, புகல்இடம்ஆய்—அடைக்கல ஸ்தானமாகியும், நண்ணுநின்ற-கிடைத்திருக்கின்ற, சிவப்பிரகாசன்-சிவப்பிரகாச தேசிகருடைய, சரண சிந்தனை வந்தனைகள்-திருவடிகளைத் தியானித்தலும் நமஸ்கரித்தலும்,தினம்செய்குவாம்-அநுதினமுஞ்செய்வாம்.எ-று.

பொ-ரை. இந்திரிய நிக்கிரக முதலிய தபசையுடைய சுயம் பிரகாச சொரூபராகிய ஜீவன் முத்தர்களுடைய அந்தக்கரணத்திலும் இந்திரிய நிக்கிரக முதலிய தபசில் முயற்சிசெய்பவர்களாகிய முமுக்ஷுக்களுடைய அந்தக்கரணத்திலும் இவ்விருவகையினருமல்லாதவராகிய பாமரர் முதலிய சர்வப்பிராணிகளுடைய அந்தக்கரணத்திலும் பொருந்தாமல் எல்லாவற்றையும் ஏற்றத் தாழ்வின்றி அறிபவராகியும் சூரியன் முதலாகிய எந்தவெந்த ஒளிப்பொருள்களையும் பிரகாசிப்பிக்கும் அவற்றின்காரண வஸ்துவாகியும் சூரியன் முதலாகிய அந்தப்புதுமையாகிய பிரகாச வஸ்துக்களுந் தானேயாகியும் சமுசார துக்கத்துக்குப் பயந்த நாமனைவருஞ் சாருதற்குரிய அடைக்கல ஸ்தானமாகியும் கிடைத்திருக்கின்ற சிவப்பிரகாச தேசி

கருடைய திருவடிகளை அனுதினமுந் தியானித்தலும் நமஸ்கரித்தலுஞ் செய்வாம். எ-று.

பிரகாசங்கள் என்பன ஆகு பெயர். எச்சவும்மையால் பாமரர் முதலியன வருவிக்கப்பட்டன.

க-ரை. சிவப்பிரகாச தேசிகருடைய திருவடிகளை அனுதினமுந் தியானித்து வணங்குவாம். எ-ம்.

## [கோவிற்பட்டி ஸ்ரீ முத்தாநந்த தேசிகர்]

4 குளிரகற்று டையிற்றோன்று சித்திரப்பே தையினின்
பங் குறித்தத் துசால், வளநளிரை யொழிக்காது மறு
க்க முற்றான் போன்மருளேன் மருளாற் றோன்றி, யுள
சகமின் றகம்புறமுன் னுருவேகா னெனவென்னை யுதியா
வின்ப, விளைவருளி யாண்டமுத்தா னந்தகுரு வடிமு
டியின் மிலேச்சி வாழ்வாம். (4)

இ-ள் குளிர் அகற்று ஆடையில் - [தேகத்துக்குண்டாகும்] குளிரை நீக்குகின்ற [சித்திர] வஸ்திரத்தில், தோன்று சித்திரப் பேதையின் - [எழுதப்பட்டு] விளங்காநின்ற சித்திரப்பெண்ணினிடத்து, இன்பம்குறித்து - சுகத்தை விரும்பி, அத்துசால்-அச்சித்திரவஸ்திரத்தினால், வளநளிரை - [தேகத்துக்குண்டாகும்] மிகுந்த குளிரை, ஒழிக்காது-[போர்த்துப்] போக்கிக்கொள்ளாமல், மறுக்கமுற்றான்போல் - [அச்சித்திரப்பெண்ணைப் பார்த்துப்பார்த்துக்] காமமயக்கமடைந்தவனை யொப்பாக, மருளேல் — [ஆனந்தவடிவப் பிரஹ்மத்தின் கண் கற்பிதமாகத்தோன்றியுள்ள சத்தாதி விஷயங்களின் விருப்பத்தால் ஆன்ம வடிவப் பிரஹ்மமேதானென் றறிந்து பிறவித்துன்பத்தைப் போக்கிக் கொள்ளாமல் அவ்விஷயங்களையே தேடித்தேடி] நீ மயங்காதே, மருளால் - அஞ்ஞானமயக்கத்தால்,

தோன்றி உளசகம் - உண்டாகி யிருக்கப்பட்ட பிரபஞ்சமானது, இன்று - [இரச்சுவிற் சர்ப்பம்போல உண்மையில்] இல்லாததாம், அகம்புறம்-உள்ளிலும் வெளியிலும், உன் உருவே - [பரி பூரணசச்சி தானந்தகனப்பிரஹ்ம மாகிய] உனது எதார்த்த சொரூபத்தையே, காண் என- தரிசிப்பாயென்று, உதியா இன்ப விளைவு அருளி - அநா தியிலே [சித்தித்துள்ள துக்கநிவிருத்தி] சுகப்பிராப்திவடிவ மோ க்ஷமாகிய பயனைக்கொடுத்து, என்னை ஆண்ட - என்னை இரக்ஷித்த, முத்தானந்த குரு அடி-முத்தானந்த தேசிகருடைய திருவடியை, முடியின் மிலைச்சி வாழ்வாம்-சிரசின்மீது சூடிவாழ்வாம் யாம். எ-று.

பொ—ரை, தேகத்துக்குண்டாகும் குளிரை நீக்குகின்ற சித் திரவஸ்திரத்தில் எழுதப்பட்டு விளங்காநின்ற சித்திரப்பெண்ணினி டத்துச்சுகத்தை விரும்பி அச்சித்திரவஸ்திரத்தினால் தேகத்துக் குண்டாகும் மிகுந்த குளிரைப் போக்கிக்கொள்ளாமல் அச்சித்திரப் பெண்ணைப் பார்த்துப் பார்த்துக் காம மயக்கமடைந்தவனை யொப் பாக ஆனந்தவடிவப் பிரஹ்மத்தின்கண்கற்பிதமாகத் தோன்றி யுள்ள சத்தாதி விஷயங்களின் விருப்பத்தால் ஆன்ம வடிவப் பிர ஹ்ம மேதானென்றறிந்து பிறவித்துன்பத்தைப் போக்கிக்கொள் ளாமல் அவ்விஷயங்களையே தேடித்தேடி நீ மயங்காதே, அஞ் ஞான மயக்கத்தா லுண்டாகியிருக்கப்பட்ட பிரபஞ்சமானது இரச் சுவிற் சர்ப்பம்போல உண்மையில் இல்லாததாம், உள்ளிலும் வெளி யிலும் உள்ள பரிபூரண சச்சிதானந்த கனப் பிரஹ்மமாகிய உனது எதார்த்த சொரூபத்தையே தரிசிப்பாயென்று அநாதியிலே சித்தித் துள்ள துக்க நிவிருத்தி சுகப்பிராப்தி வடிவ மோக்ஷமாகிய பயனைக் கொடுத்து என்னை இரக்ஷித்த முத்தானந்த தேசிகருடைய திரு வடியைச் சிரசின்மீது சூடி வாழ்வாம் யாம். எ—று.

க—ரை. எதார்த்த ஞானத்தையும் வீட்டின்பத்தையுந் தந்தரு ளிய முத்தானந்த தேசிகருடைய திருவடியைச் சிரசின்மீது சூடி

டாழ்வாம் யாம். எ—ம்.

5. ஊரினையும் பேரினையு மபிமானித் திறந்துபிறந் தோயா
திந்தப், பாரினையு மென்னையுமொரு பாலனென வரு
ணோக்காற் பார்த்து மாலின், வேரினையு மறக்களைந்து
பரிபூர ணானந்த விமல ஞானச், சீரினையும் பேறினையுந்
தந்தமுத்தா னந்தகுரு தேவே போற்றி. (5)

இ—ள். ஊரினையும் - [சரீரம் வாசஞ்செய்யும்] நகரத்தையும், பேரினையும் -[சரீரத்திற்கிட்டிருக்கும்] நாமத்தையும், அபிமானித்து -[எனது நகரம் எனது நாமம் என்று அவற்றிற்] பற்றுவைத்து, இறந்து பிறந்து - [அவ்வபிமானத்தால்] மரித்தும் ஜனித்தும், ஓயாது-நீங்காமல், இந்தப்பாரில்-இப்பூமியின்கண்ணே, னையும் எனையும்-வருந்துகின்ற என்னையும், ஒருபாலன் என-[தமது சிஷ்ய வர்க்கத்தவருள்ளே] ஒரு மாணாக்கனென்று (மதித்து) அருள் நோக்கால் பார்த்து - கிருபைக்கண்ணால் ஈக்ஷித்து, [அப்பரிபூரண திருஷ்டியால்], மாலின்வேரினையும்-மயக்கத்துக்குக் காரணமாகிய அஞ்ஞானத்தையும் [அதன் காரியமாகிய ஜகத்தின் சத்தியத்துவ புத்தியையும்], அறக்களைந்து - சேஷமறக்கெடுத்து, பரிபூரண ஆனந்தவிமல - அபரிச்சின்னமாயும் சுகமயமாயும் பரிசுத்தமாயுமிருக்கும், ஞானச் சீரினையும் - ஞானச் செல்வத்தையும், பேறினையும் - அதனாலுளதாகும் மோக்ஷலாபத்தையும், தந்த - கொடுத்த, முத்தானந்தகுருதேவே - முத்தானந்த தேசிகராகிய தெய்வமே, போற்றி - [உமக்கு] நமஸ்காரம்: எ—று.

பொ-ரை, சரீரம் வாசஞ்செய்யும் நகரத்தையும் சரீரத்திற் கிட்டிருக்கும் நாமத்தையும் எனது நகரம் எனது நாமம் என்று அவற்றிற் பற்றுவைத்து அவ்வபிமானத்தால் மரித்தும் ஜனித்தும் நீங்காமல் இப்பூமியின் கண்ணே வருந்துகின்ற என்னையும் தமது

சிஷ்யவர்க்கத்தவருள்ளே ஒரு மாணாக்கனென்று மதித்துத் திருவைக்கண்ணால் ஈக்ஷித்து அப்பரிபூரண திருஷ்டியால் மயக்கத்துக்குக் காரணமாகிய அஞ்ஞானத்தையும் அதன் காரியமாகிய ஜகத்தின் சத்தியத்துவ புத்தியையும் சேஷமறக்கெடுத்து அபரிச்சின்னமாயும் சுகமயமாயும் பரிசுத்தமாயு மிருக்குஞ்ஞானச்செல்வத்தையும் அதனாலுளதாகும் மோக்ஷலாபத்தையுங்கொடுத்த முத்தானந்த தேசிகராகிய தெய்வமே உமக்கு நமஸ்காரம் எ—று.

வேரினையும் என்ற எச்சவும்மையால் அதன் காரியம் வருவிக்கப்பட்டது.

க—ரை. தனது அஞ்ஞானத்தைக்கெடுத்து மெய்ஞ்ஞானத்தைக் கொடுத்த முத்தானந்த தேசிகரை நமஸ்கரித்தது. எ-ம். (5)

6 கண்ணாலு நடையாலு முடையாலு மைந்தருளங் கவற்று
நின்ற, பெண்ணாலு மண்ணாலும் பிடியுண்டு வருந்தி
யவப் பெற்றி மாற்றி, யெண்ணாலுங் கணிப்பரிய ஞா
னசுக கனவடிவா யெமையு மாக்குந், தண்ணாலும்
பொலிசுகமுத் தந்தனையா மகப்பேறை சார்விப் பாமே.

இ—ள். கண்ணாலும் - பார்வையினாலும், நடையாலும்-நடையினாலும், உடையாலும் - சேலையுடையினாலும், மைந்தர் உளம் — புருஷர்களுடைய அந்தக்கரணத்தை, கவற்றுகின்ற — [மயக்கி] வருத்துகின்ற, பெண்ணாலும் - மங்கையராலும், மண்ணாலும் - [காணிமுதலிய] பூமியினாலும், பிடியுண்டு - பந்தத்தையடைந்து, வருந்திய அப்பெற்றிமாற்றி-வருந்திய அவ்வருத்தத்தை யொழித்து, எண்ணாலும்-மனத்தினாலும், [வாக்கினாலும்], கணிப்பு அரிய-அளவிடமுடியாத, ஞானசுக கனவடிவா - ஞானானந்தகன [ப்பிரஹ்ம] சொரூபமாக, எமையும் ஆக்கும் — [மந்தர்களாகிய] எம்போலிகளை

யுஞ்செய்யாநின்ற, தன்னாலும்பொலி- [விஷயவைராக்கிய முதலிய பெருமையினாலும்] சாந்த குணத்தினாலுஞ் சிறந்து விளங்காநின்ற, சுக முத்தந்தனை - ஆனந்தமுத்தை, யாம் அகப்பேழை சார்விப்பாம் - நாம் இருதயமாகிய பெட்டகத்திற் சேர்ப்பிப்பாம் எ-று.

பொ-ரை. பார்வையினாலும் நடையினாலும் சேலையுடையினாலும் புருஷர்களுடைய அந்தக்கரணத்தை மயக்கி வருத்துகின்ற மங்கையராலும் காணிமுதலிய பூமியினாலும் பந்தத்தையடைந்து வருந்திய அவ்வருத்தத்தை யொழித்து மனத்தினாலும் வாக்கினாலும் அளவிடமுடியாத ஞானானந்த கனப்பிரஹ்ம சொரூபமாக மந்தர்களாகிய எம்போலிகளையுஞ் செய்யாநின்ற விஷய வைராக்கிய முதலிய பெருமையினாலுஞ் சாந்த குணத்தினாலுஞ் சிறந்து விளங்குகின்ற சுகமுத்தை நாம் இருதயமாகிய பெட்டகத்திற் சேர்ப்பிப்பாம். எ-று.

கன்- ஆந். பெயர். தன்னாலும் என்பதற்குப் பிரஹ்மானுபவத்தட்ப நிறைந்த எனப்பொருள் கோடலுமாம்:

க-ரை. எம்மைப் பந்தத்தின் நீக்கிப் பரமானந்தமாக்கிய முத்தானந்த தேசிகனைச் சிந்திப்பாம். எ-ம் (6)

(கட்டளைக்கலித்துறை)

7 பொன்னை நிறையின்பப் பொக்கிச மேமெய்ப் பொரு
ளளித்த, மன்னேகுன் றாத மணிவிளக் கேசரண் மன்
னினர்க்குப், பின்னையென் றும லருள்சுளையுரு வாய்ப்
பிறங்கு, மன்னேமுத் தானந்த வப்பா வெனையுமற் றாண்
டருளே.

இ-ள். பொன்னே - பொன் போன்றவரே, நிறை இன்பப் பொக்கிசமே - பூரணானந்தப் பொக்கிசமே, மெய்ப்பொருள் அளித்த - எனது எதார்த்த சொரூபத்தை எனக்குக் கொடுத்தருளிய, மன்னே - யதிராஜரே, குன்றாத மணி விளக்கே - கெடாத பிரகாசத்தையுடைய இரத்தின தீபமே, சரண்மன்னினர்க்கு-தமது திருவடியைச்சார்ந்தஅன்பருக்கு,பின்என்னாமல்-நாளைக்கென்று சொல்லாமல், அருள்-அக்கணமேகருணைபுரிகின்ற, அருளே உருவாய்ப் பிறங்கும்-கருணையேவடிவமாய்ப்பிரகாசிக்கும், அன்னே—தாய்போல்பவரே, முத்தானந்த அப்பா - முத்தானந்தரென்னுந்திரு நாமத்தையுடைய தந்தையே, எனையும் ஆண்டருள் - [கடையேனாகிய] என்னையும் இரக்ஷித்தருள்வீராக. எ—று.

பொ—ரை பொன் போன்றவரே பூரணானந்தப் பொக்கிசமே எனது எதார்த்த சொரூபத்தை எனக்குக் கொடுத்தருளிய யதிராஜரே கெடாத பிரகாசத்தையுடைய இரத்தினதீபமே தமது திருவடியைச் சார்ந்த அன்பர்களுக்கு நாளைக்கென்று சொல்லாமல் அக்கணமே கருணை புரிகின்ற கருணையே வடிவமாய்ப்பிரகாசிக்கும் தாய் போல்பவரே முத்தானந்தரென்னுந்திருநாமத்தையுடைய தந்தையே கடையேனாகிய என்னையும் இரக்ஷித்தருள்வீராக. எ—று.

அன்னே என்பது அன்னையென்னும் பொதுப்பெயரின் திரிபாதலால் "அன்னேயுன்னையல்லாலினியாரை நினைக்கேனே" என்பதுபோல அதன் இறுதி ஐகாரம் ஏகாரமாகத்திரிந்த விளியுருபு.

க-ரை. தன்னை இரக்ஷிக்கும்படி முத்தானந்த தேசிகரைப் பல விசேடணங்களாற் றுதித்தது எ-ம்.

## விருத்தம்

8 சொத்துடையார் தம்மையடைந் தவரையுமவ் வாறுசெய்
வர் சொத்தி லாத, பித்துடையா ரடைந்தார்க்கென்
புரிந்திடுவா ரவைபோலப் பேருமின்ப, முத்தரென்பா
ரடைந்தவர்க்கு முத்தியருளுவரன்றி முனியுஞ் ஞானப்,
பெத்தர்தமை யடைந்தார்க்கென் பேறளிப்பா ரஃதீண்
டுப் பேசற் பாற்றோ.

இ-ள், சொத்துடையார் - சம்பத்துடையவர்கள், தம்மை யடைந்தவரையும் - தங்களை [நேசித்து]ச் சேர்ந்தவர்களையும், அவ்வாறு செய்வர்—அச்சம்பத்துடையவராக்குவார்கள், சொத்து இலாத பித்து உடையார் - தரித்திரத்தோடு பைத்தியமும் பிடித்தவர்கள் அடைந்தார்க்கு—[தங்களை நேசித்துச்]சேர்ந்தவர்களுக்கு, என் புரிந்திடுவார்-என்ன பிரயோசனத்தைச்செய்வர் [யாதொரு பிரயோசனமுஞ் செய்யார்], அவைபோல - அவற்றைப்போல, பேரும் இன்ப முத்தர் என்பார் - [அநுபவத்தாலும்] பெயராலும் முத்தானந்தரென்றுசொல்லப்படுபவர், தமை அடைந்தவர்க்கு-தம்மைச் சரணடைந்த முமுக்ஷுக்களுக்கு, முத்தி அருளுவர் அன்றி - மோக்ஷத்தைத்தந்தருள்வாரேயல்லாமல், முனி - [விவேகிகளால்] வெறுக்கத்தக்க, அஞ்ஞானப்பெத்தர் - அஞ்ஞானத்தையும் அதனுலாகிய பந்தத்தையுமுடையவர்கள், தமை அடைந்தார்க்கு - தங்களைச் சரணடைந்தவருக்கு, என்பேறு அளிப்பார் - என்ன இலாபத்தைக்கொடுப்பார் [ஓர் இலாபமுங்கொடார்], அஃது ஈண்டு பேசற்பாற்றோ - அஃது இவ்விடத்துப் பேசுந்தன்மைத்தோ [பேசுந்தன்மைத்தல்ல]. எ-று.

பொ-ரை. சம்பத்துடையவர்கள் தங்களை நேசித்துச்

சேர்ந்தவர்களையும் அச்சம்பத்துடையவராக்குவார்கள். தரித்திரத்தோடு பைத்தியமும் பிடித்தவர்கள் தங்களை நேசித்துச் சேர்ந்தவர்களுக்கு என்ன பிரயோஜனத்தைச் செய்வார் யாதொரு பிரயோஜனமுஞ் செய்யார் அவற்றைப்போல அநுபவத்தாலும் பெயராலும் முத்தானந்தரென்று சொல்லப்படுபவர் தம்மைச் சரணமடைந்த முமுக்ஷுக்களுக்கு மோக்ஷத்தை தந்தருள்வாரே யல்லாமல் விவேகிகளால் வெறுக்கத்தக்க அஞ்ஞானத்தையும் அதனாலாகிய பந்தத்தையுமுடையவர்கள் தங்களைச் சரணமடைந்தவருக்கு என்ன இலாபத்தைக்கொடுப்பார் ஓரிலாபமுங் கொடார் அது இவ்விடத்துப் பேசுந்தன்மைத்தோ பேசுந் தன்மைத்தல்ல. எ-று.

தாற்பரியம்: வறுமையும் பைத்தியமுமுடையோர் தம்மை யடைந்தவர்க்குத் துன்பத்தைத் தருவதல்லது பசிப்பிணி தவிர்த்தல் முதலிய யாதொரு நன்மையுஞ் செய்யாரென்பார் 'சொத்தில்லாத பித்துடையார் அடைந்தார்க்கு என் புரிந்திடுவார்' என்றும் அஞ்ஞானத்தாற் பொருளல்லவற்றைப் பொருளாகக் கூறுதலாற் சனனமரண வியாதியையும், மனைவி முதலிய பந்தங்களைத்தாம் மெய்யென நம்பியவாறு அவருக்கும் நம்பிக்கையுண்டாக்குதலால் சமுசார துக்கத்தையுங் கொடுப்பதல்லது முத்திகொடாரென்பார் "முனியஞ்ஞானப் பெத்தர்தமையடைந்தார்க்கென் பேறளிப்பார்" என்றும், கொடுக்கும் அவை மங்கலமல்லாமை பற்றி "அஃதீண்டுப் பேசற்பாற்றே" என்றுங் கூறினார்.

க-ரை. முத்தானந்தரைச் சரணடைந்தவர் மோக்ஷமடைவர். எ-ம்,

## வெண்பா.

9. பெண்ணினையா ணாக்கவல்ல பேருளரா னாலுமெங்க ள்
புண்ணியமுத் தானந்தன் போலவே—மண்ணினிடைச்
சீவன் றனைப்பிரஹம சேதனமே யாக்கவல் லா
ரேவருளார் கூறு மிநாள்

இ-ள் பெண்ணினை - பெண்வடிவத்தை, ஆண் ஆக்கவல்ல பேர் - ஆண்வடிவமாக்கும் [மாயவித்தையிற்] சமர்த்துள்ளோர், உளர் ஆனாலும் - [இவ்வுலகில்] இருந்தாராயினும், எங்கள் - எங்களுடைய, புண்ணிய முத்தானந்தன் போல - [முந்திய பிறவிகளிற் செய்யப்பட்டிருந்த] புண்ணியமே மானிடவடிவமாக மூர்த்திகரித் தெழுந்தருளிய முத்தானந்த தேசிகரைப்போல, மண்ணின் இடை - இவ்வுலகத்தில், சீவன்தனை - தேகாபிமானியாகிய ஜீவனை, பிரஹமசேதனம் ஆக்க வல்லார் - பிரஹமசைதன்னியமாகச் செய்யும் [பிரஹம வித்தையில்] சமர்த்தர், இ நாள் - இக்காலத்தில், ஏவர் உளார் - யாவரிருக்கின்றார், கூறும் - [விவேகிகளே] சொல்லுங்கள். எ—று.

பொ-ரை. பெண்வடிவத்தை ஆண்வடிவமாக்கும் மாயவித்தையிற் சமர்த்துள்ளோர் இவ்வுலகில் இருந்தாராயினும் எங்களுடைய முந்திய பிறவிகளிற் செய்யப்பட்டிருந்த புண்ணியமே மானுடவடிவமாக மூர்த்திகரித் தெழுந் தருளிய முத்தானந்த தேசிகரைப்போல இவ்வுலகத்தில் தேகாபிமானியாகிய ஜீவனைப் பிரஹமசைதன்னியமாகச் செய்யும் பிரஹமவித்தையிற் சமர்த்தர் இக்காலத்தில் யாவரிருக்கின்றார் விவேகிகளே சொல்லுங்கள். எ—று.

க—ரை, இக்காலத்தில் முத்தானந்த தேசிகரே பிரஹம வித்தையில் வல்லவர்- எ—ம். (9)

10. கங்குலெல்லோ னாதி கௌவிளக்கு வானல்லான்
மங்கியவற் றால்விளங்கு வானல்ல—னெங்கடமை
யெத்தாலுங் காக்க வியைந்த வருண்மேனி
முத்தானந் தப்பேர் முனி.

இ—ள், எங்கள் தமை—எங்களை, எத்தாலும்காக்க—எவ்விதத்தாலுங்காப்பதற்கு, அருள் மேனி இயைந்த—கிருபையினால் மானுடவுருக்கொண்ட, முத்தானந்தப் பேர் முனி-முத்தானந்தனென்னுந்திரு நாமத்தையுடைய மாதவத்தினர், கங்குல்—இருளையும்,எல்லோன்ஆதிகளை-சூரியன்முதலாகிய பிரகாசவஸ்துக்களையும், விளக்குவான் அல்லால் - தோற்றுவிக்குஞ் சுயஞ்சோதியேயல்லாமல் அவற்றால் மங்கிவிளங்குவான் அல்லன் - அவ்விருளினால் மறைந்து அச்சூரியன் முதலாகிய பிரகாசவஸ்துக்களால், தோன்றுகின்ற சடப்பொருளல்லர், எ—று.

பொ-ரை, எங்களை எவ்விதத்தாலும் காப்பதற்குக் கிருபையினால் மானுடவுருக் கொண்ட முத்தானந்த னென்னுந்திரு நாமத்தையுடைய மாதவத்தினர் இருளையும் சூரியன் முதலாகிய பிரகாச வஸ்துக்களையும் தோற்றுவிக்குஞ் சுயஞ்சோதியேயல்லாமல் அவ்விருளினால் மறைந்து அச்சூரியன் முதலாகிய பிரகாசவஸ்துக்களால் தோன்றுகின்ற சடப்பொருளல்லர், எ—று.

க—ரை. முத்தானந்த தேசிகர் சச்சிதானந்த சுயஞ்சோதி சொரூபர். எ—ம்.

[கட்டளைக் கலித்துறை]

11. பொய்யான மெய்யினை மெய்யெனக் கொண்டதூர்ப் புத்
தியினு, லையோ விறந்து பிறந்தலுத் தேனை யநக
ழைத்தே, யுய்வாய் வருதியென் றேருரை கூறி யுலப்பி
லின்ப, மெய்யாறு காட்டிப் புரந்தான்முத் தானந்த
வித்தகனே.

இ—ள், பொய்யான மெய்யினை - அநித்தியமாகிய இத்தேகத்தினை, மெய் எனக்கொண்ட - நித்திய மென்றுகருதும், துர்ப்புத்தியினல்—கெடுமதியினலே, ஐயோ—அந்தோ, இறந்து பிறந்து-மரித்தும் ஜனித்தும், அலுத்தேனை—வருந்திய வென்னை, உய்வாய் வருதி யென்று - நீபிழைத்துக் கொள்வதற்கு வருகவென்று, அருகு அழைத்து - சமீபத்தில் வரச்செய்து, ஓர் உரை கூறி - ஒப்பற்ற மஹா வாக்கியத்தை யுபதேசித்தருளி, உலப்பில் - அழிதலில்லாத, இன்பமெய் ஆறுகாட்டி - பேரானந்தத்தைத் தருகின்ற உண்மையாகிய அத்துவிதமார்க்கத்தைக் காண்பித்து, முத்தானந்த வித்தகன் - முத்தானந்தனென்னுந் திரு நாம முடையஞான தேசிகர், புரந்தான் —[என்னை] இரக்ஷித்தருளினர். எ—று

பொ—ரை, அநித்தியமாகிய இத்தேகத்தை நித்திய மென்று கருதும்கெடுமதியினலே அந்தோமரித்தும் ஜனித்தும் வருந்திய வென்னை நீ பிழைத்துக் கொள்வதற்கு வருகவென்று சமீபத்தில் வரச்செய்து ஒப்பற்ற மஹாவாக்கியத்தை யுபதேசித்தருளி அழிதலில்லாத பேரின் பத்தைத்தருகின்ற உண்மையாகிய அத்துவித மார்க்கத்தைக் காண்பித்து முத்தானந்த னென்னும் திரு நாம முடைய ஞானதேசிகர் என்னைக்காப்பாற்றிய ருளினர் எ—று.

உய்வாய் என்பது முற்றெச்சம்,

க—ரை,முத்தானந்த ஞானதேசிகர் என்னிடத்துள்ள அஞ்ஞானம் நீங்குமாறு ஞானேபதேசஞ்செய்து இரக்ஷித்தார், எ—ம். 11

12. மண்ணுதி யாமைந்து பூதம் பிடிக்கமெய்ம் மன்னுருநீத்
தெண்ணு வவற்றின் செயலுரு வங் கொண் டிளைத்த
வெலாம், விண்ணேர்க் கருமொரு சொன்மந் திரத்
தின் விலக்கியின்ப, விண்ணுக்கி ஞெனை யன் பான்
முத் தானந்த மெய்த்தவனே.

இ - ள். மண் ஆதியாம் ஐந்து பூதம் — பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களும், பிடிக்க—சரீர வடிவமாகி என்னைப்பற்றிக்கொள்ள, மெய்மன்உரு நீத்து - [அவ்வேதுவால்] உண்மையாக நிலைத்துள்ள எனது ஆன்ம சொரூபத்தை விட்டு, எண்ணு—தனதென்றாவது தானென்றாவது மதிக்கத்தகாத, அவற்றின் - அப்பஞ்ச பூதங்களின், செயல் உருவங்கொண்டு—காரிய வடிவதே கேந்திரியாதிகளின் செய்கையைத்தன் செய்கையென்றும் அத்தேகேந்திரியாதிகளையே தானென்றும் அபிமானித்து, இளைத்தலாம் - தளர்ந்த தளர்ச்சியனைத்தையும், விண்ணோர்க்கு அரும்- தேவர்களுக்குங்கிடைத்தற் கருமையான, ஒரு சொல் மந்திரத்தின்- ஒப்பற்ற மஹாவாக்கிய மந்திரோபதேசத்தினாலே, விலக்கி - ஒழித்து, அன்பால் - [என்மீது வைத்திருக்கின்ற] தயையினாலே, முத்தானந்த மெய்த்தவன் - முத்தானந்தரென்னுந் திருநாமத்தையும் உண்மையாகிய தவத்தையு முடையவர், எனை இன்பவிண் ஆக்கினன் — என்னை ஆனந்தாகாய மென்னும் பிரஹ்ம சொரூபமாக்கினர், எ—று.

பொ—ரை. பிருதிவிஅப்புதேயுவாயு ஆகாயமென்னும் பஞ்ச பூதங்களும் சரீரவடிவமாகி என்னைப்பற்றிக் கொள்ள அவ்வேதுவால் உண்மையாக நிலைத்துள்ள எனதுஆன்மசொரூபத்தை விட்டுத் தனதென்றாவது தானென்றாவது மதிக்கத்தகாத அப்பஞ்ச பூதங்களின் காரியமாகிய தேகேந்திரியாதிகளின் செய்கையைத் தனது செய்கை யென்றும் அத்தேகேந்திரியாதிகளையேதானென்றும் அபிமானித்துத் தளர்ந்த தளர்ச்சியனைத்தையும் தேவர்களுக்குங் கிடைத்தற் கருமையான ஒப்பற்ற மஹாவாக்கிய மாகிய மந்திரோபதேசத்தினாலே ஒழித்து என்மீது வைத்திருக்கின்ற தயையினாலே முத்தானந்தர் என்னுந்திருநாமத்தையும் உண்மையாகிய தவத்தையுமுடையவர் என்னை ஆனந்தா காயமென்னும் பிரஹ்ம சொரூபமாக்கினர். எ—று.

தூலம் சூக்குமம் என்னுது மண்ணுதி பூதம் எனப்பொருப் படக்கூறியதனுல் இருவகைப்பூதங்களுங் கொள்ளப்பட்டன. இங் குப் பூதமென்றது அதன் காரியத்தை.

க—ரை, முத்தானந்த தேசிகர் தேகமேதானென்றிருந்த என் னைப் பிரமம சொரூபமாக்கினுர். எ—ம். (12)

[விருத்தம்]

13 ஒருபே ருருவங் குணங்குறிக ளொன்று மொன்ரு மொா ருவ னிங்கே, யிருபே ருருவா சங்கையுளார்க் கின்ப வடிவாந் தனையளிக்க, வருமான் பிடிப்பா னொருமா னின் மறைந்து வரல்போ லருளாலே, திருமா னிடனு யெழுந்தனன் முத்தானந் தப்பேர் திகழுறவே)

இ-ள். ஒருபேர் உருவம் குணம் குறிகள் - ஓர்விதப்பெயர் ஓர் விதவுருவம் ஓர்விதக்குணம் ஓர்வித அடையாளம்[ஆகியவிவற்றுள்], ஒன்றும் ஒன்ரு—ஒன்றையும் பொருந்தாத, ஒருவன் — அகண்டா காச சொரூபமாகிய ஆன்மதேவர், இங்கே-இவ்வுலகத்தினிடத்தே, பேர்உரு- [தம்மைப்பற்றிவழங்கும்] பெயரும் [தமது] சொரூபமு மாகிய [இரண்டையும் பற்றி இப்பெயருடையது தேகமா தேகியா மெனவும் சொரூபம் இந்திரியங்களா லறியத் தக்க தூலமா இந்திரி யங்களாலறிய முடியாத சூக்குமமா வெனவும் எழாநின்ற],இரு ஆச ங்கை உளார்க்கு-இருவகைச் சந்தேக முடையவர்க்கு (முமுக்ஷுக் களுக்கு), இன்பவடிவு ஆம் தனை -ஆனந்த சொரூபமாகிய தன்னை, அளிக்க - கொடுப் பதற்கு, வருமான் பிடிப்பான் - [தன்னை யின மென்று கருதியருகு] வருகின்ற மானைப் பிடிப்பவன், ஒருமானின் - ஒருமானை யொப்பாக. மறைந்து வரல்போல் - [மானுருவினுள் ளே] ஒளித்துவருதல்போல, அருளாலே - பெருங்கருணையினுலே, திருமானிடனுய் — தாம் ஒரு தெய்வீக மமைந்த மானுடர் போல

வுருவு கொண்டு, முத்தானந்தப் பேர் – முத்தானந்தர் என்னுந் திரு நாம மானது, திகழ் உற-[உலகத்தில்]விளங்கும்படி, எழுந்தனன்-எழுந்தருளினார். எ—று.

பொ-ரை, ஓர் விதப்பெயர் ஓர் விதவுருவம் ஓர் விதக்குணம் ஓர் வித அடையாளம் ஆகிய இவற்றுள் ஒன்றையும் பொருந்தாத அகண்டை கரச சொரூபராகிய ஆன்மதேவர் இப்பூமியின்கண்ணே தம்மைப்பற்றி வழங்கும் பெயரும் தமது சொரூபமுமாகிய இரண்டையும் பற்றி இப்பெயருடையது தேகமா தேகியா எனவும் சொரூபம் இந்திரியங்களாலறியத்தக்க தூலமா இந்திரியங்களாலறிய முடியாத சூக்குமமா எனவும் எழாநின்ற இருவகைச் சந்தேகமுடைய முமுக்ஷுக்களுக்கு ஆனந்த சொரூபமாகிய தன்னைக் கொடுப்பதற்குத் தன்னையினமென்று கருதியருகில் வருகின்ற மானைப்பிடிப்பவன் ஒருமானை யொப்பாக மான்றோலினுள்ளே ஒளிந்து வருதல் போலப்பெருங்கருணையினாலே தாம் ஒருதெய்வீகமஸமந்த மானுடர் போலவுருவு கொண்டு முத்தானந்தர் என்னுந் திருநாமமானது உலகத்தில் விளங்கும்படி எழுந்தருளினார், எ—று.

க.ரை, ஆன்மதேவரே முமுக்ஷுக்களுக்காக மானுடவுருவு கொண்டு முத்தானந்தரென்னும் பெயர் தரித்து விளங்குகின்றார், எ-ம் [13]

[குருவணக்கம் முற்றிற்று.]

## ( அநுபந்தம் )

(வெண்பா)

14. அன்னமே பாலருந்து மத்திலுள நீர்பிரித்
மன்னிய நாற் சாதனமும் வாய்த்தவனே-பினுன்றுசடம்
பொய்யென்றொழித்தான் மா பூரணமே யென்றுதெளிந்
துய்வான்மற் றேவ னுயும்.

இ—ள். பால் - பாலினை, அத்தில் உளநீர் பிரிந்து—அப்பாலினிடத்துக்கலந்திருக்கின்ற ஜலத்தை நீக்கி, அன்னமே அருந்தும்-அன்னப்பறவையே பருகும் [அதுபோல], மன்னிய-நிலைபெற்ற, நாற்சாதனமும்-[விவேகம் விராகம் சமாதிஷட் சம்பத்தி முமுக்ஷுத்துவம் என்னும்] நான்கு சாதனங்களும், வாய்த்தவனே-உடையவனே, பின்னு சடம் - ஒன்றினுடனொன்றாகக் கலந்திருக்கின்ற தூல முதலிய தேகங்களை, பொய் என்று ஒழித்து-மித்தையென்றறிந்து நீக்கி, ஆன்மா -[இத்திருசியங்களையறியுஞ் சாக்ஷிவடிவ] ஆன்மாவானது, பூரணமே என்று தெளிந்து - பிரஹ்மமே யெனவறிந்து, உய்வான் -[அனர்த்த நிவிர்த்தி ஆனந்தப்பிராப்திரூப] மோக்ஷமடைவான், மற்று எவன் உயும் — வேறே எவனடைவான் (ஒருவனுமடையான்). எ—று-

பொ-ரை, பாலினை அப்பாலினிடத்துக் கலந்திருக்கின்ற ஜலத்தை நீக்கி அன்னப்பறவையே பருகும் அதுபோல நிலைபெற்ற விவேகம் விராகம் சமாதிஷட்சம்பத்தி முமுக்ஷுத்துவம் என்னும் நான்கு சாதனங்களும் உடையவனே ஒன்றினுடனொன்றாகக் கலந்திருக்கின்ற தூல முதலிய தேகங்களை மித்தை யென்றறிந்து நீக்கி இத்திருசியங்களையறியும் சாக்ஷிவடிவ ஆன்மாவானது பிரஹ்மமே எனவறிந்து துக்க நிவிர்த்தி சுகப்பிராப்தி வடிவமோக்ஷமடைவான் வேறே எவனடைவான் (ஒருவனுமடையான்). எ—று.

சடம் எனப் பொதுப்படக் கூறினமையால் மூன்று சரீரங்களுங் கொள்ளப்பட்டன.

இதில் "நாற்சாதனமும் வாய்த்தவனே" என்றதால் அதிகாரியும் "பின்னு சடம் பொய்யென் றொழித்தான் மாபூரணமே யென்று தெளிந்து" என்றதனால் விஷயமும் "உய்வான்" என்றதால் மோக்ஷமாகிய பிரயோசனமும் அவற்றிற்குத் தம்மிலுள்ள சம்பந்தமும் பெறப்பட்டமை காண்க.

நந்தங்களையும் அநான்மவிசேடணமாகிய அசத்து, சட, துக்கங் களையும் விவேகித்து (வேறு வேறு பிரித்து) அனான்மவர்க்கங்க ளினின்று வேறு படவேண்டும். எ—ம். [1]

## [தேகாபிமான துக்க விவேகம்]

16. ஒருநா ழிகையு நிலைபுகல வொண்ணு மண்ணே ருட
லிதனைப், பெருமால் கொடியா னெனதென்னப்
பேணி யதனாற் பிறந்திறந்து, கருகா நின்றீர் துயரி
டையக் கருத்து மறுத்தே யறிவுருவாம், பிரஹ்ம
நாமென் றறிந்திந்தப் பேற்றா லதனை யொழியுமினே (2)

இ-ள். ஒரு நாழிகையும் - ஒரு நாழிகைப்பொழுதும், நிலை புகல வொண்ணு - [ஜீவித்திருக்குமென்று] உறுதி சொல்லமுடியா ததும், மண் நேர் உடல் இதனை—மண்போன்ற [சடசுபாவமுடை யதுமாகிய]இத்தேகத்தினை,பெருமால்கொடு-மிகுந்தமயக்கத்தால், யான் எனது என்னப்பேணி — யானென்றும் என்னுடைய தென்றுங் கருதிப்பாதுகாத்து, அதனால் பிறந்து இறந்து - அந்த அகந்தை மமதைகளினாலே ஜனித்தும் மரித்தும், துயர் இடை- அப்பிறவித்துன்பமாகிய அக்கினியின் கட் [பட்டு], கருகாநின் றீர் - வேகின்றவர்களே, அக்கருத்து மறுத்து - [தேகத்தின் கண் ணுள்ள]அந்த அகந்தைமமதைகளைப் போக்கி, அறிவு உருவு ஆம் நாம் - ஞான சொரூப ஆன்மாவாகிய நாம், பிரஹ்மம் என்று பரி பூரணமாயுள்ள பிரஹ்மமென அறிந்து - விவேகித்துத் தெளிந்து இந்தப் பேற்றால் - இந்த விவேகத்தாலுளதாகின்றஞான [மாகிய] ஜலத்தால், அதனை ஒழியுமின - அப்பிறவித்துன்பமாகிய அக்கினி யைக் கெடுத்து விடுங்கள். எ—று,

பொ-ரை. ஒரு நாழிகைப்பொழுதும் ஜீவித்திருக்குமென்று

உறுதி சொல்லமுடியாததும் மண்போன்ற சடசுபாவமுடையது மாகிய இத்தேகத்தினை மிகுந்த மயக்கத்தால் யானென்றும் என்னுடையதென்றுங் கருதிப்பாதுகாத்து அந்த அகந்தைமமதைகளினாலே ஜனித்தும் மரித்தும் அப்பிறவித்துன்பமாகிய அக்கினியின் கட்பட்டு வேகின்றவர்களே தேகத்தின்கண்ணுள்ள அந்த அகந்தை மமதைகளைப் போக்கி ஞான சொரூப ஆன்மாவாகிய நாம் பரிபூரணமாயுள்ள பிரஹ்மமென்று விவேகித்துத் தெளிந்து இந்தவிவேகத்தாலாகின்ற ஞானமாகிய ஜலத்தால் அப்பிறவித்துன்பமாகிய அக்கினியைக்கெடுத்துவிடுங்கள். எ—று.

கருகுதலென்னும் வினைக்கியையப் பிறவித்துன்பத்தை அக்கினியெனவும் அதைக்கெடுக்கின்ற ஞானத்தை ஜலமெனவும் வருவித்தாம். கருகாநின்றீர் என்னுந்தெரிநிலைவினையாலணையும் பெயர் அண்மை விளியாதலின் இயல்பாயிற்று.

க-ரை. சடசுபாவமாகிய தேகந்தானல்லவென்றும்; ஞான சொரூபமாகிய பிரஹ்மந்தானென்றும் விவேகிக்கவேண்டும். எ-ம்.

## [இந்திரியப் பிரத்தியக்ஷ விவேகம்] 16

17. எந்த விடய மெந்தவிந்திரியத்தா லறியப் பட்டதுவோ,
வந்த விடய மந்தவிந்தி ரியமே யறிந்த தெனுமறி வு,
வந்த தெளிஞன் கட்டறுக்கு மற்றீ தறிந்தோ ரூனே
யெ ன், புந்தி யுடையான் பந்திதனைப் பூவுட் சாவுற்
றழலுமா ல். (3)

இ-ள். எந்த விடயம்-[சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும்பஞ்சவிஷயங்களுள்]யாதொரு விஷயமானது, எந்த இந்திரியத்தால் - [சுரோத்திரம், துவக்கு சக்ஷு சிங்ஙுவை, கிராணம் என்னும் பஞ்சேந்திரியங்களுள்] யாதோரிந்திரியத்தால், அறியப்பட்டதுவோ, - உணரப்பட்டதுவோ, அந்தவிடயம் - அந்த விஷ

அனுபந்த இலக்கணமாவது. எது தன்னையறிந்த பின்மு முக்ஷு வைக்கிரந்தத்திற் பிரவிர்த்திக்கச்செய்யுமோ அது அநுப ந்த மெனப்படும்,

அவ்வனுபந்தம் அதிகாரி, விஷயம், பிரயோசனம், சம்பந்தம் என்னும் நான்குறுப்போடு கூடியது. அவற்றுள் அதிகாரியா வான் நான்கு சாதனங்களு முடையவன். விஷயமாவது ஜீவப்பிர ஹமங்களின் ஐக்கியமாம். பிரயோசனமாவது சர்வ துக்க நிவிர்த்தி பரமானந்தப் பிராப்திவடிவ மோக்ஷமாம். சம்பந்தமாவன அதிகாரிக் கும் விஷயத்திற்கும் உள்ள கர்த்திரு கர்த்தவ்விய பாவசம்பந்த மும் அதிகாரிக்கும் பிரயோசனத்திற்குமுள்ள பிராப்பிய பிராபக பாவசம்பந்தமும் கிரந்தத்திற்கும் ஞானத்திற்குமுள்ள ஜன்னிய ஜனகபாவசம்பந்தமு முதலாயினவாம். இவற்றை விரிவா யறிய விரும்புவோர் விசார சாகர முதலிய கிரந்தங்களிற் கண்டுகொள்க.

க—ரை. நான்கு சாதனங்களு முடையவனே ஞானவாயிலாக மோக்ஷமடைவான். எ—று. (14)

அநுபந்தம் முற்றிற்று.

## [ 1 ] வது ஞான சாதனவியல்.

### [1] விவேகம்.

### ஆன்மாநான் மாக்களை விவேகித்தல்

### [விருத்தம்]

15. அருக்கற் கொளியுட் டணுஞ்சோண மம்மூன் றியல்
பாவன போல, விருத்தல் விளங்கல் பிரியமுற விவை
யாத் துமத்தன் மையவெனவும், வருத்து மசத்துச்
சடந்துயர மன்று வனுன்ம வியல்பெனவு, மொருத்த
னறிந்து பிரிவானே லொழியா வீட்டை யெளிதுறுபால். (1)

இ-ள், அருக்கற்கு-சூரியனுக்கு, ஒளி, உட்டணம், சோணம்-பிரகாசம், வெப்பம், செந்நிறம் [என்னும்], அம்மூன்று [உம்]-அந்த மூன்று [விசேடணங்களு]ம் இயல்பு ஆவனபோல- சுபாவமாயிருத்தல்போல, இருத்தல், விளங்கல் பிரியமுறல் இவை-சத்து சித்து ஆநந்தம் என்னும் இம்மூன்று [விசேடணங்களு]ம், ஆத்துமத்தன்மைய எனவும் - ஆத்துமாவினுடைய சொரூப மென்றும், வருத்தும் அசத்து சடம்துயரம்—துன்பஞ் செய்கின்ற அநித்தியம் அப்பிரகாசம் துக்கம் [என்னும் மூன்று விசேடணங்களும்], மன்னு - திருஷ்டநஷ்ட சுபாவமுடைய, அனுன்ம இயல்பு எனவும்—நாமரூபான்மகமாகிய தேகாதிப் பிரபஞ்சங்களினுடைய சொரூப மெனவும், ஒருத்தன் அறிந்து,-ஒருமுமுக்ஷு வானவன் [இவ்வாறு ஆன்மாநான்மாக்களின் சுபாவங்களை] விவேகித்துத் தெளிந்து, பிரிவானேல் -[அநான்மவர்க்கங்களினின்று] வேறு படுவானுயின் [அவன்], ஒழியா வீடு-நித்தியமாகிய மோக்ஷத்தை, எளிது உறும் —எளிதில் அடைவான். எ—று.

பொ—ரை, சூரியனுக்குப் பிரகாசம் வெப்பம் செந்நிறம் என்னும் அந்த மூன்று விசேடணங்களும் சொரூபமாயிருத்தல் போலச் சத்து, சித்து, ஆநந்த மென்னும் இம்மூன்று விசேடணங்களும் ஆத்துமாவினுடைய சொரூபமென்றும் துன்பஞ் செய்கின்ற அசத்து சட துக்கமென்னும் இம்மூன்று விசேடணங்களும் திருஷ்டநஷ்ட சுபாவமுடைய நாமரூபான்மகமாகிய தேகாதிப் பிரபஞ்சங்களினுடைய சொரூபமென்றும் ஒருமுமுக்ஷு வானவன் இவ்வாறு ஆன்மா நான் மாக்களின் சுபாவங்களை விவேகித்துத் தெளிந்து அநான்மவர்க்கங்களினின்று வேறுபடுவானுயின் அவன் நித்தியமாகிய மோக்ஷத்தை எளிதில் அடைவான். எ—று.

அம்மூன்றும் என்பதின் முற்றும்மை விகாரத்தாற் றொக்கது.

க-ரை, முமுக்ஷுவானவன் ஆன்மவிசேடணமாகிய சச்சிதா

யத்தை, அந்த இந்திரியமே-அவ்விந்திரியமே, அறிந்தது -உணர்ந்தது, [யான் அதன் சாக்ஷியாகலின் நிஷ்கிரியன்], எனும் அறிவு வந்த தெளிஞன்-என்றறியும் ஞானம் உதயமாகப் பெற்ற விவேகியானவன், கட்டு அறுக்கும் - [சமுசாரமாகிய] பந்தத்தை யொழிப்பான், ஈது அறிந்தோன் — (அங்ஙனமறியாமல்) இவ்விஷயத்தை யுணர்ந்தவன். நான் என் புந்திஉடையான் - நானென்னும் புத்தியை யுடையவன், பந்திதன் ஆய் - [தனக்கந்நியமான இந்திரியத் தின்றொழிலைத் தனதாகக் கண்ட பிராந்தியாற்கரும] பந்தத்தை யுடையவனாய், பூவுள்சாவு உற்று [உம்] - பூமியின்கண் மரணத்தை யடைந்தும் [அக்கருமத்தின் பயனையநுபவிக்க மீளப்பிறந்தும்], உழலும்: [மாறிமாறிச்] சுழலுவான் எ-று.

பொ-ரை. சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் பஞ்ச விஷயங்களுள் யாதொரு விஷயமானது சுரோத்திரம் துவக்கு, சக்ஷு, சிங்ஙுவை, கிராணம் என்னும் பஞ்சேந்திரியங்களுள் யாதோரிந்திரியத்தால் உணரப்பட்டதுவோ அந்த விஷயத்தை அவ்விந்திரியமே யுணர்ந்தது யான் அதன் சாக்ஷியாகலின் நிஷ்கிரியன் என்றறியும் ஞானம் உதயமாகப் பெற்ற விவேகியானவன் சமுசாரமாகிய பந்தத்தை யொழிப்பான் அங்ஙனமறியாமல் இவ்விஷயத்தை யுணர்ந்தவன் நான் என்னும் புத்தியை யுடையவன் தனக்கந்நியமாகிய இந்திரியத் தின்றொழிலைத் தனதாகக் கண்ட பிராந்தியால் கருமபந்தத்தை யுடையவனாய்ப் பூமியின்கண் இறந்தும் அக்கருமத்தின் பயனையநுபவிக்க மீளப்பிறந்தும் மாறி மாறிச் சுழலுவான், எ—று.

சாவுற்றும், என்பதின் உம்மை எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது.

தொழில்களெல்லாம் இந்திரியங்களிடத்துள்ளன-வென்றும் ஆன்மாவினிடத்தில்லை யென்றும் அறிந்த விவேகிசமுசார பந்தத்தை யொழிப்பான் என்பதற்குதாரணம்.

பகவற்கீதை

"செயன்மே னின்ற வறிவிடையே செயலின் மையுமச் செயல்செய் யா, வியன்மே னின்ற புலன்களிலே யெல் லா வினையுமியல் வதுவு, மயன்மே லின்றி யறிந்தான் யா ரவனே யெல்லா மறிந்தோனு, முயன்மே னின்ற யோகியுநல் வினைகளெல்லா மொழிந்தோனும்"

எனக் கூறியிருத்தல் காண்க.

க-ரை. விஷயப் பிரத்தியக்ஷமுண்டாகும் பொழுது கேட் டல் முதலியவற்றை இந்திரியங்களின் தொழிலெனவும் ஆன்மா யாதொரு தொழிலுமில்லாதது எனவும் விவேகிக்கவேண்டும்.எ-ம்.

## [தூலசரீரவிவேகம்]

18 தம்பவுடலைச் சடமென்று தானென்புத்தி யறவொழித் தோ, னிம்பருலக மாதியகற் பிதமா யிருத்தற் கிடமாய்ச் சித், தம்பரபரி பூரணமா மமல வடிவந் தானாகி, வெம்பு பிறவிப் பிணியொழித்து மேலா மின்ப வீடு றுமால்

இ-ள். தம்பவுடலை - தூணைப்போலத் தூலமாயுள்ள இத்தே கத்தினை, சடம் என்று [தன்னையறியாததும் பிறவற்றினையறியா ததுமான] அசேதனமுந்திருசியமுமாகிய வஸ்துவென்று [அறிந் து] தான் என் புத்தி அற ஒழித்தோன்- [அதனிடத்தில் இத்தே கம்]தானென்று முன்பு வைத்திருந்த நிச்சயத்தை முற்றிலும் விட் டவன்[இவ்வாறு மேலும் அதத்து வியாவிருத்தி வாயிலாக விசா ரித்து], இம்பர் உலகம் ஆகிய - இவ்வுலகமுதலாகிய எல்லாப் பிர பஞ்சங்களும்,கற்பிதமாய் இருத்தற்கு - இடமாய்-அத்தியஸ்தமாய்த் தங்குதற்கு ஆதாரமாயும், சித்து - ஞானமயமாயும், அம்பரம் -

நிரவயவமாயும், பரிபூரணம்ஆய் - அபரிச்சின்ன மாயுமிருக்கின்ற, அமல வடிவம் தான் ஆகி - மலமற்ற பிரஹ்ம சொரூபமே தானாகி, வெம்பு பிறவிப்பிணி ஒழித்து - மனக்கலக்கத்தைத்தருகின்ற பிறவி நோயைத் தவிர்த்து மேல் இன்பம் ஆம்வீடுஉறும் - நிரதிசயா னந்த ரூபமாகிய மோக்ஷத்தையடைவான். எ-று.

பொ-ரை. தூணைப்போலத் தூலமாயுள்ள இத்தேகத்தினை அசேதனமுந்திருசியமுமாகிய வஸ்து வென்றறிந்து அதனிடத் தில் இத்தேகமே தானென்று முன்பு வைத்திருந்த நிச்சயத்தை முற்றிலும் விட்டவன் இவ்வாறு மேலும் அதத்து வியாவிருத்தி வாயிலாக விசாரித்து இவ்வுலக முதலாகிய எல்லாப் பிரபஞ்சங்க ளும் அத்தியஸ்தமாய்த் தங்குதற்கு ஆதாரமாயும் ஞானமயமாயும் நிரவயவமாயும் அபரிச்சின்னமாகியு மிருக்கின்ற நிர்மலப்பிரஹ்ம சொரூபமே தானாகி மனக்கலக்கத்தைத் தருகின்ற பிறவி நோயைத் தவிர்த்து நிரதிசயானந்த ரூபமாகிய மோக்ஷத்தையடைவன். எ-று.

இதனால் தூலசரீரஞ் சடமுந்திருசியமுமாயிருத்தலை யறிந்து அக்காரணத்தால் இச்சரீரந்தானல்ல வென்று நீங்கினவன் கண் டேன் கேட்டேன் என்றும் சங்கற்பித்தேன் என்றும் நிச்சயித் தேன் என்றும் சிந்தித்தேன் என்றும் அபிமானித்தேன் என்றும் வழங்கும் அநுபவத்தால் இந்திரிய, மன, புத்தி, சித்த, அகங்காரங் களில் உண்டாகுந்தா னென்னும் புத்தியை அவை தொழிற்படுந் தோறுங் கவனித்துப் பார்த்தால் சடமுந்திருசியமு மாயிருத்தல் அநுபவத்திற்கு வரும் வரவே இவைகளுள் ஒன்றுந்தானல்ல வென் றும் இவற்றை யெல்லாமறிந்த அறிவுதானென்றும் விவேகிக்க வேண்டு மென்பது காண்க.

க-ரை தூலசரீரத்தை விவேகித்துச் சடமுந்திரு சியமுமாயி ருத்தலால் தானல்ல வென்று நீங்கினவன் பிரஹ்ம சொரூபமாவன் எ—ம். [4]

[அதிஷ்டான ஆரோபங்களின் விவேகம்]

19 அரவவ் வறிவா மிரண்டுமயக் கவற்றா தாரக் கயிற்றுட
னே, மருவவ் வறிவு மெய்யாமவ் வகைபோ லொலியா
தியவிட ய, முரிய செவியா தியவறிவு மொருங்கே
மயக்கிங் குளபொரு ளா, மரிய பிரஹ்ம மொன்றுமத
னறிவு மெய்யா வனவா மே.

இ-ள். அரவு அவ்வறிவு இரண்டும் மயக்கு [உம் ஆம்]-இரச்சுவிற்றோன்றுகின்ற சர்ப்பமும் சர்ப்பஞானமும் ஆகிய இரண்டும் [மித்தையும்] பிராந்தியுமாம், அவற்று ஆதாரகயிறும் - அவைகட்கு அதிட்டானமாகிய இரச்சுவும், உடன் மருவு அவ்வறிவும் மெய் ஆம்- அதனோடு பொருந்த [இஃது இரச்சுவென்றறிந்த] அந்த ஞானமும் சத்தியமாம், அவ்வகைபோல்-அவ்விதம்போல, ஒலி ஆதிய விடயம்- சத்தமுதலாகிய விஷயங்களும், உரியசெவி ஆதிய அறிவும்-[அவ்விஷயங்களை அறிதற்கு]உரிமையாகிய சுரோத்திரமுதலிய இந்திரியங்களின் ஞானமுமாகிய இவை, ஒருங்கே மயக்கு [உம் ஆம்]-முழுதும்[மித்தையும்]பிராந்தியுமாம், இங்கு - இவ்விடத்து, உள பொருள் ஆம்-பூதபவிஷ்யவர்த்தமான மென்ற முக்காலத்தும் உள்ள பொருளாகிய, அரிய பிரஹ்மம் ஒன்றும் - [அறிதற்கு] அருமையாகிய பிரஹ்மம் ஒன்றும், அதன் அறிவு [ஒன்றும்] - பிரஹ்மஞானமொன்றும், மெய் ஆவன ஆம்-சத்தியமாவனவாம். எ—று.

பொ-ரை. இரச்சுவிற்றோன்றுகின்ற சர்ப்பமும் சர்ப்ப ஞானமும் ஆகிய இரண்டும் மித்தையும் பிராந்தியுமாம் அவைகட்கு அதிட்டானமாகிய இரச்சுவும் அதனோடு பொருந்த இஃது இரச்சுவென்றறிந்த அந்தஞானமும் சத்தியமாம். அவ்விதம்போலச்சத்தமுதலாகிய விஷயங்களும் அவ்விஷயங்களையறிதற்குஉரிமையாகிய சுரோத்திர முதலிய இந்திரியங்களின் ஞானமுமாகிய இவை முழுதும் மித்தை

யும் பிராந்தியுமாம். இவ்விடத்துப் பூதபவிஷ்ய வர்த்தமான மென்ற முக்காலத்துமுள்ள பொருளாகிய அறிதற்கருமையாகிய பிரஹமம் ஒன்றும் பிரஹமஞான மொன்றும் சத்தியமாவனவாம்.எ-று.

ஆக்கச் சொல்பிரித்துக் கூட்டப்பட்டது, ஒன்றும் என்பது பின்னுங்கூட்டப்பட்டது. இரண்டு மயக்கும் ஒருங்கே மயக்கும் என்பவற்றின் எச்சவும்மைகள் விகாரத்தாற் றொக்கன.

க-ரை. சத்தமுதலாகிய விஷயங்களும் அவற்றையறியும் சுரோத்திர முதலியவற்றின் ஞானமும் மித்தையும் பிராந்தியுமாமெனவும், பிரஹமமும் பிரஹம ஞானமும் சத்தியமாமெனவும் விவேகிக்க வேண்டும். எ-ம். [5]

## [விவர்த்த காரண காரிய விவேகம்]

20 நீரினிற்றோன் றினுமாலங் கட்டிபல திறமாயந் நீரே யாம்போற், பாரினிற்றோன் றினுங்கலச மாதிபல திறமாயப் பாரே யாம்போ, லோரியல்பு மிலதாகி யுள ஞான சுககனமா யொளிரா நின்ற, பேரியல்வத் துவிற் றோன்று சகமதுவே யபலாகிற் பிறங்கி டா தே.

இ-ள். ஆலங்கட்டி-நீர்க்கட்டியானது, நீரினில்- ஜலத்தினிடத்து, பலதிறமாய்-[சிறிது பெரிது முதலிய] நாநாவடிவங்களாய், தோன்றினும்-[விவர்த்த காரிய மாகிய நாமரூபபே தங்களால்வேறு போலக்]காணப் பட்டாலும், அந்நீரே ஆம்போல் - [உற்றுநோக்குவோர்க்குக் காரணமாகிய] அந்த ஜலமாகவே யிருத்தல் போலவும், கலசம் ஆதி - குட முதலானவைகள், பாரினில்- மண்ணினிடத்து, பலதிறமாய் - பல விதவடிவங்களோடு கூடியதாய், தோன்றினும்- [விவர்த்த காரியமாகியநாமரூபபேதங்களால் வேறு போற்] காணப் படினும், அப்பாரே ஆம்போல்-[உற்று நோக்குவோருக்குக் காரண

மாகிய] அம்மண்ணுகவே யிருப்பது போலவும், ஓர் இயல்பும் இலது ஆகி-யாதொரு குணமுந் தன்னிடத்திலில்லாததாய்,உள, ஞான சுக கனமாய்-சச்சிதானந்தக்கட்டியாய், ஒளிரா நின்ற-பிரகாசிக்கின்ற, பேர்இயல்வத்துவில்-ஒப்புயர் வில்லாத தன்மையினையுடைய பிரஹமசொரூபத்தில், தோன்று சகம்-[விவர்த்த காரியமாகிய நாம ரூப பேதங்களால் வேறுபோற்] காணப்படுகின்ற பிரபஞ்சமானது, அதுவே- காரணமாகிய அப்பிரஹம சொரூபமேயாம், அயலாகில்-சச்சிதானந்தத்திற்கு அந்நியமாகுமாளுல், பிறங்கிடாது - [அந்நிய மெல்லாஞ்சடமாதலின்] விளங்காது. எ-று.

பொ-ரை நீர்க்கட்டியானது ஜலத்தினிடத்துச் சிறிது பெரிது முதலிய பலவிதவடிவங்களாய் விவர்த்த காரியமாகிய நாமரூப பேதங்களால் வேறு போற் காணப்பட்டாலும் உற்று நோக்குவோருக்குக் காரணமாகிய அந்த ஜலமாகவேயிருத்தல்போலவும் குடமுத லியவைகள் மண்ணினிடத்துப் பலவிதவடிவங்களோடு கூடியதாய் விவர்த்த காரியமாகிய நாமரூப பேதங்களால் வேறுபோற் காணப் படினும் உற்றுநோக்குவோருக்குக் காரணமாகிய அம்மண்ணுகவே இருப்பதுபோலவும்யாதொரு குணமுந்தன்னிடத்திலில்லாததாய்ச் சச்சிதானந்தக் கட்டியாய்ப் பிரகாசிக்கின்ற ஒப்புயர்வில்லாத தன் மை யினையுடைய பிரஹம சொரூபத்தில் விவர்த்த காரியமாகிய நாமரூபபேதங்களால் வேறுபோற்காணப்படுகின்றபிரபஞ்சமானது காரணமாகிய அப்பிரஹம சொரூபமேயாம். சச்சிதானந்தத்திற்கு அந்நியமாகுமாளுல் அந்நிய மெல்லாஞ் சடமாதலின் விளங் காது. எ-று.

க—ரை. வஸ்துவினிடத்தில் விவர்த்தமாகத் தோற்றுகின்ற பிரபஞ்சமானது அவ்வஸ்து வேயாமென்று விவேகிக்கவேண்டும். எ—ம். [6]

(சிற்சட விவேகம்)

[வெண்பா]

21 நிராகார மாகி நிறைந்தீரை யெத்தா ல்
ஓராகாரத் துள்ளே யுணர்ந்தீர்—பராகா ய
மில்லத் திருப்போ வியையாத வானினி டை
யில்லத் திருப்போ வியல்பு

இ-ள். நிராகாரம் ஆகி-யாதொரு வடிவமுமில்லாமல், நிறைந்தீரை-[சேதனமும் அசேதனமுமாகிய இருவகைப் பிரபஞ்சங்களிலும் வியாபித்து அப்பாலும்] பரிபூரணராயிருக்கின்ற வுங்களை, எத்தால்-யாது காரணத்தினால், ஒரு ஆகாரத்து உள்ளே-ஒருதேகத்தினுள்ளே [மட்டும்], உணர்ந்தீர் - அறிந்தீர்கள், [நாங்கள் அறிவு சொரூப ராயினும் இவ்வொரு சரீரத்தைப் பற்றி யிருத்தலால் இச் சரீரத்தளவிலறிந்தோ மென்பீராயின்], பர ஆகாயம் - [நிராகாரமாயும் சூக்குமமாயும்] வியாபகமாயுமுள்ள ஆகாயமானது, இல் இருப்பு - [ஆகாரமாயும் தூலமாயும் பரிச்சின்னமாயு மிருக்கின்ற] வீட்டினுள்ளே தங்குதல், [இயல்பு ஓ] சுபாவமா, இயையாத - [யாதொன்றோடுஞ்] சம்பந்தியாத, வானின் இடை - [மேற்கூறிய இலக்கணங்களையுடைய] ஆகாயத் தினிடத்து, இல்இருப்பு - [மேற்கூறிய இலக்கணங்களையுடைய] வீடிருத்தல், இயல்பு [ஓ]-சுபாவமா [கூறுமின்]. எ—று.

பொ-ரை. யாதொருவடிவமு மில்லாமல் சேதனு சேதனமாகிய இருவகைப் பிரபஞ்சங்களிலும் வியாபித்து அப்பாலும் பரிபூரணராயிருக்கின்ற வுங்களையாதுகாரணத்தால் ஒரு தேகத்தினுள்ளே மாத்திரம் அறிந்தீர், நாங்கள் அறிவு சொரூபராயினும் இவ்வொரு சரீரத்தைப்பற்றி யிருத்தலால் இச்சரீரத்தளவிலறிந்தோமென்பீராயின் நிராகாரமாயும் சூக்குமமாயும் வியாபகமாயுமுள்ள

ஆகாயமானது ஆகாரமாயுந் தூலமாயும் பரிச்சின்னமாயு மிருக்கின்ற வீட்டினுள்ளே தங்குதல் சுபாவமா அல்லதுயாதொன்றோடுஞ் சம்பந்தியாத மேற்கூறிய இலக்கணங்களையுடைய ஆகாயத்தினிடத்து மேற்கூறியஇலக்கணங்களையுடைய வீடிருத்தல் சுபாவமா கூறுமின். எ—று.

ஓகாரங்கள் பிரித்துக் கூட்டப்பட்டன, இயல்பு என்பதை முன்னருங் கூட்டி வினைவப் பட்டது.

இத்திருஷ்டாந்தம் போலச் சச்சிதானந்த மயமாயும் நிராகாரமாயும் சூக்குமமாயும் வியாபகமுமாயுமுள்ள நீவிர் அசிர்த சடதுக்காகாரமாயும் தூலமாயும் பரிச்சின்னமாயுமுள்ள சரீரத்தின்கண் இருக்கின்றீரா அல்லது மேற்கூறிய இலக்கணங்களையுடைய வும்மிடத்தில் மேற்கூறிய இலக்கணங்களையுடைய சரீரம் இருக்கிறதா இதனை நீவிரே உய்த்துணர்ந்து கொள்ளுமின் என்பது எஞ்சிநின்றது.

க-ரை. சச்சிதானந்த பரிபூரணமாயுள்ள ஆத்துமாவினிடத்துச் சரீரம் அத்தியஸ்தமாய்த் தோன்றுகிறதல்லாமல் சரீரத்தினிடத்தில் ஆன்மாவில்லையென்று விவேகிக்க வேண்டும். எ—ம். (7)

[ஞான விவேகம்]

**22.** போக்குவர வற்றபரி பூரணனென் போதவங்க
மீக்கொள்வா னைக்கரைசேர் விக்குந்தா—னுக்கையே
யென்னுமபோ தக்கல் லிவர்ந்தானை யேழ் பிறப்பா ப்
பன்னுழி யாழ்த்தும் பகை.

இ-ள், [தான்] — தன்னை, போக்கு வரவு அற்ற பரிபூரணன் என்-அசலமும் அபரிச்சின்னமு மாயுள்ள பிரஹ்மமென்றறிகின்ற, போதவங்கம், -ஞானக்கப்பலானது, மீக்கொள்வானை -தன்னிடத்து ஏறிச் செல்பவனை, கரை சேர்விக்கும்-(பிறவிச்சமுத்திரத்தின்)

கரையாகிய மோக்ஷத்தில் அடைவிக்கும் (உறவாம்), தான் ஆக்கை என்னும்-தன்னைத்தேக மென்றறிகின்ற, அபோதக்கல்-பிராந்தி ஞானமாகியகல்(புணையானது), இவர்ந்தானை- தன்மீதேறினவனை, ஏழ்பிறப்பாப் பன்னு ஆழி - (தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்று) எழுவகைப் பிறப்புகளாகச் சொல்லப்படாநின்ற சமுத்திரத்தினுள்ளே, ஆழ்த்தும் - அமிழ்த்தும், பகை-விரோதியாம். எ—று.

பொ-ரை. தன்னை அசலமும் அபரிச்சின்னமு மாயுள்ள பிரஹ்ம மென்றறிகின்ற ஞானக்கப்பலானது தன்னிடத்தேறிச் செல்பவனைப் பிறவிச் சமுத்திரத்தின் கரையாகிய மோக்ஷத்தில் அடைவிக்கும் உறவாம், தன்னைத்தேகமென்றறிகின்ற பிராந்தி ஞானமாகிய கற்புணையானது தன் மீதேறினவனை எழுவகைப் பிறப்புக்களாகச் சொல்லப்படாநின்ற சமுத்திரத்தின் கண் அமிழ்த்தும் ...ியாம். எ—று.

இஃது தாப்பிசைப் பொருள் கோள் பின்பகை என்றமையால் முன் உறவு வருவிக்கப்பட்டது.

க-ரை. தன்னைப் பிரஹ்ம மென்றறிதல் உண்மை ஞானமும் தேகமென்றறிதல் பிராந்தி ஞானமும் ஆம் என விவேகிக்க வேண்டும். எ—ம். (8)

[இதுவுமது]

[கட்டளைக் கலித்துறை]

23. விள்ளுள் ளமுமதன் வேரும் விடயமு மேவறிவு ந்
தள்ளுறு மித்தைய வேரா மறிதலிற் சாற்றுமிவ ற்
றுள்ளும் புறம்பு நிறைபின்ப மாய வுளபொரு ணை
முளதெ லெங்ஙன்மற் றென்றுமுன் னவிடத் துற்றி
ரீ்ம.

இ-ள். வின்ஞ உள்ளமும் - சொல்லாநின்ற அந்தக்கரணமு (ஞாதிருவு)ம், அதன் வேறு ஆம்விடயமும்-அவ்வந்தக்கரணத்தின் வேறாகிய சத்த முதலிய விஷய (ஞேய)மும், மேவு அறிவும்-[விஷயங்களிடத்துச்] செல்கின்ற அந்தக்கரண விருத்தியும் (ஞானமும்) ஆகிய மூன்றும், தன்னுறும் மித்தையவே - (நமது சொரூபமல்ல) கழிக்கத்தக்க பிராந்தியேயாம்,(அதற்கு ஏது கூறுகின்றார்)நாம்அறிதலின்-நம்மாலறியப்படுதலின், (ஆனால் நமது சொரூபம் எப்படிப் பட்டதெனின் அதற்குக் கூறுகின்றார்), சாற்றும்-திரிபுடியென்று சொல்லப்படுகின்ற, இவற்று — அந்தக்கரணம் இதன் விருத்தி விஷயம் ஆகிய இவைகளின்,உள்ளும் புறம்பும் நிறை இன்பம் ஆய-உள்ளிலும் வெளியிலும் வியாபித்துப் பரிபூரணமாயிருக்கின்ற ஆனந்த சொரூபமாகிய,உளபொருள்நாம்-சத்துவஸ்துவே நாம்,(ஆனால் விடயங்களைப்போல நம்மையு மறிதற்கு இம் மனம் வேண்டாவோ வெனின் அதற்குக் கூறுகின்றார்),உன்னுதல் எங்ஙன்-[இவ்வாறுஎல்லாவிடத்தும் எல்லாக்காலத்தும் பரிபூரணமாயிருக்கின்ற நம்மை மித்தையும் பரிச்சின்னமுமாயுள்ள இம்மனத்தால்) நினைத்தறிதல் எப்படிக்கூடுங்கூடாது,(ஆயின் நம்மையறிய முடியாதோ வெனின் அதற்குக்கூறுகின்றார்.), மற்று ஒன்றும் உன்னு இடத்து-பிறிதொன்றினையும் இம்மனம் நினையாதவிடத்தில், உற்றிடும் - (நமது சொரூபம் நம்மால்) அடையப்படும்- எ—று.

பொ-ரை. சொல்லாநின்ற அந்தக் கரணவடிவ ஞாதிருவும் அதற்கு வேறாகிய சப்த முதலிய விஷயவடிவ ஞேயமும் விஷயங்களிற் செல்லுகின்ற அந்தக் கரணவிருத்திவடிவ ஞானமும் ஆகிய மூன்றும் நமது சொரூபமல்ல. கழிக்கத்தக்க பிராந்தியேயாம். அதற்கு ஏதுகூறு கின்றார்.நம்மாலறியப்படுதலின். ஆனால் நமது சொரூபம் எப்படிப்பட்டது? எனின் அதற்குக் கூறுகின்றார். திரிபுடியென்று சொல்லப்படுகின்ற அந்தக்கரணம், இதன் விருத்தி,விடயம் ஆகிய இவைகளின் உள்ளிலும் வெளியிலும் வியாபித்துப் பரிபூரணமாயி

ருக்கின்ற ஆனந்த சொரூபமாகிய சத்து வஸ்துவே நாம். ஆனால் விடயங்களைப் போல நம்மையுமறிதற்கிம்மனம் வேண்டாவோ? எனின், அதற்குக் கூறுகின்றார். இவ்வாறு எல்லாவிடத்தும் எல்லாக் காலத்தும் பரிபூரணமாயிருக்கின்ற நமது சொரூபத்தை மித்தையும் பரிச்சின்னமுமாயுள்ள இம்மனத்தினால் நினைத்தறிதல் எப்படிக்கூடும்? கூடாது. ஆனால் நம்மையறியமுடியாதோ? எனின், அதற்குக் கூறுகின்றார். அந்நிய மொன்றையும் நினையாத விடத்து நமது சொரூபம் நம்மாலடையப்படும். எ—று.

க-ரை. திரிபுடிகள் ஆன்மாவல்லவென்றும், அவற்றின் உள்ளிலும் வெளியிலும் பரிபூரணமாய் வியாபித்திருக்கின்ற ஆனந்த சொரூபமே ஆன்மாவென்றும், அது மனமிறந்தவிடத்துத் தானாக விளங்குமென்றும், விவேகிக்கவேண்டும். எ—ம். [9]

[2. விராகம்]

[அது இத்தனை யென்பதும், அவை இத்தன்மையன வென்பதும் கூறுதல்]

[வெண்பா]

24. பகைமையவேண் டாமிப்பவத்தளவும் வேண்டா
மகிமைதரு மெவ்வுலக வாழ்வு—மிகைபடலால்
வேண்டாமென் றுள்ளே விராகமந்த மேமுதல
வீண்டுதிக்கு மூவகையா யே

இ-ள். விராகம்-[விஷயங்களிலுண்டாகின்ற] வைராக்கியம், மந்தம் முதல-மந்த வைராக்கியம், தீவிர வைராக்கியம், தீவிரதர வைராக்கியம் (என்று மூன்றாகச் சொல்லப்படும். அவை முறையே), பகைமைய வேண்டாம் - (விஷயங்கள்) விரோதிகளாயிருக்குமளவும் வேண்டாம் (என்றும்), இப்பவத்தளவும் வேண்டாம்- இத்தேகஞ்சீவித்திருக்கும் வரையும் வேண்டாம் (என்றும்), மகிமைதரும் - மாட்சிமையைத் தருகின்ற, எவ்வுலக வாழ்வும்-(பிரஹ

மலோக முதலிய) எந்த வுலகத்திலுண்டாகின்ற வாழ்க்கையும், மிகைபடலால் -(பிறவித்)துக்கத்தைத் தருதலால், வேண்டாமென் றும், உள் -(மனிதர்களுடைய) அந்தக்கரணத்தில், ஈண்டு-இவ்வுல கத்தில், மூவகையாய் உதிக்கும் - மூன்று விதமாயுண்டாகும்.எ-று

பொ-ரை. விஷயங்களிலுண்டாகின்ற வைராக்கியமானது மந்த வைராக்கியம், தீவிரவைராக்கியம், தீவிரதர வைராக்கியம் என்று மூன்றாகச் சொல்லப்படும். அம்மூன்றும் முறையே விஷ யங்கள் விரோதிகளாயிருக்குமளவும் வேண்டாமென்றும், இத்தே கம் சீவித்திருக்குமளவும் வேண்டாமென்றும், மாட்சிமையைத் தரு கின்ற பிரஹ்மலோக முதலிய எந்தவுலகத்திலுண்டாகின்ற வாழ்க் கையும் பிறவித்துக்கத்தைத் தருதலால் வேண்டாமென்றும், மனி தர்களுடைய அந்தக் காணத்தில் இவ்வுலகில் மூன்று விதமா யுண்டாகும். எ—று.

என்றென்னும் இடைச்சொல் ஏனைய இடங்களிலுஞ் சென் றியைந்தது,

க-ரை வைராக்கியமானது மந்தம், தீவிரம், தீவிரதரம் என மூன்று விதமாய் மனிதர்களிடத்துண்டாகும். எ—ம். (10)

(3. சமாதிஷட் சம்பத்தி)

(3. க. சமம்)

[சர்வமும் பிரஹ்ம மென்றறிதலால் மனமடங்கும் எனல்]

(விருத்தம்.)

25. கோடுதொறுந் தாவுமொரு குரங்கிருந்த காவனைத்துங் குறைப்புண்டாக்கா, வீடுதொழிலொழிந்துநிற்கு நெறி போல மயக்கமதானில்லா வுள்ள, மோடிவிழும் விடய மெலா மொருபிரஹ்ம மெனுமறிவா லொழிப்பினேயு, நாடிமைப் பரம்பொருளை நண்ணினும்விண் ணெண்ணுது நலமா மென்றே.

இ-ள். கோடுதொறும் - மரக்கொம்புகள் தோறும், தாவும்-தாண்டுகின்ற, ஒரு குரங்கு-ஒரு வானரமானது, இருந்தகா அனைத்தும் - (தான்)வசித்திருந்த சோலைகளெல்லாம், குறைப்பு உண்டக்கால்-வெட்டுப்பட்டழிந்த விடத்து, நீடு தொழில்-(தாண்டுதல்) முன் நெடுநாட் பழகிவந்த தொழிலானாலும், ஒழிந்துநிற்கும்- (தாவுதற்கேதுவாகிய மரங்களில்லாமையால் அத்தொழிலினின்றும்)நீங்கியிருக்கும், நெறிபோல-முறைமை யொப்ப, மயக்கமதால்-(விஷயங்கள் சத்தியமுஞ் சுகசாதனமுமாமென்னும்) பிராந்தியால், நில்லாவுள்ளம் - (வேறுபல வுபாயங்களாலடக்கினும்) அடங்காத மனமானது, ஓடிவிழும் - தன்னால் விரைந்து சென்று பற்றப்படுகின்ற, விடயம் எலாம்- விஷயங்களெல்லாவற்றையும், ஒரு பிரஹமம் எனும் - [இவையனைத்தும்] அகண்டை காசப்பரிபூரணப் பிரஹம சொரூபமே என்னும், அறிவால் - ஞானத்தினாலே, ஒழிப்பின் - பாதம் பண்ணில், (மித்தையென்று நிச்சயித்து அவற்றின் கண்ணுள்ள சத்தியத்துவ புத்தியை விடுத்தால்) ஓயும்-[அம்மனத்திற்கு விஷயங்களைப்பற்றிச் செல்லுந் தொழில்] ஒழியும், [அத்தொழிலொழியவே] அப்பரம் பொருளை நாடிடும் - [மெய்யாகக் கண்ட] அந்தமேலாகிய பிரஹம சொரூபத்தை விரும்பும் (சமாதியிலசைவற நிற்கும்), விண்கண்ணினும் - [அப்பால்] சுவர்க்கபோகம் [வலிதின்வந்து தன்னைச்] சேரினும், நலம் ஆம் என்று எண்ணாது - அதனைச் சுகசாதனமென்று நினைக்காது, துச்சமென்று வெறுத்துவிடும். எ—று.

பொ-ரை. மரக்கொம்புகள் தோறுந்தாண்டுகின்ற ஒரு வானரமானது தான்வசித்திருந்த சோலைகளெல்லாம் வெட்டுப்பட்டழிந்த விடத்துத் தாண்டுதல் முன் நெடுநாட் பழகிவந்த தொழிலானாலும் தாவுதற்கேதுவாகிய மரங்களில்லாமையால் அத்தொழிலினின்று நீங்கியிருக்கும் முறைமையொப்ப விஷயங்கள் சத்தியமுஞ்சுகசாதனமுமாமென்னும் பிராந்தியால் வேறுபல வுபாயங்களாலடக்கினும்

அடங்காத மனமானது தன்னால் விரைந்துசென்று பற்றப்படுகின்ற விஷயங்களெல்லாவற்றையும் இவையனைத்தும் அகண்டைகர சப்பரிபூரணப் பிரஹ்ம சொருபமே யென்னும் ஞானத்தினலே மித்தையென்று நிச்சயித்து அவற்றின் கண்ணுள்ள சத்தியத்துவ புத்தியை விடுத்தால் விஷயங்களைப்பற்றிச் செல்லுந்தொழில் அம்மனத்திற்கு ஒழியும். அத்தொழிலொழியவே மெய்யாகக்கண்ட அந்த மேலாகிய பிரஹ்ம சொரூபத்தை விரும்பும், அதாவது சமாதியிலசைவற நிற்கும். அப்பாற் சுவர்க்க போகம் வலிதின் வந்து தன்னைச் சாரினும் அதனைச் சுகசாதனமென்று நினைக்காது துச்சமென்று வெறுத்துவிடும். எ-று.

விண்-ஆகுபெயர்

மன வடக்கத்திற்கு இங்கே கூறியதுபோல "ஊக நன்மையாவல்லது வெலப்படா துள்ளம், வேகமத்த மாவங்கு சத்தலால் வெலப்படுமோ, ஏகபோதத்தை யறிதனல்ல வருடனெய்தல், சோகவாதனை விடலுயிர் தோன்றுறு தொடுக்கல்" என வாசிட்டத்துங் கூறியிருத்தல் காண்க.

க-ரை மன வடக்கம் சர்வமும் பிரஹ்மம் என்னும் நிச்சயத்தாலுளதாம். எ—ம். (11)

[இதுவும் அது]

26. ஓயாதோடு தொழிலை மன மொழியவேண்டின் விடயமெலா, மாயவேண்டா மவ்விடய மன்னும் பிரஹ்ம வடிவமென்று, நீயங்ககண்டப் பொருள்காணினிகழ்த்து மந்தப்போக் கொழிந்து, நேய வெலுவன் போலவது நின்றுநந்த நிலைதருமால்.

இ-ள். மனம்-மனமானது, ஓயாது ஓடுதொழிலை-தளர்ச்சியின்றி [விஷயங்களில்] ஓடுகின்ற முயற்சியை, ஒழியவேண்டின்-

நீங்கவேண்டுமோயின், விடயம்எலாம் - விஷயங்களனைத்தும், மாய வேண்டாம் - நசிக்க [வேண்டுமென்று நினைக்க] வேண்டாம், [ஏனெனின் சொப்பனத்தும் மநோராச்சியத்தும் விடயங்களில்லா திருந்தும் மனத்தொழிலற்றிருந்ததில்லையே ஆதலால் மனவடக்க த்திற்கு அஃது உபாயமன்று. மற்றியாது உபாயமெனிற்கேள்] அவ்விடயம்-காணப்படும் அவ்விஷயங்களனைத்தும், மன்னும் பிர ஹமவடிவமென்று-[கற்பிதசர்ப்பம் எங்ஙனம் அதிஷ்டான ரச்சு வடிவமோ அங்ஙனம் பிரஹமத்திற் கற்பிதமாகலின் அவ்விடயங் களை உள்ளிலும் வெளியிலும் வியாபித்து அவற்றிற்கு அதிஷ்டான மாய்] நித்தியமாயிருக்கின்ற பிரஹம சொரூபமென்று நிச்சயித்து, நீ அங்கு-நீவிடயங்களை திரிப்பட்டவிடத்து, அகண்டப்பொருள் கா ணில்-[பரிபூரணமாயுள்ள அந்த]ஒரே பொருளைத் தரிசிப்பாயாயின், நிகழ்த்தும்-சொல்லாநின்ற, அந்தப்போக்கு ஒழிந்து-முன் விஷய ங்களிலோடிய தொழில் நீங்கி, நேயம் எனுவன்போல-பிரியத்தை யுடைய தோழனை யொப்ப, அதுநின்று-அம்மனம் அசைவற நின்று, ஆனந்த நிலைதரும் - பிரஹமாநந்தாநுபவ முண்டாகச் செய்யும். எ—று.

பொ-ரை. மனமானது தளர்ச்சியின்றி விஷயங்களிலோடு கின்ற முயற்சியை நீககவேண்டுமோயின் விஷயங்களனைத்தும் நசிக் கவேண்டுமென்று நினைக்கவேண்டாம். ஏனெனின், சொப்பனத் தும், மநோராச்சியத்தும் விடயங்களில்லாதிருந்தும் மனத்தொழி லற்றிருந்ததில்லையே ஆதலால் அஃது உபாயமன்று. மற்றியாது உபாயமெனிற்கேள். காணப்படும் அவ்விடயங்களனைத்தும் கற்பித சர்ப்பம் எங்ஙனம் அதிஷ்டானரச்சுவடிவமோ அங்ஙனம் பிரஹம த்திற் கற்பிதமாகலின் அவ்விடயங்களை உள்ளிலும் வெளியிலும் வியாபித்து அவற்றிற்கு அதிஷ்டானமாய் நித்தியமாயிருக்கின்ற பிரஹம சொரூபமென்று நிச்சயித்து நீ விடயங்களை திரிப்பட்ட விடத்துப் பரிபூரணமாயுள்ள அந்த ஒரே பொருளைத் தரிசிப்பா

யாயின் சொல்லாநின்ற முன் விஷயங்களிலோடிய தொழில் நீங்கிப் பிரியத்தையுடைய தோழனையொப்ப அம்மனம் அசைவறநின்று பிரஹ்மாநந்தாநுபவ முண்டாகச்செய்யும். எ—று.

பிரஹ்மதரிசனத்தால் மனமடங்கு மென்பதற்கு உதாரணம்.

(வாசிட்டம்)

"எங்கே யெங்கே மனமோடி யினையோ ரென்ன வீழ்ந் தழுந்து, மங்கே யங்கே நின்றெழுப்பி யகண்ட வறிவி லடைவிப்பாய், சங்கே தமதாயிவ்வாறு சாதித் துளமா மதகரியை, வெங்கே தமறத் தளைத்தெல்லா விசாரத் தா லும் வீடணைவாம்" என்று கூறியிருப்பது காண்க.

க-ரை. மனமடங்குதற்கு விடயங்கள் நாசமாகவேண்டாம் அவற்றிற் கதிஷ்டானமாகிய பிரஹ்ம சொரூபத்தை எவ்விடங்களி லும் பரிபூரணமாகத் தரிசித்தாலடங்கும். எ—ர். [12]

இவ்விரண்டு செய்யுட்களாலுங்கூறிய பிரஹ்ம தரிசனம் பரோக்ஷமாம். அதாவது சாஸ்திர நிச்சயத்தாலுளதாவதாம்.

[மனமடங்குவதற்கு ஆசை நசிக்கவேண்டுமெனல்]

27. ஆசை யளவே மனத்துருவா மதுமாய் வுறின்மற்றிதுகெ டுமம், மாசா ருளமே பிறப்பிறப்பாம் வருத்த முதவு பெரும்பகையம், மாசற் றிடுமே லருவமன மறுவிலி ன்பந் தருதுணையா நேசித் திடுவான் மனமாய்வை நிகழ் நச் சொழிப்பா லடைகுவனே.

இ-ள். ஆசையளவே-[விஷய] இச்சை எவ்வளவோ அவ்வ ளவே, மனத்துருவாம் - மனத்தினது உருவத்தளவாம், அதுமாய் வுறின் - அவ்விச்சை நசிக்குமாயின்: இதுகெடும்-இம்மனத்தினுரு வம் நசிக்கும், அம்மாசு ஆர் உளமே-அந்த விஷய இச்சை பொருந்

திய மனமே, பிறப்பு இறப்பு ஆம்-சனனமரணங்களாலுண்டாகும், வருத்தம் உதவு பெரும்பகை-துக்கத்தைக் கொடுக்கின்ற கொடிய விரோதியாம், அம்மாசு அற்றிடுமேல்-அந்த விஷய இச்சையாகிய குற்றம் நீங்குமாயின்: அருவமனம் - அருவமனமென்று சொல்லப்படும், மறு இல் இன்பந்தரு துணையாம்-(அவ்வருவமனம்) குற்றமில்லாத பேரின்பத்தைக் கொடுக்கின்ற தோழனாகும், மனமாய்வை நேசித்திடுவான்-மனநாசத்தை விரும்புபவன், நிகழ் நச்சு ஒழிப்பால்-சொல்லாநின்ற இச்சையை நீக்குதலால், அடைகுவன் - பெறுவான். எ—று.

பொ-ரை. விஷய இச்சை எவ்வளவோ அவ்வளவே மனத்தினது உருவத்தளவாம். அவ்விச்சை நசிக்குமாயின் இம்மனத்தினுருவம் நசிக்கும். அந்த விஷய இச்சைபொருந்திய மனமே சனனமரணங்களாலுண்டாகும் துக்கத்தைக் கொடுக்கின்ற கொடிய விரோதியாம். அந்த விஷய இச்சையாகிய குற்றம் நீங்குமாயின் அருவமனமென்று சொல்லப்படும். அவ்வருவமனம் குற்றமில்லாத பேரின்பத்தைக் கொடுக்கின்ற தோழனாகும். மனநாசத்தை விரும்புபவன் சொல்லாநின்ற இச்சையை நீக்குதலாற் பெறுவான். எ-று

க-ரை. மனமடங்குதற்கு விஷய இச்சை யொழிய வேண்டும். எ—ம். (13)

(மனம் ஒடுங்குதற்குக் காரணமாகிய அவ்விச்சை
யொழிதற் குபாயங் கூறுதல்)

[வெண்பா]

28. அல்லும் பகலு மளவிறுக்க சாதனத்
செல்லு மனத்தைத் திருப்பியுய்மி—னல்
லொழிந்தா ரெனவிரீ ரோவோ நமனு
மெழுந்துவரும் போதிலென் செய்வீர்

இ-ள். அல்லும் பகலும் - இரவும் பகலும், அளவில்துக்க சாதனத்து-அளவில்லாத துன்பத்துக்குக் காரணமாகிய விஷயங்களிடத்து, செல்லும் மனத்தை-(சுகசாதனமென நினைத்து) ஓடுகின்ற மனத்தினை, திருப்பி-[அவற்றிலுள்ள தோஷங்களைக்காட்டுதல் வாயிலாக அவற்றிற் செல்லாது]மீட்டி, உய்மின்-(தன்னையறிந்து) பிழையுங்கள், அல்லல் ஒழிந்தார் என -(பிறவித்)துக்கம் நீங்கியவர்கள்போல, இரீர்-இராதேயுங்கள், ஓ ஓ-(நீவிரிங்ஙனமிருத்தல் மகா) ஆச்சரியம் ஆச்சரியம், நமனார் எழுந்துவரும்போதில்-இயமதருமரானவர் எழுந்தருளி வருங்காலத்தில், என் செய்வீர் - யாது செய்வீர்கள். எ—று.

பொ-ரை, இரவும் பகலும் அளவில்லாத துன்பத்திற்குக் காரணமாகிய விஷயங்களினிடத்துச் சுகசாதனமென நினைத்து ஓடுகின்ற மனத்தினை அவற்றிலுள்ள தோஷங்களைக் காட்டுதல் வாயிலாக அவற்றிற் செல்லாது மீட்டித் தன்னையறிந்து பிழையுங்கள். பிறவித்துக்கம் நீங்கியவர்கள்போல் இராதேயுங்கள். நீவிரிங்ஙனமிருத்தல் மகா ஆச்சரியம்! ஆச்சரியம்! இயமதருமரானவர் எழுந்தருளி வருங்காலத்தில் யாது செய்வீர்கள். எ—று.

விடயமானது அநுபவகாலத்திற்கு முன்னும் பின்னும் முறையே கிடைக்கவில்லையே என்றும் நீங்கிவிட்டதே யென்றும் துக்கத்தைத் தருதலால் துக்கசாதனமென்பது பிரசித்தம். அநுபவகாலத்திலும் சுகத்துக்குச் சாதனமன்று விடயவிச்சை யுடையவனுக்கு அவ்விச்சை மறைதல் மாத்திரத்திற்குச் சாதனமாம், ஆனால் சுகத்திற்குச் சாதனம் யாதெனின், இச்சை நீங்கிய நிச்சல அந்தக்கரணமேயாம். அதனிடத்தில் ஆன்மாவின் சொரூபானந்தம்பிரதிவிம்பிக்கின்றது. அந்த ஆன்மாவின் பிரதி விம்பானந்தத்தை விடயவிச்சையுடையவன் விடயத்திலுள்ளதாகப் பிராந்தியடைகின்றான். இவ்வாறன்றி விடயத்திலிருந்தே ஆநந்தம் அநுபவிக்கப்

படுமானால் ஒருவனுக்கு ஆநந்தத்திற்கேதுவாகிய பிரிய விடயம் நீங்காது தன்னிடத்திருக்கு மளவும் ஆநந்தமும் நீங்காதிருக்க வேண்டும் அங்ஙனமாயின் ஒருவனுக்குப் பிரியமாகிய புத்திரன் தேசாந்தரத்திற்குப் போய்ச் சிலநாட் சென்று வரப்பார்த்தவுடன் அவன் மிகுந்த ஆனந்தத்தை யடைகின்றான். மேற்கூறியவாறு விஷயத்திலேயே ஆநந்த மிருக்குமாயின் புத்திரன் தன்னிடத்து நீங்காதிருத்தலால் அவ்வானந்தமும் நீங்காதிருக்கவேண்டும். அநுபவத்தில் அவ்வாறு காணப்படவில்லை. பின்னையோபுத்திரனைக் கண்ட மாத்திரத்தி லுண்டாகிய ஆநந்தம் சற்று நேரத்தில் மாறிவிடுகிறது. ஆதலால் விடயத்தில் ஆனந்தமில்லை மேலும் விடயத்திலேயே ஆநந்தம் இருக்குமானால் யாதொரு விடயமுமில்லாத சுழுத்தியில் ஆநந்தாநுபவம் உண்டாகலாகாது. சுழுத்தியில் ஆநந்தம் அநுபவிக்கப்படுதலோ எல்லோருக்கும் அநுபவசித்தம் ஆதலால் விடயந் துக்கசாதன மெனப்பட்டது.

இவ்வாறே "மேவுதற் கரிதாய்க்கேசம்புகையதாய் விழிக்கு நன்காய்த், தீவினைச்சிகை சேர்மாதரொனுங் கனற்றிரணம்போல, யாவரைச் சுடாது தூரத்தெறிகின்ற நாகத்தீக்குப், பாவையர் குளிர்ந்த மேனி பசையிலாவிறகதாமே" எனவும்.

"மாமடஞ் செறிந்த நெஞ்சின் மனிதராம் புட்பிடிக்கக், காமனும் வேடன் வீசும் வலை யொப்பார் கருங் கண்மாதர், தீமனச் சேறூர் சன்மச்சிறு குழிமீனுமாந்தர்க், கேமவாதனைக் கயிற்றுத் தூண்டிலுக்கிரையுமொப்பார்" எனவும் வாசிட்டத்திற் கூறியிருத்தல் காண்க.

க-ரை. விடயங்களிற் செல்லுகின்ற மனத்தை அவற்றின் தோஷதிருஷ்டி வாயிலாக அடக்கவேண்டும். எ—ம். (14)

[மனதோடு கூடாமற் பிரிந்துநின்றால் அது நசிக்கும்
என மற்றோருபாயங் கூறுதல்]

29. தினைத்தனையு முள்ளத்தைச் சேரி னதுவே
யனர்த்தமெனக் கண்டகன்றார் தாமே—சினத்துடனே,
கொன்றவரா வாரவர்பாற் குற்றேவல் செய்திருக்கு
மென்றுஞ் சுகமுதவி யே.

இ-ள், தினைத்தனை-ஓர்தினையளவு(பொழுது), உள்ளத்தைச் சேரின்-மனத்தைச் சேர்ந்தால், அது (உம்) - (கூடிய) அத்தினையளவு பொழுதும், அனர்த்தம் (ஏ)எனக்கண்டு-துக்கமே(யொழிய சுகமின்று)எனவறிந்து, அகன்றார் தாமே-நீங்கினவரே, சினத்துடன் - கோபத்துடன், கொன்றவர் ஆவார் - (அதனுருவத்தை) நாசம் செய்தவராவார், அவர் பால்-அவரிடத்தில் [உருவங்கெட்ட அம்மனம்], என்றும் சுகம் உதவி-எந்நாளுஞ் சுகத்தைத் தந்து, குற்றேவல் செய்திருக்கும் - நிறுத்தினவிடத்தில் நிற்கும். எ-று.

பொ-ரை. ஓர் தினையளவு பொழுது மனத்தைச் சேர்ந்தால் கூடிய அத்தினையளவு பொழுதும் துக்கமே யொழியச் சுகமின் றெனவறிந்து நீங்கினவரே கோபத்துடன் அதன் உருவத்தை நாசஞ்செய்தவராவார் அவரிடத்தில் உருவங்கெட்ட அம்மனம் எந்நாளுஞ்சுகத்தைத் தந்து நிறுத்தினவிடத்தில் நிற்கும். எ-று

தினைத்தனையும் என்றதன் உம்மையும் அதுவே என்றதின் ஏகாரமும் பிரித்துக் கூட்டப்பட்டன.

இங்கே உள்ளம் என்றது விடயக்கவர்ச்சியுடைய தூலமனத்தை, மனத்தினின்றும் நீங்குதலாவது அது தொழிற்படுந் தோறும் அதன் வசப்படாமல் அதை விஷயமாக்கியறிதலாம்.

க-ரை. மனத்தோடு கூடாமல் தான் வேறானால் அம்மனத்தின் தூலத்தன்மை கெடும். எ-ம். (15)

## 3. 2. தமம்

### (விருத்தம்)

30. மண்டூகச் செயல்போலிந் தியம்விடயந் தொறும் வீழ்த்
திவருந்தி மீட்டித், திண்டாடி யுழல்வீரிச் செயலொ
ழிமி னூல்பயிலுந்திறத்தாற் றீர்க்கி, லுண்டாகா திலங்
கியெங்கு முள்ளதொரு பொருளதனை யுள்ளவாறே,
கண்டோயுந் திறமடைவீர் கட்டொழியும் விட்டொளி
முன் கங்குல் போலே.

இ-ள். மண்டூகச் செயல்போல் - தவளையினது (தாவும்) தொழில்போல, இந்தியம் - இந்திரியங்களை, விடயந்தொறும்- (எதிர்ப்பட்ட) விஷயங்களிலெல்லாம், வீழ்த்தி-(தாவி) விழும்படி விடுத்து, வருந்தி மீட்டி-பின் மிகு முயற்சியாற் றிருப்பி, திண்டாடி உழல்வீர் - (இச்செயலால் மனம்) கலங்கிச் சுழல்கின்றவர்களே, நூல் பயிலுந்திறத்தால் - சாஸ்திர ஆராய்ச்சி செய்யும்வழியால், இச்செயல் ஒழிமின் - (இந்திரியங்களை விடயங்களில் தாவி விழுமாறு செலுத்துகின்ற) இத்தொழிலை விடுங்கள், (இந்திரியங்களிற் செல்லவொட்டாது அடக்குங்கள்), தீர்க்கில்-அவ்வாறு செல்லவொட்டாது அடக்குவீராயின், உண்டாகாது இலங்கி - நித்தியமாய்ப் பிரகாசித்துக்கொண்டு, ஒரு பொருள் எங்கும் உள்ளது- ஒரு வஸ்துவானது எங்கும் வியாபகமாயிருக்கின்றது, அதனை உள்ளவாறு கண்டு-அவ்வஸ்துவை இருந்தவண்ணம் தரிசித்து,ஓயும் திறம் அடைவீர்-உபசாந்தத் தன்மையுடையவராவீர், [அதனாலே], ஒளி முன் கங்குல்போல் - சூரியனுக்கெதிரே நில்லாத இருளைப் போல, கட்டுவிட்டு ஒழியும் - [உம்மைப்பற்றிய சமுசார] பந்தஞ் சேஷமறக் கெடும். • எ—று.

பொ-ரை. தவளையினது தாவும் தொழில்போல இந்திரியங்

களை எதிர்ப்பட்ட விஷயங்களிலெல்லாம் தாவி விழும்படி விடுத்துப்பின்பு மிகு முயற்சியாற்றிருப்பி இச்செயலால் மனங்கலங்கிச் சுழல்கின்றவர்களே சாஸ்திர ஆராய்ச்சி செய்யும் வலியால் இந்திரியங்களை விடயங்களில் செல்லவொட்டா தடக்குங்கள். அவ்வாறு செல்லவொட்டாதடக்குவீராயின் நித்தியமாய்ப் பிரகாசித்துக்கொண்டு ஒரு வஸ்துவானது எங்கும் வியாபகமாயிருக்கின்றது அவ்வஸ்துவை இருந்த வண்ணம் தரிசித்து உபசாந்தியுடையவராவீர், அதனால் சூரியனுக்கெதிரே நில்லாத இருளைப்போல உம்மைப்பற்றிய சமுசாரபந்தம் சேஷமறக்கெடும். எ—று.

க-ரை. விடயங்களில் இந்திரியங்களைச் செல்லவொட்டா தடக்கினால் ஞானம் எளிதிலடையப்படும், எ—ம். (16)

[இதுவுமது]

31. செல்லுமிடந் தொறுமெதிரா நாமம்வடி விரண்டினையுந்
தீண்டி டாமல், மெல்ல மெல்ல விந்தியமெவ் வளவு
நிற்கு மந்நிலையை விலகா துள்ளம், புல்லுமஃதா லகண்
டபரி பூரணமெய்ஞ் ஞானநிலை பொலியு மஃதா, லல்ல
லெலா மல்லனவா யத்தமியா வின்பநிலை யமையுந் தானே

இ-ள். செல்லும் இடந்தொறும் -[ஒருவனுக்குச்] சஞ்சரிக்கும் இடங்களெங்கும், எதிர் ஆம் நாமம் வடிவு - நேர்படுகின்ற பெயர் உருவம் என்னும், இரண்டினையும் - இரண்டையும், தீண்டிடாமல்-பொருந்தாமல், மெல்ல மெல்ல-பையப்பைய, இந்தியம் எவ்வளவு நிற்கும் - இந்திரியங்கள் எம்மாத்திரம் நிற்குமோ, அந்நிலையை - அம்மாத்திரத்திற்கு [அசைவற்று] நிற்கும் தன்மையை, உள்ளம் விலகாது புல்லும் - மனமானது நீங்காமற் பொருந்தும், அஃதால் - [மனத்தினது] அந்த நிச்சலத்தன்மையால், அகண்டபரிபூரண மெய்ஞ்ஞான நிலை பொலியும் - ஏகமாயும் பரிபூரணமாயுமிருக்கின்ற பிரஹ்ம ஞானநிலை [நாள்தோறும்] வளரும், அஃ

தால் - அதன் வளர்ச்சியால், அல்லல் எலாம் அல்லனவாய் - சர்வ துக்கங்களும் இல்லாதனவாய், அத்தமியா இன்பநிலை அமையும் - அழியாத ஆனந்தமயமாகிய மோக்ஷம் பொருந்தும், எ—று.

பொ-ரை. ஒருவனுக்குச் சஞ்சரிக்கு மிடங்களெங்கும் நேர் படுகின்ற நாமம் உருவம் என்னும் இரண்டையும் பொருந்தாமல் பையப்பைய இந்திரியங்கள் எம்மாத்திரம் நிற்குமோ அம்மாத்திரத் திற்கு அசைவற்று நிற்குந் தன்மையை மனமானது நீங்காமற் பொருந்தும் மனத்தினது அந்த நிச்சலத் தன்மையால் ஏகமாயும் பரிபூரணமாயுமிருக்கின்ற பிரஹ்ம ஞானநிலை நாள்தோறும் வள ரும் அதன் வளர்ச்சியால் சர்வ துக்கங்களுமில்லா தனவாய் அழி யாத ஆனந்தமயமாகிய மோக்ஷம் பொருந்தும். எ—று.

க-ரை. இந்திரிய நிக்கிரகத்தால் மனோநிக்கிரகமும், மனோ நிக்கிரகத்தால் ஞானமும் ஞானத்தால் மோக்ஷமும் உண்டாம். எ—ம். [17]

(இதுவுமது)

32. ஒட்டிருப்ப தறியாம ஊண்விருப்ப விருப்பாலவ் வொட் டிற் பட்டுக், கட்டமுறு ககங்கண்டு மொழியாதி விருப் படைந்து கருமவொட்டிற், பட்டுழல்வீ ரஃதொழிமி னறிதெனிலங் காதியபற் பரநா மென்று, கட்டழிக்கு மறிவுதகங் குளித்துணுமி னக்கருமங் கழியுமாதோ

இ-ள். ஊண்விருப்ப இருப்பால் - [வேடனால் ஒட்டப்பூசிய கழிகளிலொட்டி வைக்கப்பட்டிருக்கின்ற] உணவிடத்தாசை யுடைமையால், ஒட்டு இருப்பது அறியாமல்—[அவ்வளவு தம் மைப்பற்றிக்கொள்ளும் வலியுடைய] ஒட்டின் கணிருக்குந் தன் மையைத் தெரியாமல், அவ்வொட்டில்பட்டு - [அந்த இரையைத் தின்னமுயன்று] அவ்வொட்டினாற் பற்றப்பட்டு, கட்டம் உறு - [பிராண] ஆபத்தையடையும், ககம்கண்டும் - பறவைகளைப்

பார்த்திருந்தும், ஒலி ஆதி விருப்பு அடைந்து - [நாம் இவ்விஷய சுகங்களை அநுபவிக்கும் போக்தாவென்னும் புத்தியால்] சத்த முத லிய விஷயங்களை இச்சித்து,[அவற்றில் சுரோத்திராதி இந்திரியங் களை விடுத்து], கரும ஒட்டில் - கருமாசங்கத்தால், [இத்தொழி லுக்கு நாம் கர்த்தாவென்றுண்டாகும் கர்த்திருத்துவ அபிமானத் தால்], பட்டு உழல்வீர் - பந்தப்பட்டு [பிறப்பிறப்புக்களிற்] சுழல் கின்றவர்களே, அஃது ஒழிமின் - இந்திரியங்களை விடயங்களிற் செலுத்துகின்ற அத்தொழிலை ஒழியுங்கள், (இந்திரிய நிக்கிரகம் பண்ணுங்கள்), அரிதுஎனில் - [அடக்குதல்] அருமையாயிருக்கு மாயின், அங்கஆதி - [கன்ம காரணங்களாயுள்ள] தேக முதலாகிய ஐந்தினுக்கும், அயல் - வேறாகிய, பரம் நாம் என்று - அசங்க உதா சீன ஆன்மாவே நாமென்றுண்டாய், கட்டு அழிக்கும்-பந்தத்தை நாசஞ்செய்வதாகிய, அறிவு உதகம் குளித்து உணுமின் — ஞான தீர்த்தத்தில் மூழ்கிப் புசியுங்கள், அக்கருமம் கழியும்-அக்கருமபந் தம் ஒழிந்துவிடும். எ—று.

பொ-ரை. வேடனால் ஒட்டிப்பூசிய கழிகளிலொட்டி வைக் கப்பட்டிருக்கின்ற உணவினிடத்தாசை யுடைமையால் அவ்வுணவு தம்மைப் பற்றிக் கொள்ளும் வலியுடைய ஒட்டின் கணிருக்குந் தன் மையைத் தெரியாமல் அந்த இரையைத் தின்ன முயன்று அவ் வொட்டினாற் பற்றப் பட்டுப் பிராணபத்தை யடையும் பறவை களைப் பார்த்திருந்தும் நாம் இவ்விஷய சுகங்களை யநுபவிக்கும் போக்தா (புசிப்பவன்) என்னும் புத்தியால் சத்த முதலாகிய விடய ங்களை யிச்சித்து அவற்றில் சுரோத்திராதி இந்திரியங்களை விடுத்து கருமாசங்கத்தால் (இத்தொழிலுக்கு நாம் கர்த்தாவென்றுண்டா கும் கர்த்திருத்துவ அபிமானத்தால்)பந்தப் பட்டுப் பிறப்பிறப்புக் களிற்சுழல்கின்ற வர்களே இந்திரியங்களை விடயங்களிற் செலுத்து கின்ற அத்தொழிலை ஒழியுங்கள்(இந்திரிய நிக்கிரகம் பண்ணுங்கள்) அஃது அருமையா யிருக்குமானால் கன்ம காரணங்களாயுள்ள தேக

முதலாகிய ஐந்தினுக்கும் வேருகிய அசங்க உதாசீன ஆன்மாவே நாமென்றுண்டாய்ப் பந்தத்தை நாசஞ் செய்வதாகிய ஞான தீர்த்தத்தில் மூழ்கிப் புசியுங்கள். அக்கரும பந்தம் ஒழிந்து விடும். எ—று.

தா-ம். கருமாசங்கமாவது கருமங்களினிடத்து இத்தொழி லுக்கு நான் கர்த்தாவென்றுண்டாகும் அபிமானமாம். அக் கர்த்தி ருத்துவ அபிமானந் தான் யாதெனின், சத்தாதி விஷயங்கள் எதிர்ப்பட்டபொழுது ஞானேந்திரியங்களால் முறையே உளவாகா நின்ற கேட்டல், பரிசித்தல், காண்டல், உருசித்தல், மோத்தல்களா கிய அச்சுரோத்திராதி இந்திரியங்களின் தொழில்களை, நான் கேட்டேன், நான் பரிசித்தேன், நான் கண்டேன், நான் உருசித் தேன், நான் மோந்தேனென்று தன்(ஆன்மாவின்) தொழில்களாக அபிமானித்தலாம். இவ்வபிமானத்தால் பந்தப் பட்டுப் பிறப்பிறப்புக் களிற் சுழல்கின்றவர்களே என்பார் 'கரும வொட்டிற் பட்டுழல்வீர்' என்றும் அவ் விந்திரியங்களை விடயத்திற் செல்ல வொட்டாமல் அடக்குதலே சிறந்ததென்பார் 'அஃதொழிமின்' என்றும் அஃது முடியாதாயின் இக்கருமங்கள் தேக முதலிய ஐந்தினாலும் உளவா வன, நான் இவ்வைந்தினுக்கும் வேருகிய அசங்க பரிபூரண சச்சி தானந்த கனமாயிருக்கின்றேனென்று தன்னை வேருகக்காணின் அக்கேட்டல் முதலிய தொழில்களாற் பந்தமுளதாகா தென்பார் 'அறிதெனி லங்காதியயற்பரநா மென்று, கட்டழிக்கு மறிவுதகங் குளித்துணு மினக்கருமங் கழியும்' என்றுங் கூறினர். இதனை ஒட் டானது ஜலசம்பந்தமுடைய சரீரத்தைப் பற்ருதது போல, அக் கேட்டலாதி கரும பந்தங்கள் ஞானசம்பந்தமுடைய புருஷனைப் பற்றுதென்பதை இவ்வுபமானத்தாலுய்த் துணர்ந்துகொள்க.

கன்ம காரணங்கள் ஐந்தாவன:— (1) தூலசரீரமும், (2) கர்த் தாவடிவ அகங்காரமும், (3) ஞானகன்மேந்திரியங்கள் பத்தும்

மனம்புத்தி இரண்டும் ஆகிய பன்னிரண்டு காரணங்களும், (4) சேஷ்டைவடிவ பிராணாதி வாயுக்களும், (5) இந்நான்கிற்கும் முறையே அநுக்கிரகம் பண்ணுகின்ற (1) பிருதிவியும், (2) உருத்திரனும் (3) திக்கு, வாயு, சூரியன், வருணன், அசுவினி, அக்கினி, இந்திரன், உபேந்திரன், மித்திரன், பிரஜாபதி, சந்திரன், பிருகஸ்பதி, ஆகிய பன்னிருவரும், (4) பிராணனுக்குச் சத்தியோஜாதன், அபானனுக்கு வாமதேவன், வியானனுக்கு அகோரன், உதானனுக்குத் தற்புருஷன், சமானனுக்கு ஈசானன் என்னுந் தேவதைகளும் ஆமென்க.

இதற்குப் பிரமாணம்-பகவற்கீதை.

"இருப்பிடமாமுடம் பியற்று மாருயிர், கருத்தினை முதலிய காரணங் காற்றினால், விருப்பொடு வருந்தொழிலிவற்றின் மேலரு, ளருத்த மாந்தெய்வமொன்றாக வைந்தரோ" என்று கூறியிருத்தல் காண்க.

க-ரை. இந்திரியங்களை விடயங்களிற் செல்லவொட்டாதடக்கவேண்டும். முடியாதாயின் அவ்விந்திரியங்களுக்குத் தான் வேறாதல் வேண்டும். எ—ம். [18]

## [3. 3. விடல்]

### [வெண்பா]

33. இச்சையொழி வால்விடயத் தின்புவர்ப்பே நேருமதோற்
பொய்ச்சலனம் போகுமது போகவே—சொச்சொருபந்
தோன்றுமதற் றோன்றுஞ் சுகமயமா யஃதன்றோ
தான்றானாய் நிற்குந் தலம்

இ-ள். இன்பு விடயத்து [உம்] -[முற்காலத்து] இன்பமாகக் காணப்பட்ட விடயத்தின் கண்ணும், இச்சை ஒழிவால்-வைராக்கிய பலத்தால், உவர்ப்பே நேரும் - [பின் அடையப்படி

னும் வாந்தியிற்போல] வெறுப்பே யுளதாம், அஃதால் - அந்த வைராக்கியத்தின் பலமாகிய உபாதியால், பொய்ச்சலனம்-பொய் யாகிய மனத்தின் அசைவு அறும், அதுபோகவே - அம்மனத்தின் அசை வறவே, சொச் சொரூப ம்-தனது உண்மை வடிவம் (ஆகிய பிரஹ்மம்), சுகமயமாய்-பேரின்பமயமாய், தோன்றாமல் தோன் றும் - தனக்கந்நியமாகத் தோன்றாமல் தானாகத்தோன்றும், அஃது அன்றோ - அஃதல்லவா, தான் தானாய் நிற்குந்தலம் - ஆன்மாவே பிரஹ்மமாய் நிற்குந்தானமாம். எ—று

பொ-ரை. முற்காலத்து இன்பமாகத் தோன்றிய விடயத் தின் கண்ணும் வைராக்கிய பலத்தால் மீள அடையப்படினும் வாந் தியிற் போல வெறுப்பே யுளதாம். அந்த வைராக்கியத்தின் பல மாகிய உபாதியால் பொய்யாகிய மனத்தின் சலனம் அறும். அம் மனத்தின் அசைவறவே தனது உண்மை வடிவமாகிய பிரஹ்மம் பேரின்ப மயமாய்த்தனக்கந்நியமாகத் தோன்றாமல் தானாகவே தோன்றும். அஃதல்லவா ஆன்மாவே பிரஹ்மமாய் நிற்குந்தான மாம். எ—று.

விடயத்தும் என்பதின் சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது.

க-ரை. உபாதியுண்டானால் பிரஹ்மான்மைக்கிய நிலை சித்திக்கும். எ—ம். (19)

## [3. 4. சகித்தல்]

34. உட்டணந் தட்பாதியுறுகண் பொறுப்பவனே
இட்டமுறு மெய்ப்பொருளை யெய்துமமர்—கிட்டி
யெறிவேல் புறம்வாங்கா வேனுடையா னின்ப
முறலொழி யாவாறுபோ லும்

இ-ள்- உட்டணம் தட்ப ஆதி - வெப்பம் குளிர் முதலிய

இருமைத்தருமங்களினால், உறுகண் பொறுப்பவனே - (சிரவணா திகட்குத் தடையாயுண்டாகின்ற) துக்கங்களைச் சகிப்பவனே, இட்டம் உறும் மெய்ப்பொருளை எய்தும்-விரும்புகின்ற உண்மை வஸ்துவை அடைவான், அமர்கிட்டி - போர்க்களத்தின்கட் சென்று, எறிவேல்புறம் வாங்கா-[பகைவனால்]எறியப்பட்ட வேலாயுதத்தை முதுகின்கண்வாங்காது [எதிர்த்து யுத்தஞ் செய்கின்ற] ஏனுடையான் [மிகுந்த] வலிமையையுடைய[மகாயுத்த வீரனை]வன், இன்பம் உறல் - (தான் விரும்பிய) சுகம் பெறுதலை, ஒழியா ஆறுபோலும் - நீங்காத தன்மை ஒக்கும். எ—று.

பொ-ரை. வெப்பங் குளிர் முதலிய இருமைத்தருமங்களினால் சிரவணாதிகட்குத் தடையாயுண்டாகின்ற துக்கங்களைச் சகிப்பவனே விரும்புகின்ற உண்மை வஸ்துவை அடைவான். போர்க்களத்தின்கட் சென்று பகைவனலெறியப்பட்ட வேலாயுதத்தை முதுகின்கண் வாங்காது எதிர்த்து யுத்தஞ்செய்கின்ற மிகுந்த வலிமையையுடைய மகாயுத்த வீரனைவன் விரும்பிய சுகம் பெறுதலை நீங்காத தன்மையொக்கும். எ—று.

பகைவனுடைய ஆயுதங்கட்கஞ்சாது அவனோடு யுத்தஞ்செய்பவன் பகைவனை வெல்லுதல் அல்லது அவனால் தன்னுயிர் விடுதல் ஆகிய இருவகையாலும் முறையே இவ்வுலகவின்பம் அல்லது மேலுலகவின்பங்களை யடைதல் எங்ஙனந்தவறாதோ அங்ஙனங் குளிர் வெப்ப முதலியவற்றால் வரும் துக்கங்களைச் சகித்துக்கொண்டு ஞானசிரியரிடஞ் சிரவணாதிகளைத் தளர்வின்றிச் செய்பவன் வைராக்கியம் அல்லது ஞானம் ஆகிய இருவகையாலும் முறையே பிரஹ்ம லோகவின்பத்தை அல்லது மோக்ஷ வின்பத்தையடைதல் தவறாதென்பது கண்டுகொள்க.

க-ரை. சீதோஷ்ணாதிகளாலுண்டாகின்ற துக்கங்களைச் சகிப்பவன் உண்மை வஸ்துவை அடைவான். எ—ம் [20]

## [3. 5. சமாதானம்]

35. எப்பொழுது மெவ்விடத்து மெப்பொருளுங் காணது
மெய்ப்பொருளை கண்டார் வினையண்டார்-பொய்ப்பில தா
மின்புருவா வார்க ளிறப்பும் பிறப்புமெனுந்
துன்பிலராய் வேதத் துணிவு

இ-ள். எப்பொழுதும்-எந்தவேளையிலும், எவ்விடத்தும்-எந்தவிடத்திலும், எப்பொருளும்- (நாம ரூபமயமாகிய) எந்தப்பொருளையும், காணது - (கற்பிதமென்னும் நிச்சயத்தாற் பொருளாக) நோக்காமல் விடுத்து (அவற்றின் உயர்வு தாழ்வு சுத்தா சுத்தங்களை நோக்காமல்), மெய்ப்பொருளை கண்டார்- [அவற்றின்கண்] அவற்றிற்கதிட்டானமாயுள்ள உண்மைப் பொருளாகிய தம்மையே தரிசித்தவர்கள், வினை அண்டார் - நல்வினை தீவினைகளாற் கட்டுப்படார்[அதனால்], இறப்பு பிறப்பு எனும் துன்பு இலராய்-சனன மரணமென்னும் துக்கமில்லாதவர்களாய், பொய்ப்பு இலது ஆம் - உண்மையாகிய, இன்பு உருவாவார்கள் - ஆனந்த சொரூபமாவார்கள், வேதத்துணிவு - [இது] வேத சம்மதமாம். எ—று.

பொ-ரை. எந்த வேளையிலும் எந்தவிடத்திலும் நாமரூபமயமாகிய எந்தப்பொருளையும் கற்பிதமென்னும் நிச்சயத்தாற் பொருளாக நோக்காமல் விடுத்து அவற்றின்கண் அவற்றிற் கதிட்டானமாயுள்ள மெய்ப்பொருளாகிய தம்மையே தரிசித்தவர்கள் நல்வினை தீவினைகளாற் கட்டுப்படார். அக்காரணத்தாற் சனன மரணமென்னுந் துக்கமில்லாதவர்களாய் உண்மையாகிய ஆனந்த சொரூபமாவார்கள் இது வேதசம்மதமாம். எ—று.

க-ரை. எக்கால தேசங்களிலும் உண்மை வஸ்துவைக் கண்டவர்கள் முத்தராவர். எ—ம். [21]

[இதுவுமது]

[விருத்தம்]

36. பொல்லா மனத்தி னொழிவுமிது பொருந்தும் விடய வொழிவுமிவை * யெல்லா நாமென் றதிதிடமா யிறுகுமுணர்வா லுளவாகுங் * கல்லா ரெனினு மிந்தநெறி கைவந்தவரே முத்திநிலை* வல்லா ரல்லா ரெவ்விதத்து மருவிப் பிறவி யுழலுவரே

இ-ள். பொல்லாமனத்தின் ஒழிவும்-கொடிய மனத்தினுடைய உருவநாசமும், இதுபொருந்தும் - இம்மனத்தால் [இந்திரியங்களின் வாயிலாகப்புறம் போந்து] அடையப்படுகின்ற, விடய ஒழிவும் - விஷயங்களினுடைய நாசமும், இவை எல்லாம்--[பிரஹமத்திற்கற்பிதமாகிய] இப்பிரபஞ்சமனைத்தும், நாம் [ஏ] என்று - [கற்பித வஸ்து அதிஷ்டான வடிவமேயாமென்னும் நியாயத்தால் பிரஹமமாகிய] நமது அகண்டபரிபூரணசொருபமேயன்றி அந்நியமில்லை யென்று, அதிதிடமாய்- மிக்க உறுதியாய், இறுகும்-அழுந்தியிருக்கும், உணர்வால் உளவாகும்-அறிவால் உண்டாகும், கல்லார் எனினும்-கல்விகற்காத வரானாலும், இந்தநெறிகை வந்தவர்- இந்த ஞானப்பியாசமுடையவர், முத்திநிலை வல்லார் - மோக்ஷநிலையை [அடையும்] சமர்த்தராவர், அல்லார் - மற்றவர், எவ்விதத்தும் - எந்தவிதத்தானும், பிறவி மருவி உழலுவார்-பிறப்பிறப்புக் கலையடைந்து சுழலுவார். எ—று.

பொ-ரை. கொடிய மனத்தினுடைய உருவநாசமும் இம்மனத்தால் இந்திரியங்களின் வழியாகப் புறத்திற் சென்றடையப்படுகின்ற விஷயங்களினுடைய நாசமும் பிரஹமத்திற் கற்பிதமாகிய இப்பிரபஞ்சமனைத்தும் கற்பிதவஸ்து அதிஷ்டான வடிவமேயாம் என்னும் நியாயத்தாற் பிரஹமமாகிய நமது அகண்ட பரிபூ

ரண சொரூபமேயன்றி அந்நியமில்லை யென்று மிக்க உறுதியாய் அழுந்தியிருக்கும் அறிவினாலே யுண்டாகும். கல்விகற்காதவரானா லும் இந்த ஞானப்பியாசமுடையவர் மோக்ஷ நிலையையடையுஞ் சமர்த்தராவர் மற்றவர் எந்த விதத்தானும் பிறப்பிறப்புக் கலைய டைந்து சுழலுவார். எ—று.

நாமே என்பதின் தேற்றே காரம் விகாரத்தாற் றொக்கது.

க-ரை. பிரபஞ்ச மெல்லாம் பிரஹ்மமாகிய நமது சொரூப மே என்னுந்திட ஞானமுடையவர் மோக்ஷமடைவர். எ-ம். [22

37. உண்ணாடி வாரிடத்தெம் முத்தமமுத் தானந்த
விண்ணாடி மவ்வவரின் வேறின்றிப்—பெண்ணாதி
யிச்சையி னார்கண்ணே யியைந்தியையா போலொளிக்கு
மச்சோவீ தார்செய்கை யே.

இ-ள். உள் - [தமது] புத்தியால், நாடுவார் இடத்து-[நான் யார், பிரஹ்மமென்பது யாது, பிரபஞ்சமென்பது யாது, என்று] விசாரணை செய்கின்றவை ராக்கியமுடைய முமுக்ஷுக்களிடத்து, அவ்வவரின் வேறு இன்றி - அவரவரின் அந்நியமாகாமல், எம் உத் தம - எங்களுடைய மேலாகிய, முத்தானந்த விண்-முத்தானந்த (மென்னும் பெயரால் விளங்குகின்ற) சிதாகாயமானது, ஆடும் - அவரவர் சொரூபமாகவே கலந்து விளங்கும், பெண்ஆதி - மனைவி முதலிய விடயங்களில், இச்சையினார் கண்ணே-ஆசையுடைய வரி டத்தே, இயைந்து இயையாபோல்-கலந்து நின்றுங் கலவாதது போல, ஒளிக்கும் - மறைந்து கொள்ளும், அச்சோ - ஐயோ, ஈது ஆர் செய்கை - இஃது யாவருடைய செயல், எ—று.

பொ-ரை. தமது புத்தியால் நான்யார், பிரஹ்மமென்பது யாது, பிரபஞ்சமென்பது யாது,என்று விசாரணை செய்கின்ற வை ராக்கியமுடைய முமுக்ஷுக்களிடத்தில் அவரவரின் அந்நியமாகா மல் எங்களுடைய மேலாகிய முத்தானந்த மென்னும் பெயரால்

விளங்குகின்ற சிதாகாயமானது அவரவர் சொரூபமாகவே கலந்து விளங்கும் மனைவிமுதலிய விடயங்களில் ஆசையுடையவரிடத்தே கலந்து நின்றுங்கலவாதது போல் ஒளித்துக்கொள்ளும் ஐயோ இஃது யாவருடைய செயல். எ—று.

முத்தானந்தவிண் முமுக்ஷுக்களிடத்துக் கலந்தும் இச்சையுடையவரிடத்து மறைந்தும் நிற்குமென்று செய்யுளேக்காற் கூறிருரேனும் முத்தானந்த விண்ணை முமுக்ஷுக்களுடைய புத்தி கலந்துநிற்கும். விடயவிச்சையுடையவர் புத்தி மறந்து சுழலுமென்பது கருத்தாகக்கொள்க.

கலந்துங் கலவாதது போல் ஒளித்துக் கொள்ளுதல் விடயவிச்சையால் அவ்விடயங்களையே சிந்தித்துச் சுழன்று அதனல் மெய்ப் பொருளை மறத்தலாகிய இவ்வறிவிலிகளின் ரொழிலேயன்றி நிஷ்கிரியமாகிய அவ்வஸ்துவின் தொழில் அன்றென்பார் "இஃதி யார் செய்கை" என்ருர், அச்சோ வென்றது இங்ஙனம் மெய்ப் பொருளை மறந்து பிறவித்துன் பத்தில் வருந்துகின்றனரே என்று அவரிடத்துண்டாகிய இரக்கக் குறிப்பு.

க-ரை. முத்தானந்த விண்ணுனது முமுக்ஷுக் களிடத்தில் ஐக்கியமாகியும் விடயவிச்சையுடைய வரிடத்தில் மறைந்து நிற்கும். எ—ம். (23)

38. எங்கும் பரமொன் றிலகுமஃதே பார்ப்பவர்க்குக்
கங்குலெல்லில் லாத கதியுதிக்கு—மங்கதனு *
னீக்கமிலா வானந்த நேருமது வேமுத்தி *
பாக்கியமே யாமென்பரே

இ-ள். எங்கும்-எல்லாவிடங்களிலும், பரம் ஒன்று இலகும்—சச்சிதானந்த பரிபூரணமாகிய ஒருவஸ்து வானது பிரகாசித்துக் கொண்டிருக்கும், அஃதேபார்ப்பவர்க்கு - அச்சொரூபத்தையே

[அகமும் புறமுமாகிய எல்லாவிடங்களிலும்] தரிசிப்பவர்களுக்கு, கங்குல் எல் இல்லாத-கேவல சகலங்களற்ற, கதி உதிக்கும் - பிரஹ்ம மானுபூதியுண்டாகும், அங்கு — அவ்வனுபூதியுண்டாயவிடத்து, அதனால் - அவ்வநுபூதியினாலே, நீக்கம் இலா ஆனந்தம் சேரும் - விட்டு நியாத பிரஹ்மானந்தஞ்சித்திக்கும், அதுவே-அப்பிரஹ்மா னந்த சித்தியே, முத்திபாக்கியம் ஆம் - மோக்ஷலாபமாகும், என்பர் - என்று கூறுவர் பெரியோர். எ—று.

பொ-ரை. எல்லாவிதங்களிலும் சச்சிதானந்த பரிபூரணமா கிய ஒரு வஸ்துவானது பிரகாசித்துக்கொண்டிருக்கும் அச்சொ ரூபத்தையே அகமும் புறமுமாகிய எல்லாவிடங்களிலுந்தரிசிப்பவர் களுக்குக் கேவல சகலங்களற்ற பிரஹ்மாநுபூதியுண்டாகும். அவ் வநுபூதியுண்டாய விடத்து அவ்வநுபூதியினாலே விட்டுநியாத பிரஹ்மானந்தஞ் சித்திக்கும், அப்பிரஹ்மானந்த சித்தியே மோக்ஷலாப மாகுமென்று கூறுவர் பெரியோர், எ—று.

ஈண்டுமோக்ஷமென்பது விதேக முத்தியை.

க-ரை. எல்லா விடங்களிலு முண்மை வஸ்துவைத்தரி சித்தவர்கள் பிரஹ்மாநுபூதியையும் அதினாலே மோக்ஷ லாபத்தையுமடைவார். எ-ம். (24)

## (3. 6. சிரத்தை)

### [கட்டளைக் கலித்துறை]

31. கண்ணுஞ் செவியுந் தளரும் முனேதண் கருணையுரு *
நண்ணுங் குருபரன் றனுா லடைந்துநல் லீசனென *
வெண்ணிமொழிவழி நின்றுகுற் றேவ லியற்றினன்றே
யெண்ணுந்த னெண்ண நிறைவேறு மின்புற் றிருப்ப
தற்கே

இ-ள். கணணுஞ்செவியும்-சக்ஷு இந்திரியமுஞ் சுரோத்திர இந்திரியமும் ஆகிய இரண்டும், தளரும்முனே - [தங்களுக்குரிய

விடயங்களாகிய உருவத்தையுஞ் சத்தத்தையும் அறியுந்தெளிவுத் தன்மை] குறையுமுன்னமே [இளமைக் காலத்திலேயே], தண் கருணை உருநண்ணும் - தண்ணிய கருணை வடிவங்கொண்ட, குரு பரன் - மேலாகிய ஞாஞசிரியருடைய, தாள் நூல் அடைந்து-திரு வடிகளையும் வேதாந்த சாஸ்திரத்தையும் தமக்குப் புகலிடமாக நம்பிச் சேர்ந்து, நல் ஈசன் என எண்ணி-[அவரை] இன்பத்தைக் கொடுக்க வல்லபரமே ஸ்வரமூர்த்தியே எனவும் [சாஸ்திரத்தை அவராலாக்கிய வேதமே யெனவும்] நிச்சயித்து, மொழிவழி நின்று- குருவுஞ் சாஸ்திரமுங் கூறிய நெறியிலொழுகி, குற்றேவல் - [அவ் விரண்டிடத்தும்] திருவடித்தொண்டு, இயற்றின் அன்றோ - செய் தாலல்லவா, இன்பு உற்று இருப்பதற்கு - [ஒருவன்] பிரஹமா னந்தத்தை யடைந்திருத்தற்கு, எண்ணும் தன் எண்ணம் - நினைக் கின்ற தனது நினைப்பானது, நிறைவேறும்-பூரணமாகும். எ-று.

பொ-ரை. சக்ஷு இந்திரியமும் ஶ்ரோத்திர இந்திரியமும் ஆகிய இரண்டும் தங்களுக்குரிய விடயங்களாகிய உருவத்தையுஞ் சத்தத்தையும் அறியுந்தெளிவுத்தன்மை குறையுமுன்னமே (இள மைக் காலத்திலேயே) தண்ணிய கருணை வடிவங்கொண்ட மேலா கிய ஞாஞசிரியருடைய திருவடிகளையும் வேதாந்த சாஸ்திரத்தை யும் தமக்குப் புகலிடமாக நம்பிச்சேர்ந்து அவரை இன்பத்தைக் கொடுக்கத்தக்க பரமேஸ்வர மூர்த்தியெனவும், சாஸ்திரத்தை அவராலாக்கிய வேதமே யெனவும் நிச்சயித்து அக்குருவுஞ் சாஸ் திரமுங் கூறிய நெறியிலொழுகி அவ்விரண்டிடத்தும் திரு வடித் தொண்டுசெய்தாலல்லவா ஒருவன் பிரஹமானந்தத்தை யடைந்திருத்தற்கு நினைக்கின்ற தனது நினைப்புப் பூரணமாகும். எ—று,

**க-ரை. பிரஹமானந்தமடைய விரும்பினவன் குரு சாஸ்திரங் களை நம்பி வழிபட்டொழுக வேண்டும். எ—ம்.** (25)

## (4. முமுக்ஷுத்துவம்)

### [வெண்பா]

40. வெய்யிற் புழுவலையின் மீண்டோடு மானெனமுப்
பையுட் பொறுமலில்லப் பற்றுமுற்றும்—வெய்தின்
விடுத்தின்ப நல்குமொரு மெய்க்குருவைத் தேடி
யடுத்திடுதன் முத்திவிருப் பாம்

இ-ள். வெய்யிற்புழு [என] - வெய்யிலில் [அகப்பட்டு வெப்பஞ் சகிக்கமுடியாமல் அவ்வெய்யிலினின்றும் நீங்கி நிழலையடைய முயற்சிக்கின்ற] புழுவைப்போலவும், வலையின் மீண்டு ஓடும் - [வேடனாற்கட்டப்பட்ட வலையிலகப்பட்டுத் தெய்வகதியால் அவ்] வலையை அறுத்துக்கொண்டு அதினின்றும் வெளிப்பட்டு ஓடுகின்ற, மான் என - மானைப்போலவும், முப்பையுள் பொறுமல் - அத்தியாத்துமம், அதி தெய்வம், அதி பூதம் என்னும் மூவகைத் துக்கங்களையுஞ் சகிக்கமாட்டாமல், இல்லப்பற்று, முற்றும் - மனைவி மக்கள் முதலியோரிடத்துள்ள ஆசைகளனைத்தையும், வெய்தின் விடுத்து - அதிசீக்கிரத்தில் வெறுத்துவிட்டு, இன்பம் நல்கும் - மோக்ஷானந்தத்தை தருகின்ற, ஒரு மெய்க்குருவை - ஒப்பற்றஞானாசிரியனை, தேடி அடுத்திடுதல் - தேடிச் சரணடைதல், முத்தி விருப்பு ஆம் - மோக்ஷ விச்சையாம் எ—று.

பொ-ரை. வெய்யிலிலகப்பட்டு வெப்பஞ் சகிக்க முடியாமல் அவ்வெய்யிலினின்றும் நீங்கி நிழலையடையமுயற்சிக்கின்றபுழுவைப் போலவும், வேடனாற் கட்டப்பட்ட வலையிலகப்பட்டுத் தெய்வகதியால் அவ்வலையை அறுத்துக்கொண்டு அதினின்றும் வெளிப்பட்டு ஓடுகின்ற மானைப்போலவும் அத்தியாத்துமம், அதிதெய்வம், அதி பூதம் என்னும் மூவகைத் துக்கங்களையுஞ் சகிக்கமாட்டாமல்

மனைவி மக்கள் முதலியோர்களிடத்துள்ள ஆசைகளனைத்தையும் அதி சீக்கிரத்தில் வெறுத்துவிட்டு மோக்ஷானந்தத்தைக் கொடுக்கின்ற ஒப்பற்ற ஞானசிரியரைத் தேடிச் சரணடைதல் மோக்ஷ விச்சையாம். எ-று.

க-ரை. குடும்பப்பற்றுக்களை யொழித்துக் குருவைச் சரணடைதல் மோக்ஷ விருப்பாகும். எ-ம். (26)

(5 சிரவணம்)

(விருத்தம்)

41. தத்துவ மசிமுன் பதங்கள்சீ வேச சக்கியார்த் தங்களப்
பேத * சித்திரீக் குவதற் கியையிலக் கணையே தீர்ந்த
பின் மலமில்கூ டத்த * சுத்தமாம் பிரஹ்ம வைக்கிய
மிவையாஞ் சுருதியாய் வருளுடைப் பிரஹ்ம * வித்தி
னம் புயச்செஞ்சீரடி முறையின் மேவினோன் றான்வின
வுவவே.

இ-ள். சுருதி ஆய்வு அருள் உடை - வேதாந்த சாஸ்திர ஆராய்ச்சியும் பெருங்கருணையு முடைய, பிரஹ்ம வித்தின் - பிரஹ்ம வித்தாகிய ஞானியினது, அம்புயச்செஞ்சீரடி - தாமரை மலர் போலச் சிவந்த திருவடிகளில், முறையின் மேவினோன் - விதிப்படி [பூசனை முதலிய வற்றைச்செய்து அவரைச்] சரணாகவடைந்தவன், வினவுவ - அவரிடத்திற் கேட்பவை யாவையெனின், சீவேசர் - [நான்கு மகாவாக்கியங்களிலும்] ஜீவேசருக் குரித்தாயுள்ள தத்துவம் அசிமுன்பதங்கள் - துவம் தத்தவி பிரஞ்ஞானம் பிரஹ்மம் அகம் பிரஹ்மாஸ்மி அயமாத்துமாப் பிரஹ்மம் என்னும் பதங்களின் [வகையும்], சக்கியார்த்தங்கள் - [அப்பதங்களுக்குச் சொல்லப்

பட்ட] வாச்சியார்த்தங்களும், அப்பேதசித்தி நீக்குவதற்கு - வாச்சியர்களாகிய அச்சீவ ஈஸ்வரர்களுக்குண்டாகிய பேதங்களைப் போக்குவதற்கு, இயை இலக்கணை - பொருத்தமான இலக்கணையும், தீர்ந்தபின் - [அவ்விலக்கணையால் ஜீவேஸ்வரருக்குள்ள] பேதம் நீங்கினபின்பு, மலம் இல் கூடத்த - அவித்தியோபாதி நீங்கிய கூடஸ்தனுக்கும், சுத்தம்ஆம் பிரஹ்ம ஐக்கியம் - மாயோபாதி நீங்கிய சுத்த சைதன்னிய சொரூபமாகிய பிரஹ்மத்திற்குமுள்ள ஏகத்துவமும், இவை ஆம் - [ஆகிய] இவைகளாம் [என்று கூறுவர் அறிந்தோர்] எ—று.

பொ-ரை. வேதாந்த சாஸ்திரார்த்தமும் பெருங்கருணையுமுடைய பிரஹ்ம வித்தாகிய ஞானியினது தாமரை மலர் போலச் சிவந்த திருவடிகளில் விதிப்படி பூசனை முதலியவற்றைச் செய்து அவரைச் சரணடைந்தவன் அவரிடத்திற் கேட்பவை யாவையெனின் நான்கு மஹா வாக்கியங்களிலும் ஜீவேஸ்வரருக் குறித்தாயுள்ள துவம் தத்தஸி பிரஞ்ஞானம் பிரஹ்மம் அகம்பிரஹ்மாஸ்மிஅயமாத்து மாப்பிரஹ்மம் என்னும் பதங்களின் வகையும் அப்பதங்களுக்குச் சொல்லப்பட்ட வாச்சியார்த்தங்களும் வாச்சியர்களாகிய அச்சீவேஸ்வரருக் குண்டாகிய பேதங்களைப்போக்குவதற்குப் பொருத்தமான இலக்கணையும் அவ்விலக்கணையால் ஜீவேஸ்வரருக்குள்ள பேதம் நீங்கியபின்பு அவித்தியோ பாதி நீங்கிய கூடஸ்தனுக்கும்மாயோ பாதி நீங்கிய சுத்தசை தன்னிய சொரூபமாகிய பிரஹ்மத்திற்குமுள்ள ஏகத்துவமுமாகிய இவைகளாமென்று கூறுவர் அறிந்தோர். எ—று.

இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களிலும் முறையே பிரஞ்ஞானம் பிரஹ்மம், அகம் பிரஹ்ம அஸ்மி, தத் துவம் (துவம்தத்) அஸி, அயமாத்துமா பிரஹ்மம் என நான்கு

மஹா வாக்கியங்கள் உண்டு அவற்றுள் முதல் வாக்கியத்தில் பிரஞ்ஞானம் பிரஹமம் என இரண்டு பதங்களும் இரண்டாவது வாக்கியத்தில் அகம் பிரஹமம் அஸ்மி என மூன்று பதங்களும் மூன்றுவது வாக்கியத்தில் துவம்தது அஸி என மூன்று பதங்களும் நான்காவது வாக்கியத்தில் அயமாத்துமா பிரஹமம் என இரண்டு பதங்களும் உள்ளன இவையே அப்பதங்களின் வகையாம் அந் நான்கு வாக்கியங்களிலும் முதலிலுள்ள பிரஞ்ஞானம்,அகம்.துவம், அயமாத்துமா என்னும் நான்கு பதங்களும் ஜீவவாசகங்களாம் அவ்வாக்கியங்களில் இரண்டாவதாயுள்ள பிரஹமம், பிரஹமம்,தது, பிரஹமம் என்னும் நான்கு பதங்களும் ஈசுவரவாசகங்களாம் அவ் வாக்கியங்களுள் இரண்டாவது வாக்கியத்திலும் மூன்றுவது வாக்கியத்திலும் மூன்றுவதாயுள்ள அஸ்மி அஸி என்னும் இரண்டு பதங்களும் ஜீவேசுரருடைய ஐக்கிய வாசகங்களாம் இனி அச்சீவேசுரருடைய பேதம் யாவையெனின் அவர்களுடைய சொரூபந் தெரிந்தாலல்லது அவர்களுக்குள்ள பேதந் தெரியாதாதலால் அவர்களுடைய சொரூபம் சுருக்கமாக வருணிக்கப்படுகின்றது.

## ஜீவ சொரூப வருணனை.

வியட்டி (ஒவ்வொரு) தூல சூக்கும காரண சரீரங்களோடு (அஞ்ஞானங்களோடு) கூடிய சைதன்னியம் ஜீவனென்று சொல்லப்படும் இச்சீவனுக்கு உபாதியாகிய அஞ்ஞானத்தின் தர்மங்களாகிய அற்பஞ்ஞத்துவம், அற்ப சக்தித்துவம், பரிச்சின்னத்துவம்,பாதந்திரத்துவம் முதலிய குணங்கள் உண்டு. இப்படிப்பட்ட குணங்களோடுகூடியவன் ஜீவன் இவனே மேற்கூறிய நான்கு மஹா வாக்கியங்களின் முதலிலுள்ள நான்கு பதங்களுக்கும் வாச்சியார்த்தம் இக்குணங்களின் சம்பந்தமில்லாத கூடஸ்த ஆத்துமாவே இலக்கியார்த்தம்.

## ஈஸ்வர சொரூபவருணனை

சமட்டி (சர்வ) தூலகுக்கும காரண சரீரங்களோடும் (மாயை யோடும்)கூடியசை தன்னியம் ஈஸ்வரனென்று சொல்லப்படும் இவ்வீசானுக்கு உபாதியாயுள்ள மாயையின் தர்மங்களாகிய சர்வஞ் ஞத்துவம் சர்வசக்தித்துவம் அபரிச்சின்னத்துவம் சுதந்திரத்துவ முதலிய குணங்களுண்டு இப்படிப்பட்ட குணங்களோடுகூடிய ஈச ரனே நான்கு மஹா வாக்கியங்களிலும் இரண்டாவதாயுள்ள நான்கு பதங்களுக்கும் வாச்சியார்த்தம் இக்குணங்களின் சம்பந்த மில்லாத சுத்தப் பிரஹமம் இலக்கியார்த்தம்.

ஜீவேசுரரிடத்துள்ள அற்பஞ்ஞத்துவ சர்வஞ்ஞத்துவங்கள் அற்ப சத்தித்துவ சர்வசத்தித்துவங்கள் பரிச்சின்னத்துவ அபரிச் சின்னத்துவங்கள் பாதந்திரத்துவ சுதந்திரத்துவ முதலிய தருமங் கள் தம்முள் விரோதிகளாயிருக்கின்றன. இவை சீவேசுரருக்குள்ள பேதங்களாம் இப்படி ப்பட்ட விரோததர்மமுடைய சீவேசுரருக்கே மஹா வாக்கியங்களின் மூன்றாவதாயுள்ள அஸ்மி அஸி என்னும் இரண்டு பதங்களும் ஐக்கியங் கூறுகின்றன சுருதிகள் அசத்தியங் கூறமாட்டா ஆதலால் அர்த்த விரோதந்தோன்றுகின்ற இடங்களில் இலக்கணையினால் பொருள் கொள்ளவேண்டும் அவ்விலக்கணை யா தெனின் சத்தியின் ஞானமில்லாதவர்க்கு இலக்கணையின் ஞானம் உண்டாகமாட்டாது ஆதலால் சத்தியின் இலக்கணம் முதலிற் சுரு க்கமாகக் கூறப்படுகின்றது.

சத்த(பத)த்திற்கு அர்த்தத்தோடுள்ள சம்பந்தம் விருத்தி யெனப்படும் அந்த விருத்தி சத்தி விருத்தி இலக்கணா விருத்தி என்னும் பேதத்தால் இரண்டு வகையாம் அவற்றுள் சத்தத்திற்கு அர்த்தத்தோடுள்ள சாக்ஷாத் (நேரேயுள்ள சம்பந்தம் சத்தி விருத் தியென்று சொல்லப்படும் இச் சத்தி விருத்தியினாலறியப்படும்

பொருள் சத்தத்தின் வாச்சியார்த்தமென்றும் சக்கியார்த்த மென்றும் முக்கியார்த்தமென்றுஞ் சொல்லப்படும்.

இனி இலக்கணா விருத்தியாவது யாதெனின் சத்தத்திற்கு அர்த்தத்தோடுள்ள பரம்பரா சம்பந்தம் இலக்கணா விருத்தியாம் அதாவது சத்தத்திற்குச் சக்கியார்த்தத்தோடு நேரே சம்பந்த முண்டு அச்சக்கியார்த்தத்திற்கு எந்த அந்நிய வஸ்துவோடு நேரே சம்பந்தமுளதோ அந்த வஸ்துவினிடத்தில் மேற்கூறிய சத்தத்திற்குப் பரம்பரா சம்பந்தம் (சக்கியார்த்தவாயிலாகச் சம்பந்தம்) உண்டு இந்தப்பரம்பரா சம்பந்தத்தினை இலக்கணா விருத்தி யென்றும் இப்பரம்பரா சம்பந்தமுடைய வஸ்துவை இலக்கியார்த்தமென்றுங் கூறுவர்.

இவ்விலக்கணை விட்ட விலக்கணை விடாத விலக்கணை விட்டு விடாத விலக்கணை யென மூன்று வகைப்படும் அவற்றுள் விட்டுவிடாத விலக்கணையே மஹா வாக்கியத்திலுபயோகியானபடியால் ஏனைய இரண்டு இலக்கணைகளையும் விரிவஞ்சி விடுத்து இவ்வோரிலக்கணையின் சொரூபமுந் திருட்டாந்தமு மாத்திரம் இங்கே கூறப்படுகின்றது விட்டுவிடாத விலக்கணையின் சொரூபமாவது வாச்சியார்த்தங்களிலுள்ள விரோதமாகிய ஒரு பாகத்தை விட்டு விரோதமில்லாத மற்றப்பாகத்தைக் கொள்ளுதலாம் திருஷ்டாந்தமாவது திருநெல்வேலியிலிருந்து யாத்திரையாகப் பிரயாணித்த தேவதத்தன்சோமதத்தன் இருவரும் காசியை அடைந்திருக்குங் காலத்தில் அங்கு அந்நகரத்தரசன் நால்வகைச்சேனைகள் தன்னைச்சூழ மதயானையின்மீது ஆடையாபரண அலங்கிருதனாய்ப் பவனி வந்தான் அவனைப் பார்த்திருந்த தேவதத்தன் சோமதத்தன் இருவரும் தமது நகரமாகிய திருநெல்வேலிக்கு வந்து கொஞ்ச நாளைக்குப் பின்னர் அந்நகரத்திலுள்ள ஆலயத்தில் சுவாமி தரிசனஞ் செய்யச் சென்றிருந்தபொழுது முன் காசியிலே பவனி வரப்பார்க்கப்பட்ட அரசன் விரத்தியினாலே சந்நியாசம்பெற்று விபூதி உருத்திராக்க காஷாய தண்டு கமண்டல தாரியாய் அவர்களுக்கெதிரே நின்று சுவாமி தரி

சனஞ் செய்யக் கண்டார்கள் அவர்களில் தேவதத்தன் சோமதத்தனை நோக்கி முன் காசியில் யானையின்மீது பவனிவந்த அரசனே இந்தச்சந்நியாசி யென்று கூறினன்.

அதைக்கேட்ட சோமதத்தன் அரசன் சந்நியாசியாகமாட்டான் ஏனென்றால் அவன் ஊர் காசி இவன் ஊர் திருநெல்வேலி அவன் ஆடையாபரணம் பீதாம்பர கடகமகுடாதிகள் இவன் ஆடையாபரணங்கள் காஷாய வஸ்திர விபூதி யுருத்திராக்காதிகள் அவன் அரசன் இவன் சந்நியாசி ஆதலால் அவன் இவனுகமாட்டான் என்று கூறினன் அதற்குத் தேவதத்தன் அந்த அரசன் சந்நியாசி யென்னும் இருவரிடத்துமுள்ள விரோதபாகமாகிய அரசன் சந்நியாசி என்னும் பெயர்களையும் காசி திருநெல்வேலியாகிய வாசஸ்தானங்களையும் பீதாம்பர காஷாயங்களாகிய உடைகளையும் கடக மகுட விபூதி யுருத்திராக்கங்களாகிய ஆபரணங்களையும் பாராமல் விட்டுவிட்டு அவிரோத பாகமாகிய சரீரமாத்திரத்தை நோக்கினல் அச்சரீரமே இச்சரீரமென்பது விளங்குமென்று கூறினன் அதைக்கேட்டுத் தானும் அவ்வாறே பார்த்து அவனே இவன் இதிற் சந்தேகமில்லை என்று சம்மதித்தான் இங்கு இராஜ சின்னங்களோடு கூடிய சரீரம் அரசன் என்னும் பதத்திற்கு வாச்சியார்த்தமாம் சந்நியாச சின்னங்களோடு கூடிய சரீரம் சந்நியாசி என்னும் பதத்திற்கு வாச்சியார்த்தமாம் இந்த வாச்சியார்த்தங்களாகிய பீதாம்பராதி சின்னங்களோடு கூடிய சரீரத்திற்கும் காஷாயாதி சின்னங்களோடு கூடிய சரீரத்திற்கும் ஏகத்துவமுளதாகாது எதனுலெனில் தம்முள் விரோதியாகிய பீதாம்பராதி காஷாயாதி சின்னங்களோடு கூடியிருத்தலாலென்க இவ்விடத்து விட்டுவிடாத விலக்கணையாற் பொருள் கொள்ளுதலாவது அரசன் சன்னியாசி என்னும் வாச்சியார்த்தங்களிற் கலந்திருக்கின்றன மேற்கூறிய பீதாம்பராதி அரசசின்னங்களும் காஷாயாதி சந்நியாச சின்னங்களும் ஆகிய விரோத பாகத்தைவிட்டு அவிரோதபாகமாகிய சரீர மாத்திரத்தைக் கொள்ளுதலால் அவ்

விரண்டு சரீரமும் ஒன்றென்பதாகிய ஏகத்துவஞ் சித்திக்கும் இது வே விட்டுவிடாத விலக்கணைக்கு உதாரணமாம்.

இவ்வுதாரணம் போல அற்பஞ்ஞத்துவாதி குணங்களோடு கூடிய ஜீவன் மஹா வாக்கியங்களின் முதற் பதங்களுக்கு வாச்சி யார்த்தமாம் சர்வஞ்ஞத்துவாதிகுணங்களோடு கூடிய ஈசுரன் இர ண்டாவதாகிய பதங்களுக்கு வாச்சியார்த்தமாம் மேற்கூறிய குணங் களோடு கூடிய ஜீவேசுரருக்கு ஏகத்துவங் கூடாது எதனாலெனில், தம்முள் விரோதிகளாகிய அற்பஞ்ஞத்துவாதி சர்வஞ்ஞத்துவாதி குணங்களோடு கூடியிருத்தலாலென்க. இவ்விடத்து அவித்தை மா யைகளாற் கற்பிக்கப்பட்ட அற்பஞ்ஞத்துவாதி சர்வஞ்ஞத்துவாதி விரோதபாகத்தை விட்டு விரோதமில்லாத கேவலஞ்ஞைச தன்னிய பாகமாகிய கூடஸ்த பிரஹமங்கட்கு ஏகத்துவங்கூடும்.

ஆதலால் மஹா வாக்கியங்களிலுள்ள தத்துவ மசி முதலிய பதங்களும் அப்பதங்கட்குரிய சீவேசுரராகிய வாச்சியார்த்தங்களும் அந்தச் சீவேசுரரிடத்துள்ள பேதங்களும் அப்பேதங்களைப் போக்கத்தகுந்த இலக்கணையும் அவ்விலக்கணையாற் பேதம் நீங்கிய கூடஸ்த பிரஹமங்கட்குளதாகும் ஏகத்துவமும் ஆகிய இவையே அதிகாரிகளாற் சிரவணஞ் செய்தற்குரியவை யென் றறிக.

தத்துவ மசி மஹா வாக்கியத்தை முதலாகக் கூறியது உப தேச வாக்கியமென்னுஞ் சிறப்புத் தோன்றுதற் கென்றறிக.

க-ரை. பிரஹம வித்தாகிய குருவைச் சரணடைந்தவன் மஹா வாக்கியங்களிலுள்ள தத்துவ மஸி முதலிய பதங்களையும் அவ ற்றின் அருத்தமுதலிய வற்றையும் வினவவேண்டும் எ—ம். [27]

(6 மணம்)

[வெண்பா]

42. பந்தமித்தை ஞானத்தாற் பாதமுறுந் தன்மையி ஞ
லெந்தப் பொருள்பாத மெய்துமோ—வந்தவ து
மித்தையே நாணினிடை மேவரவு போலுமே ன
வுய்த்துணரின் மெய்ம்மை யுறும்

இ-ள். பந்தம்மித்தை - [ஜீவனுக்குளதாகிய] ஜனன மரணாதி சமுசாரம் ஆகிய பந்தம் மித்தை, ஞானத்தால் - பிரஹ்ம ஞானத்தால், பாதம் உறும் தன்மையினால் - நிவிர்த்தியாகுஞ் சுபாவமுடைமையால், எந்தப்பொருள் - எந்த வஸ்துவானது, பாதம் எய்துமோ - ஞானத்தினால் மித்தையென்று நிச்சயிக்கப்படுமோ, அந்த அது மித்தையே, - அப்படிப்பட்ட வஸ்துவானது மித்தையே, நாணின் இடை - இரச்சுவினிடத்தில்,மேவுஅரவுபோலும் என - அநிர்வசனீயமாகத் தோன்றுகின்ற சர்ப்பத்தைப்போலும் என்று, உய்த்து உணரின் - ஆராய்ந்தறிந்தால், மெய்ம்மை உறும் [ஆன்மா அசங்கம் ஜனனமரணாதி சமுசாரமற்றது என்னும்] உண்மைஞானமுளதாம். எ—று,

பொ-ரை. ஜீவனுக்குளதாகிய ஜனன மரணாதி சமுசாரமாகிய பந்தம் மித்தை. பிரஹ்ம ஞானத்தினால் நிவிர்த்தியாகுஞ் சுபாவமுடைமையால்.எந்த வஸ்துவானது ஞானத்தால் மித்தையென்று நிச்சயிக்கப்படுமோ அப்படிப்பட்ட வஸ்துவானது மித்தையே. இரச்சுவினிடத்தில் அநிர்வசனீயமாகத் தோன்றுகின்ற சர்ப்பத்தைப்போலு மென்று ஆராய்ந்தறிந்தால் ஆன்மா அசங்கம் சனனமரணாதி சமுசாரமற்றது என்னும் உண்மை ஞானமுளதாகும், எ—று.

க-ரை. ஜீவனுக்குளதாகிய பந்தம ஞானத்தாற பாதிக்கப் படுஞ் சுபாவமுடையதாயிருத்தலால் மித்தை. எ-ம். (28)

[இதுவுமது]

43. சீவேசர் பேதமித்தை சேர்ந்தவௌ பாதிகத்தா ல்
யாவை யுபாதியி னூற்பேத—மோவவை க
ளெல்லாமு மித்தை யிலங்கு கடமடவா ன்
புல்லுகின்ற பேதமே போல்

இ-ள். சீவ ஈசர்பேதம் மித்தை - ஜீவனுக்கும், ஈஸ்வரனுக்கும் தோற்றும் பேதங்கள் மித்தை, சேர்ந்த-[அவரிடத்துப்] பொருந்திய, ஔபாதிகத்தால் - [அவித்தை மாயையென்னும்] உபாதிகளினாலாகியன வாயிருத்தலின், யாவை - எவை, உபாதியினால் பேதமோ - உபாதிகளினாலாகிய பேதங்களோ. அவைகள் - அந்த உபாதிகளினாலாகிய பேதங்கள், எல்லாமுமித்தை - அனைத்தும் மித்தையாம், இலங்கு கடமடவான் - விளங்காநின்ற கடாகாயமடாகாயங்களுக்கு, புல்லுகின்ற பேதம்போல் - [கடமடமென்னும் உபாதிகளாற்] பொருந்துகின்ற பேதம் [மித்தையாதல்] போல.

எ—று.

பொ-ரை. ஜீவனுக்கும் ஈஸ்வரனுக்கும் தோன்றும் பேதங்கள் மித்தை. அவரிடத்துப் பொருந்திய அவித்தை மாயையென்னும் உபாதிகளினாலாகியன வாயிருத்தலின். எவை உபாதிகளினாலாகிய பேதங்களோ அந்த வுபாதிகளினாலாகிய பேதங்கள் அனைத்தும் மித்தையாம். விளங்காநின்ற கடாகாய மடாகாயங்களுக்குக் கடமடமென்னும் உபாதிகளினாற் பொருந்துகின்ற பேதம் மித்தையாதல் போல. எ-று.

க-ரை. ஜீவேசுரருக்குள்ள பேதங்கள் உபாதிகளினாலாகியனவாயிருத்தலின் மித்தை. எ—ம். (29)

(இதுவுமது)

44. இங்காத்து மாபிரஹ்மத் தேகமாஞ் சேதனத் தா
லெங்கேயெங் கேசே தனத்துவமுண்—டங் கே

பிரஹ்மா பின்மாம் பிரஹ்மம்போ லென் று
வருமான் மனனமிவ் வாறு

இ-ள். இங்கு - இவ்விடத்தில், (சிந்திக்குமிடத்தில்), ஆத்துமா பிரஹ்மத்து ஏகமாம் - ஆன்மா பிரஹ்மத்துடன் ஏகத்துவமுடையதாம், சேதனத்தால் - சைதன்ய சுபாவமுடைமையால், எங்கேஎங்கே-எவ்வெவ்விடத்து,சேதனத்துவம்உண்டு-சைதன்னியத்தன்மையுளதோ, அங்கே பிரஹ்மம் அபின்னம் ஆம்-அவ்விடத்திற் பிரஹ்மத்திற்கு ஏகத்துவமுளதாம், பிரஹ்மம் போல் என்று-பிரஹ்மம் எல்லாப் பொருள்களோடும் அபின்னமாயிருத்தல் போலவென்று, இவ்வாறு மனனம் வரும்-இவ்விதமாகச் சிந்தித்தலினது சொரூபம் நடைபெறும். எ-று.

பொ-ரை. இவ்விடத்தில் ஆத்துமா பிரஹ்மத்துடன் ஏகத்துவமுடையதாம். சைதன்னிய சுபாவமுடைமையால். எவ்வெவ்விடத்துச் சேதனத் தன்மை யிருக்கின்றதோ அவ்வவ்விடத்திற் பிரஹ்மத்திற்கு ஏகத்துவமுளதாம். பிரஹ்மம் எல்லாப்பொருள்களோடும் அபின்னமாயிருத்தல் போலவென்று. இவ்விதமாகச் சிந்தித்தலினது சொரூபம் நடைபெறும். எ—று.

க-ரை. ஆத்துமாவும் பிரஹ்மமும் சைதன்னிய சுபாவமுடைமையால் ஏகமாம். எ-ம் (30)

(7-நிதித்தியாசனம்)

(விருத்தம்)

45. உள்ளும் புறனு மொருபொருளு முறும லொளிருங் கடம்போ ல, வுள்ளும் வெளியு மெவ்வடிவு முறாத வுளமின் புதவினை யு, மெள்ளும் பிறவிப் புணரிகடந் திடுவா னியையு மெழிற்புணையு ங், கொள்ளும் பிரஹ்ம நிரமிசைக் கொடுபோய் விடுக்குந் துணையுமரோ.

இ-ள். உள்ளும் புறனும் - உள்ளிலும் வெளியிலும், ஒரு பொருளும் - ஒரு வஸ்துவையும், உறாமல் - பொருந்தாமல், ஒளிரும் கடம்போல-விளங்காநின்ற குடத்தையொப்ப, உள்ளும் வெளியும்-அகத்திலும் புறத்திலும், எவ்வடிவும் உறாத உளம் - [பிரபஞ்ச விஷயங்களுள்] எந்த விஷயாகாரத்தையும் அடையாத அந்தக் கரணம், இன்பு உதவு அனையும் - சுகத்தைத்தருகின்ற மாதாவும், எள்ளும்-[விவேகிகளால்] நிந்திக்கத்தகுந்த, பிறவிப் புணரி - பிறவியாகிய சமுத்திரத்தை, கடந்திடுவான் - கடக்கும் பொருட்டு, இயையும் எழில் புணையும் - [வந்து] பொருந்துகின்ற அழகிய மரக்கலமும், கொள்ளும் பிரஹமதீரமிசை - [முமுக்ஷுக்கள் தமது சொரூபமாக] அடையத்தக்க பிரஹமமாகிய கரையின்மீது, கொடு போய் விடுக்கும் துணையும் - கொண்டுபோய்ச் சேர்க்கின்ற தோழனு (மாலுமியு)மாம். எ—று.

பொ-ரை. உள்ளிலும் வெளியிலும் ஒரு வஸ்துவையும் பொருந்தாமல் விளங்காநின்ற குடத்தையொப்ப அகத்திலும் புறத்திலும் பிரபஞ்ச விஷயங்களில் எந்த விஷயா காரத்தையுமடையாத அந்தக்கரணம் சுகத்தைக் கொடுக்கின்ற மாதாவும் விவேகிகளால் நிந்திக்கத்தக்க பிறவியாகிய சமுத்திரத்தைக் கடக்கும் பொருட்டு வந்து பொருந்துகின்ற அழகிய மரக்கலமும் முமுக்ஷுக்கள் தமது சொரூபமாக அடையத்தக்க பிரஹமமாகிய கரையின்மீது கொண்டுபோய்ச் சேர்க்கின்ற தோழனு (மாலுமியு)மாம். எ—று.

க-ரை. நிச்சல அந்தக்கரணம் மாதாவையுங் கப்பலையுந் தோழனையும் போலச் சுகந்தரும். எ—ம். [31]

(இதுவுமது)

**46.** மெல்ல வடைந்து முறைவழியின் மேவிக் காணு முயிர் புவியாற், கொல்லப் படல்போ னிர்க்குணமாய்க் குறியற்

யற் றிலங்கு பரத்தி லுள ம், புல்லும் பொழுதே யுரு
விறந்து புலப்போக் கொழிந்து தேசுடைத் தா, யல்ல
லகன்று சீதளமா யமல சுகவா ரிதியாமே.

இ-ள். முழைவழியின் - மலைக்குகைக்குச் செல்லுமார்க்க மாக, மெல்ல அடைந்து-மிருதுவாகச் சென்று, மேவிக்காணும்-[அக்குகையில் வாசஞ்செய்யும் புலியை] விருப்பத்துடன் பார்க்கின்ற, உயிர் - பிராணியானது, புலியால் கொல்லப்படல்போல் - [அந்தப்] புலியினாலே கொல்லப்படுதல் போல, நிர்க்குணமாய் - சத்துவாதி குணங்களுக்கதீதமாய், குறி அற்று-[யாதொரு] அடையாளமுமின்றி, இலங்குபரத்தில் - [சச்சிதானந்த கனமாகப்] பிரகாசிக்கின்ற பிரஹமத்தினிடத்தில், உளம்புல்லும் பொழுது - அந்தக்கரணம் நிலைபெற்ற அத்தருணத்தில், உருவு இறந்து - அவ்வந்தக் கரணந்தனதுருவ நாசமடைந்து, புலப்போக்கு ஒழிந்து-[சுரோத்திர முதலாகிய இந்திரியங்களோடு கூடிச்] சத்தாதி விஷயங்களிற் செல்லுதலொழிந்து, தேசு உடைத்தாய் - ஞானப்பிரகாச முடையதாய், அல்லல் அகன்று-துக்கங்களினின்றும் நீங்கி, சீதளமாய் - குளிர்ச்சியை யுடையதாய், அமலசுகவாரிதி ஆம் - பரிசுத்தமாகிய ஆனந்த சமுத்திரமாகும். எ—று.

பொ-ரை. மலைக்குகைக்குச் செல்லுமார்க்கமாக மிருதுவாகச்சென்று அக்குகையில் வாசஞ்செய்யும் புலியை விருப்பத்துடன் பார்க்கின்ற பிராணியானது அந்தப் புலியினாலே கொல்லப் படுதல் போலச் சத்துவாதி குணங்களுக்க தீதமாய் யாதொரு அடையாளமுமின்றிச் சச்சிதானந்த கனமாகப் பிரகாசிக்கின்ற பிரஹமத்தினிடத்தில் அந்தக்கரணம் நிலைபெற்ற அத்தருணத்தில் அது தனது உருவ நாசமடைந்து சுரோத்திர முதலாகிய இந்திரியங்களோடு கூடிச் சத்தாதி விஷயங்களிற் செல்லுதலொழிந்து ஞானப்பிரகாச

முடையதாய்த் தாக்கங்களினின்றும் நீங்கிக் குளிர்ச்சியை யுடைய தாய்ப் பரிசுத்தமாகிய ஆனந்த சமுத்திரமாகும். எ—று.

க-ரை. பிரஹும சொரூபத்தில் நிலைபெற்ற அந்தக்கரணம் பிரஹுமாநந்தத்தை அடையும். எ—ம். [32]

[இதுவுமது]

[கட்டளைக் கலித்துறை]

47. நின்மா னுஷிய வெளியினிற் பானன் னியமறியா ன், றன்மாத் திரமங் கிருந்தே விளங்குறுந் தன்மையொப் பாய் ப், பன்னோர் விடயமும் பற்று றுறக்கத்தின் பண் புமின்றிச், சின்மாத் திரத்தின் விளங்கல் சமாதி தெரியு மினே

இ-ள். நின்மானுஷிய வெளியில் - மனுடசஞ்சாரமில்லாத வெட்ட வெளியான இடத்தில், நிற்பான் - நிற்கின்றவொருவன், அந்நியம் அறியான் - (தன்னைத்தவிர) அந்நியமாகிய பிராணிக ளொன்றையுங் காணுதவனாய், தன் மாத்திரமங்கிருந்து - தான் மாத்திரமே அவ்விடத்திருந்து, விளங்குறும் தன்மை யொப்பாய் - விளங்கா நின்ற தன்மைபோல, பன்னு ஓர் விடயமும்-சொல்லா நின்ற யாதொரு விஷயத்தையும், பற்று து-பொருந்தாமல், உறக் கத்தின் பண்பும் இன்றி-நித்திரையின் குணமும் இல்லாமல், சின் மாத்திரத்தின் - அறிவுமாத்திரமாக, விளங்கல் - [மனம்] பிரகாசித் திருத்தல், சமாதி தெரியுமினே - சமாதியின் சொரூபமென்று (விவேகிகளே) தெரிந்து கொள்வீராக. எ—று.

பொ-ரை. மனுடசஞ்சாரமில்லாத வெட்டவெளியான இடத் தில் நிற்கின்ற வொருவன் தன்னைத்தவிர அந்நியமாகிய பிராணி களொன்றையுங் காணுதவனாய்த் தான் மாத்திரமே அவ் விடத்தி

ருந்து விளங்கா நின்றதன்மைபோல சொல்லாநின்ற யாதொரு விஷயத்தையும் பொருந்தாமல் நித்திரையின் குணமுமில்லாமல் அறிவுமாத்திரமாகமனம் பிரகாசித்திருத்தல் சமாதியின் சொரூபமென்று விவேகிகளே தெரிந்து கொள்வீராக. எ-று.

தான் என்பது எதுகை நோக்கித்தன் எனக்குறுகி நின்றது.

க-ரை. சமாதியாவது மனம் அறிவு சொரூபமாக நிலைத்திருத்தல். எ—ம். (33)

[இதுவுமது]

[விருத்தம்]

48. மட்டறவெங் கணும்பூரித் திலங்கிடுசிற் பரந்தனிலே மனம்
போ யொன்றி, யெட்டுணையு நினைப்புமறப் பினைமருவா
தறிவுருவா யிருக்குமீதே, நிட்டைகணப் பொழுதுறினுஞ்
சீவன்முத்தி நிலையுடனே நிலையாநிற்கும், கெட்டழிக்கு
மாசையெலாங் கெடினன்றி யிந்த நிட்டை கிட்டாதன்றே.

இ-ள். மட்டு அற - [தேசகால வஸ்துக்களால்] அளவுபடாமல், எங்கணும் பூரித்து - எவ்விடத்திலும் பரிபூரணமாய், இலங்கிடுசிற் பரந்தனில்-விளங்காநின்ற சின் மயமாகிய பிரஹ்ம சொரூபத்தில், மனம் போய் -மனமானது தனது தூலத்தன்மை யழிந்து, ஒன்றி - [பாலிற் சலம்போலக்] கலந்து, எள்துணையும் - எள்ளளவும், நினைப்பு மறப்பினை-சகல கேவலங்களை, மருவாது-பொருந்தாமல், அறிவு உருவாய் இருக்கும் - அறிவே சொரூபமாக நிலைத்திருக்கின்ற, ஈதே நிட்டை - இந்நிலையே ஞானநிட்டையாம், கணப்பொழுது உறினும் - [இந்த ஞானநிட்டையை ஒரு] க்ஷணநேரமடைந்தாலும், ஜீவன் முக்திநிலை - ஜீவன் முத்திநிலையானது,

உடனே - அக்கணமே, நிலையாநிற்கும் - நிலைபெறும், கெட்டு அழிக்கும் ஆசைஎலாம் - (மோக்ஷவிச்சை ஆன்மஞானங்களைக்) கெடுத்தழிக்கின்ற இச்சைகளனைத்தும், கெடின் அன்றி - ஒழிந்தாலல்லாமல், இந்த நிட்டை - இந்த ஞான நிட்டையானது, கிட்டாது - கிடைக்கமாட்டாது. எ—று.

பொ-ரை. தேசகால வஸ்துக்களால் அளவுபடாமல் எவ்விடத்திலும் பரிபூரணமாய் விளங்காநின்ற சின்மயமாகிய பிரஹ்ம சொரூபத்தில் மனமானது தனது தூலத்தன்மை யழிந்து பாலிற் சலம்போற்கலந்து எள்ளளவுஞ் சகல கேவலங்களைப் பொருந்தாமல் அறிவே சொரூபமாக நிலைத்திருக்கின்ற இந்நிலையே ஞானநிஷ்டையாம். இந்த ஞான நிஷ்டையை ஒரு க்ஷண நேரமடைந்தாலும் ஜீவன்முத்தி நிலையானது அக்கணமே நிலைபெறும். மோக்ஷ விச்சை ஆன்ம ஞானங்களைக் கெடுத்தழிக்கின்ற இச்சைகளனைத்தும் ஒழிந்தாலல்லாமல் இந்த ஞான நிஷ்டையானது கிடைக்க மாட்டாது. எ—று.

கெட்டு என்னுந்தன் வினைப் பிறவினைப் பொருளில்வந்தது.

க-ரை. ஞான நிட்டையடைந்தவர்க்கு ஜீவன் முத்தியுண்டாகும். எ—ம். (34)

## (8. துவம் பதார்த்த சோதனம்)

49. அத்தி தோலா ரங்கமல ஞரிந் திரியங் களுமல்ல ன்
சித்த மல்ல னபிமானஞ் செய்யு மகங்கா ரமுமல்ல ன்
புத்தி யலனிம் மனமல்லன் போர்க்கா திகள்செய் யுயிரல்லன்,
வித்த வறிவு மின்பமுமாய் நிகழ்வ தெதுவோ வது
நானே.

இ-ள். அத்திதோல் ஆர் - என்பினலுந் தோலினலுங் கட்டப்பட்ட, அங்கம் அலன் - (இந்தத்) தேகமும் (யான்) அல்லன், ஆர் - (இத்தேகத்திற்) பொருந்திய, இந்திரியங்களும் - சுரோத்திர முதலாகிய ஞானேந்திரியங்களும் வாக்கு முதலாகிய கன்மேந்திரியங்களும், அல்லன்-(யான்) அல்லன், சித்தம் அல்லன் - (சிந்தனைவடிவமான) சித்தமும் (யான்) அல்லன், அபிமானம் செய்யும் - (தேகேந்திரியாதிகளை யான் எனது என்று) அபிமானஞ்செய்கின்ற, அகங்காரமும் அல்லன்-அகங்காரமும் (யான்) அல்லன், புத்தி அலன் - (நிச்சய வடிவமான புத்தியும் (யான்) அல்லன், இம்மனம் அல்லன் - (சங்கற்ப விகற்ப வடிவமான) இந்த மனமும் [யான்] அல்லன், போக்கு ஆதிகள் செய் - உசுவாச நிசுவாசங்களைச் செய்கின்ற, உயிர் அல்லன் - பிராணனும் [யான்] அல்லன், நித்த அறிவும் இன்பமும் ஆய் - சத்து சித்து ஆனந்தம் என்னும் வடிவமாய், நிகழ்வது எதுவோ — (சதோதயமாக) விளங்குகின்றது எந்த வஸ்துவோ, அது நான் - அந்தப் பிரஹ்மமே நான். எ—று.

பொ-ரை. எலும்பினலுந் தோலினலுங் கட்டப்பட்ட இந்தத் தேகமும் யானல்லன். இத்தேகத்திற் பொருந்திய சுரோத்திர முதலாகிய ஞானேந்திரியங்களும் வாக்கு முதலாகிய கன்மேந்திரியங்களும் யானல்லன். சிந்தனைவடிவமான சித்தமும் யானல்லன் தேகேந்திரியாதிகளை யான் எனதென்று அபிமானஞ்செய்கின்ற அகங்காரமும் யானல்லன். நிச்சய வடிவமாகிய புத்தியும் யானல்லன். சங்கற்ப விகற்ப வடிவமான இந்த மனமும் யானல்லன் உசுவாச நிசுவாசங்களைச் செய்கின்ற பிராணனும் யானல்லன் சத்து சித்து ஆனந்தமென்னும் வடிவமாய்ச் சதோதயமாய் விளங்குகின்றது எந்த வஸ்துவோ அந்தப் பிரஹ்மமே நான். எ—று.

*க-ரை. இத்தேகாதிகள் யானல்ல சச்சிதானந்த வடிவமா கிய பிரஹ்மமே நான். எ—ம்.* (35)

[முன் தொகுத்துக்கூறிய தேகாதிகளை இது முதல் ஆறு செய்யுட்களால் தனித்தனி சோதிக்கக் கருதி இதில் தூல சரீரத்தைச் சோதித்தல்.]

(கட்டளைக்கலித்துறை.)

50. *சொப்பனத் தானையைக் கண்ணுற்று மெய்ந்நாத் துடித் தலறத், தப்பிடக் கால்விசைத் தோடுமப் போழ்துந் தகைமனையி, லொப்பம ளிக்கட் சவம்போ லசைவற் றுளவுடலோ, செப்பிடு நீரதின் வேறோநன் காய்ந்து தெளியுமினே.*

*இ-ள். சொப்பனத்து - சொப்பனுவஸ்தையில், ஆனையைக் கண் உற்று - ஒரி யானையைத்தமது நேத்திரத்தினாலே பார்த்து, மெய் துடித்து நா அலற - சரீரம் பதைக்கவும் நாவானது கூக்குர லிடவும், தப்பிட - (நீர் அவ்யானையினிடத் தகப்படாமற்) பிழைப் பதற்கு, கால் விசைத்து ஓடும் - கால் விரைவாய் ஓடுகின்ற, அப் போழ்தும் - அந்த வேளையிலும், தகைமனையில்-தகுந்த வீட்டினி டத்தே, ஒப்பு அமளிக்கண், - மனதுக்கிசைந்த படுக்கையின்கண், சவம்போல்-பிணம்போல, அசைவு அற்று உள - அசைவில்லாமற் கிடந்த, உடலோ - தேகமோ, செப்பிடும் நீர்- (சொப்பனுவஸ்தை யிற் கூக்குரலிட்டோடியதாகச்) சொல்லா நின்ற நீங்கள், அதின் வேறோ-அந்தத் தேகத்தினும் அந்நியமோ, நன்கு ஆய்ந்து-நன்று யாராய்ந்து தெளியுமின் - தெளிந்து கொள்ளுங்கள். எ—று.*

*பொ-ரை. சொப்பனுவஸ்தையில் ஒரி யானையைத் தமது நேத்திரத்தினாலே பார்த்துச் சரீரம் பதைக்கவும் நாவானது கூக்கு*

ரவிடவும் நீவிர் அவ்யானையினிடத் தகப்படாமல் பிழைப்பதற்குக் கால் விரைவாய் ஓடுகின்ற அந்த வேளையிலும் தகுந்த வீட்டினிடத்தே மனதுக்கிசைந்த படுக்கையின்கண்பிணம் போல அசைவில்லாமற் கிடந்ததேகமோ சொப்பனவஸ்தையில் கூக்குரலிட்டோடியதாகச் சொல்லாநின்ற நீங்கள் அந்தத் தேகத்தினும் வேறோ நன்றுயாராய்ந்து தெளிந்து கொள்ளுங்கள். எ—று.

நீவிர் ஓடும்பொழுதும் அசைவற்றுக்கிடந்த தேகமா அதினும் வேறு என ஒட்டுக.

க-ரை. நீவிர் சொப்பனவஸ்தையில் ஓடும்பொழுதும் அசைவற்றுக்கிடந்த தூல சரீரம் உம்மினும் வேறு. எ—ம். (36)

## (இந்திரியங்களைச் சோதித்தல்)

### [வெண்பா]

51. இந்தியமன் றுமவற்றொன் றில்லுயிருங் காண்டலுள்ளே
புந்தி விவகரிக்கும் போதிருந்து—நந்திய றி
வில்லதுவாக் காண்ட லெனதாத லென்றிவற்று ற்
சொல்லாத்து மாச்சிற் சுகம்.

இ-ள். இந்தியம்- (சுரோத்திர முதலாகிய ஞான) இந்திரியங்கள், [ஆத்துமா] அன்று - ஆன்மாவல்ல [எதனாலெனின் அதற்கு எது கூறுகின்றார்], அவற்று ஒன்றுஇல் உயிரும் - அவைகளில் ஒவ்வோரிந்திரிய மற்ற ஜீவரும், காண்டல் - காணப்படுதலும், உள்ளே - ஆந்தரத்தில், புந்திவிவகரிக்கும்போது - புத்தியானது மனோராச்சியஞ் செய்யும்பொழுது, இருந்தும் - [தத்தமக்குரிய விடங்களில்] இருந்தும், நந்தி - [தமது செயல்] கெட்டு, அறிவு இல்லது வாக் காண்டல்-சடமாகக்காணப்படுதலும், எனது ஆதல்- மமதைக்கு விடயமாதலும், என்ற இவற்றால் - என்று சொல்லும்

இவ்வேதுக்களை யுடைமையால். [ஆனால் ஆத்துமாமற் றெத்தன் மைத் தெனின் அதற்குக் கூறுகின்றார்], சொல் ஆத்துமா - மேற்சொல்லிய ஆன்மாவானது, சித்து சுகம் [ஆம்] - ஞானானந்த மயமாம். எ—று.

பொ-ரை. சுரோத்திர முதலாகிய ஞானேந்திரியங்கள் ஆன் மாவல்ல எதனாலெனின் அதற்கு ஏது கூறுகின்றார். அவைகளில் ஒவ்வோரிந்திரிய மற்ற ஜீவருங் காணப்படுதலும் ஆந்தரத்திற் புந்தியானது மனோராச்சியஞ் செய்யும் பொழுது தத்தமக்குரிய விடங்களிலிருந்துந் தமது செயல் கெட்டுச் சடமாகக் காணப்படு தலும் மமதைக்கு விடயமாதலும் என்று கூறுகின்ற இவ்வேதுக் களையுடைமையால். ஆனால் ஆத்துமா மற்றெத்தன்மைத் தெ னின் அதற்குக் கூறுகின்றார் மேற் சொல்லிய ஆன்மாவானது ஞானாந்த மயமாம். எ—று:

என்ற என்பதின் அகரவீறு தொக்கது, ஆத்துமா வென்பது முன்னுங் கூட்டப்பட்டது ஆம் என்பது பிரித்துக் கூறப்பட்டது,

க-ரை. அநித்திய முதலிய ஏதுக்களையுடைய ஞானேந்திரி யங்கள் ஞானானந்த மயமாகிய ஆன்மாவல்ல. எ—ம் (37)

## (பிராணனைச்சோதித்தல்)

52. உள்வெளியும் போக்குவர வுற்றுறங்கும் வேளையின் மூக் குள்ளபணி கள்ள னுறக்கவர்ந்துங்—கள்ளனென க்
கண்டறிய லாகாத காற்றன்றே யாத்து மா
விண்டறிவா யுள்ள வெளி.

இ-ள். உள்வெளியும் - அகத்திலும் புறத்திலும், போக்கு வரவு உற்று-உசுவாச நிசுவாசங்களைப்பொருந்தி, உறங்கும் வேளை யில் - [சரீரி] நித்திரை செய்யுஞ் சமயத்தில், மூக்கு உள்ளபணி- நாசியிலே தரித்திருக்கப்பட்ட ஆபரணத்தை, கள்ளன் உறக்க

வார்ந்தும் - திருடன் (வந்து இப்பிராண வாயு தன் கையிற்) பரிசிக்குமாறு கழற்றியும், கள்ளன் என - (அவனைத்) திருடன் என்று, கண்டு அறியலாகாத - நோக்கியறிய முடியாத, காற்று (ஆத்துமா) அன்று - (சடசொரூபமாகிய) பிராணன் ஆன்மாவல்ல, (ஆனால் ஆன்மாவின் சொரூபம் யாதெனின் மேற் கூறுகின்றார்), ஆத்துமா - ஆன்மாவானது, விண்டு அறிவாய் உள்ள வெளி - வியாபகமாயும் அறிவாயுமிருக்கப்பட்ட நிரவயவப் பொருள். எ—று.

பொ-ரை. அகத்திலும் புறத்திலும் உசுவாச நிசுவாசங்களைப் பொருந்தி சரீரநித்திரை செய்யுஞ்சமயத்தில் காசியிலே தரித்திருக்கப்பட்ட ஆபரணத்தைத் திருடன் வந்து இப்பிராணன் தனது கையிற் பரிசிக்குமாறு கழற்றியும் அவனைத் திருடனென்று நோக்கியறிய முடியாத சடசொரூபமாகிய பிராணன் ஆன்மாவல்ல, ஆனால் ஆன்மாவின் சொரூபம் யாதெனின் மேற்கூறுகின்றார். ஆன்மாவானது வியாபகமாயும் அறிவாயுமிருக்கப்பட்ட நிரவயவப்பொருள். எ—று.

ஆத்துமா என்பது அன்று என்பதுடனுங் கூட்டப்பட்டது.

க-ரை. சடமாகிய பிராணன் அறிவுவடிவாகிய ஆன்மாவல்ல. எ—ம் [38]

## (மனதைச் சோதித்தல்.)

53: சங்கற்ப மேவடிவாச் சாற்றப் படுமனமன்
றிங்குவிகா ரப்படலு மெய்திறுயின்—மங்குதலு
மென்ன தெனப்படலு மென்றிவற்றா லாத்துமா
மன்னறிவா னந்த மயம்

இ-ள். சங்கற்ப மேவடிவா - விடயங்களை நினைத்தலே வடி

வமாக, சாற்றப்படும் மனம்-சொல்லப்படுகின்ற மனமானது, (ஆத்துமா) அன்று - ஆன்மாவல்ல, [ஏதனுலெனின் அதற்கு ஏது கூறுகின்ருர்] இங்கு-ஜாக்கிர காலத்தில், விகாரப்படலும் - காரியப்படுதலும், (முன்வடிவத்தைவிட்டு வேறு வடிவத்தைத் தரித்தலும்), துயில் எய்தில்-சுழுத்தியடைந்தால், மங்குதலும்-தன்னுருவங் கெடுதலும், என்னது எனப்படலும் - மமதைக்கு விஷயமாதலும், என்ற இவற்ருல் - என்று சொல்லும் இவ்வேதுக்களை யுடைமையால், [ஆனுல் ஆன்மாவின் சொரூபம் யாதெனின் மேற்கூறுகின்ருர்]. ஆத்துமா - ஆன்மாவானது, மன் அறிவு ஆனந்தமயம் - நிலைபெற்ற ஞானனந்தமயமாம். எ—று.

பொ-ரை. விடயங்களை நினைத்தலே வடிவமாகச் சொல்லப்படுகின்ற மனமானது ஆன்மாவல்ல. ஏதனுலெனின் அதற்கு ஏது கூறுகின்ருர். சாக்கிரகாலத்திற் காரியப்படுதலும் சுழுத்தியடைந்தால் தன்னுருவங் கெடுதலும் மமதைக்கு விஷயமாதலும் என்று சொல்லும் இவ்வேதுக்களை யுடைமையால். ஆனுல் ஆன்மாவின் சொரூபம் யாதெனின் மேற்கூறுகின்ருர். ஆன்மா நிலைபெற்ற ஞானனந்தமயமாம். எ—று.

ஆத்துமா என்பது அன்று என்பதுடனுங் கூட்டப்பட்டது என்ற என்பதின் அகரவீறுதொக்கது.

க-ரை. காரியப்படுதல் முதலிய ஏதுக்களையுடைய மனம் சச்சிதானந்த வடிவ ஆன்மாவன்று. எ—ம். (39)

## (புத்தியைச் சோதித்தல்)

54. நிச்சயசொ ரூபமதாய் நின்று சுழுத்தியின்கட்
பொய்ச்சூ னியமாகும் புந்தியன்று—நித்தியமுங்
குன்றுமத னிம்மையையுங் குன்று தறிபொருளாம்
பென்று மிலங்காத்து மா

இ-ள். நிச்சய சொரூபமதாய் நின்று - [சாக்கிரத்தில் விஷயங்களை இது இன்னது என] நிச்சயித்தலே வடிவமாகக்கொண்டிருந்து, சுழுத்தியின் கண் - சுழுத்தியவஸ்தையில், சூனியப்பொய் ஆகும் - இன்மை வடிவமாகிய பொய்யாகின்ற, புந்தி - புத்தியானது, நித்தியமும் - ஒவ்வொருநாளும், குன்றும் அதன் இன்மையையும் - [சாக்கிரத்தில் அப்புத்தியினிருப்பை யறிந்தாற்போலச் சுழுத்தியில்] கெடுகின்ற அதன் அபாவத்தையும், குன்றாது - தான் நித்தியமாயிருந்து, அறிபொருளாய் - அறிகின்ற சாக்ஷியாய், என்றும் —எந்நாளும், இலங்கு ஆத்துமா அன்று - விளங்குகின்ற ஆன்மாவல்ல. எ—று.

பொ—ரை. சாக்கிரத்தில் விஷயங்களை இது இன்னது என நிச்சயித்தலே வடிவமாகக் கொண்டிருந்து சுழுத்தியவஸ்தையில் இன்மை வடிவமாகிய பொய்யாகின்ற புத்தியானது ஒவ்வொருநாளுஞ் சாக்கிரத்தில் அப்புத்தியினிருப்பை யறிந்தாற்போலச் சுழுத்தியில் கெடுகின்ற அதன் அபாவத்தையும் நித்தியமாயிருந்தறிகின்ற சாக்ஷியாய் எந்நாளும் விளங்குகின்ற ஆன்மாவல்ல. எ—று.

தா—ம். தூலமுஞ் சூக்குமமுமாகிய பிரபஞ்சப் பொருள்களனைத்தும் பாதயோக்கிய சொரூபமுடைய மித்தையாதலின் புத்தியினிருப்பும் அத்தன்மைத் தென்பார் "நிச்சய சொரூபமதாய் நின்று" எனவுஞ் சுழுத்தியவஸ்தையில் அம்மித்தியா சொரூபமும் இன்றென்பார் "பொய்ச் சூனியமாகும்" எனவுங் கூறினர்.

க-ரை. சாக்ஷியமாகிய புத்தி சாக்ஷியாகிய ஆன்மாவல்ல. எ—ம். (40)

(அஞ்ஞானத்தைச் சோதித்தல்.)

55. பிரியமுடன் மோதம் பிரமோத மூன்று ம்
விரியிடமாய்ச் சிற்பிரதி விம்ப—மருவிட மா
மஞ்ஞான மென்ன தெனலாலன் றாத்து மா
மெய்ஞ்ஞான மானவிது வேறு.

இ-ள். பிரியமுடன்-[இஷ்ட வஸ்துவின் தரிசனத்தாலுண் டாகின்ற] பிரியவிருத்தியோடு, மோதம் - [இஷ்ட வஸ்துவின் லாபத்தாலுண்டாகின்ற] மோதவிருத்தியும், பிரமோதம்- [இஷ்ட வஸ்துவின் போகத்தாலுண்டாகின்ற] பிரமோத விருத்தியுமாகிய, மூன்றும் - மூவகை விருத்திகளும், விரி இடம் ஆய் - உண்டாதற் கேதுவுமாய், சிற்பிரதிவிம்பம் - சிதாபாசன், மருவு இடம் ஆம் - பொருந்திநிற்றற்குஸ்தானமுமாகின்ற, அஞ்ஞானம் - அஞ்ஞான மானது, என்னது எனலால் - என்னுடையதென்று [தனக்கன்னி யமாகச்] சொல்லப்படுதலால், ஆத்துமா அன்று - [தானாயிருக் கின்ற] ஆன்மாவல்ல, மெய்ஞ்ஞானம் ஆன இது - சத்திய ஞான வடிவமாகிய இவ்வான்மா, வேறு - [அஞ்ஞானத்தினும்] அந்நிய மாம், எ—று.

பொ—ரை. இஷ்ட வஸ்துவின் தரிசனத்தாலுண்டாகின்ற பிரிய விருத்தியோடு இஷ்டவஸ்துவின் லாபத்தினாலுண்டா கின்ற மோதவிருத்தியும் இஷ்டவஸ்துவின் போகத்தினாலுண் டாகின்ற பிரமோத விருத்தியுமாகிய மூவகை விருத்திகளும் உண்டாதற்கேதுவுமாய்ச் சிதாபாசன் பொருந்தி நிற்றற் குஸ் தானமுமாகின்ற அஞ்ஞானமானது என்னுடையதென்று தனக் கந்நியமாகச் சொல்லப்படுதலால் தானாயிருக்கின்ற ஆன்மாவல்ல. சத்திய ஞானவடிவமாகிய இவ்வான்மா அஞ்ஞானத்தினும் அந் நியமாம். எ—று.

க-ரை. தனக்கந்நியமாகச் சொல்லப்படுகின்ற அஞ்ஞானந் தானுயிருக்கின்ற ஆன்மாவல்ல. எ—ம்: [41]

## (9 தற்பதார்த்த சோதனம்)

(இதுமுதல் மூன்று செய்யுட்களால் தற்பதார்த்த சோதனோபாயங் கூறப்படுகிறது. அவற்றுள் இதில் சத்தினின்றும் ஆகாயாதிகளைப் பிரிக்க வேண்டுமெனல்)

[கட்டளைக் கலித்துறை]

56. ஏகா சலவச் சுதசத்தி லத்தியா சித்தில கு
மாகாய மாதி யனைத்தும் பிரிக்கப்பட் டாலிலவா ம்
வாகா ன வப்பொரு ளொன்றே யிருந்து வயங்கிடும்பின்
தேகா தி பௌதிக பூதங்கண் முன்னிற் றெரிவறுமே.

இ-ள். ஏக அசல அச்சுதசத்தில் - சசாதியாதி சம்பந்தமில்லாததாயும் கிரியையற்றதாயும் நித்தியமாயு மிருக்கின்ற சத்து வஸ்துவில், அத்தியாசித்து இலகும் - கற்பனையாய் விளங்காநின்ற ஆகாயம் ஆதி அனைத்தும் - ஆகாய முதலாகிய பூதபௌதிகங்களெல்லாம், பிரிக்கப்பட்டால் இலவாம் -[அச்சத்தினின்றும்] பிரிக்கப்படின் மித்தையாவனவாம், பின் - பிரித்தபின்பு, வாகான அப்பொருள் ஒன்றே - அழகிய அந்தச் சத்துவஸ்து ஒன்றுமாத்திரமே, இருந்து வயங்கும் - நிலைபெற்றுவிளங்கும், தேக ஆதி பௌதிக பூதங்கள் [இல்] - [அவ்விளக்கத்தால்] சரீர முதலாகிய பிரபஞ்சங்களிலும் அதன் காரணமாகிய பஞ்சபூதங்களிலுமுள்ள,முன்தெரிவு அறும்.- சத்தியத்தோற்றம் நீங்கும் [மித்தையாகத் தோற்றும்]. எ—று.

பொ-ரை. சசாதியாதிசம்பந்தமில்லாததாயும் கிரியையற்ற

தாயும் நித்தியமாயுமிருக்கின்ற சத்து வஸ்துவில் கற்பனையாய் விளங்காநின்ற ஆகாயமுதலாகிய பூதபௌதிகங்களெல்லாம் அந்தச் சத்தினின்றும் பிரிக்கப்படின் மித்தையாவனவாம். பிரித்த பின்பு அழகான அந்தச்சத்து வஸ்து ஒன்று மாத்திரமே நிலை பெற்று விளங்கும். அவ்விளக்கத்தால் சரீர முதலிய பிரபஞ்சங்களிலும் அதன் காரணமாகிய பஞ்சபூதங்களிலுமுள்ள சத்தியத்தோற்றம் நீங்கும். அதாவது மித்தையாகத்தோற்றும். எ-று

ஏழாம் வேற்றுமையில் வந்த இல்லுருபு பிரித்துக்கூட்டப்பட்டது.

"ஆகாய மாதியனைத்தும் பிரிக்கப்பட்டாலிலவாம், வாகான வப் பொருளொன்றேயிருந்து வயங்கிடும்பின், தேகாதி பௌதிக பூதங்கண் முன்னிற்றெறிவறுமே" என்று கூறியதற்கு முதலில் மித்தையாதலாகிய பாதமும், அப்பாதத்தாற் சத்துவஸ்துவின் விளக்கமும், அவ்விளக்கத்தால் பூத பௌதிகங்களின் பாதமும் உளதாமென்று அருத்தமாதல் பற்றிப் பாதத்தாற் போதமும், போதத்தாற் பாதமும் உளதாதலாகிய அந்நியோந்நியாசிரய தோஷம் உண்டாமென்னுஞ் சங்கையில்லை. எதனாலெனின் முன்னைய பாதம் பரோக்ஷமும் பின்னையபாதம் அபரோக்ஷமும் ஆதலினென வறிக.

பிரபஞ்சப் பொருள்கள் ஒவ்வொன்றிலும் சத்து, சித்து, ஆனந்தம், நாமம், ரூபம் என ஐந்த மிசங்களுள. அவற்றுள் முன்னைய மூன்றும் சந்தனத்தின் கைப்பு, குளிர்ச்சி, வாசனை ஆகிய மூன்றுஞ் சொரூபத் தாலெப்படி ஏகமோ அப்படி ஏகமும் வியாபகமுமாம். இவை சத்தாகிய ஆன்மாவின் அமிசங்களென்று சொல்லப்படும். பின்னைய இரண்டும் பலவும் பரிச்சின்னமுமாம். இவை அசத்தாகிய மாயையின் அமிசங்களென்று சொல்லப்படும். இவ்வைந் தமிசங்களும் தம்முட்கலந்திருத்தல் பற்றிப் பிரபஞ்சப்

பொருள்கள் சத்தியம்போலச் சத்தசத்துக்களின் விவேகமில்லாதவர்களுக்குத் தோற்றுகின்றன. இவ்வைந்தமிசங்களும் ஒரு பொருளில் எவ்வாறு கலந்திருக்கின்றன வெனின், கடம் இருக்கிறது என்பது சத்து, விளங்குகிறது என்பது சித்து, தாகசாந்திக்குத் தண்ணீர் கொண்டு வருதலால் சுகசாதனமாயிருக்கிறது என்பது ஆனந்தம், கடம் என மூன்றெழுத்தாலாகியது நாமம், பண்டி பெருத்துக் கழுத்துச் சிறுத்து உருண்டை வடிவாயிருப்பது ரூபம், இவ்வைந்தமிசங்களும் கடம் என்னும் ஒரு பொருளிற் கலந்திருத்தல் காண்க.

இவற்றுள் பின்னையவாகிய நாம ரூபங்களாற் சொன்மாத்திரமாகக்கற்பிக்கப்பட்ட கடத்தில் முன்னையவாகிய சச்சிதானந்தங்கள் கலந்திருத்தலால் அக்கடம் சத்தியம் போல வியவகரிக்கப்படுகிறது. விசாரதிருட்டியால் கடத்தின் எந்தப்புறங்களிற் பார்த்தாலும் மண்ணைத்தவிரக் கடம் என்பது காணப்படுகிறதில்லை. ஆகையால் கடம், இருக்கிறது என்னும் எழுவாயும் பயனிலையுமாகிய ஒரு வாக்கியத்திற், கடம் என்னும் எழுவாய்ப், பொருள் இருக்கிறது என்னும் பயனிலையோடு கூடினால் உள்ள பொருளாகத் தோற்றுகிறது. அதில் இருக்கிறது என்னும் பயனிலையைப் பிரித்து விட்டால் வேறியாது பயனிலையைப் பெறுமெனின்? இல்லையென்னும் பயனிலையையல்லவா பெறும். அங்ஙனம் பெறவேமுன் உள்ள பொருளாகத் தோற்றிய கடம் என்னும் அந்த எழுவாய்ப் பொருளே, பின் இல்லை யென்னும் பயனிலையால் அசத்தா (இல்லாததா) கின்றது. இப்படியே ஆகாயமிருக்கிறது, வாயு இருக்கிறது, அப்பு இருக்கிறது, பிருதிவி இருக்கிறது, பிரபஞ்சமிருக்கிறது என ஆகாய முதற் பிரபஞ்சம் வரையுள்ள பூதபௌதிகங்கள் இருக்கின்றது என்பதாகச் சத்தோடு கூடிச்சத்தியம்போலத் தோன்றுகின்றன. அவற்றினின்றும் சத்தைப் பிரித்துவிட்டால் ஆகாயமில்லை,

வாயு இல்லை, தேயுஇல்லை, அப்புஇல்லை, பிருதிவி யில்லை, பிரபஞ்சம் இல்லை என அவையாவும் மித்தையாகின்றன. இங்ஙனம் மித்தை யென்று சொல்வது சொல் மாத்திரமா, அநுபவமுண்டா எனின் அசுத்தாந்தக் கரணமுடையவர்களுக்குச் சொல்மாத்திரமாகிய மித்தையாம். அங்ஙனமாயினும் சுத்தாந்தக் கரணமுடைய முமு க்ஷுக்கள் ஏகாக்கிரசித்தத்துடன் நாமரூபவடிவ ஆகாயாதி சகத்தை யுஞ் சத்தையும் வேறு வேறு பிரித்து ஆகாயாதிகளிலுள்ள நாம ரூபங்களைப் பொருளாகக் கருதாது அவற்றிலுள்ள சத்தியத்து வாதி புத்தியையும் விடுத்து அவற்றின் உள்ளிலும் வெளியிலும் பூரித்துச் சச்சிதானந்த சொரூபமாக வஸ்து எப்படி ஏகமும் வியாபகமுமாயிருக்கின்றதோ அப்படித்தனது அந்தக் கரணவிருத் தியை இப்பிண்டப் பிரமாண்டமாகிய எவ்விடத்தும் வியாபிக்கும் படி சிலநாள் அப்பியசித்துவந்தால் விருத்தியவ்வாறு வியாபகத் தன்மையை அடையும். எப்பொழுது பூரணமான வியாபகத் தன் மையை அடைந்து விருத்திகிச் சலமாயிற்றோ அப்பொழுது ஏகமா யும்,அதிசூக்குமமாயும்,பரிபூரணமாயுமுள்ள பரம்பொருள் அநுபவத் திற்குவரும். அவ்வநுபவத்தால் சகத்தில் அபரோக்ஷ மித்தியாத்துவ நிச்சயமுளதாம். இதுவே தற்பதார்த்த சோதனத்தின் உபாயமா மெனவறிக.

*சச்சிதானந்தங்களையும் நாமரூப சகத்தையும் வேறு பிரித்*

*தல் அத்துவைத சம்பிரதாயந்தானென்பது*

'கடாதிவிட யத்தினிலொன் றினைக்குறித்து நாம கற்பனை யோ ருவமெனு மாயையதன் றிறத்தைத், தடாதுவிடுத் தத்திபா திப் பிரிய மென்னுஞ் சச்சிதா னந்தமாம் பிரஹ்மத்தின் றிறத்தை, விடாதனுசந் தானஞ்செய் திடுதலே புறத்து மெய்த்திரிசி யானு வே தப்பெயர்கொள் கின்ற,கெடாத தொரு சவிகற்ப சமாதியென லாகும்' என்னும் வேதாந்த சூடாமணியினுலும் சத்தையும் நாமரூப

சகத்தையும் பிரித்த அந்தக்கரணத்தின்கண் பிரஹமானுபூதியு ளதாமென்பது "உதியாம லென்று மொழியாமை நின்ற வொளி யாகி யென்று முளதாய்த், திதியாய் நிறைந்து தெளிவாகி யங்கோர் செயலான தின்றி யருளான், மதியாளர் தங்க ளகமே யகண்ட வடி வாய் நிகழ்ந்த வடிவே, பதியாகி யென்று மழியாமை நின்ற படியாகி நின்ற பரனே" என்று கூறுகின்ற ஈசுரகீதையினுங்கண்டு கொள்க.

க-ரை. பூதபௌதிகங்களனைத்தும் சத்தினின்றும் பிரிக்கப் பட்டால் அசத்தாம். எ—ம். (42.)

(மேலைச்செய்யுளாற் சத்தினின்றும் ஆகாயாதி களைப் பிரிக்கவேண்டுமெனக்கூறி இச்செய்யுளில் அவற்றைவிருத்திக்கு அபாவமாக்க வேண்டுமெனல்)

[விருத்தம்]

57. மண்ணீ ரழல்கா லந்தரங்கள் வருகா ரணத்திற் கிடமான, விண்ணீர் மையதெங் ஙனமிருக்கு மென்ன மெல்ல விவேகத்தா, லெண்ணி விளங்கு பூதமைந்தும் விருத் திக் கிலவாப் பழகிவரின், வண்ணம் பெயரென் றிவை யின்றி வயங்கு மகண்ட பரசிவமே.

இ-ள். மண் நீர் அழல் கால் அந்தரங்கள்-பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயமென்னும் பஞ்சபூதங்களும், வருகாரணத்திற்கு இடம் ஆன - உண்டாதற்குக்காரணமாகிய பிரகிருதி [அத்தியஸ்தமாய்] இருத்தற்கு ஆதாரமாயுள்ள, விண்நீர்மையது - சிதாகாயத்தின்றன் மையானது, எங்ஙனம் இருக்கும் என்ன - எத்தன்மையாயிருக்கிற தென்று, விவேகத்தால்-விவேகத்தி[புத்தியி]னாலே, மெல்லஎண்ணி- [ஏகாக்கிரசித்தத்துடன்] சாவதானமாகத் [தனித்திருந்து] விவே

கித்து, விளங்கு பூதம் ஐந்தும் - [இந்திரியங்களின் வாயிலாகத்] தோன்றுகின்ற பூதங்களைந்தையும், விருத்திக்கு - [அந்தக்கரண] விருத்திக்கு, இலவாப் பழகிவரின்-இல்லாதனவாக (மித்தையென் பதாக) விசாரத்தாலேனுந்தியானத்தாலேனும் அப்பியசித்து வந் தால், பெயர் வண்ணம் என்ற-நாமரூபமென்று சொல்லப்படுகின்ற, இவை இன்றி - இத்துவைதசம்பந்தமில்லாமல், அகண்டபரசிவம் வயங்கும் - ஏகமாகிய பிரஹ்ம சொரூபம் விளங்கும். எ—று.

பொ-ரை. பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்னும் பஞ்ச பூதங்களும் உண்டாதற்குக்காரணமாகிய பிரகிருதி அத்தியஸ்தமா யிருத்தற்கு ஆதாரமாகிய சிதாகாயத்தின் றன்மையானது எத்தன் மையாயிருக்கிறதென்று விவேகபுத்தியினாலே ஏகாக்கிரசித்தத்து டன் சாவதானமாகத்தனித்திருந்து விவேகித்து இந்திரியங்களின் வாயிலாகத்தோன்றுகின்ற பூதங்களைந்தையும் அந்தக்கரண விருத் திக்கு இல்லாதனவாக (மித்தையென்பதாக) விசாரத்தினாலேனும் தியானத்தினாலேனும் அப்பியசித்து வந்தால் நாமரூபமென்று சொல்லப்படுகின்ற இத்துவைத சம்பந்தமில்லாமல் ஏகமாகிய பிரஹ்மசொரூபம் விளங்கும். எ—று.

என்ற என்பதின் அகரங்குறைந்து நின்றது

இங்கே பூதமைந்தும் விருத்திக்கிலவாப்பழகல் என்று கூறி யதுபோல "தானிவையு மாறறிய தத்துவமியாதொன், ஞானிகழ்வ தாகு மதபாவமெனும் யோகம், வானியலதாகி யொருவத்துவுமிலா தாஞ் சூனியமதாக வறிகின்றனர் கடேயோர்" என்று ஈசுரகீதையிற் கூறியிருப்பது காண்க.

அன்றியும் பஞ்சதசிபூதவிவேகம் [86] வது சு-ல் இப்படி முமுக்ஷுவாயுவின் மித்தியாத்துவத்தை வெகு காலம் வரையிலும்

நிச்சயித்து வாயுவை விடக்கடவன். அதாவது வாயு சத்தியமா மென்னும் புத்தியை விடக்கடவன் என்று கூறியிருப்பதுங்காண்க.

க-ரை. அந்தக்கரண விருத்தியினுல் பூதபௌதிகங்களில் அபாவ (மித்தியா) பாவனை பண்ணினுல் உண்மைப் பொருள் விளங்கும். எ—ம். (43)

[அந்தக்கரண விருத்தியை வியாபகமாக்கவேண்டுமெனல்]

58: விடயா கார மடையாமல் விண்போ லுள்ளம் வியாபகமா,
யிடுமெம் மேலோற் கவன்பிரஹ்ம மேயாம் பிறப்போ
டிறப்புமுறு, னடைத லரிதேல் விடயமெதி ரடை
யுந் தோறு மதுவாகி, விடுத லிலனுய் வேறுதனை யறிந்
தா னேனும் வீடுறுமால்

இ-ள். எம்மேலோற்கு - எந்த வுத்தமமான மோக்ஷ விச்சை யுடையவனுக்கு, உள்ளம் - [யான் பிரஹ்மம் என்றுண்டாகும்] அந்தக்கரண விருத்தியானது, விடய ஆகாரம் அடையாமல் - சத்த முதலிய விஷய வடிவங்களைத் தரிக்காமல், விண்போல் - ஆகாயத்தை யொப்பாக, வியாபகம் ஆயிடும் - விபுவாகுமோ, அவன்- அந்த அதிகாரியானவன், பிரஹ்மமேயாம்- [பிரஹ்மானு பூதியடைந்தவனுதலாற்] பிரஹ்ம சொரூபமேயாவன், பிறப்போடு இறப்பும் உறுன் - [பின்பு] பிறப்பையு மிறப்பையுமடைய மாட்டான், [அங்ஙனஞ் செய்யமுடியாத மந்தர்களுக்கு மற்றோருபாயங் கூறுகின்றார்] அடைதல் அரிதேல் - [அவ்விபுத்தன்மையை அந்தக்கரணம்] அடைதல் அருமையாகுமாயின், விடயம் எதிர் அடையுந்தோறும் - விஷயங்கள் (இந்திரியங்களுக்குப்)பிரத்தியக்ஷமாகுந்தோறும், அது ஆகிவிடுதல் இலனுய் - தான் அவ்விஷய வடிவமேயாயழுந்தாமல், வேறுதனை அறிந்தானேனும் — [விஷயமாகிய ஞேயம் இந்திரியத்தாலுளதாகும் ஞானம் அந்தக்கரணமாகிய ஞாதிரு என்னும் இத்

திரி புடிகளுக்கு] வேருகத் தன்னைச் [சாக்ஷிவடிவமாக] அறிந்தானு யினும், வீடு உறும் - மோக்ஷமடைவான் எ-று.

பொ-ரை. எந்தவுத்தமமான மோக்ஷவிச்சையுடையவனுக்கு நான் பிரஹ்மமென்றுண்டாகும் அந்தக்காண விருத்தியானது சத்த முதலிய வடிவங்களைத் தரிக்காமல் ஆகாயத்தை யொப்பாக விபு வாகுமோ அந்த அதிகாரியானவன் பிரஹ்மானுபூதியடைந் தவனுத லாற் பிரஹ்ம சொரூபமேயாவன். அவன் பிறப்பையும் இறப்பையு மடைய மாட்டான். அங்ஙனம்செய்யமுடியாதமந்தர்களுக்குமற்ருே ருபாயங்கூறுகின்ருர். அவ்விபுத்தன்மையை அந்தக்காணம் அடை தல் அருமையாகுமாயின் விஷயங்கள் இந்திரியங்களுக்குப் பிரத்தி யக்ஷமாகுந்தோறும் தான் அவ்விஷய வடிவமேயாய் அழுந்தாமல் விஷயமாகிய ஞேயம், இந்திரியத்தாலுளதாகும் ஞானம், அந்தக் காணமாகிய ஞாதிரு என்னும் இத்திரி புடிகளுக்கு வேருகத் தன்னைச் சாக்ஷிவடிவமாக அறிந்தானுயினும் மோக்ஷமடைவான். எ—று.

56 வது செய்யுள்முதல் மூன்று செய்யுட்களின் திரண்ட பொருள். இம் மூன்று செய்யுட்களாலுங் கூறிய உபாயங்களின் படி தற்பதார்த்தத்தைச் சோதித்தலும் அதன் பயனும்.

முதலில் சத்தினின்றும் ஆகாயாதிகளைப் பஞ்சதசியின் பூத விவேகம் (60)வது முதல் (98) வது வரையுள்ள சுலோகங்களிற் கூறியவாறு விவேகிக்க (பிரிக்க) வேண்டும் என்பதும், பிரித்த பின்பு சத்தினின்றும் பிரிந்த ஆகாயாதிப்பிரபஞ்சங்கள் மித்தை யாம் என்பதும் அம்மித்தியாத்துவம் புத்திக்குத்திடமாகும் வரை சித்திர தீபத்திற் கூறியவாறு விசாரத்திஞலேனும் தியானத் திஞலேனும் அதனை அப்பியசிக்கவேண்டுமென்பதும் அம்மித்தி யாத்துவம் திடப்பட்டபின்னர் அந்தக்காணத்தை வியாபகமாக்க

வேண்டுமென்பதும் அங்ஙனம் வியாபகமாய் நிறைந்த அர்த்தசாக்ஷா விருத்தியில் அத்வைத பிரமானுபூதி அபரோக்ஷமாயுளதா மென்பதுமாம். பிரமானுபூதி வெளியிடத்தில் எட்டாது அபரோக்ஷமாமென்று சங்கிக்க வேண்டியதில்லை. இதற்குப் பிரமாணம் சித்திரதீபத்தின் [242] முதல் [245] வரையுள்ள சுலோகங்களிற் சங்கை சமாதானபூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அந்த [242] சு-ம் அத்வைதம் அபரோக்ஷமென்றெனின் அது பொருந்தாது ஞானவடிவமாகத் தோற்றிக்கொண்டிருக்கையால்- சங்கை- துவைதம் முழுதுமாகத் தோற்றுகின்றதேயெனின் சமாதானம், துவைதம் முழுதும் தோற்றுகிறதல்லவா. [243] சு-ம். நிசமாத்திரத்தாற் றோற்றுகின்றதெனிற் பூர்ணமாத்திரத்தாற் றோற்றுதல் துவைதம் அத்வைதம் இரண்டிற்கும் நிச்சயமாகவே சமமாம். உணர்ந்த அநுபவமின்றி எழுதுஞ் சித்திரங்கள்போல அத்வைதம் என் சித்தியாது சித்திக்கவே செய்யும். [244] வது சு-ம் சங்கை. துவைதம் இவ்வாறே அத்வைதமாம். இவ்வத்வைதம் துவைத ஞானமிருக்குங்காலம் எப்படிச் சம்பவிக்கும். [245] வது சு-ம் இப்படிக் கூறுவாயாயின் கூறுவேன். துவைதம் அசத்தியம் மாயா வடிவமாயிருத்தலால். அதனுட் பரிச்சேதமில்லா வாஸ்தவமாகிய அத்வைதம் தோற்றுகின்றதென்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறின்றிக் காட்பதார்த்த சாதனையாற் கிடைத்த சாதன மூடம் பிரத்தியக்ஷ ப்ரமாணமாத்திரத்தால் திருப்தி படைந்து சர்ப்பதார்த்த சாதனை செய்யாவிடின் துவம்பத லக்ஷியமாகிய ஜீவனுக்கும் இவனுக் காரணமாகிய அவித்தைக்கும் காரணமாகிய பிரகிருதியானது நசியாமல் மிஞ்சியிருத்தலால் ஜகத்தின் சத்தியத்துவ புத்தி நீங்காது இது நீங்காததனாலேயே விஷயங்களின் சத்தியத்துவ புத்தியால் இச்சையும், அவ்விச்சையால் பந்தமும் நீங்கா. இதனை,

“சொப்பனத்தி லியாதிகொடச் சொரூபமதா மதேவ ஞான்

மையதாக் கற்பநசோதலைசெயவும் வேண்டும், தம்பவுடன் மூன் றிலுக்குஞ் சிவனுக்கு முதலாச் சார்ந்தன்மாத் திரைப்பகுதி தானு மிருப்பதனு, னப்பரிபூரணமறைந்து ஞானமின்றி முனம்போனுடு மூயி ராதலினு னுதனருட் படியே, யிம்பருபா தியும்போய்நி ருபா திகமா மதனு லெப்பொருளாப் பொருளாகி யிருப்பதுதன் னியல் பே” என்று கூறியிருக்கிற உபநிடதத்தாலறிக.

மனம் வியாபகமாதற்குச் சுருதி

கேவல விபுவாகிய சத்தாசாமானிய மொன்றினையே பாவித்துத் திக்குகளெல்லாம் நிரம்பியவனாய்ப் பரிபூரண பராநந்தியாய் நிற்பாயாக என்று அன்னபூரண சுருதி கூறுவதாய் விசார சந்திரோதயம் சாமானிய சைதன்னிய வருணனத்திலும்

“சத்தா சாமா னியமொன்றுந் தனிப்பா வித்துப் பரிபூர்ண ச்
சுத்தா னந்த னாய்த்திசைக ளெல்லாந் துன்னி நின்றிடுவா ய்
சத்தா சாமா னியமட்டின் கோடி யேதங் கதுகா னே
சுத்தா கார மிதன்வித்தா மதினின் றிதுதான் றோன்றிடுமால்”

என்று வாசிட்டத்திலுங் கூறியிருத்தல் காண்க.

நாமரூபங்களைப் பற்றாமல் நான் பிரஹ்மமென்றுண்டாகும் வியாபகமான அந்தக்கரண விருத்தியின நுபவமே பிரஹ்மாநுபவ மென்பதற்குப் பிரமாணம் பஞ்சதசியில் பஞ்சகோச விவேகத்தின் (21) வது சு-ம் வி-ம் உலகத்தில் எந்த எந்தக் கடமுதலிய விஷயங்களில் ஞானமிருக்கிறதோ அந்தவந்தக் கடமுதலிய விஷயங்களை அநாதரஞ் செய்யு (மித்தையென்றறிந்து மறக்கு) மிடத்துச் சகல வஸ்துக்களிலும் “விளங்குகின்றது” என்னும் வடிவின தாகக் கலந்துள்ள விளக்க மெதுவோ அதுவே [ஞானமாத்திரமே] பிரஹ்மமாம் என்னும் இப்படிப்பட்ட புத்தியானது பிரஹ்ம நிச்சயமாம் என்று கூறியிருத்தல் காண்க.

[இதனாலென்ன சித்தித்ததெனின் ஒவ்வொரு விடயாகாரமாகின்ற அந்தக்கரண விருத்தி அவ்வாறாகாமல் அநேக விடயங்கள் உள்ளடங்குமாறு வியாபகமாகிய காலத்தில் அவ்விருத்தியில் நாமரூபக்கலப்பின்றி விளங்கும் ஞானமாத்திர (விளக்கமாத்திர)த்தின் அநுபவம் பிரஹ்மாநுபவமாம் என்பது சித்தித்தது. ஆதலால் இங்கே (தர்பதார்த்த சோதனத்தில்) நாமரூபங்களை அபாவமாக்க வேண்டு மென்றும், மனோ விருத்தியை வியாபகமாக்கவேண்டு மென்றுங்கூறிய வுபாயம் பொருத்தமுடையதன்றன்று. வித்தியாரணிய சுவாமிகள் முதலிய பூர்வாசாரியர்கள் கூறிய இலக்கணத்தோடு பொருத்த முடையதேயாம். இப்பிரஹ்மாநுபவமாகிய அபரோக்ஷ ஞான லக்ஷணம் அங்குச் சங்கை சமாதான பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அவற்றை இங்கு விரித்து எழுதவில்லை]

க-ரை. விஷயாகாரத்தை விட்டு விபுத்தன்மையடைந்த அந்தக்கரணமுடைய அதிகாரிக்குப் பிரஹ்மாநுபூதியுளதாம். எ-ம். (44)

## [10 ஞானத்தின் பகிரங்க சாதனம்]

[மோக்ஷசாதனம் பிரஹ்மஞான மொன்றேயன்றிக் கருமமன் றெனக்கூறுதல்]

56. முற்றிப் புறத்துப் பொருடுறந்து முடியா ரடுக்கன்
முளைப்பிடையோ, குற்றம் பலவா மெந்நாதி யுரிய
கரும முஞற்றினுமிங், முற்றுங் கரண சுத்திபெற்று
முதவு முடிவில் பரஞான, மொற்றை யேயன் றிப்பொ
ழிந்தசுக வுருவா முத்தி யுதவுமால். (45)

இ-ள். புறத்துப்பொருள் - [புத்திரதாராதிகளாகிய] புறத்திலுள்ள வஸ்துக்களை, முற்றித்துறந்து - வெறுத்து நீக்கி, மு

நீக்கி, முடியா ரடுக்கன் முழையிடை - சிகரங்களைப் பொருந்திய மலைக் குகையினிடத்தே, யோகு உற்றும் - [இயமமுதலாகிய அட்டாங்க] யோகங்களைச் செய்தாலும், உரிய - [தத்தம் வருணாச்சிரமங்களுக்கு] உரியனவாகிய, எஞ்ஞாதி [ஆம்] - யாக முதலாகிய, பலகருமம் - நானாவித நிஷ்காமகருமங்களை உஞற்றினும் - செய்தாலும், இம்முற்றும் - இவையனைத்தும், காரணசுத்திமட்டும் உதவும் - அந்தக்கரண சுத்திமாத்திரங்கொடுக்கும், முடிவில் பரஞானம் ஒற்றையே - அழிதலில்லாத பிரமஞான மொன்று மாத்திரமே, துன்பு ஒழிந்த - [சர்வ] துக்கங்களும் நீங்கிய, சுகவுருவாம்முத்தி - ஆனந்த வடிவமாகிய மோக்ஷத்தை, உதவுறும் - கொடுக்கும். எ—று.

பொ-ரை. புத்திரதாராதிகளாகிய புறத்திலுள்ள வஸ்துக்களை வெறுத்து நீக்கிச் சிகரங்களைப் பொருந்திய மலைக் குகையினிடத்தே இயமமுதலாகிய அட்டாங்கயோகங்களைச் செய்தாலும், தத்தம் வருணாச்சிரமங்களுக் குரித்தாகிய யாக முதலாகிய நானாவித நிஷ்காம கர்மங்களைச் செய்யினும் இவையனைத்தும் அந்தக்கரண சுத்திமாத்திரங் கொடுக்கும். அழிதலில்லாத பிரமஞானம் ஒன்று மாத்திரமே சர்வதுக்கங்களும் நீங்கிய ஆனந்தவடிவமாகிய மோக்ஷத்தைக் கொடுக்கும். எ—று.

ஆம் என்பது பிரித்துக்கூட்டப்பட்டது.

கா-ம். மோக்ஷசாதனங் கருமமன்றென்பார் "முற்றிப் புறத்துப் பொருணீத்து முடியா ரடுக்கன் முழையிடையோ, குற்றும் பலவா மெஞ்ஞாதி யுரிய கரும முஞற்றினும், முற்றுங் காரண சுத்திமட்டு முதவும்" எனவும் ஞானகருமசமுச்சயமும் அச்சாதன மன்றென்பார் "பரஞான மொற்றை யேதுன் பொழிந்தசுக வுருவா முத்தி யுதவுறும்" எனவுங் கூறினர். இதனாலே நிஷ்காம கர்மம் ஞானத்தின் பகிரங்க சாதன மாவதன்றி மோக்ஷசாதன மன்றென்பதாயிற்று.

க-ரை. மோக்ஷத்திற்குச் சாதனம் பிரமஞானம் ஒன்றே எ—ம். (45)

மேலைச்செய்யுளால் நிஷ்காமகன்மத்துக்கு ஞானத்தின் பகிரங்க சாதனத்தன்மை உடன் பாட்டாற்கூறி இதில் எதிர்மறை முகத்தானும் வலியுறுத்தல்.

[கட்டளைக் கலித்துறை]

60. பிச்சைக் கலைந்து முணவோர் கவளமும் பெற்றிலரா
யச்சோவென் றேங்கி யலைதலிற் காமித் தறம்புரியா
ரிச்சையில் கன்மஞ்செய் யார்பல யோனியுற் றாரெனினும்,
விச்சையு றாரின்ப வீடுமு றாரிடர் மேவுவரே.

இ-ள். காமித்து - (உணவை) விரும்பி, அறம்புரியார் - (அன்னம் முதலியவற்றைப் பலருக்குங் கொடுத்தற்குரிய) தருமங்களை (முற்பிறப்புக்களிற்) செய்யாதவர்கள், பிச்சைக்கு - பிச்சையெடுப்பதற்காக, அலைந்தும் - (இப்பிறப்பில் ஊர்தோறுந் தெருக்கோறும் மனைதோறுந்) திரிந்தும், ஓர்கவளம் - ஒருதரம் வாய் கொள்ளும் அளவுடைய, உணவு [உம்] - உண்ணப்படு பொருளும், பெற்றிலராய் - கிடையாதவர்களாய், அச்சோ என்று ஏங்கி - (பசியினாலுண்டாகும் வருத்தத்தைச் சகிக்கமாட்டாது அச்சோவென்று அழுதுகொண்டு, அலைதலின் - திரிதல்போல, இச்சை இல் கன்மம் செய்யார் - (மேலைச்செய்யுளிற் கூறிய) நிஷ்காம கன்மஞ் செய்யாதவர்கள், பலயோனி உற்றார் எனினும் - பல பிறப்புக்களை யடைந்தாராயினும், விச்சை உறார் - (அந்தக்கரணசுத்தி யடையாமையால் அதன் சுத்தியாலடையக்கூடிய) ஞானமடையார், இன்ப வீடும் உறார் - (ஞானமடையாமையின்) ஆனந்தமய மோக்ஷத்தையு மடையமாட்டார், இடர் (ஏ) மேவுவர் - பிறப்பிறப்புக்களாலுண்டாகுந் துன்பத்தையே அடைவர். எ—று.

பொ-ரை. உணவை விரும்பி அன்னமுதலியவற்றைப் பயனுறக் கொடிக்கத்தக்க சற்கருமங்களை முற்பிறப்புக்களிற் செய்யாதவர்கள் பிச்சையெடுப்பதற்காக இப்பிறப்பில் ஊர்தோறுந் தெருத்தோறும் மனைதோறுந் திரிந்தும் ஒருதரம் வாய் கொள்ளும் அளவுடைய உண்ணப்படும் பொருளுங்கிடையாதவர்களாய்ப் பசிநோயாலுண்டாகும் வருத்தத்தைச் சகிக்கமாட்டாது ஐயோ என்று அழுதுகொண்டு திரிதல் போல மேலைச்செய்யுளிற் கூறிய நிஷ்காமகன்மஞ் செய்யாதவர்கள் பல பிறப்புக்களையடைந்தாராயினும் அந்தக்கரண சுத்தி யடையாமையால் அதன் சுத்தியாலடையக்கூடிய ஞானமடையார். ஞானமடையாமையின் ஆனந்த வடிவ மோக்ஷத்தையுமடையமாட்டார். பிறப்பிறப்புக்களாலுண்டாகுந் துன்பத்தையே அடைவார். எ—று.

உம்மையும் ஏகாரமும் பிரித்துக் கூட்டப் பட்டன.

க-ரை. காமியகன்மஞ் செய்யாதவர்க்கு உணவு அடையப் படாமைபோல நிஷ்காமகன்மஞ் செய்யாதவர்க்குச் சித்தசுத்தியின்மையால் ஞானமும், அஃதின்மையால் மோக்ஷமும் அடையப் படா. எ—ம். (46)

(1) ஞானசாதன வியல் முற்றிற்று.

## [2] வத்து நிலையியல்.

[வெண்பா]

61. எட்டியெட்டிப் பார்க்குமட்டு மெட்டவெட்டச் செல்லு
மஃதே, சுட்டிறந்தாற் றானுகித் தோன்றுமே—மட்டி
றந்து, எங்கு நிறைவா யிலகுமுத்தா னந்தனெனு,
நங்குருவி னல்லுருவ மே.

இ-ள். மட்டு இறந்து எங்கும் நிறைவாய் - அளவின்றி எவ்விடத்தும் பரிபூரணமாய், இலகும் முத்தானந்தன் எனும் - விளங்காநின்ற முத்தானந்த னென்று கூறும் நாமமுடைய, நம் குருவின் - நமது குருமூர்த்தியினது, நல்லுருவம் - ஆனந்த சொரூபமானது, எட்டி எட்டி - [விடயம் போலத் தனக்கந்நியமாயிருப்பதாகக் கருதி மனத்தால்] தாவித்தாவி, பார்க்குமட்டும் - தேடுமளவும், எட்ட எட்ட [வு] செல்லும் - தூரத்தூரமே யகலும், அஃதே - அச்சொரூபமே, சுட்டு இறந்தால் - (தனக்கந்நியமாக வொன்றையும்) சுட்டியறியாமல் (மனத்தை யசைவற) நிறுத்தினால், தான் ஆகி தோன்றும் - அங்ஙனம் நிறுத்தினவருடைய சொரூபமாகி விளங்கும். எ-று.

பொ-ரை. அளவின்றி எவ்விடத்தும் பரிபூரணமாய் விளங்காநின்ற முத்தானந்தரென்று கூறுகின்ற நாமமுடைய நமது குருமூர்த்தியினது ஆனந்த சொரூபமானது விடயம்போலத் தனக்கு அந்நியமாயிருப்பதாகக் கருதி மனத்தால் தாவித் தாவித் தேடுமளவுந் தூரத்தூரமே யகலும். அச்சொரூபமே தனக்கந்நியமாக வொன்றையுஞ் சுட்டாமல் மனத்தை யசைவற நிறுத்தினால் அங்ஙனம் நிறுத்தினவருடைய சொரூபமாகி விளங்கும். எ—று.

பிரித்துக் கூட்டப்பட்ட ஏகாரந் தேற்றப் பொருளது.

க-ரை. பரம்பொருள் சுட்டுணர்வற்ற விடத்துத் தானாகி விளங்கும், எ—ம். (1)

[விருத்தம்]

62. விடயமொன்றே பொன்னெனவும் பணியெனவு மிருதிறமா
யே விளங்கி நின்றே, யடைமுறைகொண் டுடன்மெய்யும் பின்ன
துபொய்யும் பலவுமே யாவ போலக், கடமுதலா யவையாகிப்
பலவாகி யஞ்ஞருக்குக் காணும் வத்து, வடிவில் சற்சித் சுக
மொரு வடிவமாய் முத்தருக்கு வயங்குமாதோ.

இ-ள். விடயம் ஒன்றே — ஒரே விஷயம், பொன் எனவும் - பொன்னென்றும், பணி எனவும் - [கடக முதலிய] ஆபரணமென்றும், இருதிறன் ஆய் விளங்கிநின்று - இரண்டு விதமாக விளங்கிநின்று, முன் அடை அது - (அவற்றுள்) முன்னர்ப் பொருந்திய பொன்னானது, ஒன்றுடன் மெய்யும் - ஏகமுஞ் சத்தியமும், பின் [அடை] அது - பின்னர்ப் பொருந்திய ஆபரணமானது, பலவும் பொய்யும் - நாநாவும் அசத்தியமும், ஆவபோல - ஆவனபோல, வத்து [ஒன்றே] - பிரஹ்மம் ஒன்றுதானே, அஞ்ஞருக்கு - அஞ்ஞானிகளுக்கு, கடம்முதல் ஆய் - [நாமரூபமே சொரூபமாயுள்ள] குடமுதலிய பிரபஞ்ச பதார்த்தங்களாய், பலவாகி - நாநாவாகி, அயல் ஆகி - தமக்கு அந்நியமாய், காணும் - விளங்கும், முத்தருக்கு - ஜீவன் முத்தர்களாகிய ஞானிகளுக்கு, வடிவுஇல் - நாம ரூபமில்லாத, சச்சிற் சுகம் (ஆய்) - சச்சிதானந்த கனமாய், ஏகம் (ஆய்) - அகண்டைகரசமாய், அனனியமாய் - தமது சொரூபமாய், வயங்கும் - விளங்கும். எ-று.

பொ-ரை. ஒரே விஷயம் பொன்னென்றும், கடகமுதலிய ஆபரணமென்றும் இரண்டு விதமாக விளங்கிநின்று அவற்றுள் முன்னர்ப் பொருந்திய பொன்னானது ஏகமுஞ், சத்தியமும் பின்னர்ப் பொருந்திய ஆபரணமானது நாநாவும், அசத்தியமும் ஆவனபோலப் பிரஹ்மம் ஒன்றுதானே அஞ்ஞானிகளுக்கு நாம ரூபமே சொரூபமாயுள்ள குட முதலிய பிரபஞ்ச பதார்த்தங்களாய் நாநாவாய்த் தமக்கு அந்நியமாய் விளங்கும். ஜீவன் முத்தர்களாகிய ஞானிகளுக்கு நாமரூபமில்லாத சச்சிதானந்த கனமாய் அகண்டைகரசமாய்த் தமது சொரூபமாய் விளங்கும். எ-று.

ஒன்றே என்பதும் அடை என்பதும் பின்னரும் கூட்டப் பட்டன. ஆய் என்பது பிறவிடங்களிலுஞ் சென்றியைந்தது.

க-ரை. ஒரே பிரஹ்மம் ஞானிகளுக்குத் தமது சொரூபமாகவும், அஞ்ஞானிகளுக்குப் பிரபஞ்சமாகவும் விளங்கும். எ-ம். (2)

[ வெண்பா.]

63 என்னுள்ளு மென்னையொப்ப வெங்குநிறைந் தென்
சொரூப
முன்னுக்கு முள்ளா யொளிர்தலாற்—கள்ளப்
புலனைவர் திரட்டும் போயினவே யொத்து
தலையுலகப் பேய்ப்பயமுந் தான். *

இ-ள். என்னுள்ளுள் என்னை ஒப்ப - என்னினிடத்து [நிறைந்திருக்கின்ற] என்னைப் போல, எங்கும் நிறைந்து - [பிரபஞ்சமும் அதற்கப்பாலுமாகிய] எவ்விடத்தும் பரிபூரணமாய், என் சொரூபம் - [சச்சிதானந்த கனமாகிய] என்னுடைய சொரூபமானது, உள்ளுக்கும் உள்ளாய் - சூக்ஷும வஸ்துக்களுக்குஞ் சூக்ஷுமமாய், ஒளிர்தலால் - பிரகாசிக்கிறதினால், கள்ளப்புலனைவர் - வஞ்சகத்தையுடைய பஞ்சேந்திரியங்களாகிய சோரர்களாலுண்டாகிய. திரட்டும் - களவும், ஒத்து தலை - [சத்தாதி விஷயங்களைந்தையும்] ஒத்த தலையாகவுடைய உலகப் பேய்ப் பயமும் - பிரபஞ்சமாகிய பேயினாலுண்டாகிய அச்சமும், போயின - தொலைந்து விட்டன. எ—று.

பொ-ரை. என்னினிடத்து நிறைந்திருக்கின்ற என்னை யைப் போலப் பிரபஞ்சமும் அதற்கப்பாலுமாகிய எவ்விடத்தும் நிறைந்து சச்சிதானந்த கனமாகிய என்னுடைய சொரூபமானது சூக்ஷும வஸ்துக்களுக்குஞ் சூக்ஷுமமாய்ப் பிரகாசிக்கிறதினால் வஞ்ச கத்தையுடைய பஞ்சேந்திரியங்களாகிய சோரர்களாலுண்டாகிய களவும், சத்தாதி விஷயங்களைந்தையும் ஒத்த தலையாகவுடைய பிர பஞ்சமாகிய பேயினாலுண்டாகிய அச்சமுந் தொலைந்துவிட் டன. எ—று.

தா-ம். அஞ்ஞான தசையிற் புத்தியைத் தானாக உண்மை

நிலையில் நிற்கவொட்டாமல் ஞானேந்திரியங்கள் தம் வசமாக்கி வெளியே இழுத்து விஷயாகாரமாக்கிற்றென்பார் "கள்ளப் புலவேடுவர் திருட்டு" என்றும் அப்புத்தி சத்தாதி விஷயங்களைச் சுகசாதனமெனக் கருதி மயங்கிற்றென்பார் "ஐந்து தலை யுலகப் பேய்ப்பயம்" எனவும் ஞானதசையில் அப்புத்திபூரணத்தன்மையை அடைய எவ்விடத்தும் பரிபூரணமாகிய பரம்பொருளை விளங்குதலால் இந்திரியங்கள் அதைத் தன் வசமாக்கி வெளிப்படுத்தி விஷயாகாரமடைவிக்காது என்பார். "திருட்டும் போயின" என்றும் விஷயங்கள் மித்தையாகத் தோற்றுதலால் அவற்றில் வைத்திருந்த சுகசாதனத் தன்மையாகிய மயக்கம் புத்திக்கு நீங்கிற்றென்பார். "ஐந்து தலையுலகப் பேய்ப்பயமும் போயின" என்றுங் கூறினர்.

க-ரை. எவ்விடத்தும் பரம்பொருளை விளங்குதலால் இந்திரியச் சேட்டையும் விஷயங்களில் வைத்திருந்த சுகசாதனத் தன்மையாகிய மயக்கமுந் தொலைந்தன. எ—ம் (3)

64. விடயமென்று வேறாய் விளங்கிடுமே னில் லா
தடைய வெழுந்தோடு மங்கே—யிடையீட ற்
றெங்குமொரு தானே யிலங்கிடினிவ் வேளைம ன
மெங்கே யெழுந்தோடு மே. *

இ-ள். விடயம் என்று - [இது சத்தம். இது பரிசம், இது உருவம், இது இரசம், இது கந்தம்] என்று விடயங்கள், வேறாய் விளங்கிடுமேல் - (தனக்கு) அயலாக விளங்குமானால், நில்லாது - [தனதுண்மை நிலையில்] நிற்காமல், அங்கே அடைய எழுந்து ஓடும் - அவ்விடயங்களினிடத்துக் கூடுதற்கு எழுந்து செல்லும், இடையீடு அற்று - இடையீடின்றி, எங்கும் ஒருதானே - எவ்விடத்தும் ஒப்பற்ற சச்சிதானந்த வடிவப் பிரஹ்மமாகிய தனது சொரூபமே, இலங்கிடின் - பிரகாசிக்கில், இவ்வேளை மனம்- இத்

தன்மையுடைய ஞானகாலத்தில் [சத்துவமாகச் சேடித்த] மன
மானது, எங்கே எழுந்து செல்லும் - [தனது நிலையில் நிற்பதன்றி]
எவ்விடத்துக்கு எழுந்து செல்லும் [ஓரிடத்துஞ் செல்லாது செல்
லுதற்கிடமின்மையால்.] எ—று.

பொ-ரை. இது சத்தம், இது பரிசம், இது உருவம், இது இரசம், இது கந்தம் என்ற விடயங்கள் தனக்கு அயலாக விளங்குமாறுல் தனதுண்மை நிலையில் நிற்காமல் அவ்விடயங்களினிடத்துக் கூடுதற்கு எழுந்து செல்லும். இடையீடின்றி எவ்விடத்தும் ஒப்பற்ற சச்சிதானந்த வடிவப் பிரமமாகிய தனது சொரூபமே பிரகாசிக்கில் இத்தன்மையுடைய ஞானகாலத்திற் சத்துவமாகச் சேடித்த மனது தனது நிலையில் நிற்பதன்றி ஓரிடத்துஞ் செல்லாது செல்லுதற்கிடமின்மையால். எ—று.

க-ரை. ஞானகாலத்தில் எவ்விடத்துஞ் சச்சிதானந்த வடிவப் பிரமம சொரூபமே விளங்குதலால் மனது விஷயாகாரமடையாது. எ—ம். (4)

65. கட்டினுநில் லாதுபொருள் கண்டருந்த வோடுமன ஞ்
சுட்டிறந்த போதெதனைத் தூய்க்குமெனிற்—கெட்டோ
(ழிந்து
போகாமற் போயின்ப முன்றுமா மீதம ன்
மாகா தறிவென்ப ரால். *

இ-ள். கட்டினும் நில்லாது -[அஞ்ஞான காலத்தில் விடயங்களிற் செல்லவொட்டாது] அடக்கினும் அடங்காமல், பொருள் கண்டு - சத்தாதி விஷயங்களைப் பார்த்து அருந்த ஓடும்- [அவற்றை] அநுபவிப்பதற்கு விரைந்து செல்லும், மனம் - அந்தக்கரணமானது, சுட்டு இறந்தபோது - [ஞானகாலத்தில் விஷயாகாரத்தைத் தரிக்கின்ற] சுட்டுணர்வு நீங்கியபோது, எதனைத் தாய்க்கும்

எனின் - எதை அநுபவிக்குமென்றால், கெட்டு ஒழிந்துபோய் - தனதுருவமாகிய தூலத்தன்மை நாசமடைந்து, போகாமல் - அருவ [சூக்கும]மாய்ப் [பிரஹ்மத்தோடு பாலும் நீரும்போற் கலந்து நின்று], இன்பம் உண்ணும் - பிரஹ்மானந்தத்தை அநுபவிக்கும், அது மனம் ஆகாது - [பிரஹ்மானந்த அநுபவத்திற்குரிய] இது மனமாகமாட்டாது, அறிவு என்பர் - [பின்னையோ] ஞானமென்று கூறுவர் பெரியோர். எ—று.

பொ-ரை. அஞ்ஞானகாலத்தில் விடயங்களிற் செல்லவொட்டாதடக்கினும் அடங்காமல் சத்தாதி விஷயங்களைப் பார்த்து அவற்றை அநுபவிப்பதற்கு விரைந்து செல்லும் அந்தக் கரணமானது ஞானகாலத்தில் விஷயாகாரத்தைத் தரிக்கின்ற சுட்டுணர்வு நீங்கியபோது எதை அநுபவிக்குமென்றால் தனதுருவமாகிய தூலத் தன்மை நாசமடைந்து அருவமாய்ப் பிரஹ்மத்தோடு பாலும் நீரும்போற் கலந்து நின்று பிரஹ்மானந்தத்தை அநுபவிக்கும் பிரஹ்மானந்த அநுபவத்திற்குரிய இது மனமாக மாட்டாது. பின்னையோ ஞானமென்று கூறுவர் பெரியோர். எ—று.

"கட்டினு நில்லா"

இங்கே சூக்கும மனத்தை அறிவென்றாற் போல வாசிட்டத்தில் "சங்கற்பம் வேட்கையனு சந்தானங் கணந்தோறுந் தவிர்த்தி யென்னின், மங்குற்ற மனோலயந்தா னதுவாகு மனோலயத்தை மருவு போதம், பங்கற்ற பிரத்தியக்சே தனமாகு மதற்குமனோ பாவமென்ப, தங்குத்தா னிலாவியல்பா மாதலினான் மனோவிகற்ப மின்றிப் போமே" என்றுகூறியிருப்பது காண்க.

க-ரை. மனதுக்குச் சுட்டுணர்வு நீங்கிய காலத்திற் பிரஹ்மாநந்த அனுபூதியுளதாம். எ—ம். (5)

66. மனத்தே யனைத்துலகு மன்னி யிருக் கு
மெனைத்தும் பிறவிடத்தி லில்லை—நினைப்பி ல்
சுழுத்தியின்க ணேதேனுந் தோன்றா மையினா ல்
விழுச்சுகமாந் தானன்றி வேறு. *

இ-ள். மனத்தே - மனத்தின்கண்ணே, அனைத்து உலகும் - [சடசேதனங்களாகிய] எல்லாப் பிரபஞ்சமும், மன்னியிருக்கும் - பொருந்தி நிற்கும், எனைத்தும் - அற்பமும், பிற இடத்தில் - மனத்தின் வேறாகிய விடத்தில், இல்லை, (இதனை உலகப் பிரசித்த அநுபவமாகிய ஏதுவாலுணர்த்துகின்றார்], நினைப்பு இல் - மனம் நசித்த, சுழுத்தியின்கண் - சுழுத்தியவஸ்தையில், விழுச்சுகம் ஆம் - மேலாகிய ஆனந்த மயமாகிய, தான் அன்றி - தனது சொரூபம் இருந்து விளங்குகின்றதே யல்லாமல், வேறு - [தனது சொரூபத்திற்கு] அந்நியமாக, ஏதேனும் - [இருவகைப் பிரபஞ்சங்களுள்] எந்தப் பிரபஞ்சமாவது, தோன்றாமையினால் - விளங்காமையால். எ-று.

பொ-ரை. மனத்தின்கண்ணே சடசேதனங்களாகிய எல்லாப் பிரபஞ்சமும் பொருந்தி நிற்கும். அற்பமும் மனத்தின் வேறாகிய விடத்தில்லை. இதனை உலகப்பிரசித்த அநுபவமாகிய ஏதுவாலுணர்த்துகின்றார். மனம் நசித்த சுழுத்தியவஸ்தையில் மேலாகிய ஆனந்தமயமாகிய தனது சொரூபம் இருந்து விளங்குகின்றதே யல்லாமல் தனது சொரூபத்திற்கு அந்நியமாகிய இருவகைப் பிரபஞ்சங்களுள் எந்தப் பிரபஞ்சமும் விளங்காமையால். எ—று.

இங்கே "மனத்தேயனைத்துலகு மன்னியிருக்கும்" என உலகுக்கு மனத்தை இடமாக்கினது, வேனிற்கட்பாதிரி பூக்கும் என்றாற்போலக் காலப் பொருண்மை பற்றியென்க. அதாவது மன

முள்ள காலத்து உலகுண்டு எனப் பொருள்படும். பிறவிடத்தில் என்றாலும் அஃது, இவையெல்லாம் "சுழுத்தியின் கண் ஏதேனுந் தோன்றாமையினால்" என்னும் ஏதுவால் நன்கு விளங்கும்.

எல்லா உலகும் மனோ கற்பிதம் என்பதற்கு உதாரணம். பஞ்சதசி 1138வது சு-ல், உள் அல்லது வெளியிடத்தினை அல்லது எந்த சகல தேசங்களையும் புத்தி கற்பிக்கின்றதோ அந்தத் தேச (இட) த்திலுள்ளது சாக்ஷியெனப்படுகின்றது என்று கூறியிருக்கின்றது.

க-ரை. மனமிறந்த சுழுத்தியவஸ்தையில் அந்நிய மொன்றுந் தோற்றாமையால் பிரபஞ்சத் தோற்றத்திற்குக் காரணம் மனமே. எ—ம். (6)

67. பார்த்தவிட மெல்லாம் பரந்தோன்ற வச்சொரு ப
தீர்த்தத்தி லாழ்ந்த திருத்தனுக்குப்—போர்த்தவந் த
வானந்தத் தாதித்தன் முன்விளக்குப் போலவ னி
யீனமுறு மாவிலங்கா தே. *

இ-ள். பார்த்த இடம் எல்லாம் - நோக்கிய இடங்களெங்கும். பரம் தோன்ற - பிரஹ்மமாகிய தனது சொரூபம் விளங்குதலால், அச்சொரூப தீர்த்தத்தில்-அந்தப் பிரஹ்ம சொரூபமாகிய வெள்ளத்துள், ஆழ்ந்ததிருத்தனுக்கு-மூழ்கிய ஜீவன் முக்தனுக்கு, ஆதித்தன் முன் - சூரியனது பிரகாசத்தின்கண், விளக்குப்போல-(வைக்கப்பட்ட) தீபத்தினது பிரகாசம் (கெடுதல்)போல, அவனி-பிரபஞ்சத்தின் [சத்தியத்தன்மை விளக்கமானது],போர்த்த அந்த ஆனந்தத்து - [தனக்குள்ளிலும் வெளியிலும்] வியாபித்துப் பிரகாசிக்கின்ற சச்சிதானந்த விளக்கத்தால், ஈனம் உறும் - கெட்டுப் போம், இலங்காது - விளங்கமாட்டாது. எ—று.

பொ-ரை. நோக்கிய இடங்களெங்கும் பிரஹ்மமாகிய தனது

சொரூபம் விளங்குதலால் அந்தப் பிரஹ்ம சொரூபமாகிய வெள்ளத்துள் மூழ்கிய ஜீவன் முத்தனுக்குச் சூரியனது பிரகாசத்தின்கண் வைக்கப்பட்ட தீபத்தினது பிரகாசம் கெடுதல்போலப் பிரபஞ்சத்தின் சத்தியத்தன்மை விளக்கமானது தனக்குள்ளிலும் வெளியிலும் வியாபித்துப் பிரகாசிக்கின்ற சச்சிதானந்த விளக்கத்தாற் கெட்டுப்போம் விளங்கமாட்டாது. எ—று.

ஆதித்தன் விளக்கு என்றது அவற்றிலொளிகளை.

இங்ஙனம் கூறியது சொரூப சமாதியின்றிய காலத்துள்ள சகசாநுபூதி யென்றறிக.

இதனால் இருட்காலத்திற் பிரகாசிக்கின்ற விளக்குச் சூரியப் பிரகாசத்தில் வைக்கப்பட்டபொழுது தனது பிரகாசமாகிய சத்தி கெட்டுத்தோன்றுதல்போல அஞ்ஞானகாலத்தில் சத்தியத்தன்மையாகிய பிரகாசத்தோடு விளங்கிய சகத்து ஞானகாலத்தில் பிரஹ்மப் பிரகாசத்துள் காணப்படும்பொழுது அச்சத்தியத் தன்மையாகிய பிரகாசங் கெட்டு மித்தையாகக் காணப்படுமென வறிக.

க-ரை. பிரஹ்மானந்தத்தில் மூழ்கிய ஞானிகளுக்குப் பிரபஞ்சஞ் சத்தியமாகத் தோற்றாது. எ—ம். (7)

68\. உள்ளும் புறமு மொருதன் னியல்பறிந்தார் க்
கெள்ளும் பொருளொன் றிருக்குமோ—மெள் ள
வெழுந்திரவி தோன்றி னிலகலகின் சேறற் ற
மொழிந்துபோ மாறுபோ லும். *

இ-ள். உள்ளும் புறமும்-அகத்திலும் புறத்திலும், ஒருதன் னியல்பு-அகண்டைகரசமாயுள்ள பிரஹ்மமாகிய தனது சுபாவத்தை, அறிந்தார்க்கு-அபரோக்ஷமாக அநுபவித்த ஞானிகளுக்கு, எள்ளும்

பொருள் ஒன்று (உம்)-(முன் அப்பியாச காலத்திற்போலத் தமது சொரூபமல்லவென்று) இகழத்தக்க பிரபஞ்சப்பொருள் ஒன்றாயினும், இருக்குமோ - இருக்காது (எதுபோலெனின்), மெள்ள—சாவதானமாக, இரவி எழுந்து தோன்றில் - சூரியன் உதயமாய்ப் பிரகாசித்தால், இலகு அலகின் தோற்றம்-(முன் இருட்காலத்திற்) பிரகாசித்த மின்மினிப்புழுவினுடைய விளக்கமானது, ஒழிந்து போம் ஆறுபோலும் - நீங்கிவிடுமுறைமை போலும். எ—று.

பொ-ரை. அகத்திலும் புறத்திலும் அகண்டைகரசமாயுள்ள பிரஹ்மமாகிய தனது சுபாவத்தை அபரோக்ஷமாக அநுபவித்த ஞானிகளுக்கு முன் அப்பியாச காலத்திற் போலத் தமது சொரூபமல்லவென்று இகழத்தக்க பிரபஞ்சப் பொருள் ஒன்றாயினுமிருக்காது. எதுபோலெனில் சாவதானமாகச் சூரியன் உதயமாய்ப் பிரகாசித்தால் முன் இருட்காலத்திற் பிரகாசித்த மின்மினிப் புழுவினுடைய விளக்கமானது நீங்கிவிடுமுறைமைபோலும். எ—று.

ஒன்றும் என்பதின் சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது.

ஞானிகட்குப் பேதத் தோற்றமில்லை யென்பதற் குதாரணம்.

திருவருட்பயன்:-"உள்ளும் புறம்பு மொருதன்மைக் காட்சியருக் கெள்ளுந் திறமேது மில்" எனவும், ஒழிவிலொடுக்கம் "கூரிருளின் மின்மினியின் கூட்டம்போல் வாழ்சகத்தை, யாரறிவா ரந்த வறிவுதயஞ் சூரியன்காண்" எனவும் கூறியிருத்தல் காண்க.

க-ரை. ஞானிகள் திருஷ்டிக்குப் பிரஹ்மத்திற் கந்நியமாக யாதொரு பொருளுந் தோன்றாது. எ-ம் (8)

69. பாலொடுதே னுங்கலந்த பண்பாம் பிறப்பொழித் து
மேலான முத்திதரு மெய்யறிவு—மேலையன் றி
யிம்மையினு மின்பமே நல்கு நிருவிகற் ப
வம்மைச்ச மாதியுமுற் றால். *

இ-ள். பிறப்பு ஒழித்து-துக்ககாரணமாகிய சனனமரணத்தை நீக்கி, மேல்ஆன முத்திதரும் - மாட்சிமை தங்கிய மோக்ஷத்தைக் கொடுக்கின்ற, மெய்அறிவும் - பிரஹ்ம ஞானமும், மேலைஅன்றி - [அந்தப் பிரஹ்ம ஞானத்தா லடைதற்குரிய] விதேக முத்தியின் மாத்திரமல்லாமல், இம்மையினும்- இச்சீவன் முத்தித்தசையிலும், இன்பம் நல்கும் - பிரஹ்மானந்தத்தைக் கொடுக்கின்ற, அம்மை நிருவிகற்பசமாதியும் - அழகிய நிருவிகற்பசமாதியும், உற்றால் - [ஒரு ஞானிக்கு] அடையப்படுமானால் [அவ்வடைவு], பாலொடு - பசியுடையா னொருவனுக்கு அப்பசி நிவிர்த்திக்காகப் பருகப் பட்ட] க்ஷீரத்துடன், தேனும் - [தித்திப்பினையுடைய] தேனும், கலந்த பண்பு ஆம் - கூடின தன்மை யொப்பாம். எ—று.

பொ-ரை. துக்ககாரணமாகிய சனனமரணத்தை நீக்கி மாட்சிமைதங்கிய மோக்ஷத்தைக் கொடுக்கின்ற பிரஹ்ம ஞானமும், அந்தப் பிரஹ்ம ஞானத்தாலடையத்தக்க விதேக முத்தியின் மாத்திரமல்லாமல் இச்சீவன் முத்தித்தசையிலும் பிரஹ்மானந்தத்தைக் கொடுக்கின்ற அழகிய நிருவிகற்பசமாதியும், ஒரு ஞானிக்கு அடையப்படுமானால் அவ்வடைவு பசியுடையவனாகிய ஒருவனுக்கு அப்பசி நிவிர்த்திக்காகப் பருகப்பட்ட க்ஷீரத்துடன் தித்திப்பினையுடைய தேனுங் கூடின தன்மை யொப்பாம். எ—று.

க-ரை. ஒருஞானிக்குப் பிரஹ்ம ஞானத்தோடு நிருவிகற்ப சமாதியுங்கிடைத்தால் ஒருவனுக்குப் பருகக் கிடைத்த பாலுடன் தேனுங் கூடின தன்மைபோலும். எ—று. (9)

70. மண்ணு திகளான் மறைத்துநனைத் துச்சுடினும்
விண்ணினுக்கூ றில்லா விதநிகர்ப்ப—வெண்ணகமு ன்
னெப்பொருள்கள் யாவை யியற்றுகினு மென்வடி வா
மெய்ப்பொருளுக் கில்லை மிகை. *

இ-ள். மண் ஆதிகளால் -- பிருதிவி அப்புதேயு என்னும் மூன்று பூதங்களால், மறைத்து நனைத்து சுடினும் - [முறையே] மறையச் செய்யினும் ஈரமாக்கினும் சுடினும், விண்ணினுக்கு - ஆகாயத்திற்கு, ஊறு இல்லாவிதம் நிகர்ப்ப - யாதொரு தீங்கும் அடையாத விதத்தைப்போல, எண் அகம் முன்-சங்கற்பவியாபார முடைய மனமுதலிய, எப்பொருள்கள் - எந்தக்கருவிகள், யாவை இயற்றுகினும்-தத்தமக்குரிய எந்தவெந்த வியாபாரங்களைச் செய்யினும், என் வடிவு ஆம் -- எனது சொரூபமாகிய, மெய்ப்பொருளுக்கு-சச்சிதானந்தத்திற்கு, மிகை இல்லை-யாதொரு கேடுமில்லை. எ—று.

பொ-ரை. பிருதிவி, அப்பு, தேயு என்னும் மூன்று பூதங்களாலும் முறையே மறையச்செய்தாலும், ஈரமாக்கினாலும், சுட்டாலும் ஆகாயத்திற்கு யாதொரு தீங்கும் அடையாத விதத்தைப் போலச் சங்கற்ப வியாபாரமுடைய மனமுதலிய எந்தவெந்தக் கருவிகள் தத்தமக்குரிய எந்தவெந்த வியாபாரங்களைச் செய்யினும் எனது சொரூபமாகிய சச்சிதானந்தத்திற்கு யாதொரு கேடுமில்லை. எ—று.

க-ரை. பிருதிவியாதி பூதங்களின் வியாபாரங்களால் ஆகாயங் கேடடையாததுபோல மன முதலிய கருவிகளின் வியாபாரங்களால் சச்சிதானந்த வடிவப்பிரஹ்மங் கேடடையாது. எ—ம். (10)

71. பந்தமுற்ற வந்நாளும் பாசமற்ற விந்நாளுந்
சிந்தை மயங்கித் தெளிந்ததல்லான்—முந்த
யிருந்தவகன் றெய்தலய மின்மையினான் முத்தி
பொருந்தல் பொருந்தாமை பொய். *

இ-ள் பந்தம் உற்ற - [சனனமரண சமுசாரத்திற்]கட்டுப் பட்டிருந்த, அந்நாளும் - அக்காலத்திலும், பாசம் அற்ற இந்நா

னும் - அக்கட்டுநீங்கிய இக்காலத்திலும், சிந்தைமயங்கி - மன மானது [இல்லதையுள்ளதாகவும் உள்ளதை இல்லதாகவுங் கருதி] மயக்கத்தை யடைந்ததும், தெளிந்தது அல்லால்-[இல்லதை இல் லதாகவும் உள்ளதை உள்ளதாகவுமறிந்து] தெளிவை யடைந் தது மல்லாமல், முந்த இருந்த - அஞ்ஞான காலத்திலிருந்த வஸ் துக்கள், அகன்று - நீங்க, அயல்எய்தல் — அவற்றிற்கந்நியமாகிய வஸ்துக்கள் [ஞானகாலத்தில் வந்து] சார்தல், இன்மையினால் - இல்லாமையால், முத்தி - மோக்ஷமானது, பொருந்தாமை - [முன் னுள்] அடையப்படாமையும், பொருந்தல் [இந்நாள்] அடையப் பட்டமையும், பொய் - அசத்தியமாம். எ—று.

பொ.ரை. சனனமரண சமுசாரத்திற் கட்டுப்பட்டிருந்த அக் காலத்திலும் அக்கட்டு நீங்கிய இக்காலத்திலும் மனமானது இல்ல தை யுள்ளதாகவும் உள்ளதை யில்லதாகவுங் கருதி மயக்கத்தை ய டைந்ததும், இல்லதையில்லதாகவும் உள்ளதை உள்ளதாகவுமறிந்து தெளிவை யடைந்ததுமல்லாமல் அஞ்ஞானகாலத்திலிருந்த வஸ் துக்கள் நீங்க அவற்றிற்கந்நியமாகிய வஸ்துக்கள் ஞானகாலத்தில் வந்து சார்தலில்லாமையால் மோக்ஷமானது முன்னுள் அடையப் படாமையும் இந்நாள் அடையப்பட்டமையும் அசத்தியமாம். எ-று.

அகன்று என்பது செயவெனெச் சத்திரிபு. இருந்த என் பது அஃறிணைப்பன்மை வினையாலணையும் பெயர்.

இங்கே கூறியதுபோல்பஞ்சதசி (1120) சு-ம் வி-ம் அத்து விதீயப் பிரஹமத்தில் வாஸ்தவ பந்தமும், மோக்ஷமும் துக்கத்தினு லும் நிரூபிக்கக் கூடாதெனவாயிருத்தலால் துக்கித்தன்மை முதலி யவற்றின் மயக்கமே பந்தமாம். சொரூபமாக நிலைத்தல் வடிவ அப்பந்தத்தின் நிவிர்த்தியே மோக்ஷமாம் என்று கூறியிருப்பது காண்க.

க-ரை. எக்காலத்திலும் ஒரு பொருளேயிருத்தலால் மனத்தினது மயக்கத்தையுந் தெளிவையுந் தவிர மோக்ஷத்தினது அடையாமையும் அடைவும் அசத்தியமாம். எ—ம். (11)

72. ஊறுபடா வான்றன்பா லுற்ற கடாதிகளாற்
கூறுபட்டாற் போன்றிருந்த கொள்கைநேர்—மாறுபடாப்
பூரணநா னென்னிடத்தாம் பொய்யுடல மாதிகளான்
மாரணவீ றுற்ற வகை. *

இ-ள். மாறுபடா - விகாரமற்ற, பூரணநான் - கால தேச வஸ்துக்களா லளவுபடாததாயுள்ள பிரஹ்ம சொரூபமாகிய யான், என் இடத்து ஆம்-என்னிடத்து [அத்தியஸ்தம்] ஆகிய, பொய் உடலம் ஆதிகளால் - வியாவகாரிக தேக முதலியவற்றின் அகந்தாபிமானத்தால், மாரண ஈறு - [அவற்றிற்குளவாகா நின்ற பிறத்தல் முதல்] இறத்தல் இறுதியாகிய [ஷட்பாவ விகாரங்களையும்], உற்றவகை - [அடையாதிருந்தும்] அடைந்ததுபோன்ற விதமானது, ஊறுபடா- [எந்த வஸ்துவினாலும்] பரிசிக்கப்படாத, வான் - [ஏகமும் வியாபகமுமாகிய] ஆகாயமானது, தன்பால் - தன்னிடத்து, உற்றகடாதிகளால் - பொருந்தியிருக்கின்ற குட முதலியவைகளின் பிரிவால், கூறுபட்டால் போன்று - [தான் பிரிவுபடாதிருந்தும் கடாகாயம் மடாகாயம் குதிராகாயம் எனப்] பிரிவுபட்டதைப் போல, இருந்த கொள்கை - (பலவித நாமரூபங்களா) யிருந்த தன்மைக்கு, நேர் - சமானம். எ—று.

பொ-ரை. விகாரமற்ற தேச, கால, வஸ்துக்களாலளவுபடாத தாயுள்ள பிரஹ்ம சொரூபமாகிய நான் என்னிடத்து அத்தியஸ்த மாகிய வியாவகாரிக தேக முதலியவற்றின் அகந்தாபிமானத்தால் அவற்றிற்குளவாகா நின்ற பிறத்தல்முதல் இறத்த லிறுதியாகிய

அறுவகை விகாரங்களாயும் அடையாதிருந்தும் அடைந்தது போன்றிருந்த தன்மையானது எந்த வஸ்துவினாலும் பரிசிக்கப்படாத ஏகமும், வியாபகமுமாகிய ஆகாயமானது தன்னிடத்துப் பொருந்தியிருக்கின்ற குட முதலியவைகளின் பிரிவால் தான் பிரிவுபடாதிருந்தும் கடாகாயம், மடாகாயம், குதிராகாயம் எனப் பிரிவுபட்டதைப்போலப் பலவித நாமரூபங்களாய் இருந்த தன்மைக்குச் சமானமாம். எ—று.

ஆகாயம் கடாதி சம்பந்தத்தாற் கூறுபட்டதன்று. அங்ஙனமாயினும் கூறுபட்டுத் தோன்றுதல் மயக்கவுணர்விற்காதலால் அது மித்தையென்பார் "கூறுபட்டாற் போன்றிருந்த கொள்கை" என உவமவுருபு கொடுத்துப் போலியாக்கினார். அவ்வாறே உவமேயத்தும் நிருவிகார சைதன்னியம் தேகாதிகளின் சம்பந்தத்தால் நான் பிறந்தேன், இருந்தேன் என்பன முதலியவாக விவகரிக்கப்படுதலால் விகாரமடைந்தது போலத் தோன்றியது மித்தையெனக் கண்டுகொள்க.

க-ரை. நிருவிகாரப் பிரஹ்ம சொரூபம் தேகாதிகளின் சம்பந்தத்தால் விகாரமடைந்ததுபோலத் தோற்றியது ஏகமாகிய ஆகாயம் கடாதி சம்பந்தத்தால் நானாவாகியதுபோலத் தோற்றியதற்கு ஒப்பாக மித்தை. எ—ம். (12)

73. பொன்னிற் பணியிருத்தல் பொய்போன்றெப் போத
வின்ப
வென்னிற் சகமிருந்ததவே—மன்னு ந்
தனக்குப் பணியாற் றவறேற் சகத் கா
லெனக்கு மிகையுற் றிடும். *

இ-ள். பொன்னில் - பொன்னினிடத்தில், பொய்பணி-மித்தையாகிய ஆபரணம், இருத்தல்போல் - [கற்பிதகாதான்மிய சம்

பந்தத்தால்] இருத்தலொப்பாக, மெய்போத இன்ப என்னில் -சச்சிதாநந்த வடிவமாயிருக்கின்ற என்னிடத்தில், சகமும் - [மித்தையாகிய தேகாதிப்] பிரபஞ்சங்களும், இருக்குக, - [கற்பிததாதான்மிய சம்பந்தத்தால்] இருக்குக. மன்னும் தனக்கு - நிலைபெற்ற பொன்னுக்கு, பணியால்தவறேல் - அவ்வாபரணத்தினாலே கேடுண்டாயின், சகத்தால் - இத்தேகாதிப் பிரபஞ்சங்களினால், எனக்கு மிகைஉற்றிடும் - பிரஹ்ம சொரூபமாகிய எனக்குங் கேடுண்டாகும். எ—று.

பொ-ரை. பொன்னினிடத்தில் மித்தையாகிய ஆபரணம் கற்பிததாதான்மிய சம்பந்தத்தால் இருத்தல்போலச் சச்சிதானந்த வடிவமாயிருக்கின்ற என்னிடத்தில் மித்தையாகிய தேகாதிப் பிரபஞ்சங்களும் கற்பித தாதான்மிய சம்பந்தத்தால் இருக்குக. நிலைபெற்ற பொன்னுக்கு அவ்வாபரணத்தினாலே கேடுண்டாயின் இத்தேகாதிப் பிரபஞ்சங்களினாலே பிரஹ்ம சொரூபமாகிய எனக்குங் கேடுண்டாகும். எ—று.

க-ரை. பொன் தன்னிடத்திற் கற்பிதமாயுள்ள பணியாற் கேடடையாததுபோலப் பிரஹ்ம சைதன்னியம் தன்னிடத்துக் கற்பிதமாயுள்ள சகத்தாற் கேடடையாது. எ—ம் (13)

[கட்டளைக் கலித்துறை]

74\. கன்னிக் கதலியை நார்கழிக் குங்தொறுங் கண்டகண்போ
லன்னியம் யாவும்பொய் யாதல்கண் டெல்லா மகற்றிவிட்டுப்
பின்னறி யப்பொரு ளில்லா விடத்திற் பிறங்குசித்தே
மன்னிய வான்ம வடிவாங்கண் டார்முத்தி வாழ்வினரே.

இ-ள். கன்னிக்கதலியை - ஈனுதவாழையில் [அதனுள் தண் டெடுக்க விரும்பினேன்], நார்கழிக்குந்தொறும் - அதிலுள்ள மட் டைகளை ஒவ்வொன்றாக உரித்து நீக்குந்தோறும், கண்ட கண் போல் - [இது தண்டன்று இது தண்டன்று என அறிந்து சென்று பின்னர் எல்லா மட்டை கட்குமுள்ளேயுள்ள குருத்தை விரிக்குங்கால் அதனுள் தண்டின்மையை] அறிந்த கண்ணையொப் பாக [த்தேகாதிகளில் ஆன்மாவாகிய தன்னையறியவிரும்பினேன்], யாவும் — (காணப்படுவன) அனைத்தும், அன்னியம் - தனக்கு வேறு என்பதையும், பொய் ஆதல் - (ஆன்மாவாகிய தனக்கு வே றாகியவை அனான்மாவாகலின் அவை) மித்தையாதலையும், கண்டு- (குரு சாஸ்திரங்களால்) அறிந்து, எல்லாம் - (தேகம் இந்திரியம் பிராணன் மனம் புத்தி சித்தம் அகங்காரம் அஞ்ஞானம் ஆகிய) அனைத்தையும், அகற்றிவிட்டு - (தன்னுலறியப்படுதலின் இது நா னல்ல இது நானல்லவென்று] நேதிபண்ணி, பின் - (இவ்வாறு அனைத்தையும் நேதிபண்ணிய) பின்னர், அறிய - எதிரிட்டறி தற்கு, பொருள் இல்லா இடத்தில் - அனான்ம வஸ்துக்களில்லா மலிறந்தவிடத்தில், பிறங்குசித்தே- (சுயஞ்சோதியாய்த் தானாய்ப்) பிரகாசிக்கின்ற அறிவே, மன்னிய - நித்தியமாகிய, ஆன்ம வடிவு ஆம்-தனது வாஸ்தவ சொரூபமாம், கண்டார்-இதனை அபரோக்ஷ மாக அறிந்தவர் யாவரோ அவர், முத்தி வாழ்வினர் - மோக்ஷமா கிய செல்வத்தையுடையவராவர். எ—று.

பொ—ரை. ஈனுதவாழையில் அதனுள் தண்டெடுக்க விரும் பினேன் அதிலுள்ள மட்டைகளை ஒவ்வொன்றாக உரித்து நீக்குந் தோறும் இது தண்டன்று, இது தண்டன்று எனவறிந்துசென்று பின்னர் எல்லாமட்டைகட்கு முள்ளேயுள்ள குருத்தை விரிக்குங் கால் அதனுள் தண்டின்மையை அறிந்த கண்ணைப்போலத் தேகா திகளில் ஆன்மாவாகிய தன்னையறிய விரும்பினேன் காணப்படு

னவனைத்தும் தனக்கு வேறு என்பதையும், ஆன்மாவாகிய தனக்கு வேறாகியவை அநான்மாவாகலின் அவை மித்தையாதலை யுங் குரு சாஸ்திரங்களாலறிந்து தேகம், இந்திரியம், பிராணன், மனம்,புத்தி,சித்தம்,அகங்காரம், அஞ்ஞானம் ஆகிய அனைத்தையும் தன்னாலறியப் படுதலின் இது நானல்ல இது நானல்லவென்று நேதிபண்ணி இவ்வாறு அனைத்தையும் நேதிபண்ணிய பின்னர் எதிரிட்டறிதற்கு அநான்மவஸ்துக்களில்லாமல் இறந்த விடத்திற் சயஞ்சோதியாய்த் தானைப் பிரகாசிக்கின்ற அறிவே நித்தியமா கிய தனது எதார்த்த சொரூபமாம். இதனை அபரோக்ஷமாக வறிந்தவர் யாவரோ அவர் மோக்ஷமாகிய செல்வத்தையுடையவ ராவர். எ—று.

க—ரை. ஆன்மாநுபவம் அநான்ம வஸ்துக்களின் எதிரீடி றந்த காலத்துளதாம். எ—ம். (14)

[விருத்தம்]

75. ககனங் காவற் காரனெனிற் கள்ள னிருக்க விடமுண் டோ
வகமே ஞானிக் கெங்கணுமோ ரத்தி பாதி யின்புரு வாய்த்
திகழு மந்த வகண்டபர தேசோ மயத்தி லனுதினமு
முகளுந் தன்மை யுடையமன மொழிந்தே போகு முறு தன்றே

இ-ள். ககனம் - [சகல வஸ்துக்களுமிருத்தற் கிடமாகிய] ஆகாயம், காவற்காரன் எனில் - [பொக்கிஷத்தைக் காக்கும்] காவலாளி யென்று சொல்லில், கள்ளன் இருக்க(உம்)இடம் உண்டோ- (அக்காவலாளிக்குத் தெரியாமல்) திருடன் [ஒளித்து] இருக்கவும் (சென்று திருடவும்) அவகாசமிருக்குமோ (இராது அவகாசமே

காவலாளியின் சொரூபமாயிருத்தலின் அதுபோல், ஞானிக்கு - (ஜீவப்பிரமங்களின் ஐக்கியத்தை அபரோக்ஷமாகவறிந்த ஜீவன் முத்த] வித்துவானுக்கு, எங்கனும், எவ்விடத்தும், ஓர் - ஒப்பற்ற, அகமே-தனது சொரூபமே, அத்திபாதி இன்ப உருவாய் - சச்சிதானந்த வடிவாய், திகழும் - பிரகாசிக்கும், அகண்டமா - ஏகமாயும் வியாபகமாயுமிருக்கின்ற, அந்த நேசோமயத்தில், - அப்பேரொளியில், அனுதினமும் உகளுந் தன்மையுடைய மனம் - [விடயங்களைக்கண்டு] எப்பொழுதுந் தாவிச்செல்லுங் குணமுடைய சலமனது, [முன்போல் ஜீவித்திருக்கவும் விடயங்களைக்கண்டு சென்று பற்றவும் இடமுண்டோ இல்லை அனைத்துஞ் சச்சிதானந்த ஏகவடிவமாயிருத்தலின்], உறாது - [ஆகலால்தான் ஜீவித்திருக்காமலும் விடயங்களைச்] சாராமலும், ஒழிந்து போகும் - கெட்டுப்போம். எ—று.

பொ-ரை. சகல வஸ்துக்களுமிருத்தற் கிடமாகிய ஆகாயம் பொக்கிஷத்தைக் காக்கும் காவலாளி யென்று சொல்லில் அக்காவலாளிக்குத் தெரியாமல் திருடன் ஒளித்திருக்கவும், சென்று திருடவும் அவகாசமிருக்குமோ இருக்காது அவகாசமே காவலாளியின் சொரூபமாயிருத்தலின். அதுபோல ஜீவப்பிரமங்களின் ஐக்கியத்தை அபரோக்ஷமாக வறிந்த ஜீவன் முத்த வித்துவானுக்கு எவ்விடத்தும் ஒப்பற்ற தனது சொரூபமே சச்சிதானந்த வடிவாய்ப் பிரகாசிக்கும். ஏகமாயும் வியாபகமாயுமிருக்கின்ற அப்பேரொளியில் விடயங்களைக் கண்டு எப்பொழுதுந் தாவிச்செல்லுங் குணமுடைய சலமனது முன்போற் சீவித்திருக்கவும், விடயங்களைக் கண்டு சென்று பற்றவும் இடமுண்டோ இல்லை அனைத்துஞ் சச்சிதானந்த ஏக வடிவமாயிருத்தலின். ஆகலால்தான் ஜீவித்திருக்காமலும் விடயங்களைச் சாராமலுங் கெட்டுப்போம். எ—று.

உறாது என்பது முற்றெச்சம். இருக்கவும் என்பதின் விகாரச்

தாற்றெக்க எச்சவும்மையால் சென்று திருடவும் என்பது வருவிக்கப்பட்டது. உவமையின்றெழில்கள் பொருளுக்கும் வருவிக்கப் பட்டன.

க-ரை. ஆகாயமாகிய காவலாளியே எங்குமிருத்தலால் திருடனது இருப்பு முதலியன கூடாமைபோல ஞானிக்கு எங்குந் தனது சொரூபமாகிய அதிஷ்டானமே விளங்குதலால் அத்தியஸ்தமாகிய தூலமனத்தினது இருப்பு முதலியன கூடா. எ-ம். (15)

76. பிரஹமத் தாரோ பிதமூலக பிலையென் றறிந்து முபாதியதாய், மருவா ரத்த முள்ளமட்டும் வயங்கும் பொய்யா யதிட்டானம், பிரிவற் றிலங்கு பேற்றல்வெண்டேரென் றறிந்த பின்னுமந்நீர்த், தெரிவு நீங்காதென்னவெயி லுருப்பந் தீரா திருக்கும்வரை.

இ-ள். வெண்டேர் என்று - [கானலினிடத்துச் சலப்பிராந்தியடைந்தவன் தோற்றுகின்ற இஃது நீரல்ல] கானலென்று, அறிந்த பின்னும் - [பிரத்தியக்ஷமாகக்] கண்ட பின்னரும், வெயில் உருப்பம் -- [ஜலத்தோற்றம் நசித்தற்குத் தடையாகிய] சூரியனுடைய வெப்பமானது, தீராது இருக்கும்வரை - நீங்காதுள்ளவளவும், அந்நீர்த் தெரிவு - அச்சலத்தோற்றம், நீங்காது என்ன -நசிக்காது விளங்குதல் போல, உலகம் -பிரபஞ்சமானது, பிரஹமத்து- [சச்சிதானந்த சொரூபமாகிய] பிரஹமத்தினிடத்து, ஆரோபிதம்- [அஞ்ஞானத்தாற்] கற்பிக்கப்பட்டது, இலை என்று -[ஆதலால் பரமார்த்தமாக மலடிமகன் போல] அபாவமா மென்று, அறிந்தும் - [அபரோக்ஷமாகச்] சாக்ஷாத் கரிக்கப்படினும், உபாதியதாய்- [இது சோபாதிக அத்தியாசமாகலின் சாக்ஷாத்கரித்தவுடனே தோற்றது நசித்தற்குத்) தடையாய், மருவு - பொருந்தியிருக்கின்ற, ஆரத்தம் உள்ளமட்டும் - (பிராரத்த கன்மத்தின் காரியமாகிய)

தூலசரீரமிருக்குமளவும், அதிட்டானம் - (கற்பிதப் பிரபஞ்சத்திற்கு அதிட்டானமாகிய) பிரஹ்ம சொரூபம், பிரிவு அற்று-வேற்றுமையின்றி[ப்பரிபூரணமாய்], இலங்கு பேற்றால் - விளங்குகின்ற இலாபத்தால், பொய்யாய் - பிராதிபாசிக(தோற்றமாத்திர)மாய், வயங்கும் - விளங்கும். எ—று.

பொ-ரை. கானலினிடத்துச் சலப்பிராந்தி யடைந்தவன் தோற்றுகின்ற இஃது நீரல்ல கானலென்று பிரத்தியக்ஷமாகக் கண்ட பின்னரும் ஜலத்தோற்றம் நசித்தற்குத் தடையாகிய சூரிய வெப்பமானது நீங்காதுள்ளவளவும் அச்சலத்தோற்றம் நசிக்காது விளங்குதல்போலப் பிரபஞ்சமானது சச்சிதானந்த சொரூபமாகிய பிரஹ்மத்தினிடத்து அஞ்ஞானத்தாற் கற்பிக்கப்பட்டது. ஆதலாற் பரமார்த்தமாக மலடிமகன்போல அபாவமென்று அபரோக்ஷமாகச் சாக்ஷாத் கரிக்கப்படினும் இது சோபாதிக அத்தியாச மாகலின் சாக்ஷாத் கரித்தவுடனே தோற்றுது நசித்தற்குத் தடையாய்ப் பொருந்தியிருக்கின்ற பிராரத்த கருமத்தின் காரியமாகிய தூல சரீரமிருக்குமளவும் கற்பிதப் பிரபஞ்சத்திற்கு அதிட்டானமாகிய பிரஹ்ம சொரூபம் வேற்றுமையின்றிப் பரிபூரணமாய் விளங்குகின்ற இலாபத்தால் பிராதிபாசிகமாய் விளங்கும். எ—று.

க-ரை. கானற்சலமானது அதின் அதிட்டான ஞானத்தாற் பாதிக்கப்படினும் உபாதி பலத்தாற் பின் மித்தையாகத் தோற்றுதல் போலப் பிரபஞ்சமானது அதின் அதிட்டான ஞானத்தாற் பாதிக்கப்படினும் உபாதி பலத்தாற் பின் மித்தையாகத் தோற்றும். எ—ம். (16)

77. கானற் சலமார் கடலிடையா காய மென்னும் பெரும்பூதந்,
தானென் றேனும் விழுந்தழுந்தித் தனது வடிவங்
கெடுகலுண்டோ, வீன வாரோ பிதமாக வென்பாற்

தோன்று மிச்சகத்தில், யான்மு னிறந்து பிறந்தேனென்
றெண்ணம் வியக்கற் பாலதே. *

இ—ள். கானல் சலம் ஆர் - கானலின்கண் மித்தையாகத் தோற்றுகின்ற நீரால் நிரம்பிய, கடல் இடை - சமுத்திரத்தினிடத்து, ஆகாயம் என்னும் — விண்ணென்று சொல்லப்படுகின்ற, பெரும் பூதம் — அதிவியாபகமும் அதி சூக்குமமுமாகிய பூதமானது, விழுந்து அழுந்தி - வீழ்ந்து மூழ்கி, தனதுவடிவம்-தன்னுடைய சொரூபம், என்றேனும் - எக்காலிலாயினும், கெடுதல் உண்டோ-நாசமாதலுளதோ. [இல்லை உளதென்பாருளரெனின் அவருடைய அச்சொல் அதி சயிக்கத்தக்கதன்றோ? அதுபோல], என்பால் - பிரஹ்ம சொரூபமாகிய என்னிடத்தில், ஈனம் - [ஞானத்தால்] அழியத்தகுந்த, ஆரோபிதமாகத் தோன்றும் - கற்பித வஸ்துவாக விளங்குகின்ற, இச்சகத்தில் - இந்தப் பிரபஞ்சத்தில், யான் - [இதற்கதிட்டானனுகவும் பரிபூரணனுகவும் நித்தியனுகவுமிருக்கின்ற] நான், முன் - அஞ்ஞானகாலத்தில், இறந்து [என்] பிறந்தேன்-மரித்தேன் ஜனித்தேன், என் எண்ணம்-என்று எண்ணிய எண்ணமானது - வியக்கற்பாலதே - அதிசயிக்கத்தக்க தேயாம். எ—று.

பொ-ரை. கானலின்கண் மித்தையாகத் தோன்றுகின்ற நீரால் நிரம்பிய சமுத்திரத்தினிடத்து விண்ணென்று சொல்லப்படுகின்ற அதிவியாபகமும் அதிசூக்குமமுமாகிய பூதமானது வீழ்ந்து மூழ்கித் தன்னுடைய சொரூபம் எக்காலிலாயினும் நாசமாதலுளதோ இல்லை. உளதென்பாருளரெனின் அவருடைய அச்சொல் அதிசயிக்கத்தக்கதன்றோ. அதுபோலப் பிரஹ்ம சொரூபமாகிய என்னிடத்தில் ஞானத்தாலழியத் தகுந்த கற்பித வஸ்துவாக விளங்குகின்ற இந்தப் பிரபஞ்சத்தில் இதற்கதிட்டானனுகவும், பரிபூரணனுகவும், நித்தியனுகவுமிருக்கின்ற நான் அஞ்ஞான

காலத்தில் மரித்தேன், ஜனித்தேன் என்று எண்ணிய எண்ணமானது அதிசயிக்கத்தக்கதேயாம். எ—று.

என் என்னுந்தன்மை யொருமை வினைமுற்றுவிகுதி இரப்புடனுங் கூட்டப்பட்டது. இரப்பை முற்கூறியது பல சென்மங்களில் என்பதையுணர்த்துதற் கென்றறிக. வியக்கற்பாலது என்பது குறிப்பு மொழியாய் மயக்கத்தை யுணர்த்தி நின்றது.

க-ரை. கானல் நீர்க்கடலில் ஆகாயம் விழுந்து அமிழ்ந்திப் போயிற்றென்று கருதுதல் மயக்கமாதல்போலப் பிரம சொரூபமாகிய நான் ஜகத்தில் இறந்தேன் பிறந்தேன் என்று முன் கருதியது அஞ்ஞான மயக்கம். எ-ம். (17)

78\. குணமுங் குறிபு மிறந்ததுவாய்க் கோதி லானந் தோததியாய்

மணமண் பரிச முருவிரச மலியு மொலியு மிலதாகி
யிலே மகத்தே கனமிலகு வாதி யாய வடிவுபெயர்
நணுகா வமல பரப்பிரம நானே நானே யதுகானே.

ு-ள். குணமும் - சத்துவாதி குணங்களும், குறியும் - ஒருவித அடையாளமும், இறந்தது ஆய் - இல்லாததாயும், கோது இல்- குற்றமில்லாத, ஆனந்த உததியாய் - இன்பக்கடலாகியும், மணம் அண் பரிசம் - கந்தமும் பொருந்துகின்ற பரிசமும், உருவு இரசம் - உருவமும் இரசமும், மலியும் ஒலியும் - [எங்கும்] நிறைந்திருக்கின்ற சத்தமும், இலது ஆகி - இல்லாததாயும், அணு மகத்து கனம் இலகு - நுண்மை பருமன் பாரம் பாரமின்மை, ஆதியாய - முதலாகிய, வடிவுபெயர் - உருவநாமங்களை, நணுகா-பொருந்தாத, அமலபரப்பிரமம் [ஏ] நான் - நின்மலமாயுமுள்ள அகண்டாகாரசப் பிரமமே நான், நானே அது - நானே பிரமம். எ—று.

பொ-ரை. சத்துவாதி குணங்களும், ஒருவித அடையாளமு மில்லாததாகியும், குற்றமில்லாத ஆனந்தக்கடலாகியும், கந்தமும், பொருந்துகின்ற பரிசமும், உருவமும், இரசமும், எங்கும் நிறைந் திருக்கின்ற சத்தமும் இல்லாததாயும் நுண்மை, பருமன், பாரம், பாரமின்மை முதலாகிய உருவ நாமங்களைப் பொருந்தாத நின்மல மாயுமுள்ள அகண்டைகரசப் பிரஹ்மமே நான். நானே பிரஹ மம். எ—று.

க-ரை. நிருவிசேஷமாகிய பிரஹ்மமே ஆத்துமா, ஆத்துமா வே பிரஹ்மம் என்று அவற்றின் ஐக்கியத்தையுணர்த்தி யது. எ-ம். (18)

79. மன்னு மணிய நோக்காமன் மறித்துத் தனையும் பார்க் காம, லுன்னன் மறத்த லிலாமலுள வுணர்வு முதித்த லொ டுங்கலின்றிப், பின்ன மறவோ ரியல்பாகப் பிறங்குஞ் சுகானு பவமுமிவை, தன்னை யறிந்த வனுபவமென் றறிந்த பெரி யோர் சாற்றுவரால்.

இ-ள். மன்னும் அணியம் நோக்காமல் - [பாகியத்தில்] நிலை பெற்றுள்ள சத்தாதி விஷயங்களைக் கிரகிக்காமலும், மறித்துதனை யும் பார்க்காமல் - திரும்பத்தன்னை (சரீரத்தை)யுங் கிரகிக்காம லும், உன்னல் மறத்தல் இலாமல் - [அந்தரத்தில் வாசனா பலத் தால் எழும் அநான்ம வஸ்துக்களை அல்லது ஆன்மாவாகிய பிரஹ ம வஸ்துவை] நினைக்காமலும் மறக்காமலும், உள உணர்வும் - [சுயம்பிரகாசமாய் நித்தியமாய்] உள்ள அறிவும், உதித்தல் ஒடுங் கல் இன்றி—தோற்ற நாசங்களில்லாமலும், பின்னம் அற - யாதொரு பேதமில்லாமலும், ஓர் இயல்பு ஆக - ஒரு தன் மையாக, பிறங்கும் சுக அனுபவமும் - விளங்கும் ஆனந்தானு பவமும், இவை - ஆகிய இவை, தன்னை அறிந்த - பிரஹ்மாபின்ன

மாகிய ஆன்மாவை யுணர்ந்த, அநுபவம் என்று - அநுபூதியென்று, அறிந்த பெரியோர் சார்றுவர் - இவ்வநுபவிகளாகிய ஞானிகள் சொல்லுவார்கள், எ-று.

பொ-ரை. பாகியத்தில் நிலைபெற்றுள்ள சத்தாதி விஷயங்களைக் கிரகிக்காமலும், திரும்பத் தன்னையுங் கிரகிக்காமலும், ஆந்தரத்தில் வாசனுபலத்தால் எழும் அநான்ம வஸ்துக்களை அல்லது ஆன்மாவாகிய பிரஹ்ம வஸ்துவை நினைக்காமலும் மறக்காமலும், சுயம்பிரகாசமாய் நித்தியமாயுள்ள அறிவும், தோற்ற நாசங்களில்லாமலும், யாதொரு பேதமுமில்லாமலும் ஒரு தன்மையாக விளங்கும் சுகாநுபவமுமாகிய இவை தன்னையுணர்ந்த அநுபூதியென்று இவ்வநுபவிகளாகிய ஞானிகள் சொல்லுவார்கள். எ-று.

க-ரை. ஞானிகள் நித்தியமாகிய ஞானுனந்தாநுபவமே ஆன்மாநுபவமென்று கூறுவர், எ-ம். (19)

80\. பத்துத் திசையும் பூதமைந்தும் பகரப் பூத காரியமு
மத்தி யாச மாவிளங்க வவற்றி னதிட்டா னமதாகிச்
சுத்த மாகி யகண்டசுயஞ் சோதி யாகிப் பூரணமாய்
நித்த மாய தன்சொரூப நிகழுஞ் சகச நிலையினர்க்கே.

இ-ள். சகச நிலையினர்க்கு - சகசாநுபவமுடைய ஞானிகட்கு, பத்துத்திசையும் - கிழக்கு முதலிய பத்துத் திக்குகளும், பூதம் ஐந்தும் - பிருதிவியாதி பூதங்களைந்தும், பகர் அப்பூதகாரியமும் - சொல்லிய அந்தப் பஞ்சபூதங்களால் விரிந்திருக்கின்ற பிண்டப் பிரமாண்டங்களாகிய பிரபஞ்சமும், அத்தியாசமாவிளங்க - [கானலினிடத்துச் சலம் போலக்] கற்பிதமாகத்தோன்ற, நித்தம் ஆய - நித்தியமாயிருக்கின்ற, தன் சொரூபம் - [பிரஹ்மாபின்னமாகிய] தனது ஆன்ம சொரூபமானது, அவற்றின் - அக்கற்பித வஸ்துக்களுக்கு, அதிட்டானம் ஆகி - அதிஷ்டானமாய், சுத்தம் ஆகி - நின்மலமாய், அகண்ட சுயஞ்சோதி ஆகி - ஏகமாகிய சுயம்

பிரகாசமாய், பூரணமாய் - அபரிச்சின்னமாய், நிகழும் - விளங்கும், எ-று.

பொ-ரை. சகசாஹுபவமுடைய ஞானிகளுக்குக் கிழக்கு முதலிய பத்துத் திக்குகளும், பிருதிவியாதி பூதங்களைந்தும், சொல்லிய அர்த்தப் பஞ்ச பூதங்களால் விரிந்திருக்கின்ற பிண்டப் பிரஹமாண்டங்களாகிய பிரபஞ்சமும் கானலினிடத்துச் சலம்போலக் கற்பிதமாகத்தோன்ற, நித்தியமாயிருக்கின்ற பிரஹமாபின்னமாகிய தனது ஆன்ம சொரூபமானது அக்கற்பித வஸ்துக்களுக்கு அதிஷ்டானமாய், அமலமாய், ஏகமாகிய சுயம்பிரகாசமாய், அபரிச் சின்னமாய் விளங்கும், எ-று.

அத்தியாசமா விளங்க ஆன்ம சொரூபம் விளங்கும் எனக் கூட்டப்படும். அங்ஙனம் கூட்டப்படினும் விளங்க என்பது காரியப்பொருட்டாய் வந்த செயவெனெச்ச வாய்ப்பாட்டெதிர்கால வினையெச்சமாதலாலும் ஆன்மஞானவேதுவாற் சகத்தின் மித்தியாத்துவ நிச்சயமுளதாதலாலும் ஆன்ம ஞானத்தால் ஜகத்துவாதிக்கப்பட்டு மித்தையாமென்பது கருத்தாகக் கொள்க.

க-ரை. ஞானிகளுக்குத் தமது ஆன்ம சொரூப ஞானத்தால் ஜகத்துவாதிக்கப்பட்டு மித்தையாம். எ-ம். [20]

81. நாகஞ் சரிப்போ னிதுவதுவென் றறியா னதுபோன் ஞானியுந்தன், றேகஞ் சரிக்கு மிடநாடீர் சிகரத் திகிரி வனமென்னப், பாகித் தறியா னெங்குமொரு படித்தா யத்திபாதியின்ப, லேகப் பொருளாந் தன்வடிவே யிலங்கக் காண்பனதனாலே.

இ-ள். நாகம் சரிப்போன் - ஆகாய மார்க்கத்திற் செல்பவன், இது அது என்று அறியான் - இது அது என்று ஒன்றையுஞ் சுட்டியறியமாட்டான், [எதனாலெனில் அவ்விடத்துத் தன்

னைத் தவிர அந்நிய வஸ்து ஒன்றுமின்மையால்], அதுபோல் - அத்திருஷ்டாந்தம்போல, ஞானியும் - ஜீவன் முக்தனும், தன் தேகம் - தன்னுடைய சரீரம், சரிக்கும் - சஞ்சாரஞ்செய்யும், இடம் - தானங்களாகிய, நாடு - [நாடுகளை இது இன்ன] நாடெனவும், ஊர்—[நகரங்களை இது இன்ன] நகரமெனவும், சிகரத்திகிரி - முடிகளோடு கூடிய [மலைகளை இது இன்ன] மலையெனவும், வனம் என்ன - [வனங்களை இது இன்ன] வனமெனவுங் [கருதி], பாவித்து அறியான் - பிரித்தறியமாட்டான், [ஏதுவெனில்] எங்கும் ஒரு படித்தாய் - எவ்விடத்தும் ஒரு தன்மையாய், அத்திபாதி இன்ப - சச்சிதானந்த வடிவ, ஏகப் பொருள் ஆம் - ஒரே வஸ்துவாகிய, தன் வடிவே - தன்னுடைய ஆன்ம சொரூபமே, இலக்கக் காண்பன் - விளங்கத் தரிசிப்பன், அதனாலே - அக்காரணத்தாலே. எ-று.

பொ-ரை. ஆகாய வழியிற் செல்பவன் இது அது என்று ஒன்றையுஞ் சுட்டியறியமாட்டான். ஏதுவெனில், அவ்விடத்துந் தன்னைத்தவிர அந்நிய வஸ்து ஒன்றுமின்மையால். அத்திருஷ்டாந்தம்போல ஞானியுந் தன்னுடைய சரீரம் சஞ்சாரஞ்செய்யுந் தானங்களாகிய நாடுகளை இது இன்ன நாடெனவும், நகரங்களை இது இன்ன நகரமெனவும், முடிகளோடு கூடிய மலைகளை இது இன்ன மலையெனவும், வனங்களை இது இன்ன வனமெனவும் கருதிப் பிரித்தறியமாட்டான். ஏதுவெனில், எவ்விடத்தும் ஒரு தன்மையாய்ச் சச்சிதானந்த வடிவ ஒரே வஸ்துவாகிய தனது ஆன்ம சொரூபமே விளங்கத் தரிசிப்பன் அக்காரணத்தால். எ-று.

செய்யுளோசை நோக்கி விரித்தல் விகாரம்பெற்ற என்னவென்னும் எண்ணிடைச்சொல் நாடு முதலிய எண்ணுப்பொருடோறும் பிரிந்தியைந்தது.

க-ரை. ஞானியானவன் எவ்விடத்துஞ் சச்சிதானந்த

சொரூபமாயுள்ள தன்னையே காண்டலால் நாம ரூபங்களை அறி யான். எ-ம். [21]

82. கடலிற் செலுமோர் மாலுமிக்கக் கரையுங் குறியா லறிபடல்போ, லுடலி னோக்கா லாசிரிய னுணர்மா ணாக்க னெனும்பேத, மடியு முடியு நடுவுமிலா வமல பரிபூ ரணஞான, வடிவாம் பிரஹ்ம வித்தினுக்கு மருவு மென்னு மருமறையே.

இ-ள். கடலில் செலும் - சமுத்திரத்தின் கண்ணே [மரக் கலத்தை நடத்திச்] சஞ்சரிக்கும், ஓர் மாலுமிக்கு - ஓர் மீகாமனு க்கு, அக்கரையும் - [ஏகமும் வியாபகமுமாயுள்ள அக்கடல் இயல் பாக அறியப்படுதலோடு] அக்கடற்கப்பாலுள்ள கரையும், குறியால் அறிபடல் போல் - [தீபஸ்தம்ப முதலிய] அடையாளங்களா லறி யப்படுதல் போல, அடியும் நடுவும் முடியும் இலா — ஆதியும் மத்தி யும் அந்தமும் இல்லாத, அமல பரிபூரண ஞானவடிவு ஆம் - நின் மல பரிபூரண ஞான சொரூபமாய் விளங்குகின்ற, பிரஹ்ம வித்தி னுக்கு—பிரஹ்ம வித்தாகிய ஞானிக்கு, ஆசிரியன் - [உபதேசிக் கின்ற இச்சரீர விசிட்டசைதன்னியம்] குரு, உணர்மாணாக்கன்- இதனைக் கேட்டறியும் (அச்சரீர விசிட்ட சைதன்னியம்) சீடன், எனும் பேதம் — என்று காணும் பேத வுணர்ச்சியானது, உடலின் நோக்கால் - (அப்பக்குவான்மாக்களிடத்துள தாகின்ற காருண்ணி யத்தாலும் அவருடைய கருமபரிபாகத்தாலும் எழுஞ்) சரீர திருஷ்டியால், மருவும் என்னும் — பொருந்து மென்று கோஷிக் கும், அருமறை - அருமையாகிய வேதங்கள். எ-று.

பொ-ரை. சமுத்திரத்தின்கண்ணே மரக்கலத்தை நடத்திச் சஞ்சரிக்கும் ஒரு மீகாமனுக்கு ஏகமும் வியாபகமுமாயுள்ள அக் கடல் இயல் பாக அறியப்படுதலோடு அக்கடற்கப்பாலுள்ள கரை

யும் அவ்விடத்திலுள்ள தீபஸ்தம்ப முதலிய குறிகளால் அறியப் படுதல்போல ஆதியும் மத்தியும், அந்தமுமில்லாத நின்மல பரிபூரண ஞான சொரூபமாய் விளங்குகின்ற பிரஹ்ம வித்தாகிய ஞானிக்கு உபதேசிக்கின்ற இச் சரீர விசிட்டசைதன்னியங் குரு இதனைக் கேட்டறியும் அச்சரீர விசிட்டசைதன்னியஞ் சீடன் என்று காணும் பேத வுணர்ச்சியானது அப்பக்குவான்மாக்களிடத் துளதாகின்ற காருண்ணியத்தாலும், அவருடைய கருமபரிபாகத்தாலும் எழுஞ் சரீர திருஷ்டியால் பொருந்து மென்று சோதிக்கும் அருமையாகிய வேதங்கள். எ-று,

சச்சிதானந்த வடிவப் பிரஹ்ம சொரூபத்திற் சஞ்சரிப்பவனென்பார் "அமல பரிபூரண ஞான, வடிவாம் பிரஹ்மவித்து" என்றார் அவனுக்கு எவ்விடத்துந் தனது சொரூபப் பிரகாசமே தோற்றுதலாற் பேதவுணர்ச்சி யுளதாகாது. அங்ஙனமாயினும் பிராரத்தசேடமிருத்தலாலும், ஜீவகாருண்ணியஞ் சுபாவ லிலக்கணமாயிருத்தலாலும் நிருவிகற்பசமாதி அப்பியாசத்தின் ஏற்றத் தாழ்வுக்குத் தக்கபடி ஏற்றத்தாழ்வாக ஒரோர் காலத்துளதா மென்றறிக.

கடலிற் சஞ்சரிப்பவனுக்கு அக்கரையின் தூரமுளதாதற்குத்தீப ஸ்தம்பாதிகள் காரணமாதல்போலச் சச்சிதானந்த வடிவப் பிரஹ்ம சொரூபத்திற் சஞ்சரிக்கும் ஞானிக்குச் சரீரதிருஷ்டி யுளதாதற்குப் பக்குவான்மாக்களிடத் துண்டாகின்ற காருண்ணியங் காரணமென்பது கண்டுகொள்க. ஆனால் சரீரம் நிலைத்தற்குரிய உணவு முதலியவற்றின் கிரகணம் எவ்வாறு கூடுமெனின் அதற்குப் பிராரத்த கருமங் காரணமாயிருத்தலிற் கூடுமென்றறிக.

க-ரை. சச்சிதானந்த அத்துவைதப் பிரஹ்ம சொரூபமே தானாயிருக்கின்ற ஞானிக்கு ஜீவகாருண்ணியத்தாலும், முமுக்ஷுக்

களது கன்மபரிபாகத்தாலும் நான் அவன் என்னும் பேத வுணர்ச் சியுமாசாம். எ-ம். (22)

83. நீர மெழுந்து மேற்பெருமி நின்று பெயரா லுரு வத்தால், பாரிற் குமிழி யெனப்படினும் பயமே யாகும் பார்ப்பவருக், கோரா நந்த பரமுலகா வுரைக்கப் படினு மில்லாத, பேரோ டுருவங் காணார்க்குப் பிரஹ மப் பொருளாய் பிறங்குமால். *

இ-ள். நீரம் - ஜலமானது (தானிருந்த வண்ணமிருக்க), மேல் எழுந்து பெருமிநின்று — (வாயு சம்பந்தத்தால்) மேலே எழும்பி உள்ளே வெளிபட வீங்கிநிற்க, பெயரால் -- [அதனாற் கற்பிக்கப்பட்ட மூன்றெழுத்துப்] பெயராலும், உருவத்தால் - [மேலெழும்பி நிற்கின்ற] வடிவத்தாலும், பாரில் — உலகத்தாரால், குமிழி எனப்படினும் - குமிழி என்று [சொல்லப்படுகிறது அங் ஙனங்] சொல்லப்பட்டாலும், பார்ப்பவருக்கு - [கற்பிதமாகிய அந் நாம ரூபங்களைப்பாராமல் அவற்றிற்காதாரம் யாதென்று ஊன்றி] நோக்குவோருக்கு, பயமே ஆகும் — ஜலமயமாகவே காணப்படும், [அதுபோல], ஓர் ஆனந்தபரம் - ஒப்பற்ற ஆனந்த சொரூபப் பிரஹ்மமானது, [தானிருந்தவண்ணம் நிருவிகாரமாயிருக்க], உலகா உரைக்கப்படினும் -- [மாயா சம்பந்தத் தாலுளவாகிய நாம ரூப கற்பனையால் அஞ்ஞானிகளால்] பிரபஞ்சமாகக் (கூறப்படு கிறது அங்ஙனம்) கூறப்படினும், இல்லாத பேரோடு உருவம் -- உண்மையாயில்லாத நாமரூபங்களை, காணார்க்கு - (கற்பிதமென்று அக்காரணத்தால்) நோக்கா (மல் விடுத்து அவற்றிற்காதாரமாய் உட்புறங்களிற் பூரித்துள்ள உண்மைப்பொருளையே நோக்கு கின்ற) ஞானிகளுக்கு, அப்பிரஹ்மப் பொருளா - அந்த உண்மை யாகிய சச்சிதானந்தப் பிரஹ்மவஸ்துவாகவே, பிறங்கும் - விளங் கும். எ-டு.

பொ-ரை. ஜலமானது தானிருந்தவண்ணமிருக்க வாயு சம்பந்தத்தால் மேலே எழும்பி உள்ளே வெளிபட வீங்கிநிற்றலால் கற்பிக்கப்பட்ட மூன்றெழுத்துப் பெயராலும், மேலே எழும்பி நின்ற வடிவத்தாலும் உலகத்தாரால் குமிழியென்று சொல்லப்படுகிறது. அங்ஙனஞ் சொல்லப்பட்டாலும் கற்பிதமாகிய அந்நாமரூபங்களைப் பாராமல் அவற்றிற்காதாரம் யாதென்று உணர்ந்து நோக்குவோருக்கு ஜலமயமாகவே காணப்படும். அதுபோல ஒப்பற்ற ஆனந்த சொரூபப் பிரஹ்மமானது தானிருந்தவண்ணம் நிருவிகாரமாயிருக்க மாயாசம்பந்தத்தாலுளவாகிய நாமரூப கற்பனையால் அஞ்ஞானிகளாற் பிரபஞ்சமாகக் கூறப்படுகிறது. அங்ஙனங் கூறப்படினும் உண்மையாயில்லாத நாமரூபங்களைக் கற்பிதமென்று அக்காரணத்தால் நோக்காமல் விடுத்து அவற்றிற்காதாரமாய் உட்புறங்களிற் பூரித்துள்ள உண்மைப்பொருளையே நோக்குகின்ற ஞானிகளுக்கு அந்தவண்மையாகிய சச்சிதானந்தப் பிரஹ்மமாகவே விளங்கும். எ-று.

பார் என்பது ஆகுபெயர். பாரில் என்பது வேற்றுமை மயக்கம். நிற்க என்னுங் காரணப்பொருட்டாய் வந்த செயவெனெச்ச வாய்பாட்டிறந்தகால வினையெச்சம் நின்றெனத் திரிந்து நின்றது.

இங்கே கூறியிருத்தல்போல பஞ்சதசி அத்துவைதானந்தப் பிரகரணம் (79) வது சு-ல் அந்த நாமரூபங்கள் உற்பத்தி நாசத்தோடு கூடியனவாம். ஆதலால் அவற்றைச் சமுத்திரத்தில் குமிழி முதலியவற்றைப் போலப் புத்தியினால் பிரஹ்மத்தில் மித்தையாகக் காண்க என்று கூறியிருத்தல் காண்க.

க-ரை. பிரஹ்மமானது அஞ்ஞானிகளுக்குப் பிரபஞ்சமாகக் காணப்படுவதல்லது ஞானிகளுக்குச் சச்சிதானந்த வடிவப் பிரஹ்மமாகவே விளங்கும். எ-ம். (23)

[வெண்பா]

84. அந்தக் கரண மசையா தடங்கிடின்ம ற்
றெந்தக் கரணமசை வெய்திநிற்குஞ்—சந்ததமு ம்
விட்டுதியா வின்பமே மேவிடுமா ணளடைவி ல்
விட்டொழியுஞ் சுட்டறிவு மேல். *

இ-ள். அந்தக்கரணம் - உட்கருவியாகிய மனமானது, அசையாது - (வாசனையால் விடயங்களைக் குறித்துச்) சலிக்காமல் அடங்கிடின் -- பிரஹ்ம சொரூபத்தி லொடுங்குமாயின், மற்று எந்தக்கரணம் அசைவு எய்திநிற்கும் - புறத்திலுள்ள வேறு எந்தக் கருவிகள் தந் தொழிலைச் செய்துநிற்கும் (யாதொன்றுந் தொழில் செய்யாது ஆனால் மனமடக்கிற் பயன் யாதெனிற் கூறுகின்றார்), சந்ததமும்-எந்நாளும், விட்டு உதியா இன்பமே - நீக்கமுந் தோற்றமுமில்லாத பிரஹ்மானந்தானுபவமே, மேவிடும் - அதிகரிக்கும், (இங்ஙனம் அதிகரிக்கவே), மேல் - பின்பு, நாள் அடைவில் - நாள் செல்லச்செல்ல, சுட்டு அறிவு விட்டு ஒழியும் - (முன்பு புறத்தில் இந்திரியங்களோடு கூடியறிந்த விடயச்) சுட்டுணர்வு நீங்கிவிடும். எ-று.

பொ-ரை. உட்கருவியாகிய மனமானது வாசனையால் விடயங்களைக் குறித்துச் சலிக்காமல் பிரஹ்ம சொரூபத்தி லொடுங்குமாயின் புறத்திலுள்ள வேறெந்தக் கருவிகள் தந்தொழிலைச் செய்துநிற்கும்? யாதொன்றுந் தொழில் செய்யாது. ஆனால் அங்ஙனம் மனம் அடங்கிற் பயன் யாதெனின் அதற்குக் கூறுகின்றார் எந்நாளும் நீக்கமுந் தோற்றமுமில்லாத பிரஹ்மானந்தானுபவமே அதிகரிக்கும். இங்ஙனம் அதிகரிக்கவே பின்பு நாள் செல்லச்செல்ல முன்புபுறத்தில் இந்திரியங்களோடு கூடியறிந்த விடயச் சுட்டுணர்வு நீங்கிவிடும். எ-று.

க-ரை. மனமடங்கப்பெற்றவர்க்குப் பிரஹ்மானந்தானுபூதியும் சட்டுணர்வின் நீக்கமுமுளவாம். எ-ம். (24)

[2]-வது நிலையியல் முற்றிற்று.

3—வது பயனியல்.

[வெண்பா.]

85. தேவ ருலகிற் சிறப்பான வின்சுக மு
மூவ ருலக முழுச்சுகமு—மேவினுந் தா
னென்னின்ப மாமோ விகழப் படுவவல்லாற் ற
றன்னின்பங் கண்டான் றனக்கு. *

இ-ள் தன் இன்பம்-தனது சொரூபமாகிய பிரஹ்மானந்தத்தை, கண்டான் தனக்கு - அநுபவித்தறிந்த ஜீவன் முத்தனுக்கு, தேவர் உலகில் - [இந்திரன் முதலாகிய] தேவர்கள் (வாசஞ்செய்கின்ற) பொன்னுலகத்தின்கண்ணுள்ள, சிறப்பான - (அரம்பைமாதர் அமிர்த முதலிய) மேன்மைபொருந்திய, இன்சுகமும் - இனிய சுகபோகவஸ்துக்களும், மூவர் உலக முழுச்சுகமும் - பிரஹ்மா முதலிய மும்மூர்த்திகள் வசிக்கின்ற பிரஹ்மலோக வைகுந்தலோக சிவலோகங்களிலிருக்கப் பட்ட சுகத்துக்குரிய எல்லாப்போகவஸ்துக்களும், மேவினும் - (வலியவந்து) சேர்ந்தாலும், என் - சீசீ இதென்னவென்று, இகழப்படுவ அல்லால் - இகழ்ந்து விலக்கப்படுவவேயல்லாமல், இன்பம் ஆமோ - [தன்னாலநுபவிக்கப்பட்ட] பிரஹ்மானந்தத்திற்குச் சமானமாமோ (ஆகாமிந்தையா யிருத்தலால்) எ-று.

பொ-ரை தனது சொரூபமாகிய பிரஹ்மானந்தத்தை அநுபவித்தறிந்த ஜீவன் முத்தனுக்கு இந்திரன் முதலிய தேவர்கள்

வசிக்கின்ற பொன்னுலகத்தின்கண்ணுள்ள அரம்பைமாதர் அமிர்த முதலிய மேன்மைபொருந்திய இனிமையாகிய சுகபோக வஸ்துக்களும்,பிரஹமாமுதலிய மும்மூர்த்திகள் வசிக்கின்ற பிரஹமலோக வைகுண்டலோக சிவலோகங்களிலுள்ள எல்லாச் சுகபோக வஸ்துக்களும் வலியவந்து சேர்ந்தாலும் சீசீ இஃதென்னையென்று இகழ்ந்து தள்ளப்படுவவேயல் லாமல் தன்னாலனுபவிக்கப்பட்ட பிரஹமானந்தத்திற்குச் சமானமாமோ ஆகாமித்தையாயிருத்தலால். எ-று.

சுகம் ஆகுபெயர். என் என்பது இகழ்ச்சிக்குறிப்பு.

இங்கே கூறியிருத்தல் போலவாசிட்டத்தில் "அங்குந் துறக்கத்தின்ப மனைத்து மறிவே னெந்தா யிங்கென் றங்கென் றில்லை யெங்குஞ் சுவர்க்க மெனக்குப், பொங்குஞ் சுகமே யெங்கும் பொன்னுடதனல் வேண்டேன்,றங்கும் பதமே வென்றே சற்றும் பற்றற்றறைப்ப" என்று ஞானியாகிய சிகித்து வசனூற்கூறப்பட்டிருத்தல் காண்க.

க-ரை. பிரஹமானந்தத்தை அநுபவித்த ஞானி விஷயானந்தத்தை விரும்பான். எ-ம். (1)

86\. நல்லவமு துண்டோன் முன்னுட்புசித்த தேனுமுப்பில்
புல்லரிசி யூண்பின் புசிப்பனோ—வெல்லையி லா
வானந்த மேவடிவ மானோ னதுவிகந்தி ங்
கேனோ விடய மெனும். *

இ-ள். நல்ல அமுது - இனிமையாகிய தேவாமிர்தத்தை, உண்டோன் - புசித்தவன், உப்பில் புல்லரிசி ஊண் - உப்பற்ற புல்லரிசிக் கூழ். முன் நாள் புசித்தேனும் - (அவ்வமிர்தம் புசித்தற்கு) முற்காலத்துப் புசித்ததாயிருப்பினும் (அதனை), பின் - (அவ்வமிர்தம்புசித்த) பிற்காலத்து, புசிப்பனோ - உண்ணவெண்ணு

வன்றோ [என்றான் அதுபோல], எல்லை இலா - [காலதேச வஸ்துக்களால்] அளவிறந்த, ஆனந்தமே வடிவம் ஆனோன் - பிரமானந்தமே தனது சொரூபமாகப் பெற்ற ஜீவன் முத்தன், அது இகந்து - அவ்வின்பத்தினின்றும் நீங்கி, இங்கு - ஜீவன் முத்தித் தசைக்கண், விடயம் என் எனும் - [துச்சமாகிய] விஷய சகத்தை எதற்காக நினைப்பான், [நினைக்கமாட்டான்.] எ—று.

பொ—ரை. இனிமையாகிய தேவாமிர்தத்தைப் புசித்தவன் உப்பற்ற புல்லரிசிக்கூழ் அவ்வமிர்தம் புசித்தற்கு முற்காலத்துப் புசித்ததாயிருப்பினும் அதனை அவ்வமிர்தம் புசித்த பிற்காலத் தின்னவெண்ணுவனோ என்றான். அதுபோலக் காலதேச வஸ்துக்களாலளவிறந்த பிரமானந்தமே தனது சொரூபமாகப் பெற்ற ஜீவன் முத்தன் அவ்வின்பத்தினின்றும் நீங்கி ஜீவன் முத்தித் தசைக்கண் துச்சமாகிய விஷய சகத்தை எதற்காக நினைப்பான் நினைக்கமாட்டான். எ—று.

க—ரை. ஜீவன் முத்தனுக்குப் பிரமானந்தானுபவ விருத்தியால் விடய சகத்தை நினைக்கான். எ—ம். (௨)

87. விக்ஷேபப் பேயோட்டி மேலவித்தை மண்களைந்து
நிக்ஷேப மாயதன்னை நீக்கமிலாப்—பக்ஷமுடன்
கண்டெடுத்த வன்றே கதிகேட்டை மாயதுக்க
மிண்டலாற் இன்பமாய் விடும்.

இ—ள். நிக்ஷேபமாய - [ஒருவன்] புதையலாகிய, தன்னை - தனது ஆன்ம சொரூபத்தை, விக்ஷேபப் பேயோட்டி - [அடைய வொட்டாமற் பிரதிபந்திக்கின்ற] விஷயக்காட்சியாகிய பிசாசைப் போக்கடித்து, மேல்மண் அவித்தைகளைந்து - [பின்னர் அதனை மறைத்திருக்கின்ற] மேற்புறத்து மண்ணாகிய அஞ்ஞானத்தைப் போக்கடித்து, நீக்கம் இலா — நீங்குதலில்லாத, பக்ஷமுடன் -

விருப்பத்தோடு, கண்டு எடுத்த அன்றே - அபரோக்ஷமாகச் சாக்ஷாத் கரித்த அப்பொழுதே, கடுவேட்கையாய துக்கம் - கொடிய இச்சையாலுளதாகிய துக்கமானது, விண்டு - ஒழிதலால், அளவில் இன்பு ஆய்விடும் - பரிபூரணாநந்த சொரூபமாவன். எ—று.

பொ—ரை. ஒருவன் புதையலாகிய தனது ஆன்ம சொரூபத்தை அடையவொட்டாமற் பிரதிபந்திக்கின்ற விஷயக்காட்சியாகிய பிசாசைப் போக்கடித்துப் பின்னர் அதனை மறைத்திருக்கின்ற மேற்புறத்து மண்ணாகிய அஞ்ஞானத்தை வேரறக்கடிந்து நீங்குதலில்லாத விருப்பத்தோடு அபரோக்ஷமாகச் சாக்ஷாத் கரித்தவப்பொழுதே கொடிய இச்சையாலுளதாகிய துக்கமானது ஒழிதலால் பரிபூரணாநந்த சொரூபமாவன். எ—று.

விண்டு என்பது செயவெனெச்சத்திரிபு.

இங்கே ஆன்ம சொரூபத்தைப் புதையலாக உருவகப்படுத்தியிருத்தல்போலப் பஞ்சதசி 1112வது சு-ல் "தேகவடிவ கல்லைப் பெயர்த்துப் புத்திவடிவகுந்தாலியினால் மனவடிவப் பூமியைப் பிளந்து புருஷனானவன் பிரத்தியக பின்ன பிரஹ்ம வடிவ நிதியாகிய தன்னையறிய வேண்டும்" எனக் கூறியிருப்பது காண்க.

க—ரை. ஆன்ம சாக்ஷாத்கார மடைந்தவன் பூரணாநந்த சொரூபமாவன். எ—ம். (3)

88\. கன்னலிர சம்பிரித்துக் கண்டபின்றோ எக்கோது க்
கென்னுறினுஞ் சற்று மிளையுமோ—தன் னி
லறிந்தபிறித் தோமினதனுக் காக்கையினுக் கே து
செறிந்தாலு மென்னஞ் செயும். *

இ—ள். கன்னல் - கரும்பினை, இரசம் - [உம்] பிரித்து - [அதன்கண் வியாபித்து மதுரவடிவமாயிருக்கின்ற] சாற்றினையும் [கருப்பு வடிவமாயுள்ள கோதினையும்] வேறு வேறு பிரித்து,

கண்டு - [அவற்றை முறையே பயனுடையதெனவும் பயனின்றிய தெனவும்] அறிந்து, அயின்றோன் - [அவற்றுட் பயனுடைய இரசத்தினைப்] பருகினவன், அக்கோதுக்கு - [பயனின்றிய] அச்சக்கைக்கு, என் உறினும் - கேடியாதடையினும். சற்றும் இனையுமோ - அற்பமாயினும் வருந்துவனோ [வருந்தான் அதுபோல], தன்னில் - தான் என்னும் பதத்தின் வாச்சியார்த்தத்தில், (சைதன்னியத்தோடு கூடிய சரீரத்தில்), அறிந்து - [பரிபூரணமாயும் சச்சிதானந்த வடிவமாயுமிருக்கின்ற ஆன்மாவே தானெனவும் பரிச்சின்னமும் அசத்து சடதுக்க வடிவமுமாயிருக்கின்ற தேகம் அந்நியமெனவும் உள்ளபடி] கண்டு, பிரிந்தோன் - [அந்நியமாகிய அச்சரீரத்தினின்றும்] வேறுபட்டிருக்கின்ற ஞானியானவன், ஆக்கையினுக்கு - [அசத்துசட துக்கவடிவமாகிய] அத்தேகத்துக்கு, ஏதுசெறிந்தாலும் - எவ்விதமாகிய தீங்குகள் வந்து பொருந்தினும், ஏதனுக்கு-என்ன காரியத்தின்பொருட்டு, எண்ணம்செயும்-கவலையடைவன் [அடையவேமாட்டான்]. எ—று.

பொ—ரை. கரும்பினை அதன்கண் வியாபித்த மதுரவடிவமாயிருக்கின்ற சாற்றினையுந், துரும்புவடிவமாயுள்ள கோதினையும் வேறுவேறு பிரித்து அவற்றை முறையே பயனுடையதெனவும் பயனின்றியதெனவும் அறிந்து அவற்றன் பயனுடைய இரசத்தினைப் பருகினவன் பயனின்றிய அச்சக்கைக்கு கேடியாதடையினும் அற்பமாயினும் வருந்துவனோ வருந்தான். அதுபோலத் தானென்னும் பதத்தின் வாச்சியார்த்தத்தில் பரிபூரணமாயுஞ் சச்சிதானந்த வடிவமாயுமிருக்கின்றஆன்மா தானெனவும், பரிச்சின்னமும் அசத்துசட துக்கவடிவமுமா யிருக்கின்ற தேகம் அந்நியமெனவும் உள்ளபடி கண்டு அந்நியமாகிய அச்சரீரத்தினின்றும் வேறுபட்டிருக்கின்ற ஞானியானவன் அசத்து சடதுக்க வடிவமாகிய அத்தேகத்துக்கு எவ்விதமாகிய தீங்குகள் வந்து பொருந்தினாலும் என்ன

காரியத்தின்பொருட்டுக் கவலையடைவன், அடையவேமாட்டான். எ—று.

இரசமும் என்பதின் எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது.

இதற்குதாரணம் பிரபுலிங்கலீலை "ஒன்ட ரைக்க ணுடிவி லருளருக், கொண்ட டுத்த குருவரு ளாற்றனைக், கண்ட மெய்த் தவன் காயந் தனையன, முண்ட செட்டிலை யொப்ப விடுப்பனால்," என்று கூறுதல் காண்க.

க—ரை. ஞானி தன் தேகத்துக்குளவாகும் தீங்குகளாற் கிலேசமடையான். எ—ம். (4)

89. பேசு மெதிரற் றகமசையாப் பேறே யான்ம தரிசனமா மாசில் விசும்பா மஃதாயின் மன்னும் பிரஹம தரிசனமா நேசித் திவற்று ளொன்றையொரு நிமிடம் பெறினுமஞ்ஞான நாச மடைந்து பராநந்த நயமே பயனு நண்ணுறுமால்.

இ—ள். பேசும் - [ஒருவனுக்குச்] சொல்லாநின்ற, அகம் - அந்தக்கரணமானது, எதிர்அற்று - [ஆன்மா நான்மாக்களாகிய எந்த வஸ்துக்களையும்] விஷயம் பண்ணுதலொழிந்து, அசையாப் பேறே - சலியாதிருக்கும் நிலையே, ஆன்மதரிசனம்ஆம் - ஆன்மானுபூதியாம். மாசில் - [விடயக்கவர்ச்சியாகிய] குற்றமில்லாத, அஃது - அவ்வந்தக்கரணம், விசும்பு ஆயின்-ஆகாயத்தைப்போல வியாபகமாயின், [அங்ஙனமாதல்], மன்னும் - நிலைபெற்ற, பிரஹம தரிசனம் ஆம் - பிரஹமானுபூதியாம், நேசித்து - விருப்பத்துடன், இவற்றுள் - இவ்விரண்டனுள், ஒன்றை - யாதாயினு மோரனுபூதியை, ஒரு நிமிடம் - ஒரு நிமிஷப்பொழுது, பெறினும் - அடைந்தால் [அவ்வடைவால்], அஞ்ஞானம் - அஞ்ஞானமானது, நாசம்

அடைந்து-அழிந்துபோக, பர ஆனந்தமயமே - மேலாகிய ஆனந்த சொரூப மோக்ஷமே, பயனு - பிரயோசனமாக, கண்ணுறும் - அடையப்படும். எ—று.

பொ—ரை. ஒருவனுக்குச் சொல்லாநின்ற அத்தக்காரணமானது ஆன்மாநான்மாக்களாகிய எந்த வஸ்துக்களையும் விஷயம் பண்ணுதலொழிந்து சலியாதிருக்கும் நிலையே ஆன்மானுபூதியாம். விடயக்கவர்ச்சி யென்னுங் குற்றமில்லாத அவ்வத்தக்காரணம் ஆகாயம்போல வியாபகமாயின் அஃது நிலைபெற்ற பிரமானுபூதியாம். விருப்பத்துடன் இவ்விரண்டனுள் யாதாயினுமோரனுபூதியை ஒரு நிமிஷப்போழ்தடைந்தாலும் அவ்வடைவால் அஞ்ஞானமழிந்து போக மேலாகிய ஆனந்த சொரூப மோக்ஷமே பிரயோசனமாக அடையப்படும். எ—று.

காசறவடைந்து என்பது செயவெனெச்சத்திரிபு.

மாசில் விசும்பா அஃது ஆயின் பிரமதரிசனம் ஆம் என்றதற்குதாரணம்.

## ஔவை குறள்.

"பரந்த விசும்பிற் பரந்த வொளி காணிற்
பரம்பரமே யாய வொளி"

என்று கூறியிருப்பது காண்க.

இங்கே ஆன்ம தரிசனமும் பிரம தரிசனமுமென இரண்டு நிலை கூறியிருத்தல்போல வாசிட்டத்தில் "மூவகை புவி வித்து வகங் கார மும்மை யென்று, மேவரு மிரண்டு நன்று மிகவுமோர் தீனமாகும், யாவதும் பரமு நாமே யீறில் மெய்ம்மை யாதோர், பாவனை யிலதன் றேறும் போதமே பரமாங் காரம்" எனவும், "சொற்றிரள் வாலினுஞ் சிற்றுயிர் செகங்களுக் கயலா யென்றும், ப்ரத்தியே கனக் கொள் போத மர்மையாங் காரமாகும், இன்னியல் விரன்

டுஞ் சீவன் முத்தர்பா லிருந் தீடேற்றித், தன்னரு முத்தி நல்குஞ் சுழலுறு பந்த நல்கா" எனவுங் கூறியிருத்தல் காண்க.

க—ரை. தத், துவம் பதார்த்தங்களின் லக்ஷியார்த்த அனுபூதியே அஞ்ஞான நாசத்திற் கேது. எ—ம். (5)

3-வது பயனியல் முற்றிற்று.

## 4—வது அடைந்தாரியல்.

[வெண்பா]

90. எண்ணம் பிரிவற் றிலங்காத் துமவடி வா
மண்ண னிலையை யடைந்தோர்க—டண்ணிம ய
மானிடரும் பார்த்து மகிழ மறைநெறியி ன்
மானிடர்கண் மன்ன நடப்பார். *

இ-ள். எண்ணம் - அந்தக்கரணமானது, பிரிவு அற்று - பிரஹமத்தினின்றும் பிரிதலொழிந்து, இலங்கு - விளங்காநின்ற, ஆத்தும வடிவு ஆம் - ஆன்ம சொரூபமாயிருக்கின்ற, அண்ணல் - பெருமை பொருந்திய, நிலையை - ஜீவன் முத்தியை, அடைந்தோர்கள் - பெற்றவர்கள், தண் - குளிர்ச்சிபொருந்திய, இமயமான் இடரும் - இமயபருவத ராசனுடைய புத்திரியாகிய பார்வதிதேவியை இடப்பாகத்திலுடையவராகிய சிவபெருமானும், பார்த்து மகிழ - கண்டுகளிப்பெய்தவும், மானிடர்கள் - மனிதர்கள், மறைநெறியில் - வேதமார்க்கத்தில், மன்ன - ஒழுகி நிற்கவும், நடப்பார்- சற்கருமோபாசனைகளைச் செய்வார். எ—று.

பொ—ரை. அந்தக்கரணமானது பிரஹமத்தினின்றும் பிரிந்தொழிந்து விளங்காநின்ற ஆன்ம சொரூபமாயிருக்கின்ற பெருமைபொருந்திய ஜீவன் முத்தியைப் பெற்றவர்கள் குளிர்ச்சிபொ

ருந்திய இமயபருவத ராஜனுடைய புத்திரியாகிய பார்வதி தேவியை இடப்பாகத்திலுடையவராகிய சிவபெருமானுங் கண்டு களிப்பெய்தவும், மனிதர்கள் வேத மார்க்கத்தி லொழுகி நிற்கவும் சற்கருமோபாசனைகளைச் செய்வார். எ—று.

க—ரை, ஜீவன் முத்தர்கள் செய்யும் கருமோபாசனைகள் பரோபகாரார்த்தமாம். எ—ம். (1)

91. செருப்புடையான் முட்காட்டிற் சென்றாலு நோவா
னிருப்பதுதா னுக்கா னியல்பான்—விருப்பினா
னெவ்விடய முண்டா னெனினுந் தொடர்படையா
னவ்வடிவ மாகாமை யால். *

இ—ள். செருப்பு உடையான் - பாதரக்ஷையைக் காலிற் பூண்ட விவேகியானவன், முள்காட்டில் - [துன்பத்தைக் கொடுக்கின்ற] முள் மிகுந்த வனத்தின்கண்ணே (பாதரக்ஷையுடனேதானுஞ் செருக்குப்பற்றிச் செல்வான்), சென்றாலும் - (அவ்வனமே மார்க்கமாயிருக்குமாயின் அங்குச்) சென்றானாயினும், நோவான் - அதனால் துக்கமடைய மாட்டான். (அதுபோல), இருப்பது தானுக்கான் இயல்பான் - எவ்விடத்தும் பரிபூரணமாயிருக்கின்றது பிரமமாகிய தனது சொரூப மென்று அறியுஞ் சுபாவமுடைய ஜீவன் முத்தன், (ஞானியாகிய தனக்கு விஷயங்களாற் கேடின்றென்னுங் கர்வத்தால் இழிவைக்கொடுக்கின்ற நிஷித்த விஷயங்களிற் பிரவிர்த்தியான்), விருப்பினான் - (பிராரத்தவசியால்) ஆசையுடையவனாய், எவ்விடயம் உண்டான் எனினும் - (விகித விஷயங்களுள்) எந்த விஷயத்தைப் புசித்தானாயினும், தொடர்பு அடையான் - (அவ்விடயானுபவத்தால்) பந்தமடையான், (ஏனெனில்), அவ்வடிவம் ஆகாமையால் — அவ்விஷயாகாரங்களை யடையாததில். எ—று.

பொ—ரை. பாதரக்ஷையைக் காலிற் பூண்ட விவேகியானவன் துன்பத்தைக் கொடுக்கின்ற முள்மிகுந்த வனத்தின்கண்ணே பாதரக்ஷையுளதென்னுஞ் செருக்குப்பற்றிச் செல்லான். அவ்வனமே மார்க்கமாயிருக்குமாயின் அங்குச் சென்றானாயினும் அதனால் துக்கமடையமாட்டான். அதுபோல எவ்விடத்தும் பரிபூரணமாயிருக்கிறது பிரஹ்மமாகிய தனது சொரூபமென்றறியும் சுபாவமுடைய ஜீவன் முத்தன் ஞானியாகிய தனக்கு விஷயங்களாற் கேடின்றென்னுங் கர்வத்தால் இழிவைக் கொடுக்கின்ற நிஷித்த விஷயங்களிற் பிரவிர்த்தியான். பிராரத்த வலியால் ஆசையுடையவனாய் விகித விஷயங்களுள் யாதொரு விஷயத்தைப் புசித்தானாயினும் அவ்விஷயானுபவத்தாற் பந்தமடையான். எதனாலெனில்? தான் அவ்விஷயாகாரங்களை யடையாததினால். எ—று.

க—ரை. ஞானி விஷயங்களை அருந்தினும் அவற்றாற் பந்தமுறான். எ—ம். (2)

92. அண்ட மணுவாக வகண்டமா யற்பவ ணு
வண்டமே யாக வணுவாகி—யுண்டெனி லே
யெவ்விடத்தி லான்மா விராதொழியு மீதா று
ரெவ்விடம்விட் டெங்கேகு வார். *

இ—ள். அண்டம் - (வியாபகமாயுள்ள) பிரஹ்மாண்டங்களும், அணு ஆக-(தன்னை நோக்கப்) பரமாணுவென்று கூறுமாறு, அகண்டம் ஆய்- (அப்பிரஹ்மாண்டங்களெல்லாம் தன்னுள்ளடங்க அவற்றிற்கப்பாலும் எல்லையற்ற வியாபகமாயிருத்தலின்) ஏகமாய், அற்ப அணு - மிக நுட்பமாகிய பரமாணுவும், அண்டம் ஆக- பிரஹ்மாண்டமாகக் கூறுமாறு; அணு ஆகி - அப்பரமாணுவுக்குள்ளும் பரமாணுவாய், ஆன்மா உண்டெனில் - ஆன்மா இருக்கிறதென்று (கருதி) கூறுவானாய், எவ்விடத்தில் இராது ஒழியும் - அஃது எவ்விடத்தி லில்லாமற்போம் (எவ்விடத்தும் நீக்கமற நிறைந்தே

இருக்கும்] ஈது ஆனோர் - இத்தன்மையாயுள்ள ஆன்ம சொருபமா யிருக்கின்ற ஞானிகள், எவ்விடம் விட்டு எங்கு எகுவார் - எவ்வி டத்தைவிட்டு எவ்விடத்தையடைவார், [தன்னிற் கற்பிக்கப்பட்ட அத்தேச காலங்கட்கு அதிஷ்டானமாயிருக்கின்ற அசலராதலின் விடுதலும் அடைதலும் இலர்]: எ—று.

பொ—ரை. வியாபகமாகிய பிரஹுமாண்டங்களும் தன்னை நோக்கப் பரமாணுவென்று கூறுமாறு அப்பிரஹுமாண்டங்களெல் லாம் தன்னுள்ளடங்க அவற்றிற்கப்பாலும் எல்லையற்ற வியாபக மாயிருத்தலின் ஏகமாய் மிகவும் நுட்பமாகிய பரமாணுவும் பிரஹு மாண்டமாகக்கூறுமாறு அப்பரமாணுவுக்குள்ளும் பரமாணுவாய் ஆன்மாவிருக்கிறதென்று சுருதி கூறுமானால் அவ்வான்மா எந்த விடத்திலில்லாமற்போம்? எவ்விடத்தும் நீக்கமற நிறைந்தேயிருக் கும். இத்தன்மையாயுள்ள ஆன்மசொருபமாயிருக்கின்ற ஞானிகள் எந்தவிடத்தைவிட்டு எந்தவிடத்தையடைவார். தன்னிற் கற்பிக் கப்பட்ட அத்தேச காலங்கட்கு அதிட்டானமாயிருக்கின்ற அசல ராதலின் விடுதலும் அடைதலும் இலர். எ—று.

இங்கே "ஆத்துமா அணுவுக்கணுவும் மகத்துக்கு மகத்தும்" என்று கூறியிருத்தல்போல திருவிளையாடல் "அண்டங்க ளெல்லா மணுவாக வணுக்களெல்லா, மண்டங் களாகப் பெரிதாய்ச் சிறி தாயினானு, மண்டங்க ளுள்ளும் புறம்புங் கரியாயினானும்," என்று கூறியிருத்தல் காண்க.

க—ரை. ஜீவன் முத்தர்கள் எங்கும் நிறைந்திருக்கின்ற பரி பூரண சொருபமுடையவர். எ—ம். (3)

(விருத்தம்)

93. காணற் கரிய வொருமணியைக் கண்டோ ரெடுத்துப் பணியாக்கிப், பேணி யணிந்து மகிழ்ந்ததனாற் பெற

வான்புகழ் படவன் போலெண், சாணிற் றிகழுங் கோச
மைந்துந் தவிர்த்தான் மாவைத் தரிசித்தோ, னுற்
றதுவா யின்பினனு யெவரும் விரும்ப வியங்குவனுல். *

இ—ள். காணற்கு அரிய - (யாவராலும்) அறிதற்கரிதாகிய, ஒரு மணியை - ஓரிரத்தினத்தை, கண்டோன் - (ஓரிடத்திற்கிடக்கப்) பார்த்தவன், எடுத்து - (அதனை) எடுத்து, பணி ஆக்கி - ஆபரணமாகச் செய்து, பேணி - விரும்பி, அணிந்து - தரித்து, அதனுல் மகிழ்ந்து - அவ்விரத்தினுபரணத்தைத் தரித்தலால் சந்தோஷமுடையவனுய், புகழும் பெறுவான் - (தான் மகிழ்ச்சியடைதலோடு விவேகிகளாலிசைக்குங்) கீர்த்தியையுமடைவான், அவன் போல் - அவனைப்போல, எண்சாணில் - எட்டுச்சாணளவிலுள்ள சரீரத்தில், திகழும் - விளங்காநின்ற, கோசம் ஐந்தும் - (அன்னமயம் பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் ஆனந்தமயமென்னும்) கோசங்களைந்தினையும், தவிர்த்து - (யானல்ல என்னுடையனவல்லவென்று அவற்றிற்குரிய குணங்களோடு கூட வறிந்து) நீக்கி, ஆன்மாவை - (பின்புமிஞ்சியிருக்கும்) ஆத்துமாவை, தரிசித்தோன் - (தானுகக்) கண்டவன், ஏன் உற்று - நித்தியத்துவத்தையடைந்து, அதுவாய் - அவ்வான்மாவேதானுய், இன்பினனுய் - நித்தியானந்த முடையவனுய், எவரும் விரும்ப - (தன்னைக்கண்டவர்) யாவரும் விருப்பம் கொள்ளும்படி, இயங்குவன் - சஞ்சரிப்பான். எ—று.

பொழி. யாவராலும் அறிதற்கரிதாகிய ஓரிரத்தினத்தை ஓரிடத்திற் கிடக்கப்பார்த்தவன் அதனையெடுத்து ஆபரணமாகச் செய்து விரும்பித்தரித்து அவ்விரத்தினுபரணத்தைத் தரித்தலால் சந்தோஷமுடையவனுய்த் தான் மகிழ்ச்சியடைதலோடு விவேகிகளாலிசைக்குங் கீர்த்தியையுமடைவான். அவனைப்போல எட்டுச் சாணளவிலுள்ள சரீரத்தின்கண் விளங்காநின்ற அன்னமயம், பிரா

ணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயமென்னுங் கோசங்களைந்தினையும் யானல்ல என்னுடையவுமல்லவென்று அவற்றிற்குரிய குணங்களோடுகூட வறிந்து நீக்கிப் பின்பு மிஞ்சியிருக்கும் ஆத்துமாவைத் தானாகக் கண்டவன் நித்தியத்துவத்தை யடைந்து அவ்வான்மாவே தானாய் நித்தியானந்த முடையவனாய்த் தன்னைக் கண்டவர் யாவரும் விருப்பங்கொள்ளும்படி சஞ்சரிப்பான். எ—று.

என் சான் என்பது ஆகுபெயர்.

க—ரை. ஞானி பரமானந்தமுடையவனாய் எல்லாராலும் விரும்பப்படுவான். எ—ம். (4)

94. ஞான மடைந்தோன் விலக்குவழி நடவா னடக்கின் மல மருந்தூ, மேனந் தனக்கு மிவனிழிவா மெண்ணி யாய்ந்து பார்த்திடினே, யீன மறுபூ சுரச்சேய்பித் தியைந்த கொடிய வைணவன்போ, லாறு விராக சித்தி யிறு ளுடையான் றோட மற்பமுமே. *

இ-ள். ஞானம் அடைந்தோன் - [பிரமாத்ம ஐக்கிய] ஞானத்தைப்பெற்ற ஜீவன் முத்தன், விலக்குவழி - (வேதங்களில்) விதிக்கப்படாத மார்க்கத்தில், நடவான் - செல்லான், நடக்கின் - சென்றால், மலம் அருந்தும் - மலத்தை யுண்ணுகின்ற, ஏனம் தனக்கும் - (ஊர்ப்) பன்றிக்கும், இவன் இழிவு ஆம் - இக்கூடா வொழுக்கமுடையவன் கீழாவான், எண்ணி - (அச்சீவன் முத்தனைக்) குறித்து, ஆய்ந்து - ஆராய்ந்து, பார்த்திடின் - அறியின், ஈனம் அறு - இழிவில்லாத, பூசுரச்சேய் - பிராமணச் சிறுவனும், பித்து இயைந்த - பைத்தியம் பிடித்த, கொடிய வைணவன் - வீர வைஷ்ணவனும், போல் - (முறையே வருணாசார சமயாசாரங்களினின்றும் வழுவாதது)போல, ஆறு - நீங்காத, விராகசித்தியிலுள்-

வைராக்கிய பலத்தால், அற்பமும் - கொஞ்சமேனும், தோடம் - குற்றத்தை, அடையான் - பொருந்தமாட்டான். எ—று.

பொ—ரை. பிரஹ்மான்ம ஐக்கிய ஞானத்தைப் பெற்ற ஜீவன் முத்தன் வேதங்களில் விதிக்கப்படாத மார்க்கத்திற் செல்வான். சென்றால் மலத்தையுண்ணுகின்ற ஊர்ப்பன்றிக்கும் இக்கூடாவொழுக்கமுடையவன் கீழாவன். அச்சீவன் முத்தனைக் குறித்து ஆராய்ந்தறியின், இழிவில்லாத பிராமணச்சிறுவனும், பைத்தியம்பிடித்த வீர வைஷ்ணவனும், முறையே வருணாசார சமயாசாரங்களினின்றும் வழுவாததுபோல நீங்காத வைராக்கிய பலத்தால், கொஞ்சமேனுங் குற்றத்தைப் பொருந்தமாட்டான். எ—று.

ஞானிவிலக்கு வழிநடவான் என்றதால் விலக்கு வழி நடப்பவன் ஞானி அன்றெனஅறிக.

க—ரை. ஜீவன் முத்தன் வைராக்கிய பலமுடையவனாதலால் நிஷித்த விஷயங்களிற் பிரவிர்த்தியான். எ—ம். (5)

95. சில்லோர்க் கரிய புண்ணியமுஞ் சில்லோர்க் கரும்பா வமு
ஞான, நல்லோ னளிக்கி னவன்சமமா நாட்ட மிலனே
யெனவேண்டாஞ், சொல்லே விதைத்தோன் சொல்
லடைவுஞ் சொனுமற் றென்றே லத்தடைவும், புல்லி
விதைத்தோன் செயலோவப் புலத்தின் செயலோ புகலு
மினே. *

இ—ள். சில்லோர்க்கு-[தன்னை நேசித்துப் பூசித்து வணங்குகின்ற] சில விவேகிகளுக்கு, அரிய புண்ணியமும் - [பிறரால் அடைதற்கு] அருமையாகிய புண்ணியத்தையும், சில்லோர்க்கு - [தன்னையிகழ்ந்து துன்புறுத்துகின்ற] சில அவிவேகிகளுக்கு, அரும் பாவமும் - [நீக்குதற்கு] அருமையாகிய பாவத்தையும், ஞானநல்

லோன் - பிரஹ்மஞானத்தையுடைய ஜீவன் முத்தன், அளிக்கின்-கொடுப்பானாயின், அவன் - அந்த ஜீவன்முத்தன், சமம் ஆம் காட்டம் - (விவேகி அவிவேகியாகிய யாவரையும்) ஒரு தன்மையாகப் பார்க்குந் திருஷ்டி, இலன் என வேண்டாம் - இல்லாதவனென்று சொல்லவேண்டாம், சொல்விதைத்தோன் - (ஓர் நிலத்தில்) நெல்லினை விதைத்தவன், சொல் (ஏ) அடைவும் - நெல்லினையே பெறுதலும், சொல்லும் - பேசாநின்ற, மற்று ஒன்றேல் - மற்றோர் தானியத்தை விதைத்திடின், அஃது அடைவும் - அந்தத் தானியத்தைப் பெறுதலும், புல்லி - அந்த நிலத்திற் சென்று, விதைத்தோன் செயலோ - விதைத்தவனுடைய செய்கையோ, அப்புலத்தின் செயலோ - அந்த நிலத்தினுடைய செய்கையோ, புகலுமின்-(உலகத்தவரே) சொல்லுங்கள். எ—று.

பொ—ரை. தன்னை நேசித்துப் பூசித்து வணங்குகின்ற சில விவேகிகளுக்குப் பிறராலடைதற் கருமையாகிய புண்ணியத்தையும், தன்னை யிகழ்ந்து வருத்துகின்ற சில அவிவேகிகளுக்கு நீக்குதற்கருமையாகிய பாவத்தையும் பிரஹ்ம ஞானத்தையுடைய ஜீவன் முத்தன் கொடுப்பானாயின், அந்த ஜீவன் முத்தன் விவேகி அவிவேகியாகிய யாவரையும் ஒரு தன்மையாகப் பார்க்குந் திருஷ்டி இல்லாதவனென்று சொல்லவேண்டாம். ஓர் நிலத்தில் நெல்லினை விதைத்தவன் அந்த நெல்லினையே பெறுதலும், பேசாநின்ற மற்றோர் தானியத்தை விதைத்திடின் அந்தத் தானியத்தைப் பெறுதலும் அந்த நிலத்திற் சென்று விதைத்தவனுடைய செய்கையோ, அந்த நிலத்தினுடைய செய்கையோ, உலகத்தவரே சொல்லுங்கள். எ—று.

சொல்லே என்பதிலுள்ள தேற்றேகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது.

நெல் விதைத்தோன் நெல்லையடைதலும் வேறொன்றை

விதைத்தோன் அவ்வேறொன்றை யடைதலும் எங்ஙனம் விதைத்தவன் செயலோ அங்ஙனம் ஞானியினிடத்து வணக்கமுதலியவற்றைச் செய்தவன் அவற்றின் பயனாகிய புண்ணியத்தையும், நிந்தை முதலியவற்றைச் செய்தவன் அவற்றின் பயனாகிய பாவத்தையும் அடைதல் அவ்வணக்கமாதி நிந்தையாதிகளைச் செய்தவர் செயலேயாமென்பதும், நிலம் தன்னிடத்து எந்த எந்த வித்தினை யார்யார் விதைக்கின்றனரோ அவ்வவர் செயலுக்கேற்ப அவ்வத் தானியங்களைக் கொடுத்தல்போல, ஞானியுந் தன்னிடத்து எவ்வெச்செயல்களை யார் யார் செய்கின்றனரோ அவ்வவருக்கு அவ்வச் செயலின் பயனைக் கொடுத்தலால் நிலம் போன்ற அவனிடத்து விஷமதிருட்டியின்றென்பதுங் கண்டு கொள்க.

க—ரை. ஜீவன் முத்தன் எல்லாரிடத்துஞ் சம திருஷ்டியுடையவனாவன். எ—ம். (ப)

96. அண்டோர் விடய மாதரவிற் புசித்தா னேனு மதிலழுந்
தான், றண்டா மரையி னிலைநீரிற் சாரா வியல்போல்
வேறாகக், கண்டே யிருந்து தனதுநிலை கழலான் ஞானி
யவன் கருணைக், கண்டான் படுமிக் கிழிஞருமெய்க் கதி
யே யுறையினடைகுவரே. *

இ—ள். அண்டு ஓர் விடயம் - [பிராரத்தவலியாற்] கிட்டுகின்ற ஒரு விஷயத்தை, ஆதரவில் - விருப்பத்துடன், புசித்தானேனும் - அநுபவித்தானாயினும், அதில் - அவ்விஷயத்தில், அழுந்தான் - [அஞ்ஞானிகளைப்போல அந்தக்கரணத்தில் வாசனையேறுமாறு] மூழ்கமாட்டான், தண் - குளிர்ச்சிபொருந்திய, தாமரையின் இலை - தாமரையினது இலையானது, நீரில் - ஜலத்தினிடத்து, சாரா இயல்போல் - சம்பந்தியாததன்மைபோல, வேறாகக்கண்டு இருந்து - [அனுபவிக்கப்படும் விஷயத்தினைத் தனக்கு] அயலாகப் பார்த்து [த்தான் நிருவிகாரசாக்ஷியா] யிருந்து, ஞானி - ஜீவன்

முத்தன், தனது நிலை - தன்னுடைய சுபாவ நிலையினின்றும், கழ லான் - நீங்கான், அவன் - அந்த ஜீவன் முத்தனுடைய, கருணைக் கண்படும் - கிருபா நோக்கத்திற் கெதிர்ப்படும், மிக்க இழிஞரும் - கொடிய சண்டாளரும், முறையின் - [சித்த சுத்தியடைந்து] பூமிக்கிரமமாக, மெய்க்கதியே - உண்மையாகிய மோக்ஷத்தையே, அடைகுவர் - பெறுவார். எ—று.

பொ-ரை. பிராரத்தவலியாற் கிட்டுகின்ற ஒரு விஷயத்தை விருப்பத்துடன் அநுபவித்தானாயினும், அவ்விஷயத்தில் அஞ்ஞானிகளைப்போல அந்தக்கரணத்தில் வாசனையேறுமாறு மூழ்க மாட்டான். குளிர்ச்சி பொருந்திய தாமரையினுடைய இலையானது ஜலத்தினிடத்துச் சம்பந்தியாத தன்மைபோல அநுபவிக்கப் படும் விஷயத்தினைத் தனக்கு அயலாகப் பார்த்துத் தான் நிருவிகார சாக்ஷியாயிருந்து ஜீவன் முத்தன் தனது சுபாவ நிலையினின்றும் நீங்கான். அந்த ஜீவன் முத்தனுடைய கிருபாநோக்கத்திற் கெதிர்ப்படும் கொடிய சண்டாளருஞ் சித்த சுத்தியடைந்து பூமிக் கிரமமாக உண்மையாகிய மோக்ஷத்தையே பெறுவார். எ—று.

மிக்க என்பதின் அகரங்குறைந்து நின்றது.

செ-ள் "அண்டோர் விடயம்"

இங்கே "ஆதரவிற் புசித்தா னேனுமதிலழுந்தான்" என்று கூறியதற்கு உ-ம். கைவல்லியம் "காமமாதிகள் வந்தாலுங் கணத்திற் போமனத்திற் பற்றார், தாமரையிலைத் தண்ணீர் போற் சகத்தொடுங்கூடி வாழ்வார்" என்று கூறியிருத்தல் காண்க.

"ஞானிகண் படுமிக்கிழிஞரு மெய்க்கதியடைவர்" என்பதற்கு உ-ம்.

சசி வன்ன போதம் "புணர்ந்த பாவ மெலாம் பரிபூரண முணர்ந்த ஞானி விழிபட வோடுமே" என்று கூறியிருத்தல்

கூங்க.

க-ரை. ஞானியினது கிருபாதிருஷ்டியின் மகிமையைப் புகழ்ந்தது. எ-ம். (7)

97. சேற்றிற் றூளி படிந்தழுந்து திறம்போ லஞ்ஞன் சித்த மெதிர், தோற்றும் விடயங் களிலழுந்திச் சுகிக்க மயங் கும் ஞானியுளம், பாற்றி னிழலே நிகராகப் படிந்தும் படியா ததுவாகி, யேற்றத் தாழ்வு கருதாம லெங்குஞ் சமமா யியங்கிடுமால்.

இ-ள். சேற்றில் - சேற்றினிடத்தில், தூளிபடிந்து - புழுதி யானது சேர்ந்து, அழுந்துதிறம்போல் - [அச்சேற்று வடிவமாக அதில்] மூழ்குந்தன்மைபோல, அஞ்ஞன் சித்தம் - அஞ்ஞானியி னுடைய மனம், எதிர் தோற்றும் விடயங்களில் - தனக்கு நேர்ப டுகின்ற சத்தாதி விஷயங்களில், அழுந்தி - மூழ்கி, சுகிக்க - அவற் றைய நுபவித்தற்கு, மயங்கும்- மோகமடையும், ஞானி உளம் - ஞானியினுடைய மனமானது, [அவ்வாறின்றி], பாற்றின் நிழல் நிகர் ஆக - பருந்தினுடைய நிழலுக்கொப்பாக, படிந்தும் படியாத து ஆகி - பொருந்தினும் பொருந்தாததாய், எற்றம் தாழ்வு கருதா மல் - அவற்றின் உயர்வு தாழ்வுகளை எண்ணுமல், எங்கும் - எவ்வி டயத்தும், சமம் ஆய் - ஒரே விதமாக, இயங்கிடும் - சஞ்சரிக்கும். எ—று.

பொ-ரை. சேற்றினிடத்திற் புழுதியானது சேர்ந்து அச் சேற்று வடிவமாக அதில் மூழ்குந்தன்மைபோல, அஞ்ஞானியினு டைய மனமானது தனக்கு நேர்படுகின்ற சத்தாதி விஷயங்களில் மூழ்கி அவற்றையநுபவித்தற்கு மோகிக்கும். ஞானியினுடைய ம னமானது அவ்வாறின்றிப் பருந்தினுடைய நிழலுக்கொப்பாகப் பொருந்தினும் பொருந்தாததாய் அவற்றின் உயர்வு தாழ்வுகளை

என்னுமல் எவ்விடயத்தும் ஒரே விதமாகச் சஞ்சரிக்கும். எ-று.

பருந்தினது நிழலானது சுத்த நிலத்தில் இது நல்லதென்னும் புத்தியால் பரிசித்து விரும்பி நிற்றலும், அசுத்த நிலத்தில் இது தீயதென்னும் புத்தியால் பரிசிக்காமல் வெறுத்து நீங்குதலுமாகிய பேதச்செயலின்றி எவ்விடத்தும் ஒரே விதமாகப் பரிசித்துச் செல்லுதல் போல, ஞானியின் அந்தக்கரண விருத்தியானது தனக்கு எதிர்ப்படுகின்ற சத்தாதி விஷயங்களுள் ஒன்றை இது நல்லதென்று விரும்பி அவ்விடயமாய் அழுந்தி நிற்றலும், ஒன்றை இது தீயதென்று வெறுத்து நீங்குதலுமாகிய பேதச் செயலின்றிச் சர்வ விடயங்களிலுமுள்ள நாமரூபபேதங்களைக் கருதாது விடுத்து, அவற்றிற் கதிட்டானமாயுள்ள சச்சிதானந்த வடிவ ஒரு பரம்பொருளையே கண்டு செல்லுமென்பார் "பார்த்தி னிழலே நிகராகப் படிந்தும் படியாததுவாகி,வர்ரக்காழ்வு கருதாம லெங்குஞ் சமமாயியங்கும்" என்று கூறினர்.

க—ரை. விடயங்களை அஞ்ஞானியினுடைய மனம் விருப்பு வெறுப்புற்றுக் காணும். ஞானியினுடைய மனம் ஒரே விதமாகக் காணும். எ—ம். (8)

98. கூத்தில் வேட மின்பதுன்பங் குறிப்போ னவ்வவ் வியல்
படைவான், கூத்தன் றனைவே றறிந்தோனைக் குறிப்
பாற் றனது நிலையழியா, ஞர்த்த வுடற்புந் தியனைதற்
கேப் துன்பா திகளா லழுங்குவன்மெய், பார்த்தா
னங்க ளுகாது பரம சாந்த னுகுவனே. *

இ—ள். கூத்தில்-[ முன்னடந்த ஒரு சரித்திரத்தைக் காட்டுவதாகிய] நாடகத்தில், வேடம் - [ஒருநடன் அச்சரித்திரத்திற் கூறியமற்றொருவனைப் போலக் கொண்ட] கோலத்தையும், இன்பம் துன்பம் - [அக்கோலத்திற்கியைய அவ்விடத்து அந்நடன்

மித்தையாயடையுஞ்] சுகதுக்கங்களையுங் [கண்டு], குறிப்போன்
[முறையே அவற்றை அந்நடனது சொரூபமென்றும் அவனது
சுபாவ அநுபவமென்றும்] கருதுவோன், அவ்வவ்வியல்பு அடை
வான்-[அவனடையுஞ் சுகதுக்கங்களைக் கண்டு அவ்வக்காலத்துத்தா
னும்] அச்சுகதுக்கங்களை யடையான், கூத்தன் தனை வேறு அறிந்
தோன் - [வேட முதலியவை கூத்திற்குரிய மித்தைகளென்றும்
இந்த மித்தியா வேட முதலியவற்றினும்] நடன் வேறென்றுங்
கண்டவன், அக்குறிப்பால் - [மித்தையாகிய வேட முதலியவற்றி
னும்] வேடதாரி வேறு என்னும் எண்ணத்தால், தனது நிலை
அழியான் - தன்னுடைய சுபாவத்தினின்றும் வேறு பட்டு அவன
டையுஞ் சுகாதிகளைத் தானடையான். [அத்திருட்டாந்தம்போல],
ஆர்த்த உடல்புந்தியன் - தன்னைப் பந்தித்திருக்கின்ற தேகமே
தானென்னும் புத்தியையுடையவன், அதற்கு எய் துன்பு ஆதிக
ளால் - [பிராரத்தகன்மப்படி] அத்தேகத்துக்கு வந்து பொருந்து
கின்ற துக்க முதலியவைகளால், அழுங்குவன் - வருந்துவன், மெய்
பார்த்தோன் - உண்மையாகிய தனது ஆன்ம சொரூபத்தைத் தரி
சித்தவன், அங்ஙன் ஆகாது - அவ்வாறு வருந்தாமல், பரமசாந்தன்
ஆகுவன் - மேலாகிய உபசாந்தியையுடையவனுவன். எ—று.

பொ—ரை. முன்னடந்த ஒருசரித்திரத்தைக் காட்டுவதாகிய
நாடகத்தில் ஒரு நடன் அச்சரித்திரத்திற்கூறிய மற்றொருவனைப்
போலக்கொண்ட கோலத்தையும், அக்கோலத்திற்கியைய அவ்வி
டத்து அந்நடன் மித்தையாயடையுஞ் சுக துக்கங்களையுங் கண்டு
முறையே அவற்றை அந்நடனது சொரூபமென்றும், அவனது
சுபாவ அநுபவமென்றும் கருதுவோன், அவனடையுஞ் சுகதுக்கங்
களைக் கண்டு அவ்வக்காலத்துத்தானும் அச்சுகதுக்கங்களை யடை
வான். வேட முதலியவை நாடகத்திற்குரிய மித்தைகளென்றும்,
இந்த மித்தையாகிய வேட முதலியவற்றினும் அந்நடன் வேறென்
றுங் கண்டவன் மித்தையாகிய வேட முதலியவற்றினும் வேடதாரி

வேறென்னு மெண்ணத்தால் தன்னுடைய சுபாவத்தினின் றும் வேறுபட்டு அவனடையுஞ் சுகாதிகளைத் தானடையான். அத்திருஷ்டார்த்தம்போலத் தன்னைப் பந்தித்திருக்கின்ற தேகமேதானென்னும் புத்தியையுடையவன் பிராரத்த கன்மப்படி அத்தேகத்துக்கு வந்து பொருந்துகின்ற துக்க முதலானவைகளால் வருந்துவன். உண்மையாகிய தனது ஆன்ம சொரூபத்தைத் தரிசித்தவன் அவ்வாறு வருந்தாமல் மேலாகிய உபசாந்தியை யுடையவனுவன்.எ-று.

க—ரை. தேகத்துக்கு வருந்துன்பத்தால் அஞ்ஞானி வருந்துவன் ஞானி வருந்தான். எ—ம். (9)

(4)வது அடைந்தாரியல் முற்றிற்று.

## [5]–வது பொய்வேட வொழிபியல்.

[கட்டளைக் கலித்துறை.]

99. விடயமன் னுதகண் டாகாரந் தன்னில் விருத்திநிலைத்
திடையற் றிருப்பது வோநுதன் மேல்விழி யேற்றிநிக்கத்
திடவா சனத்துற் றுடறறி போனிற்கத் தியமனத்
துடனே யுழல்வது வோநிட்டை கூறுமி னூமர்களே. *

இ—ள். ஊமர்களே - ஊமைகளே, நிட்டை - ஞான நிட்டையெனப்படுவது, விருத்தி - அந்தக்கரண விருத்தியானது, விடயம் மன்னுதது - யாதொரு விஷயாகார [வடிவ]ங்களையுந் தரிக்காமல், அகண்ட ஆகாரம் தன்னில் - பிரஹ்மமாகிய ஒரே சொரூபத்தில், நிலைத்து - நிலைபெற்று, இடை அற்று - மத்தியில் இலய முதலிய பிரதி பந்தங்களின்றி, இருப்பதுவோ - நிற்பதோ, (அல்லது), நுதல்மேல் விழி ஏற்றி - புருவத்தின் மீது கண்ணை ஏறச்

செய்து, நித்தம் - அனுதினமும், திட ஆசனத்து உற்று - (தியானத்திற்கு) உறுதியைத்தருகின்ற (பதும முதலிய) ஆதனத்தைப் பொருந்தி, உடல் தறிபோல் நிற்க - சரீரமானது தூணைப்போல் அசைவற்றிருக்க, தீய மனத்துடனே - கேட்டைத்தருகின்ற ஆசை பொருந்திய மனதோடு, உழல்வதுவோ - விடயங்களிற் சுழல்வதோ, கூறுமின் சொல்லுங்கள். எ—று.

பொ—ரை. ஊமைகளே, ஞான நிட்டையெனப் படுவது அந்தக்கரண விருத்தியானது யாதொரு விஷயாகாரங்களையுந் தரிக்காமல் பிரஹமமாகிய ஒரே சொரூபத்தில் நிலை பெற்று மத்தியில் இலய முதலிய பிரதிபந்தங்களின்றி நிற்பதோ அல்லது புருவத்தின்மீது கண்ணை யோரச் செய்து அனுதினமுந் தியானத்திற் குறுதியைத் தருகின்ற பதும முதலிய ஆதனத்தைப் பொருந்திச் சரீரமானது தூணைப்போலசைவற்றிருக்கக் கேட்டைத் தருகின்ற ஆசை பொருந்திய மனதோடு விஷயங்களிற் சுழல்வதோ? சொல்லுங்கள். எ—று.

க—ரை. ஞான நிட்டையின்றி அஃதுடையார் போலத் தம்மைக் காட்டுவார்க்கு அங்ஙனங் காட்டற்கவென்று அறிவுறுத்தியது. எ—ம். (1)

**100.** படிப்பார் சிவாலயஞ் சென்றருட் பாக்கள் பகலிரவி
லிடிப்பா ரதுகன்னக் கோலாற்பட் டாடை யிடையிலங்க
நடிப்பா ருயர்ந்தசை வாசாரியரி னகர்ப்புறம்போய்க்
குடிப்பார்கட் சுன்றேன் டிவரே நரகக் குடிமனரே. *

இ—ள். பகல் - பகற்காலத்தில், சிவாலயம்சென்று - தேவாலயத்திலே போய், அருள்பாக்கள் - அருள் நிறைந்த (தேவார திருவாசக முதலிய)பாட்டுக்களை, படிப்பார் -பாடுவார்கள், இரவில்- இராத்திரியில், அது - அத்தேவாலயத் திருமதிலில், கன்னக்

சோலால் - கன்னமிடுக் கருவியினாலே, இடிப்பார் - [அதிலுள்ள தேவத் திரவியங்களைக் கவரும் பொருட்டு உள்ளே நுழைதற்குத்] துவாரமிடுவோர்கள், பட்டு ஆடை - பட்டு வஸ்திரமானது, இடை இலங்க - இடுப்பில் பிரகாசிக்க, உயர்ந்த - மாட்சிமை பொருந்திய சைவாசாரியரின் - சைவ சமயக் குருக்கள்போல, நடிப்பார் - வெளிப்படுவோர்கள், நகர்ப்புறம் போய்-ஊருக்குப் பக்கத்தே சென்று, கள் உணங்கு - உலர்ந்து தீயிற் காய்ந்த மீனைத்தின்று, கள் குடிப்பார் - கள்ளைப்பருகுவார்கள், இவரே நாகக் குடிமனர் - இச்செயலுடையவரே நாகமாகிய பட்டினத்திற்கு அரசராவார். எ—று.

பொ—ரை. பகற்காலத்தில் தேவாலயத்திலே போய் அருள் நிறைந்த தேவார திருவாசக முதலிய பாட்டுக்களைப் பாடுவார்கள். இராத்திரியில் அத்தேவாலயத் திருமதிலிற் கன்னமிடுங் கருவியினாலே அதிலுள்ள தேவத்திரவியங்களைக் கவர்தற் பொருட்டு உள்ளே நுழைவதற்குத் துவாரமிடுவோர்கள். பட்டு வஸ்திரமானது இடுப்பில் பிரகாசிக்க மாட்சிமை பொருந்திய சைவசமயக் குருக்கள்போல வெளிப்படுவோர்கள். ஊருக்குப்பக்கத்தே சென்று உலர்ந்து தீயிற் காய்ந்த மீனைத்தின்று கள்ளைக்குடிப்பார்கள். இச்செயலுடையவரே நாகமாகிய பட்டினத்திற்கு அரசராவார். எ-று.

மன்னர் என்னும் உயர்வுமொழி குறிப்பால் அவரது இழிவையுணர்த்தி நின்றது.

இங்கே கூறியதுபோல ஒழிவிலொடுக்கம் "வேட்டியுந் தாயடமும் வெண்ணீறும் வெண்பல்லும், காட்டுவது ஞானக்களவு கான்" என்று கூறியிருத்தல் காண்க.

க—ரை. திருட்டு முதலிய கூடாவொழுக்க முடையோர் நரகத்துன்பமடைவர். எ—ம்.

10

101. எல்லிலெல் லாமங் கையரையுந் தாயென் றெணுவமென்பா
ரல்லிலன் னோரிட மின்பநல் கீரென் 'பரையமிடச்
சொல்லிடு வாரொரு சொல்லு மிடாரிவர் காலனன் று
வல்லிடி போலெதிர் வந்திடி லென்செய வல்லுநரே. *

இ—ள். எல்லில் - பகற்காலத்தில, எல்லா மங்கையரையும் - சகல பெண்களையும், தாய் என்று - மாதாவென்று, எணுவம் என்பார் - நினைப்போமென்று சொல்லுவார், அல்லில் - இராக்காலத்தில், அன்னோரிடம் - அப்பெண்களிடத்தில் (சென்று), இன்பம் நல்கீர் என்பர் - சுகபோகத்தைக் கொடுங்களென்று கெஞ்சுவார்கள், ஐயம் இடச் சொல்லிடுவார் - (பிறரை ஏழைகளுக்குப்) பிச்சை யீயுமாறு சொல்வார்கள், ஒரு சொல்லும் இடார் - தாம் ஒரு செல்லும் பிறர்க்கீயார்கள், இவர் - இக்கள வொழுக்க முடையவர், வல்இடிபோல் - பலம் பொருந்திய இடியையொப்பாகக் (கர்ச்சித்து), காலன் - இயமன், அன்று-மரண சமயத்தில், எதிர் வந்திடில் - தம்முன்வரின், என்செய வல்லுநர் - யாது செய்ய வல்லவரவர். எ—று.

பொ—ரை. பகற்காலத்திற் சகல பெண்களையும் மாதாவென்று நினைப்போமென்று சொல்லுவார்கள். இராக்காலத்தில் அப்பெண்களிடத்திற்சென்று சுகபோகத்தைக் கொடுங்களென்று கெஞ்சுவார்கள். பிறரை ஏழைகளுக்குப் பிச்சை யீயும்படி சொல்வார்கள். தாம் ஒரு செல்லும் பிறர்க்கீயார்கள். இக்களவொழுக்க முடையார் பலம் பொருந்திய இடியை யொப்பாகக் கர்ச்சித்து இயமன் மரண சமயத்தில் தம் முன்வரின் யாது செய்ய வல்லவரவர். எ—று.

க—ரை. களவொழுக்கமுடையார் இயம தண்டனையினின் றும் மீளார். எ—ம். (3)

[வெண்பா]

102. புலியின்றோல் போர்த்துப் புலப்பைங்கூழ் தின்னு ம்
வலியில் பசுவென்றான் மாறோ—மெலிவாற்க ல்
வேட்டியரன் கண்மணியே வெண்ணீறே வேதமொ ழி
காட்டிச் சுகம்பறிப்பா ரை. *

இ—ள். மெலிவால் - [ஊர்தோறும் மனைதோறுஞ் சென்றேற்பதாகிய மெய்த் துறவிகளுக்குரிய பிச்சாசன முதலியவற்றால் ஜீவித்தற்கேதுவாகிய வைராக்கியத்தின்] குறைவால், கல்வேட்டி - [உடுத்திருக்கின்ற] காவி வஸ்திரத்தினாலும், அரன்கண்மணி - [அணிந்திருக்கின்ற] உருத்திராக்கமணியினாலும், வெண்ணீறு - [தரித்திருக்கின்ற] விபூதியினாலும், வேதமொழி - [உபதேசிக்கின்ற] வேத வாக்கியங்களாலும், காட்டி - [தம்மை மெய்த் துறவிகள்போலப் பிறருக்குக்] காண்பித்து, சுகம் - [பிறர்க்குரிய] விஷய இன்பங்களுக்குச் சாதனமாகிய திரவியத்தை, பறிப்பாரை - அபகரிப்பவர்களை, புலியின்றோல் - [தான் புலிபோலப் பிறர்க்குத் தோன்றுமாறு] அப்புலியினுடைய தோலை, போர்த்து - மூடிக்கொண்டு, புலப்பைங்கூழ் - வயலில் விளைவித்திருக்கின்ற பிறர்க்குரிய பயிரினை, தின்னும் - [எளிதின்] மேய்கின்றதும், வலியில் - (சேய்மைக்கட்சென்று தனக்குரிய புல்லை மேயப்] பலமற்றதுமாகிய, பசு என்றால் - பெற்றம் என்று சொன்னால், மாறோ - அச்சொல் விரோதமோ [அல்ல உண்மையே.] எ—று.

பொ—ரை. ஊர்தோறும் மனைதோறுஞ் சென்றேற்பதாகிய மெய்த் துறவிகளுக்குரிய பிச்சாசன முதலியவற்றால் ஜீவித்தற்கேதுவாகிய வைராக்கியத்தின் குறைவால் உடுத்திருக்கின்ற காவி வஸ்திரத்தினாலும், அணிந்திருக்கின்ற உருத்திராக்கமணியினாலும், தரித்திருக்கின்ற விபூதியினாலும், உபதேசிக்கின்ற வேதவாக்கியங்

களாலும் தம்மை மெய்த் துறவிகள்போலப் பிறருக்குக் காண்பித்துப் பிறர்க்குரிய விஷய இன்பங்களுக்குச் சாதனமாகிய திரவியத்தை அபகரிப்பவர்களைத் தான் புலிபோலப் பிறருக்குத்தோன்றுமாறு அப்புலியினுடைய தோலை மூடிக்கொண்டு வயலில் விளைவித்திருக்கின்ற பிறர்க்குரிய பயிரினை எளிதின் மேய்கின்றதும், செய்மைக்கட்சென்று தனக்குரிய புல் மேயப் பலமற்றதுமாகிய பெற்றம் என்று சொன்னால் அச்சொல் விரோதமோ அல்ல உண்மையே. எ—று.

இங்ஙனே கூறியதுபோல குறள் "வலியிணிலைமையான் வல்லுருவம் பெற்றம் புலியின் றோல் போர்த்து மேய்ந்தற்று" என்று கூறியிருத்தல் காண்க.

க—ரை. தமக்குரிய தருமத்தை விட்டுப் பிறர்க்குரியவைகளை அபகரிப்பவர் துறவறத்தாரல்லர். எ—ம். (4)

**103.** திருட்டிற் றிரிந்தடுத்த தேகவ ஞர்ச்சூரா ல்
மருட்டி யெயிரேம்ப லொடக்—கரித்தவ ரே
வித்தார மன்னியர்பாற் பேசி விளைந்தவை ந்
தெத்திப் பிழைக்கு மிவர். *

இ—ள். வித்தாரம் - விரிவான வாக்கியங்களை, அந்நியர்பால் - அயலாரிடத்தில், பேசி - சொல்லி, விளைந்த - தம்மாலிச் சிக்கப்பட்ட பொருள்களை, வலிந்து எத்தி - வலாற்காரமாக வஞ்சித்துக் கவர்ந்து, பிழைக்கும் இவர் - ஜீவிக்கின்ற இப்பொய் வேஷத்தவர்கள், திருட்டில் - களவுத்தொழிலில், திரிந்து - நாடெங்கு மலைந்து, அடுத்த தேக அஞர்ச்சூரால் - [அக்களவுத் தொழிலால் தமது சரீரத்திற்கு முன் இராஜ தண்டனையால்] உண்டாகிய துன்பத்தின் பயத்தால் (அத்தொழிலைக் கைவிட்டு), மருட்டி -

அயலாரை மயக்கி, உயிர் ஓம்ப [எ] - தமது சரீரத்தைப் பாதுகாக்கவே, வேடம் சரித்தவர் - வேஷத்தைப் பூண்டவர்களாவர் [அஃதன்றிப் புருஷார்த்தத்தின் பொருட்டுப்பூண்டவராகார்]எ-று.

பொ—ரை. விரிவான வாக்கியங்களை அயலாரிடத்திற் சொல்லித் தம்மால் இச்சிக்கப்பட்ட பொருள்களை பலாத்காரமாக வஞ்சித்துக் கவர்ந்து ஜீவிக்கின்ற இப்பொய் வேஷத்தவர்கள் களவுத் தொழிலால் நாடெங்குந் திரிந்து அக்களவுத் தொழிலால் தமது சரீரத்திற்கு முக்காலத்தில் இராஜ தண்டனையாலுண்டாகிய துன்பத்தின் பயத்தால் அத்தொழிலைக் கைவிட்டு அயலாரை மயக்கித் தமது சரீரத்தைப் பாதுகாக்கவே வேடம் பூண்டவராவர். அஃதன்றிப் புருஷார்த்தத்தின் பொருட்டுப் பூண்டவராகார். எ—று.

பிரித்துக் கூட்டப்பட்ட ஏகாரந் தேற்றப் பொருளது பிரிநிலை யெனினுமமையும்.

புருஷார்த்தத்தின் பொருட்டுப் பூண்ட யதிதருமத்திற் குதாரணம்.

"கந்தைபா லிரந்த வாடைக் கோவணமுடைய ராக
வியிலை தாமே, வந்த பிச்சை பூண்காரி தொட்டிப்
படுக்கைக ளெண்மாக்க ளிக்கப், பந்த மற்றுத் திரிதல்
சிம்யோக நிட்டைப் பழக்கம்",

எனம் பார்க்குரு சரியுர்,

"உச்சியர் போதின் மீதாம் பசிக்கவ் ஆர்வலா மாயிலக்
கோதாறும், பிச்சைகை யிடையிற் காடிக் கேழுமார் பெறு
ஊடு பற்றியுள் வெறுப்போ, டிச்சையற் றருந்திப் பொ
ருந்த வேகாந்தத் திடையிலுந் தாகம்வந் தடையி, னச்
சினி நதீர்ப் புகுந்தா வீகரி யாதிப் பருந்துக என்றே"

எனவைராக்கிய தீபத்தில் சாந்தலிங்க சுவாமிகளுங் கூறியிருத்தல் காண்க.

க—ரை. இவர்கள் தங்களை மருட்டி அவர்பால் தமக்கு விருப்பமாகிய வஸ்துக்களை அபகரிப்பவர் துறவிகளல்லர். எ—ம். (5)

(5)வது போய்வேட வொழிபியல் முற்றிற்று.

## (6) வது அவிவேகியியல்.

(விருத்தம்)

104. விடயமொன்று மில்லாத சுழுத்தியிற்றான் சுகவடிவா
விளங்கக் கண்டும், மிடிதருமா யையின்புணர்ப்பா லதை
விடயந் தொறுந்தேடி வீழ்ந்து மாய்வோன், படியினிற்
றன் றனைக்காணான் றேடியொரு கிணற்றறலுட் பார்த்
து மெய்ச்சி, முடிபிடித்தீர்த் திடவிழுந்து மாய்ந்தமூழ
மூடனுக்கு முன்னோ னமே. *

இ-ள். விடயம் ஒன்றும் - சத்தாதி விஷயங்களுள் யாதொரு விஷயமும், இல்லாத சுழுத்தியில் — சுழுத்தியவஸ்தையில், சுக வடிவா - ஆனந்த சொரூபமாக, தான் விளங்கக்கண்டும் - தான் தோன்றப்பார்த்தும், மிடிதரும் - [சுகம்] இன்மையை (துக்கத்தை) க்கொடுக்கின்ற, மாயையின் புணர்ப்பால்-அவித்தியா சம்பந்தத்தால், அதை - அந்தத் தனது சொரூபத்தை, விடயந் தொறும் - ஒவ்வொரு விஷயங்களிலும், தேடி - இருப்பதாகப் பார்த்துப்பார்த்து, வீழ்ந்து - அவ்விஷயங்களுள் மூழ்கி, மாய்வோன் - இறப்போன், படியினில் - உலகத்தில், தனைக்காணான் - தன்னைக் காணவில்லையென்று மயக்கமடைந்த வொருவன், தேடி - பலவிடங்களிலும் விசாரித்துச்சென்று, ஒரு கிணற்றறலுள் பார்த்து - [பின்பு] ஒரு கிணற்று நீரினுள்ளே [தோன்றுந் தனது பிரதி

விம்பத்தைத்தானென்று] கண்டு, மெய்ச்சி - [அங்ஙனம் கண்டு கொண்ட தன்னைப்] புகழ்ந்து, முடிபிடித்து - [அப்பிரதிவிம்பத் தின்] குடுமியைப்பற்றி, ஈர்த்திட - இழுத்துக்கரை யேற்றுதற் காக, விழுந்து - [அக்கிணற்று நீரினுள்ளே] வீழ்ந்து, மாய்ந்த - பிராணனையிழந்த, முழு மூடனுக்கும் - அற்பமும் அறிவிலானுக் கும், முன்னோன் ஆம் - முதல்வனவன். எ—று.

பொ-ரை. சத்தாதி விஷயங்களுள், யாதொரு விஷயமு மில்லாத சுழுத்தியவஸ்தையில் ஆனந்த சொரூபமாகத் தான் தோன்றப்பார்த்தும் துக்கத்தைக்கொடுக்கின்ற அவித்தியாசம்பந் தத்தால் அந்தத்தனது சொரூபானந்தத்தை ஒவ்வொரு விஷயங் களிலும் இருப்பதாகப் பார்த்துப்பார்த்து, அவ்விஷயங்களுள் மூழ்கியிறப்போன் உலகத்தில் தன்னைக்காணவில்லையென்று மயக் கமடைந்த வொருவன் பல விடங்களிலும் விசாரித்துச்சென்று, பின்பு ஒரு கிணற்று நீரினுள்ளே தோன்றுந்தனது பிரதிவிம்பத் தைத்தானென்று கண்டு, அங்ஙனங் கண்டுகொண்ட தன்னைப் புகழ்ந்து அப்பிரதிவிம்பத்தின் குடுமியைப்பற்றி இழுத்துக் கரை யேற்றுவதற்காக, அக்கிணற்று நீரினுள்ளே விழுந்து, பிராணனை யிழந்த அற்பமும் அறிவிலானுக்கும் முதல்வனவன். எ—று.

கானோன் என்பது வினையாலணையும் பெயர்.

க-ரை. தான் ஆனந்த சொரூபமென்று சுழுத்தியவஸ்தை யில் அனுபவித்தறிந்தும் அவிவேகி அவ்வானந்தத்தை விடயத்தி லிருப்பதாகப் பிராந்தியடைந்து வருந்துகின்றான். எ-ம். (1)

105. அட்டிடினும் பால்சுவைகுன் றாமையெனை வஸ்துவைத் யுற்று மான்மா வின்பக், கட்டியென்று ணர்ந்தோரெல்லாங் காணும் உடலெனவே காணு நோக்கைக், கெட்டிறந்து பிறந்து தாய றுகின்றே மெனவருந்திக் கொள்ள வங்கட்.

கிட்டமுற வுணர்த்தினதந் ஞானமே பிறிதுண்டே
லிசைத்திடுவீர்.

இ-ள். பால் அட்டிடினும் - பாலைச் தீயின்கட் காய்ச்சினு
லும், சுவை குன்றாமையென - உருசி குறையாமை போல, ஆன்மா
அவித்தை உற்றும் - ஆன்மாவானது அவித்தையைப் பொருந்தி
னும், இன்பக்கட்டி என்று - சச்சிதானந்தகனமாயிருப்ப தன்றி
அதினின்றும் வேறுபடுவதில்லை யென்று, ஆரணம் சொலவும் -
வேதங்கள் முறையிடவும். காணாமல் - அவ்வாறு ஆன்மா சச்சிதா
னந்த கனமென்பதை யறியாமல், உடல் எனவே காணும் நோக்
கை - ஆன்மாதேகமே [யாவதன்றி இதற்கு வேறாகவில்லை]
யென்று அறியும் அறிவை, கெட்டு இறந்து - [ஆன்மாவாக வறிந்த
தேகம்] அழிய மரித்தும், பிறந்து - [தேகமுண்டாக] ஜனித்தும்,
துயர் உறுகின்றோம் என - துன்பப்படுகின்றோ மென்று, வருந்தி -
கவலைப்பட்டு, கிளக்க - சொல்லுமாறு, உங்கட்கு - [அவிவேகி
களே] உங்களுக்கு, இட்டம் உற - விருப்பமுண்டாக, உணர்த்தி
னது - அறிவித்தது. அஞ்ஞானமே - அஞ்ஞானமே [யன்றிப்பிறி
தில்லை], பிறிது உண்டேல் - அன்னிய வஸ்துளதாயின், இங்கு -
இவ்விடத்து, இசைத்திடுவீர் - அதனைச் சொல்லுங்கள். எ-று.

பொ-ரை. பாலைத்தீயின்கட் காய்ச்சினாலும் உருசி குறை
யாமைபோல ஆன்மாவானது அவித்தையைப் பொருந்தினும் சச்
சிதானந்த கனமாயிருப்பதன்றி அதினின்றும் வேறுபடுவதில்லை
யென்று வேதங்கள் முறையிடவும் அவ்வாறு ஆன்மா சச்சிதானந்
த கனமென்பதை யறியாமல் ஆன்மா தேகமேயாவதன்றி இதற்கு
வேறாகவில்லை யென்று அறியும் அறிவை ஆன்மாவாக வறிந்த
தேகம் அழிய மரித்தும் தேகமுண்டாக ஜனித்தும் துன்பப்படு
கின்றோமென்று கவலைப்பட்டுச் சொல்லுமாறு அவிவேகிகளே
உங்களுக்கு விருப்பமுண்டாக அறிவித்தது அஞ்ஞானமேயன்றிப்

பிறிதில்லை. அந்ய வஸ்துவுளதாயின் இவ்விடத்து அதனைச் சொல்லுங்கள். எ—று.

நோக்கு அறிவின்மேல் நின்றது கெட்டு என்பது செயவெனெச்சத்திரிபு. கெட என்றதால் உண்டாகவென்பது வருவிக்கப்பட்டது. அறிவிக்காத அஞ்ஞானத்தை அறிவித்ததாகக் கூறியது மரபு வழுவமைதி.

க—ரை. ஆன்மா சச்சிதானந்த வடிவமென்று சுருதிகூறக் கேட்கப்படினும் அவித்தியா மோகிதர்களுக்குத்தேகான்மபுத்தி நீங்காது. எ—ம். (2)

106. எங்குநிறை பாற்கடலுள் ளனவரதங் கள்வெறிய னிருந்
தானேனும், அங்கதனை யருந்தாமல் விரும்புகள்ளை
துருவியழுங் குறுமாறொப்பக், கங்குல்பக லறுஞான
சகத்திருந்து மஞ்ஞானக் கட்டுட்பட்டோர், பங்கமறு
விடயமெங்கே யெனத்தேடித் தேடிமனம் பதைக்கின்
றாரே.

இ—ள். கள் வெறியன் - கள்ளினையே பருகிப்பருகி உன்மத்தங் கொண்டவொருவன், எங்கும் - எவ்விடத்தும், நிறை - பூரித்திருக்கின்ற, பால் கடலுள் - பாற்சமுத்திரத்தினிடத்து அனவரதம் - எக்காலமும், இருந்தானேனும் - வசித்தானாயினும், அங்கு - அவ்விடத்து நிறைந்துள்ள, அதனை - அப்பாலினை, அருந்தாமல் - பருகாமல், விரும்புகள்ளை - [முன்பருகிய பழக்கத்தால் தன்னால்] இச்சிக்கப்பட்ட கள்ளினையே, துருவி - தேடி, அழுங்குறும் ஆறு ஒப்ப - வருத்தமடையுந் தன்மைபோல, கங்குல் பகல் அறு - மறப்பு நினைப்பில்லாத, ஞானசகத்து இருந்தும் - அறிவுமயமாகிய பூரணானந்தத்தின்கண்ணே வசித்தும், அஞ்ஞானக் கட்டுட் பட்டோர் - அஞ்ஞானத்தாலாகிய ஜனனாதி பந்தத்தின்கண்

அகப்பட்டுக்கொண்டவர்கள் [பூர்வ ஜன்மப்பழக்கத்தால்], பங்கம் அறு - [சுகமாறு படுதலாகிய] குற்றமற்ற, விடயம் — சத்தாதி விஷயங்கள், எங்கே என - எவ்விடத்திருக்கின்றன வென்று, தேடித்தேடி — விசாரித்து விசாரித்து, மனம் பதைக்கின்றார் — இருதயந் துடிக்கின்றார்கள். எ—று.

பொ—ரை. கள்ளினையே பருகி உன்மத்தங் கொண்ட வொருவன் எவ்விடத்தும் பூரித்திருக்கின்ற பாற்சமுத்திரத்தினிடத்து எக்காலமும் வசித்தானாயினும் அவ்விடத்து நிறைந்துள்ள அப்பாலினைப் பருகாமல் முன் பருகிய பழக்கத்தால் தன்னாலிச்சிக்கப்பட்ட கள்ளினையே தேடி வருத்தமடையுந் தன்மைபோல, மறப்பு நினைப்பில்லாத அறிவு மயமாகிய பூரணானந்தத்தின் கண்ணே வசித்தும் அஞ்ஞானத்தாலாகிய ஜனனாதிபந்தத்தினுள்ளே அகப்பட்டுக்கொண்டவர்கள் பூர்வ ஜன்மப்பழக்கத்தால் சுகமாறுபடுதலாகிய குற்றமற்ற சத்தாதிவிஷயங்கள் எவ்விடத்திருக்கின்றன வென்று விசாரித்து விசாரித்து இருதயந் துடிக்கின்றார்கள். எ-று.

"ஞானசுகத்து இருந்தும்" என ஆசிரய ஆசிரித பாவங் கூறினது ஆனந்த வடிவப்பிரஹ்மத்தின் கண் ஆபாச சகித அந்தக்கரண வடிவ ஜீவன் அத்தியஸ்தமாயுளனென்பது தோன்றுதற் கென்க.

க—ரை. ஜீவர்கள் ஆனந்த வடிவப் பிரஹ்மத்தின்கண் இருந்தும் அதனை அநுபவிக்காமல் பூர்வவாசனையால் விடயத்தை விரும்புகின்றார். எ—ம். (3)

107\. பழுதறநீட் காமகன்மம் பண்ணினன்றும் பலத்தாலே
பரிபாகப்பட், டெழுதவிலா தொளிருமனமுடைய
வர்க ளநுபவிக்கு மின்போ ராதரர், தொழிலறிவின்

புறுமெனல்கேட் டுளதொழிலு மொழித்தயின்று தூங்
கின் பாவ, விழுமிதென வியப்புறுவா ரிவர்விலங்கோ
டனையரென விளம்ப லாமே.

இ-ள். பழுதற -குற்றமில்லாமல், நிட்காம கன்மம் பண்ணி-பலேச்சையை விடுத்து எஞ்ஞாதி சற்கிரியைகளைச்செய்து, கண்ணும் - அக்கிரியைகளாற் பொருந்தும், பலத்தால் - புண்ணியத்தினால், பரிபாகப்பட்டு - பக்குவமடைந்து, எழுதல் இலாது - [அதனால் விஷயங்களிற்] செல்லுதலின்றி, ஒளிரும்மனம் - [பிரஹ்மாகாரமடைந்து] விளங்காநின்ற அந்தக்கரணத்தை, உடையவர்கள், அநுபவிக்கும் - [இரவினும் அற்பகால நித்திரை செய்தெழுந்து சமாதியிலிருந்து] அநுபோகஞ் செய்கின்ற, இன்பு உறாதார் - பிரஹ்மானந்தத்தை யுணராதவர்கள், தொழில் அறில் - கிரியை நீங்கியவிடத்து, இன்பு உறும் எனல் கேட்டு - [சும்மாவிருக்கிற் சுகஞ்சுகமென்று சுருதியெல்லாம், அம்மா நிரந்தரஞ் சொல்லவுங்கேட்டும் என்று பெரியோர் வாக்கியங்கள்] ஆனந்தமுண்டாகுமென்று சொல்வதைக்கேட்டு, உளதொழிலும் ஒழித்து - [முன் செய்துவந்த அற்பமா] யுள்ள கருமங்களையும் பயனைக் கருதிச் செய்யாது விடுத்து, அயின்று - [வேளை தோறும் வயிறு நிரம்ப] வுண்டு, தூங்கி [பகலிலும்] நித்திரைசெய்தா, இன்பு - அந்நித்திரையாலுண்டாகுஞ் சுகம், ஆஅ விழுமிது என - ஆஅ [மிக] மேலாகியதென்று, வியப்பு உறுவார் - ஆச்சரியமடைவார்கள், இவர் - இம்மனுடரை, விலங்கோடு - மிருகங்களுடன், அனையர் என-ஒப்பாவரென்று, விளம்பலாம் - சொல்லலாம். எ—று.

பொ—ரை. குற்றமில்லாமல் பலேச்சையை விடுத்து, எஞ்ஞாதி சற்கிரியைகளைச் செய்து, அக்கிரியைகளாற் பொருந்தும் புண்ணியத்தினால் பக்குவமடைந்து, அதனால் விஷயங்களிற் செல்லுதலின்றிப் பிரஹ்மாகாரமடைந்து விளங்காநின்ற அந்தக்கரணத்

தையுடையவர்கள் இரவினும் அற்பகால நித்திரை செய்தெழுந்து சமாதியிலிருந்து அனுபோகஞ் செய்கின்ற பிரஹமானந்தத்தை யுணராதவர்கள் கிரியை நீங்கியவிடத்துச் சும்மாவிருக்கிற் சுகஞ் சுகமென்று சுருதியெல்லாம் அம்மாநிரந்தரஞ் சொல்லவுங் கேட்டும் என்று பெரியோர் வாக்கியம் ஆனந்தமுண்டாகுமென்று சொல்வதைக்கேட்டு, முன் செய்துவந்த அற்பமாயுள்ள கருமங்களையும் பயனைக்குறித்துஞ் செய்யாது விடுத்து வேளை தோறும் வயிறு நிரம்பவுண்டு, பகலிலும் நித்திரை செய்து அந்நித்திரையாலுண்டாகுஞ் சுகம் ஆவமிகமேலாகியதென்று ஆச்சரியமடைவார்கள், இம்மனுடரை மிருகங்களுடன் ஒப்பாவரென்று, சொல்லலாம். எ—று.

## தூங்கி என்பதின், இகரவிகுதி தோக்கு நின்றது.

பகலிலுந் தூங்குந் தூக்கத்தையும் அதனாலுளதாகுஞ் சுகத்தையும் பரலோக புத்தியில்லாதமிருகங்கள் விரும்புவனவேயல்லாமல் பரலோக புத்தியுடைய மக்கள் அதனை [தூக்கத்தை] சுகசாதனமாயுள்ள சற்கருமங்களைச்செய்ய வொட்டாது தடுக்கும் பிரதிபந்தரூபமாயிருக்கின்றதென்றறிந்து இரவிலுங்கூடமிகுதியாகத் தூங்கார். இவர் (அவிவேகிகள்) தமக்கு விதித்துள்ள நித்தியாதி அற்பகருமங்களையும் துக்கமெனக் கருதிப் பயனைக் குறித்துஞ் செய்யாமல் விடுத்துக் கன்மப் பிரதிபந்த ரூபமாயிருக்கின்ற அந்நித்திரையை இரவிலும் பகலிலும் விரும்பிச்செய்து அதனாலுளதாகுஞ் சுகத்தையநுபவித்து வியப்புறுதலின் அவரை மனிதரோ டொப்பிடுத லாகாதென்பார் “இவர் விலங்கோ டனையரென விளம்பலாம்” என ஒப்பில்லாத விலங்கோடு ஒப்புக்கூறினார் இஃது விலங்கொடு மக்களனையர்” என்றாற்போல ஒப்பலொப்புப் பொருளென்றறிக.

பகலில் நித்திரை செய்யலாகாதென்பதற்குதாரணம்.

## வைராக்கிய தீபம்.

"தென்பால வைவிரூட் கழிவட பாலை சேர் நடக்கலோரி
னிற் செலல்போ, லொன்பதிற் றொன்ப தோடிரு
விலக்க முனவிலோ வியும்பிழைத் தேறிப், பின்பிறப்
பிதுபெற் றிதனிலும் பாதி பிறப்புறு காணதாக் குறி,
னின்பமீ தெனமிக் குறங்கலர் பிறவிக் கறவெரீஇ யுணர்ந்
தடங் கிடுவார்"

என்று கூறுதல் காண்க.

இதில் இரவின்மிக்குறங்கலர் என்றமையால் பகலிற்றூங்கலா ராதென்பது சொல்லாமே யமையும்.

க—ரை. சித்திரையிலுளதாருஞ் சுகத்தை மோக்ஷ சுகமே யெனக்கருதி எப்பொழுதுந் தூங்குபவர் மிருகத்தோடொப்பாவர், எ—ம். (4)

108. ஆனந்த மாம்பிரஹ்மத் திருந்து முயிர் மலமறைப்பா லதனை
நீக்கி, யீனந்தங் கியவிடயந் தொறுஞ்சார்தல் நல்லாவி
னினிமை வாய்ந்த, பானந்தி யழகொழுகும் பருமடி
வாழ் வுறுமுணியப் பாலுஞ் சேசம், பானீர்மைக்கே
யுரியதென வறிவிழந்து தமக்கருந்தும் பான்மை போலே.

இ-ள்- உயிர் - ஜீவர்கள், ஆனந்தம் ஆம் பிரஹ்மத்து - [அஸ்தி பாதிப்] பிரிய சொரூபமாகிய பிரஹ்மத்தினிடத்தில், இருந்தும் - வாசஞ்செய்தும், மல மறைப்பால் - அஞ்ஞான மறைப்பினாலே, அதனை நீக்கி - அவ்வானந்தத்தை அநுபவியாது விடுத்து, ஈனம் தங்கிய - அழியுந் தன்மையுடைய, விடயந்தொறும் - ஒவ்வொரு விஷயங்களிலும், சார்தல் - [சுகத்தை விரும்பிப்] போகுதல், [எது போலெனில்], நல் ஆவின் - நல்ல பசுவினுடைய,

இனிமை வாய்ந்த - மதுரத்தைப் பொருந்திய, பால் - பாலானது, நந்தி - மிகுதலால், அழகு ஒழுகும் - அழகு அதிகரிக்கின்ற, பரு மடி - பெரியமுலைமடியின்கண், வாழ்வுறும் - வசித்திருக்கும், உண்ணி - உண்ணிகள், அப்பால் உணு-அம்முலைமடியிலுள்ள பாலைப் பருகாது விடுத்து, செம்பால் [ஏ] - அதிலுள்ள இரத்தத்தினை யே, தமக்கு உரியது என-தமக்குப்பருகவுரியதென்று, நினைந்து - எண்ணி, அறிவு இழந்து - புத்தி கெட்டு, அருந்தும்பான்மைஆம்- பருகுகின்ற தன்மை போலவாம். எ—று.

பொ-ரை. ஜீவர்கள் அஸ்திபாதிப்பிரிய சொரூபமாகிய பிரமத்தினிடத்தில் வாசஞ் செய்தும் அஞ்ஞான மறைப்பினாலே அவ்வானந்தத்தை அநுபவியாது விடுத்து அழியுந்தன்மையுடைய ஒவ்வொரு விஷயங்களிலும் சுகத்தை விரும்பிப் பொருந்துதல் எதுபோலெனில், நல்ல பசுவினுடைய மதுரத்தைப் பொருந்திய பாலானது மிகுதலால் அழகு அதிகரிக்கின்ற பெரிய முலைமடியின்கண் வசித்திருக்கு முண்ணிகள் அம்முலை மடியிலுள்ள பாலைப் பருகாது விடுத்து அதிலுள்ள இரத்தத்தினையே தமக்குப் பருகவுரியதென்று எண்ணிப் புத்திகெட்டுப் பருகுகின்ற தன்மை போலவாம். எ—று.

பிரித்துக் கூட்டப்பட்ட ஏகாரம் பிரிநிலை.

க-ரை. ஜீவர்கள் ஆனந்த சொரூபத்திலிருந்தும் விஷயத்தை நாடுதல் அஞ்ஞான மயக்கமாம். எ—ம். (5)

[வெண்பா]

109. வாக்குமனந் தீதமென்று மாமறைகள் வத்துவி னை
நீக்கமற்ற தென்று நிகழ்த்தவுங்கேட் — டாக்கிய வோ
ராலயத்தி னுள்ளே யமைந்தகுறி மட்டினுனா ர்
சீவர்கா ளுய்வார் தெரிந்து. *

இ-ள். மாமறைகள் - மகத்தாகிய வேதங்கள், வத்துவினை - பரம்பொருளை, வாக்குமன அதீதம் என்றும் - வாக்குக்கும் மனதுக்கும் எட்டாததெனவும், நீக்கம் அற்றது என்றும் - பிரிவற்று எவ்விடத்தும் பூரணமாயுள்ளதெனவும், நிகழ்த்த - கூற, கேட்டு[உம்] - கேள்வியுற்றும், ஆக்கிய - கல் முதலியவற்றாற் கட்டப்பட்ட, ஓர் ஆலயத்தினுள் - ஒப்பற்ற கோவிலினுள்ளிடமாகிய கருப்பக் கிரகத்தில், அமைத்த - பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்ற, குறிமட்டில் - விக்கிரகத்தளவில், உணர் - [இருப்பதாக] அறிகின்ற, சிலர் - மந்தபுத்தியினர், தெளிந்து - [அதன் எதார்த்த சொரூபத்தை ஐயந்திரிபற] அறிந்து, எக்காள் - எந்தக்காலத்தில், உய்வார் - ஈடேறுவார்கள், [அஃதருமை] எ-று.

பொ-ரை. மகத்தாகிய வேதங்கள் பரம்பொருளை வாக்குக்கும் மனதுக்கும் எட்டாததெனவும், பிரிவற்று எவ்விடத்தும் பூரணமாயுள்ளதெனவும் கூறக் கேள்வியுற்றும் கல் முதலியவற்றாற் கட்டப்பட்ட ஒப்பற்ற கோவிலின் உள்ளிடமாகிய கருப்பக் கிரகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்ற விக்கிரகத்தளவிலிருப்பதாக அறிகின்ற மந்த புத்தியினர் அதன் எதார்த்த சொரூபத்தை ஐயந்திரிபறவறிந்து எந்தக் காலத்தில் ஈடேறுவார்கள் அஃதருமை. எ-று.

பிரித்துக் கூட்டப்பட்டவும்மை சிறப்புப் பொருளது.

க-ரை. பரமேசுரனைச் சிவலிங்கமூர்த்தியளவாக அறிகின்ற மந்த புத்தியுடையவர் எப்போதுய்வார். எ-ம். (ப)

110. உள்ளந் தனைநே ருறும்விடய முண்டித் து
மெள்ளக் கெடுத்துவிட நினைத்தீர்—தெள்ளியர்நீ ர்
ஒங்குவிக்கு செய்விறகா லூற்ற வழுவொழிப் ப
வீங்கு நினைப்பா ரிலுட். *

இ-ள். நேர்உறும் - [சுரோத்திராதி இந்திரியங்களுக்கு] எதிர்ப்படுகின்ற, விடயம் உண்பித்து - [சத்தாதி விஷயங்களைப் புசிப்பித்து, உள்ளந்தனை மனத்தினை, மெள்ள - மிருதுவாக, கெடுத்துவிட - நாசஞ் செய்வதற்கு, நினைத்தீர் - எண்ணினீர்கள், நீர் — இவ்வா றெண்ணிய நீவிர், உற்ற அழல் - [விறகினைப்] பற்றி யெரிகின்ற அக்கினியை, ஒங்குவிக்கும் - மேலும் வளரச் செய்கின்ற, நெய்விறகால் - நெய்யோடு கூடிய விறகினாலே, ஒழிப்ப - கெடுக்க, ஈங்கு நினைப்பாரினும் - இவ்வுலகத்தின்கட்கருதுகின்றவர்களிலும், தெள்ளியர் - மிகத் தெளிந்த புத்தியுடையவராவீர். எ-று

பொ-ரை. சுரோத்திராதி இந்திரியங்களுக்கு எதிர்ப்படுகின்ற சத்தாதி விஷயங்களைப் புசிப்பித்து, மனத்தினை மிருதுவாக நாசஞ்செய்வதற்கு எண்ணினீர்கள், இவ்வாறெண்ணு நீவிர் பற்றியெரிகின்ற அக்கினியை மேலும் வளரச் செய்கின்ற நெய்யோடு கூடிய விறகினாலே கெடுக்க இவ்வுலகத்தின்கட் கருதுகின்றவர்களிலும் மிகத் தெளிந்த புத்தியுடையவராவீர். எ—று.

தெள்ளியர் என்பது குறிப்புச்சொல் அது அவாது அறிவின்மையையுணர்த்தியது.

இங்கே கூறியதுபோல பஞ்சதசி திருப்தி தீபம் (1407) சு-ல். போகத்தின் இச்சையாகிய காமம் எதுவோ அது விஷயங்களை அனுபவித்தலால் ஒருபோதும் சாந்தியடையாது. ஆனல் நெய் விடப்பட்ட நெருப்பினைப்போல அதிகமாகவே விருத்தியை யடைகின்றது என்று கூறியிருத்தல் காண்க.

க-ரை. விடயானுபவத்தால் மனந்தாவிப்பதன்றிக் கெடாது எ—ம். (7)

111. பஞ்சவரைச் சேருமகப் பன்னியரை யடக் கி
யஞ்சும் பழியை யழியீரே—துஞ்சுசுக ம்
இல்லாரே போல விணக்கா திருக்கின்றீ ர்
நல்லாரா வீரெந்த நாள். *

இ-ள். பஞ்சவரை - [மனிதர்களே சத்த பரிச ரூப ரச கந்த வடிவ விஷயங்களென்னும்] ஐவர்களாகிய சாரபுருஷரை, சேரும்-[முறையே சுரோத்திர தொக்கு சக்ஷு சிங்குவை கிராண வடிவ ஞானேந்திரியங்களென்னும் ஐவர்களின் சகாயத்தால்] கூடியநுபவிக்கின்ற, அகப்பன்னியரை - (உங்களுடைய) மனமாகிய மனைவியரை, அடக்கி - (வெளியிடத்துச் செல்லாமல்) அடங்குமாறு செய்து, அஞ்சும் - (முன் செய்த அந்த வியபிசாரத்தால்) வெருவுமாறு, பழியை - (வந்த ஜனன மாணமாகிய) நிந்தையை, அழியீர் - தொலைத்திலீர், துஞ்சு சுகம் - (நும் மனைவியரைப் புசிக்கச்செய்து வசமாக்கத் தருந்த) நிலைபெற்ற ஆனந்தம், இல்லார் போல - தம்மிடத்தில்லாத வறியர் போல, இணக்காது - [நும்மோடு] உடன்படுத்தாமல், இருக்கின்றீர் - [அவித்தியா மயக்கமாகிய நித்திரையில்] இருக்கின்றீர், எந்த நாள் - [இங்ஙனமிருக்கின்ற நீவிர் இனி] எக்காலத்தில், நல்லார் ஆவீர் - [ஞானமாகிய விழிப்பை யடைந்து] ஆனந்த சொரூபராவீர். எ—று.

பொ-ரை. மனிதர்களே, சத்த, பரிச, ரூப, ரச, கந்த வடிவ விஷயங்களென்னும் ஐவர்களாகிய சாரபுருஷரை முறையே சுரோத்திர, தொக்கு, சக்ஷு, சிங்குவை, கிராண வடிவ ஞானேந்திரியங்களென்னும் ஐவர்களின் சகாயத்தால் கூடியநுபவிக்கின்ற உங்களுடைய மனமாகிய மனைவியரை வெளியிடத்துச் செல்லாமலடங்குமாறு செய்து முன்செய்த அந்த வியபிசாரத்தால் வெருவுமாறனதாகிய ஜனன மாணமென்று கூறுகின்ற நிந்தையைத் தொலைத்திலீர். நும் மனைவியரைப் புசிப்பிக்கச்செய்து வசமாக்

கத் தருந்த நிலைபெற்ற ஆனந்தம் தம்மிடத்தில்லாத வறியர்போல நம்மோடு உடன்படுத்தாமல் அவித்தியா மயக்கமாகிய நித்திரையிலிருக்கின்றீர். இங்ஙனமிருக்கின்ற நீவிர் இனி எக்காலத்தில் ஞானமாகிய விழிப்பை யடைந்து ஆனந்தசொரூபாரவீர். எ—று.

ஆன்மாவை மணவாளனாகவும், மனஞ்சத்தியினம்சமாதலால் அதனை மனைவியாகவும், அம்மனம் ஆன்மாவாகிய பதியை நோக்கி அடங்காமல் துக்ககாரணங்களாகிய விடயங்களை நோக்கிச் செல்லுதல் மாறுதலால் அச்செல்லுதலை வியபிசாரமாகவும், விடயங்களைச் சாரபுருஷராகவும் உருவகம் பண்ணப்பட்டமைபற்றி அம்மனத்துக்கும் விடயங்களுக்கும் நேரே சம்பந்தங் கூடாமையின் அவற்றிற்கிடையே இந்திரியங்கள் சந்தாக வருவிக்கப்பட்டன.

க-ரை. மனிதர்களே நும்மனத்தை விஷயங்களிற் செல்லவொட்டாதடக்கிப் பிரஹ்மானந்தத்தை யடைந்து பிறப்பை யொழியின் எ—ம். (8)

112. இன்பநும் பாலே யிருக்க வதைவிடயத்
துன்பத்திற் றேடிச் சுழலுகின்றீர்—தென்பே
ரளக்கர் புடைசூழ் புவனியின்க ணீரே
விளக்கிருக்கத் தீத்தேடு வீர். *

இ-ள். இன்பம் - பேரானந்தமானது. நும்பால் - ஆன்மாவாகிய வும்மிடத்தில், இருக்க - [உமது சொரூபமாக] இருக்கவும், அதை - அவ்வானந்தத்தை, துன்ப விடயத்தில் - துக்கத்தைத் தருவனவாகிய விஷயங்களின் கண், தேடி - சம்பாதிக்க முயன்று, சுழலுகின்றீர் - [பிறப்பிறப்பின் கண்ணே] திரிகின்றீர்கள், நீரே - [இப்படிப்பட்ட] நீங்களே, தென்பேர் அளக்கர் புடைசூழ் - அழகும் பெருமையும் பொருந்திய சமுத்திரத்தால் நான்கு பக்கமுஞ் சூழப்பெற்ற, புவனியின்கண் - உலகத்தினிடத்து, விளக்கு

இருக்க - [தம்மிடத்தே] நீயமிருக்கவும், நீ தேடுவீர்-நெருப்பினை அஃதில்லாத விடங்களிற் சென்று விசாரித்தலைகின்ற அவிவேகி களாவீர். எ—று.

பொ-ரை. பேராநந்தமானது ஆன்மாவாகியவும்மிடத்தில் உமது சொரூபமாக விருக்கவும் அவ்வானந்தத்தைத் துக்கத்தைத் தருவனவாகிய சத்தாதி விஷயங்களின்கண் சம்பாதிக்க முயன்று பிறப்பிறப்பின்கண்ணே திரிகின்றீர்கள். இப்படிப்பட்ட நீங்களே அழகும் பெருமையும் பொருந்திய சமுத்திரத்தால் நான்கு பக்க முஞ் சூழப்பெற்ற வுலகத்தினிடத்துத் தம்மிடத்தே நீயமிருக்க வும் நெருப்பினை அஃதில்லாத விடங்களிற் சென்று விசாரித்தலை கின்ற அவிவேகிகளாவீர். எ—று.

க-ரை. மனிதர்களே நீவிரே ஆனந்த சொரூபிகளாயிருந் தும் அதனை அஃதில்லாதவிடயங்களில் அநுபவிக்க முயலுதல் மடமை. எ—ம். (9)

[கட்டளைக் கலித்துறை.]

113. கல்லாவி னின்பால் கறந்தே பருகிக் கடும்பசிநோய்
நில்லா தொழிக்க நினைக்கின்ற வெண்ணமு நீரினன்றி
வில்லழ னெய்கொண்டு வீட்டு மெனுமொப்ப வீண்விடய
மெல்லா மருந்திமுத் துக்கமும் போக்கநீ ரெண்ணுதலே.

இ—ள். கல் ஆவில்-சிலையினாற் செய்யப்பட்ட பசுவினிடத்து, இன் - இனிமையாகிய பால், கறந்து - பாலினைக்கறந்து, பருகி - குடித்து, கடும்பசி நோய் - கொடிய பசிப்பிணியை, நில்லாது ஒழி க்க - தன்னிடத்து நிற்காமற் போக்க, நினைக்கின்ற - எண்ணு கின்ற, எண்ணமும் - நினைப்பும், வில் அழல் - ஒளி பொருந்திய அக்கினியை, நீரின் அன்றி - ஜலத்தினாலவிக்காமல், நெய்கொண்

டு - [அதனை விருத்தி பண்ணுகின்ற] நெய்யைச் சொரிந்து, வீட்டும் எனும் - அவிக்க நினைக்கின்ற நினைப்பும், ஒப்ப - எவ்வாறு ஒருவனுக்குப் பயனற்றனவோ அவ்வாறு, விடயம் எல்லாம் - எதிர்ப்பட்ட விஷயங்களனைத்தையும், அருந்தி - புசித்து, முத்துக்கமும் - [அத்தியாத்துமம் அதிதெய்வம் அதிபூதம் என்னும்] மூவகைத் துக்கங்களையும், போக்க - கெடுக்க, நீர் எண்ணுதல் - [உலகத்தவரே] நீவிர் நினைத்தல், வீண் - பயனற்றதாம். எ—று.

பொ—ரை. சிலையினாற் செய்யப்பட்ட பசுவினிடத்து இனிமையாகிய பாலினைக் கறந்து பருகிக் கொடிய பசிப்பிணியைத் தன்னிடத்து நிற்காமற் போக்க எண்ணுகின்ற எண்ணமும், ஒளி பொருந்திய அக்கினியை ஜலத்தாலவிக்காமல் அதனை விருத்தி பண்ணுகின்ற நெய்யைச் சொரிந்து அவிக்க எண்ணுகின்ற எண்ணமும் ஒருவனுக்கு எவ்வாறு பயனற்றனவோ அவ்வாறு எதிர்ப்பட்ட விடயங்களனைத்தையும் புசித்து அத்தியாத்துமம், அதிதெய்வம், அதிபூதம் என்னும் மூவகைத் துக்கங்களையுங் கெடுக்க உலகத்தவரே நீவிரெண்ணுதல் பயனற்றதாம். எ—று.

கற்பசுவிற் ; பாலில்லாமையால் அதனைக் கறந்து பருகிப் பசி நீக்குதல் கூடாமைபோல விடயங்களிற் சுகமின்மையால் அவ்விஷயங்களைப் புசித்துச் சுகமடைதல் கூடாதென்பார் "கல்லாவின்பால் கறந்தே பருகிக் கடும்பசிநோய், நில்லாதொழிக்க நினைக்கின்ற வெண்ணமும்" எனவும், அக்கினியை நீராற்கெடுக்க வேண்டுமேயன்றி நெய்யாற் கெடுக்கப்புகின் அது கெடாமல் வளருதல்போல விஷயவிச்சையைத்தோட திருஷ்டிவாயிலாக வுண்டாகும் வைராக்கியத்தாற் கெடுக்கவேண்டுமேயன்றி, ஒவ்வோரிச்சையுண்டாகுந்தோறும் அவ்வவ்விச்சைகளை அவ்வவ்விடயங்களைப் புசித்துக் கெடுக்கப்புகின் அவை வளருமேயன்றிக் கெடாவென்பார் 'தீயினன்றி, விவ்வழநெய்கொண்டு வீட்டுமெனுமொப்ப' என

வும் அவ்வெண்ணம் உபாயமல்லாமையாற் பயன்தராதென்பார் "வீண்" எனவும் வேறு வேறுதாரணங்களாற் பிரித்தோதினு ரெனவறிக.

க—ரை. விடயானந்தத்தை அநுபவித்து மூவகைத் துக்கங்களையும் போக்க எண்ணுதல் பயனற்றது. எ—ம். (10)

(6)-வது அவிவேகியியல் முற்றிற்று.

## [7]–வது இரங்கலியல்]

(கட்டளைக்கலித்துறை)

114. மாதா ரகமைந் தரும்பொருள் கூட்டி வளர்க்குமட் டு
நீதா ரகமென் றருமைசெய் வாரது நீங்கின டா
போதா ரகமற் றவனேசெத் தென்னப் புலப்பரிங்ங ன்
றீதா ரகத்தினும் வைகுவ ரோநன்கு தேறினரே. *

இ—ள். மாது - மனைவியும், ஆர்அகமைந்தரும் - அருமையாகிய தனது மனதை யொத்த புத்திரர்களும், பொருள்கூட்டி - திரவியங்களைச் சம்பாதித்து, வளர்க்குமட்டும் - [அவர்களை] விருத்திசெய்யுமளவும், நீதாரகம் என்று - நீ எமது கண்மணி போன்றவனென்று. அருமை செய்வார் - மேன்மைப் படுத்துவார், அது நீங்கின் - முன்போற் பொருளீட்டமுடியாவிடின், அடா - பயலே, தாரகம் அற்றவனே - [எவ்வித] ஆதாரமுமில்லாதவனே, செத்துபோ என்ன - இறவாது என் உயிரோடிருக்கின்றாயென்று, புலப்பர் - வெறுத்துத் தள்ளுவார்கள். இங்ஙன் - இவ்வாறு, தீது ஆர் அகத்தினும் - தீங்கினைப் பொருந்திய இல்லறத்திலும், வைகுவரோ - தங்கிவாழ்வரோ, (வாழார்) நன்கு தேறினர் - மோக்ஷமார்க்கத்தின் தெளிந்தொழுகுபவர். எ—று.

பொ-ரை. மனைவியும், அருமையாகிய தனது மனதை யொத்த புத்திரர்களுந் திரவியங்களைச் சம்பாதித்து அவற்றை விருத்திசெய்யுமளவும் நீ எமது கண்மணி போன்றவனென்று மேன்மைப்படுத்துவார். முன்போற் பொருள் சம்பாதிக்கமுடியாவிடின், பயலே எவ்வித ஆதாரமுமில்லாதவனே இறவாது என் உயிரோடிருக்கின்றாயென்று வெறுத்துத் தள்ளுவார். இவ்வாறு தீங்கிழைப் பொருந்திய இல்லறத்திலுந் தங்கி வாழ்வரோ (வாழார்), மோக்ஷ மார்க்கத்திற் றெளிந்தொழுகுபவர். எ—று.

க-ரை. மோக்ஷ விருப்புடையார் இல்லறத்தைத் துறப்பர் எ—ம். (1)

115. இல்லாத கானலி லுண்ணீரென் றெண்ணி யெழுந்த ரிணஞ், செல்லா விரைந்து விரைந்தோடி மாயுஞ் செயலெனவே, யல்லா விடயஞ் சுகமெனத் தேடி யறிவிழந்தார், பொல்லா மனுடரை யோவெந்த நாளின்பம் புல்லுவரே.

இ-ள். அரிணம் - மானனது, இல்லாத - [புனல்] இல்லாத, கானலில் - [உஷ்ண நிலத்திற்றோன்றும்] பேய்த்தேரின்கண், உண்நீர் என்று - [தாகந்தீரப்] பருகுதற்குப் புனல் [உளது] என்று, எண்ணி - நினைத்து, எழுந்து - தன்னிருப்பைவிட்டுக் கிளம்பி, விரைந்து விரைந்து ஓடிச் செல்லா - மிகவேகமாயோடிச் சென்று, மாயும் செயல் என - வருந்துகின்ற செய்கையைப் போல, பொல்லாமனுடர் - நிஷ்காம கருமஞ் செய்யாத மனிதர், அல்லாவிடயம் - இன்பத்திற் கேது வல்லாத விஷயத்தின் கண், சுகம் என - இன்பமுண்டென்று [கருதி], தேடி - அவற்றையே சம்பாதித்து, அறிவு இழந்தார் - தம்மையறியும் உண்மை ஞானத்தைப் போக்கடித்தனர், ஐயோ - அந்தோ, எந்த நாள் - இனிஎந்

தக் காலத்தில், இன்பம் புல்லுவர் - மோக்ஷ சுகத்தை யெய்துவர் (எய்துதலரிது). எ—று.

பொ-ரை. மானனது புனலில்லாத உஷ்ண நிலத்திற் றோன்றும் பேய்த்தேரின்கண் தாகந்தீரப் பருகுதற்குப் புனலுள தென்று நினைத்துத் தன்னிருப்பை விட்டுக் கிளம்பி மிகவேகமா யோடிச்சென்று வருந்துகின்ற செய்கையைப்போல நிஷ்காம கருமஞ் செய்யாத மனிதர்கள் சுகத்திற் கேதுவல்லாத விஷயத்தின் கண் சுகமுண்டென்று கருதி அவற்றையே சம்பாதித்து தம்மை யறியும் உண்மை ஞானத்தைப் போக்கடித்தனர். அந்தோ! இனி எக்காலத்தில் மோக்ஷ சுகத்தை யெய்துவர் (எய்துத லரிது).எ-று.

உளது என்பது சொல்லெச்சம்.

க-ரை. விடயவிச்சையுடையவர் மோக்ஷசுகமடையார்.எ-ம். (2)

116 இன்பே வடிவுற் றிருக்கின்ற நீரும் மறிவிழப்பாற்
றன்பா ழியின்கட் சுழலுகின் றீரித் துணையுமந்தோ
வின்பனை யுற்று மிலவணன் மாலிற் புலைச்சிதன்னை
வன்பிற் புணர்ந்து மகப்பெற் றடைந்த வருத்தமொத்தே.

இ-ள்- இலவணன் - இலவணனென்னும் பெயரினையுடைய ஓரரசன், அணை இன்பு உற்றும் - சிங்காதனத்தின்மீது சுகமாக வீற்றிருந்தும், [இந்திரனது ஏவலனாகிய மாயாவியினாற் பண்ணப் பட்ட] மாலில் - மயக்கத்தினால், [அறிவை யிழந்தமையால்], புலைச்சி - ஒரு புலைச்சியானவள், தன்னை - இலவணனாகிய தன்னை, வன்பில் - பலாற்காரமாய், புணர்ந்து - கூடி, மகப்பெற்று - புத்திரர்களைப் பெற்றதனால், அடைந்த - அநுபவித்த, வருத்தம் ஒத்து - துன்பத்தைப்போல, இன்பே வடிவு - [உலகத்தையே] சச்சிதானந்தமே சொரூபமாக, உற்று இருக்கின்ற நீர் - அநாதியே அடையப் பெற்றிருக்கின்ற நீங்கள், உம் - உம்முடைய, அறிவு

இழப்பால் - [சொரூப] ஞானமாகிய [கப்பலை] யிழந்தமையால், துன்பு ஆழியின்கண் - (ஜனனமரணமாகிய) துக்க சமுத்திரத்தினிடத்து, இத்துணையும் - இதுவரையும், அந்தோ-ஐயோ, சுழலுகின்றீர் - திரிகின்றீர்கள். எ—று.

(இஃதென்னை இனியாயினும் அந்த ஞானக் கப்பலிலேறிப் பிறவிக் கடலினின்றும் வெளிப்பட்டு மோக்ஷமாகிய கரையிலேறுமின் - என்பது எஞ்சி நின்றது).

பொ—ரை. இலவணனென்னும் பெயரினையுடைய ஓரரசன் சிங்காதனத்தின் மீது சுகமாக வீற்றிருந்தும் இந்திரனது ஏவலாகிய மாயாவியினாற் பண்ணப்பட்ட மயக்கத்தினால் அறிவையிழந்தமையால் ஒரு புலைச்சியானவள் தன்னைப் பலாற்காரமாக மணந்து புத்திரர்களைப் பெற்றதனால் அநுபவித்த துன்பத்தைப் போல, உலகத்தவரே! சச்சிதானந்தமே சொரூபமாக அநாதியே அடையப்பெற்றிருக்கின்ற நீங்கள் உமது சொரூபஞானமாகிய கப்பலையிழந்தமையால் ஜனனமரணமாகிய துக்க சமுத்திரத்தினிடத்து இதுவரையும் ஐயோ திரிகின்றீர்கள் இஃதென்னை? இனியாயினும், அந்த ஞானக் கப்பலிலேறிப் பிறவிக் கடலைக் கடந்து மோக்ஷமாகிய கரையிலேறுமின். எ—று.

இன்புசத்து முதலியவற்றின் உபலக்ஷணம் மகப்பெற்று என்பது செயவெனச்சத்திரிபு.

க—ரை. உலகத்தவரே நீங்கள் உங்கள் எதார்த்த சொரூபத்தை அறியாமையால் பிறவித்துக்கத்தில் வருந்துகின்றீர்கள். எ—ம். (3)

117. அஞ்ஞானஞ் சற்று மணுகா நிருமல ராகியு நீ
ருஞ்ஞான நீத்துட லுற்றே யுழன்றநி ரோதகு மோ
செஞ்ஞாயி றன்னவத் தேசடைந் தாலுமைச் சேர்துயரம்
மைந்நீ ழுகாந்த டன்கண்ட பாம்பழி பண்புறுமே.

இ-ள். பைஞ்ஞீலுகாள் - மனிதர்களே, நீர் - நீங்கள், அஞ்ஞானம் - அஞ்ஞானத்தை, சற்றும் - கொஞ்சமேனும், அணுகா- பொருந்தாத, திருமலர்ஆகியும் - பரிசுத்தசைதன்னிய சொரூபிகளாயிருந்தும், உம்ஞானம் - உமது சொரூப ஞானத்தை, நீத்து- இழந்து, உடல் உற்று - தேகத்தையான் எனது என்று அபிமானித்தலால், உழன்ற நிர் - [பிறந்து மிறந்து] திரிந்தீர்கள், ஒதகுமோ - ஒஇது தக்கதல்லவே, செஞ்ஞாயிறு அன்ன - செந்நிறமுடைய சூரியன் போன்ற, அத்தேசு அடைந்தால் - அந்த ஞானப்பிரகாசமானது அடையப்பெறுமாயின், [அதனால்], உமைச் சேர் துயரம் - உங்களைப் பொருந்தியிருக்கின்ற [ஜனனமரண] துக்கங்கள், - கருடன் கண்ட - கலுழனாற் பார்க்கப்பட்ட, பாம்பு அழிபண்பு உறும் - சர்ப்பம் நாசமாகின்ற தன்மையைப் போல நாசமாகும். எ—று.

பொ—ரை. மனிதர்களே? நீங்கள் அஞ்ஞானத்தைக் கொஞ்சமேனும் பொருந்தாத பரிசுத்த சைதன்னிய சொரூபிகளாயிருந்தும் உமது சொரூப ஞானத்தை யிழந்து தேகத்தையானெனதென்றபிமானித்தலால் பிறந்திறந்து திரிந்தீர்கள், ஓ இது தக்கதல்லவே. செந்நிறமுடைய சூரியன் போன்ற அந்த ஞானப்பிரகாசமானது அடையப்பெறுமாயின் அதனாலே உங்களைப் பொருந்தியிருக்கின்ற ஜனனமரண துக்கங்கள் கருடனாற் பார்க்கப்பட்ட சர்ப்பம் நாசமாகின்ற தன்மையைப் போல நாசமாகும். எ—று

உடல்உற்று என்பது செயவெனெச்சத்திரிபு.

க-ரை. மனிதர்களே! உமது சொரூப ஞானத்தைப் பெற்றுப் பிறவித் துன்பத்தினின்றும் நீங்குமின். எ—ம். (4)

118. என்று மழிவில் பரானந்த மாகி யிருக்குமும்மை ப்,
பொன்றுட லென்றும் பிறநும வென்னவும் போற்றி
யந்தோ, கொன்றீரத் தாற்சுகப் பேறிழந் தீரக் கொடுந்
தொழில்விட், டொன்றுமுன் னாதென் றிருப்பீர்க
ளோவின் புறுவதற்கே. *

இ-ள். என்றும் - [மனிதர்களே] எக்காலத்தும், அழிவு இல் - நாசமில்லாத, பரஆனந்தம் ஆகி - பேரின்ப சொரூபமாய், இருக்கும்உம்மை - இருக்கின்ற வுங்களை, பொன்றுஉடல் என்றும் - [அற்ப காலத்தில்] அழிந்து போகிற தேகம் [நீவிர்] என்றும், பிற - தேகத்திற்கந்நியமானவை, நுமஎன்னவும் - உம்முடைய வென்றும் [நினைத்து], போற்றி - பாதுகாத்து, அந்தோ - ஐயோ, கொன்றீர் - கெடுத்துக்கொண்டீர், அத்தால்-அவ்வெண்ணத்தால், சுகப்பேறு இழந்தீர் - மோக்ஷானந்தமாகிய இலாபத்தை இழந்திருக்கின்றீர், அக்கொடுந்தொழில்விட்டு - அந்தக் கொடிய செய்கையை ஒழித்து, இன்புஉறுவதற்கு-மோக்ஷ சுகத்தைப் பெறுவதற்கு, ஒன்றும் உன்னாது - யானெனதென்பவற்றுள் ஒன்றினையும் நினையாமல், என்று இருப்பீர்களோ - எக்காலமிருப்பீர்களோ. எ-று.

பொ-ரை. மனிதர்களே! எக்காலத்தும் நாசமில்லாத பேரின்ப சொரூபமாயிருக்கின்ற வுங்களை அற்பகாலத்திலழிந்துபோகின்ற தேகம் நீவிரென்றும், அதற்கந்நியமானவை உம்முடைய வென்றும், நினைத்துப் பாதுகாத்து ஐயோ கெடுத்துக்கொண்டீர். அவ்வெண்ணத்தால், மோக்ஷானந்தமாகிய இலாபத்தை இழந்திருக்கின்றீர். இந்தக்கொடிய செய்கையை யொழித்து மோக்ஷசுகத்தைப் பெறுவதற்கு யானெனதென்பவற்றுள் ஒன்றினையும் நினையாமல் எக்காலமிருப்பீர்களோ. எ-று.

கொன்றென்பது "எந்நன்றி கொன்றார்க்கும்" என்றாற்போலக் கெடுத்தற் பொருளது, உம்மைக்கொன்றீர் எனக்கூட்டுக.

தேகாதியை யானெனதெனக் கருதுதல் பிறவித் துன்பத்துக் கேதுவாதல்பற்றிக் கொடுந்தொழில் என்றார். யானெனதென் னும் எண்ணம் ஒழித்தவர் மோக்ஷமடைதலை "யானெனதென் னுஞ்செருக்கறுப்பான் வானோர்க், குயர்ந்த வுலகம் புகும்" என்று கூறுந்திருக்குறளானுமறிக.

உம்மை நீவிரே கெடுத்துக்கொண்டீர் என்பதற்குதாரணம்.

## பகவற் கீதை.

"தானலதி யாவர்தன் மேன்மை செய்தக்கா ர்
தானலதி யாவர்தன் கீழ்மை சமைப்பா ர்
தானலதி யாவர்தன் மெய்ப் பகையாவா ர்
தானலதி யாவர் தனக்குற வாவா ர்"

என்று கூறுதலானும் அறிக.

க—ரை. மனிதர்களே! தேகாதிகளை யானெனதென்றபி மானித்து அதனால், உங்களை நீங்களே கெடுத்துக்கொள்ளாமல் அவ்வபிமானத்தைக் கெடுத்து மோக்ஷ சுகத்தை யடையுங்கள். எ—ம். (5)

## (விருத்தம்)

119\. இன்பப் பிரஹ்மோ ததிபெருகி யெங்குங் கிடப்பவதைப்
பருகித், துன்பந் துடையா ரக்கடலிற் றோன்றும் வெ
றிய புற்புதமென், றன்ப விடயங் களேமுழுதுஞ் சூழா
தின்பந் தருபொருள்க, ளென்புத் தியினுற் றவித்தவ்வி
யிளைத்தார் களேத்தா ரிதுகொடிதே. *

இ—ள். இன்பப் பிரஹ்ம உததி - ஆனந்த மயமாகிய பிர ஹ்ம சமுத்திரமானது, எங்கும் - எவ்விடத்தும், பெருகிகிடப்ப-

பூரித்திருக்க, அதை - அப்பூரணானந்தத்தை, பருகி - புசித்து, துன்பந்துடையார் - [பிறப்பிறப்புக்களாலுண்டாகுந்] துக்கத்தை யொழிக்க வறியாத அவிவேக ஜனங்கள், அக்கடலில் - அவ்வானந்த சமுத்திரத்தில், தோன்றும் - கற்பிதமாக வுண்டாகின்ற, வெறிய - பயனில்லாதனவும், துன்பம் - துக்கத்தைத் தருவனவுமாகிய, புற்புதம் என் - குமிழியென்று கூறுகின்ற, விடயங்களை - சத்தாதி விஷயங்களை, முழுதுஞ் சூழாது - முற்றிலும் ஆராயாமல், இன்பம் தருபொருள்கள் என் புத்தியினால் - சுகத்தைக் கொடுக்கின்ற வஸ்துக்களென்றெண்ணும் விபரீதவுணர்ச்சியால், தவித்தவ்வி - அவ்விஷயங்களில் பாய்ந்துபாய்ந்து, இளைத்தார் களைத்தார் - மெலிந்து வருந்தினார்கள், இது கொடிது - இது மிகவுந் எ—று.

பொ—ரை. ஆனந்தமயமாகிய பிரஹ்ம சமுத்திரமானது எவ்விடத்தும் பூரித்திருக்க, அப்பூரணானந்தத்தைப் புசித்துப் பிறப்பிறப்புக்களாலுண்டாகுந் துக்கத்தை யொழிக்க வறியாத அவிவேக ஜனங்கள், அவ்வானந்த சமுத்திரத்திற் கற்பிதமாக வுண்டாகின்ற பயனில்லாதனவுந் துக்கத்தைத் தருவனவுமாகிய குமிழியென்று கூறுகின்ற சத்தாதி விஷயங்களை முற்றிலும் ஆராயாமல் சுகத்தைக் கொடுக்கின்ற வஸ்துக்களென்றெண்ணும் விபரீத வுணர்ச்சியினால் அவ்விஷயங்களிற் பாய்ந்து பாய்ந்து மெலிந்து வருந்தினார்கள். இது மிகவுந் தீது. எ—று.

இளைத்தார் என்பது முற்றெச்சம்.

க—ரை. ஜீவர்கள், தாம் ஆனந்த சொரூபிகளாயிருந்தும் அப்படிப்பட்ட தன்னை அநுபவிக்கவறியாமல் அவிவேகத்தால் விடயங்களை விரும்பிப்பற்றுகின்றார். எ—ம். (6)

(7)வது இரங்கலியல் முற்றிற்று.

## [8]-வது உற்றதுரைத்தலியல்.

[வெண்பா]

120. ஒன்று நினையாத துத்தமநெஞ் சம்பிரஹ்ம ம
மொன்றினையே யோர்வதிடை யுள்ள—முன்புகண் ட
வெல்லா நினைப்ப திழிவுளமீ தொன்றுபந் த
மல்லனமுத் திக்கே துவாம். *

இ—ள். ஒன்றும் நினையாதது - [ஆன்மா நான்மாக்களுள்] யாதொன்றையு மெண்ணாதது, உத்தம நெஞ்சம் [ஆம்] - உத்தமமாகிய மனமாம், பிரஹ்மம் ஒன்றினையே ஓர்வது - பிரஹ்மம் ஒன்றையே நினைப்பது, இடைஉள்ளம் [ஆம்] மத்திமமனமாம், முன்பு கண்ட - முற்காலத்தில்[இந்திரியவாயிலாக] விஷயீகரித்த, எல்லாம் நினைப்பது - எல்லா விஷயங்களையுமெண்ணுவது, இழிவு உளம் [ஆம்] - அதமமனமாம், ஈது ஒன்று பந்த [ஏது ஆம்] - இவ்வதம மனமொன்று மாத்திரம் பந்தத்திற்குக் காரணமாம், அல்லன - உத்தமமத்திம மனங்கள், முத்திக்கு ஏது ஆம் - மோக்ஷமடைதற்குக் காரணமாம். எ—று.

பொ-ரை. ஆன்மா நான்மாக்களுள் யாதொன்றையும் எண்ணாதது உத்தம மனமாம். பிரஹ்மம் ஒன்றையே நினைப்பது மத்திம மனமாம். முற்காலத்தில் இந்திரிய வாயிலாக அறிந்த எல்லா விஷயங்களையுமெண்ணுவது அதமமனமாம். இவ்வதம மனமொன்று மாத்திரம் பந்தத்திற்குக்காரணமாம். உத்தமமத்திம மனங்கள் மோக்ஷமடைதற்குக் காரணமாம். எ—று.

ஏது என்பது பந்தமென்பதுடனுங் கூட்டப்பட்டது. ஆம் என்பது கடைநிலைத் தீபகம்.

க-ரை. மு-முக்ஷுக்கள் மனத்தை விஷயசித்தப் பண்

னுவதினின்றுந்தகைந்து, முதலிற் பிரஹம சிந்தனத்திலும், பின்னர் நிர்ச்சிந்தனத்திலும், பழக்கவேண்டும். எ—ம். (1)

121. சச்சிதா னந்தமய வத்துவின்கட் சற்றுமி லா
விச்சகமுண் டாயழித லெங்ஙனெனி—னிர்ச்சனமா ங்
காட்டிருளச் சத்தாற்பேய் காண்டலுமெல் னிர்ப்பயத்தா ன்
மீட்டிலதாய்ப் போதலும்போன் மே. *

இ-ள். சச்சிதானந்தமயவத்துவின்கண் - அஸ்திபாதிப்பிரிய ரூபமாகிய பிரஹம சொரூபத்தினிடத்து; சற்றும் இலா-அற்பமும் [உண்மையாய்] இல்லாத, இச்சகம் - இப்பிரபஞ்சமானது, உண்டாய் அழிதல் - தோன்றி நாசமாகுதல், எங்ஙன் எனில்-எவ்விதமெனக்கேட்கில், நிர்ச்சனம் ஆம் காட்டு - மனித சஞ்சாரமில்லாத காட்டினிடத்து, இருள் அச்சத்தால் - இருட்டினாலும் பயத்தினாலும், பேய் காண்டலும் - பிசாசு தோன்றுதலையும், எல் - சூரியோதயத்தினாலும், நிர்ப்பயத்தால் - பயமின்மையினாலும், மீட்டு - திரும்ப, இலதா - (அப்பேய்த்தோற்றம்) இல்லாமல், போதலும் போன்ம - நீங்குதலையு மொக்கும். எ—று.

பொ-ரை. அஸ்திபாதிப்பிரிய ரூபமாகிய பிரஹம சொரூபத்தினிடத்து அற்பமும் உண்மையிலில்லாத இப்பிரபஞ்சமானது தோன்றி நாசமாகுதல் எவ்விதமென்று கேட்கில் மனித சஞ்சாரமில்லாத வனத்தினிடத்து இருட்டினாலும் பயத்தினாலும் பிசாசு தோன்றுதலையும், சூரியோதயத்தினாலும் பயமின்மையினாலும் திரும்ப அப்பேய்த்தோற்றமில்லாமல் நீங்குதலையும் போலும்.எ—று.

க-ரை. ஒருவனுக்கு இருளினாலும், பயத்தினாலும் கற்பிதமாகப் பேய் தோன்றிச் சூரியோதயத்தினாலும், பயமின்மையினாலும் அதுசித்தல்போல, அஞ்ஞானத்தாற் கற்பிதமாக ஜகத்துத் தோன்றி பிரஹம ஞானத்தால் அது நசிக்கும். எ—ம். [2)

122. ஆத்துமா விற்றோன் றவனிசத்தா மேலழி யா
நீத்திடசத் தேற்றோன்று நேரெதிராம்—பார்க்கி லவை
யந்தவிரண் டிற்கு மயலபின பின்னவய ல்
தொந்தந்தா தான்மியமாஞ் சூழ்ந்து. *

இ—ள். ஆத்துமாவில்-ஆன்மவடிவப் பிரஹ்மத்தினிடத்து, தோன்று - உண்டாகிய, அவனி-பிரபஞ்சமானது - சத்து ஆமேல், உள்ள பொருளானல், அழியா - [எந்த ஞானத்தினுலும் எக்காலத்தும்] பாதமாகமாட்டாது, நீத்திடு - தள்ளத்தக்க, அசத்தேல்-இல்பொருளானல், தோன்று - [எக்காலத்தும் மலடி மகன்போலக்] காணப்படாது, நேர் எதிர் ஆம் - பிரத்தியக்ஷத்தில் அவற்றிற்கு மாறும், (அழிவதும் காணப்படுவதுமாகின்றன) சூழ்ந்து பார்க்கில் - அதனை ஆலோசித்தறியுமிடத்து. அந்த இரண்டிற்கும் - முற்கூறிய சத்துக்கும் அசத்துக்கும், அயல் - வேறும் (சதசத்து விலக்ஷண பாவ பதார்த்தமாம்) அவை - [ஆனல்] அப்பிரஹ்மத்திற்குஞ் சகத்துக்கும்,தொந்தம்-சம்பந்தம் [யாதெனில்], அபினபின்ன அயல் - [அவ்விரண்டினையும் பேதமாகவாயினும் அபேதமாகவாயினுங் கூறவியலாமையால்] அபேதபேதங்களுக்கு வேறாகிய, தாதான்மியம் ஆம் - கற்பிததாதான்மியமாம். எ—று.

பொ—ரை. ஆன்ம வடிவப் பிரஹ்மத்தினிடத் துண்டாகிய பிரபஞ்சமானது உள்ள பொருளானல், எந்த ஞானத்தினுலும் எக்காலத்தும் பாதமாகமாட்டாது. தள்ளத்தக்க இல்பொருளானல், எக்காலத்தும் மலடி மகன்போலக் காணப்படாது. பிரத்திய க்ஷத்தில் அவற்றிற்கு மாறும்.அழிவதும் காணப்படுவதுமாகின்றன. அதனை ஆலோசித்தறியுமிடத்து முற்கூறிய சத்துக்கும் அசத்துக் கும் வேறாம். ஆனல் அப்பிரஹ்மத்துக்கும் ஜகத்துக்கும் சம்பந்தம் யாதெனில் அவ்விரண்டினையும் பேதமாகவாவது அபேதமாகவாவ து கூற வியலாமையால் அபேதபேதங்களுக்கு வேறாகிய கற்பித தாதான்மியமாம். எ-று.

அவை என்பது நான்காம் வேற்றுமைத்தொகை. அழியாது தோன்றாது என்பவற்றின் தல்வீறு குறைந்து நின்றது.

ஜகத்துச்சத்தல்லவென்பார் "அவனி சத்தா மேலழியா" என்றும் அசத்தல்லவென்பார் "அசத்தேற்றோன்று" என்றும் சதசத்து விலக்ஷணமென்பார் "அந்த விரண்டிற்குமயல்", என்றும் பிரஹ்மத்துக்கும் ஜகத்துக்கும் பேதா பேதவிலக்ஷணதாதான்மிய சம்பந்த முளதென்பார் "அபினபின்னவயல் தொந்தந்தாதான்மியம்" என்றுங் கூறினர்.

ஜகத்துச்சத்தின் வேறும் அசத்தின் வேறுமாகிய பாவபதார்த்தம் என்பதின் பொருள் கூறப்படுகிறது. இதி லோர் சங்கை சத்தென்பது உள்ள பொருள். அதனின் வேறென்பது இல்லாத பொருள். அது மலடி மகன் முதலியன. அசத்தென்பது இல்லாத பொருள். அதனின் வேறென்பது உள்ள பொருள். அது பிரஹ்மம். சத்தும் அசத்துமாகிய இவ்விரண்டு பொருள்களைத் தவிர மூன்றாவதான பொருள் கிடையாது. அங்ஙனமிருக்க அவற்றின் வேறு என்று சொல்லின் அச்சொல் பொருளற்றதாம்.

சங்கையின் சமாதானம் - சத்த சத்துக்களுக்கு வேறு என்ற சொல் பொருளற்றதன்று. பிரபஞ்சமாகிய பொருளையுடையதேயாம். சத்திற்கு எதிர் அசத்தும் அசத்துக்கு எதிர் சத்தும் ஆவனவன்றி சத்தின் வேறு அசத்தும் அசத்தின்வேறு சத்துமல்ல. வேறெங்ஙனமெனின், சத்தென்பதற்கு எக்ஞானத்தாலும் எக்காலத்தும் பாதிக்கப் படாதது என்று பொருள். அதனின் வேறென் பதற்கு ஞானத்தாற் பாதிக்கப்படுவது என்பது பொருள். ஆகவே சத்தின் வேறு என்னும் இவ்வளவு வாக்கியத்திற்கு ஞானத்தாற் பாதிக்கப்படுவது (மித்தை யென்று நிச்சயிக்கப்படுவது) என்பது பொருள். அசத்தென்பது மலடி மகன் போலச் சொ

ரூபமில்லாதது. அதனின் வேறு என்பது சொரூபமுடையது. ஆகவே அசத்தின் வேறென்பதற்குச் சொரூபமுடையதென்பது பொருள். இவ்வாறு சத்தசத்துக்களுக்கு வேறென்பதின் இரண்ட பொருள்பாதிக்கப்படத்தக்க சொரூபமுடையது. (ஞானத்தாற் பாதிக்கப்படுவதும் பிரத்தியக்ஷமாகக் காணக்கூடிய சொரூபமுடையதுமாம்).

இனிப் பாவபதார்த்த மென்பதன் பொருள் கூறப்படுகிறது. பாவபதார்த்த மென்றால் சத்துவஸ்து என்றர்த்தமாம். முன் சத்தின் வேறெனவும், பாதிக்கப்படுவதெனவும் கூறிப் பின்னர் அதனையே சத்துவஸ்துவென்று கூறின் வியாகாத (முன்னுக்குப் பின் விரோதமென்னும்) தோஷமுண்டாமெனச் சங்கைவரின் அதற்குச்சமாதானம். அச்சத்து பாதிக்கப்படுவது, பாதிக்கப்படாதது என்னும் பேதத்தாலிருவகைப்படும். அவற்றுள் ஜகத்துப் பாதிக்கப்படுஞ்சத்து. பிரஹ்மம் பாதிக்கப்படாத சத்து. சத்தென்பதற்கு இருப்பு மாத்திரத்தைப் பொருளாகக் கொள்ளல் வேண்டும். எக்காலத்தும் அழியாதிருக்கும் பொருளைப் பாதிக்கப்படாத சத்து வஸ்து வென்பர். அது பிரஹ்மமாம். சில காலமிருந்து பிரஹ்ம ஞானத்தாலழியும் பொருளைப் பாதிக்கப்படுஞ் சத்து வஸ்து வென்பர். அது பிரபஞ்சமாம். ஆகவே சத்துவஸ்து பிரஹ்மம். அசத்து வஸ்து மலடிமகன் முதலியன. சத்தசத்தின் வேறான வஸ்து பிரபஞ்ச முதலியன. இம்மூவகை வஸ்துக்களுள் பிரபஞ்சமானது பிரஹ்மஞானத்தாற் பாதிக்கப்படுவதும், பிரத்தியக்ஷமாகக் காணக்கூடிய சொரூபமுடையதும், பிரஹ்ம ஞானம் வருமளவும் உள்ளது போன்றிருப்பது மாயிருத்தலால் சத்த சத்துக்களுக்கு வேறாகிய பாவபதார்த்தம் எனப்பொருள்படுதல் காண்க.

இனிப்பேதாபேத விலக்ஷண மென்பதன் பொருள் கூறப்படு

கிறது. ஜகத்தைப் பிரகிருதியின் காரியமாகக் கூறியிருத்தலாற் காரியத்தின் சுபாவ மெதுவோ, அதுவே காரணத்தின் சுபாவமா மென்பது நியமம். ஆகவே பிரஹ்மத்தோடு பிரகிருதிக்குள்ள சம்பந்தமே ஜகத்துக்குமாம். காரணமாகிய அப்பிரகிருதியானது சமமாயுள்ள சத்துவாதி முக்குணவடிவ மெனச் சாங்கியமதத்திலும், ஈசுரசக்தியென அத்துவைத வாதத்திலும், கூறப்பட்டிருத்தலால் குணமுஞ், சக்தியுமாகிய அப்பிரகிருதி குணியையுஞ், சக்தனையுமிடமாகக் கொண்டிருப்ப தன்றித் தனித்திராது. ஆனால் யாதேனுமோ ரந்நிய வஸ்துவையே இடமாகக் கொண்டிருத்தல் வேண்டும். அங்ஙனமிருத்தற்குப் பிரஹ்மத்தைத் தவிரவேறு உள்பொருளில்லாமையால் பிரஹ்மத்தினிடத்திலேயே இருப்புக் கூறவேண்டியதாகிறது. பிரஹ்மமோ நிர்க்குணமும் அசங்கமும் ஆம் எனச் சுருதியிற் கூறப்பட்டிருத்தலால் அதனிடத்துப் பிரகிருதிக்கு வாஸ்தவ இருப்புக் கூறுதல் பொருந்தாது. ஆதலால், கயிற்றினிடத்துக் கர்பிதமாகத் தோன்றிய சர்ப்பத்திற்குக் கூறுகின்ற கர்பித இருப்புப் போலக் கர்பித இருப்பை கூறவேண்டியதாகிறது. அந்த இருப்பினையே கற்பித சம்பந்தமென்று கூறுவர். சம்பந்தம் சையோகம், தாதான்மியம் என இருவகைப்படும். வேறு வேருயுள்ள இரண்டு பொருள்கட்கு அவ்விரண்டின் கிரியையாலாவது, அவற்றில் ஒன்றன் கிரியையாலாவது உண்டாவது சையோக சம்பந்தமாம். ஒருவன் கைகுவிக்குமிடத்து அவ்விரண்டு கைகட்கு முளதாகுஞ் சையோகம் அவ்விரண்டு கைகளின் கிரியையாலாகிய தாம். ஒரு விருக்ஷத்திற்கும் பக்ஷிக்கும் உளதாகுஞ் சையோகம் பக்ஷியாகிய ஒன்றன் கிரியையாலாகிய தாம். இங்கே கூறிய பிரஹ்மத்துக்கும் பிரகிருதிக்குமுள்ள சம்பந்தம் ஆதார ஆதேய வஸ்துக்களுக்குப் போன்றிருத்தலால் குணகுணிகட்கும் கிரியை கர்த்தாக்களுக்கும் போலத்தாதான்மிய சம்பந்தமாம். ஆகவே கற்பித தாதான்மிய சம்பந்தமென்றாயிற்று

இனி அவ்விரண்டினையும் பேதமென்றாவது அபேதமென்றாவது கூறுதல் [முறையே அத்துவைத சுருதிக்கு விரோதமாதலினாலும் சேதன சடங்கட்கு அபேதங் கூடாமையாலும்] கூடாதென்றறிக. ஆனால் அவ்விரண்டிற்குமுள்ள பேதங் கயிற்றிற்கும் அதனிடத்துக் கற்பிதமாகக் காணப்படும் பாம்பிற்கும் போலக் கற்பிதமாதலின் வாஸ்தவபேதத்திற்கு விலக்ஷணமாம். அபேதமும் பாதத்தாலாகியதாதலின் அபேதத்திற்கு விலக்ஷணமாம். ஆகவே பேதாபேதங்களுக்கு விலக்ஷணமா(வேறா)கிய கற்பித தாதான்மிய சம்பந்தமாம். ஜகத்துப்பிரகிருதியின் காரியமாதலால், அதற்கும் பிரஹ்மத்திற்கும் இதுவே சம்பந்தமாமெனத் தெரிந்துகொள்க.

க—ரை. ஜகத்து சத்த சத்துக்களுக்கு வேறாகிய பாவ பதார்த்தமும், பிரஹ்மத்தோடு பேதா பேதங்களுக்கு வேறாகிய கற்பிததாதான்மிய சம்பந்தமுடையதுமாம். எ—ம். (3)

(விருத்தம்)

123. சர்க்கரையைப் புலிவடிவா யறியினது துக்கசா தனமாய்ப் பின்னர்ச், சர்க்கரையென் றறியினின்ப சாதனமாந் தனக்கயலாந் தன்மை யாலே, துக்கசா தனமுமென்றன் சொரூபமல வெனுமறிவாற் பிரஹ்ம மென்னுந், தக்கவறி வாலின்ப சாதனமு மானதிந்தத் தன்மையென்னே

இ—ள். சர்க்கரையை - [புலிவடிவாகச் செய்து வைத்திருக்கின்ற] சருக்கரையினை, புலி வடிவாய் - [காமரூப கற்பனையால் வாஸ்தவமாகிய] புலியென்று, அறியின் - [ஒருவன்] பார்த்தால், அது - அச்சர்க்கரைப் புலியானது, துக்கசாதனமாய் - [அவனுக்கு]த் துக்கத்துக்குக் காரணமாயும், பின்னர் - பின்பு,

சர்க்கரை என்று அறியின் - [இதுபுலியன்று தித்திப்புடைய] சருக்கரை யென்றறிந்தால், இன்ப சாதனம் ஆம் - சுகத்துக் கேதுவுமாகும், தனக்கு அயல் ஆம் தன்மையால் - அச்சர்க்கரை யானது தனக்கு வேறுயுள்ள ஓர் விஷயமாயிருத்தலால், [அஃது அஙஙனமாதல் கூடும்,] என் தன் சொரூபம் - [அவ்வாறு எனக்கு வேறுகாத சச்சிதானந்தமாகிய] என்னுடைய சொரூபமானது, உலகு எனும் அறிவால் - [நாமரூப கற்பனையால் இது] பிரபஞ்ச மென்றறியும் அறிவினாலே, துக்க சாதனமும், - [எனக்குத்] துக் கத்துக்குக் காரணமும், பிரஹமம் என்னும் தக்க அறிவால் - நான் பிரஹமம் என்றறிகின்ற [மோக்ஷத்திற்கு] உரிய சாதனமாகிய பிரஹம ஞானத்தினாலே, இன்ப சாதனமும் - பிரஹமானந்தத் துக்குக் காரணமும், ஆனது - ஆயிற்று, இந்தத்தன்மை - இங்ஙனமாய சுபாவமானது, என்னே - ஆச்சரியமாம். எ—று.

பொ—ரை. புலிவடிவமாகச் செய்துவைத்திருக்கிற சர்க் கரையினை நாமரூப கர்பனையால் வாஸ்தவமான புலியென்று ஒரு வனறிந்தால், அச்சர்க்கரைப்புலியானது அவனுக்குத் துக்கத்துக் குக் காரணமாயும், பின்பு இது புலியன்று தித்திப்புடைய சர்க்க ரை யென்றறிந்தால் சுகத்துக்குக் காரணமுமாகும். அச்சர்க்கரையா னது தனக்கு வேறுயுள்ள ஓர் விஷயமாயிருத்தலால், அஃது அங் ஙனமாதல் கூடும். அவ்வாறு எனக்கு வேறுகாத சச்சிதானந்தமா கிய என்னுடைய சொரூபமானது நாமரூபமாகிய கற்பனையால் இது பிரபஞ்சமென்றறியும் அறிவினாலே எனக்குத் துக்ககாரண மும், நான் பிரஹமம் என்று அறிகின்ற மோக்ஷத்திற்குரிய பிரஹம ஞானத்தினாலே பிரஹமானந்தத்திற்குக் காரணமும் ஆயிற்று. இங் ஙனமாய சுபாவம் ஆச்சரியமாம். எ—ம்.

க-ரை. தனது சொரூபமே தனக்கு ஒருகாற்றுக் கத்துக்குக் காரணமும் ஒருகாற் சுகத்துக்குக் காரணமுமாயிருந்தது ஆச்சரி யம். எ—ம். (4)

124. ஒட்டாத போதா முறக்கமெதை யேனுமுன் ள
மொட்டில் வருமதனு துற்பவமுங் கெட்டனவி ப்
பந்தநிலை நீங்கியொன்றும் பற்றாப் பகர்படி க
வந்தநிலை நல்லதுவீ டாம். *

இ-ள். உள்ளம் - மனமானது, ஒட்டாத போது - [யாதொரு விஷயத்தையும்] பற்றாத காலத்தில், ஆம் - உண்டாகின்ற, உறக்கம் - நித்திரையும், ஏதையேனும் ஒட்டில் - எந்த விஷயத்தையாவது பற்றுமாயின், வரும் - அதனாலுண்டாகின்ற, அதன் உற்பவமும்-பற்றப்பட்ட அப்பொருளின் தோற்றமும், கெட்டன- ஆகிய இரண்டும் பிறவித்துக்கத்தைத் தருவனவாம் [ஆதலால்] இப்பந்த நிலை நீங்கி - இந்தப் பிறப் பிறப்பாகிய சமுசாரத்திற் கட்டுப்படுத்துகின்ற கேவல சகலங்களினின்று விலகி, ஒன்றும் பற்றா - யாதொரு பொருளையும் பொருந்தாத, பகல் படிகம் - மத்தியான சூரியனுக்கெதிரில் வைக்கப்பட்ட படிகத்தினை [அசங்கமாய் (ஒன்றோடும் சம்பந்தப்படாமல்) நிற்கின்ற.] அந்த நிலை நல்லது - அந்த நிலை மேலானது, வீடு ஆம் - அந்நிலையால் மோக்ஷமுண்டாகும். எ—று.

பொ-ரை. மனமானது யாதொரு விஷயத்தையும் பற்றாத காலத்தில் உண்டாகின்ற நித்திரையும் எந்த விஷயத்தையாவது பற்றுமாயின், அதனாலுண்டாகின்ற பற்றப்பட்ட அப்பொருளின் தோற்றமும் ஆகிய இரண்டும் பிறவித்துக்கத்தைத் தருவனவாம். ஆதலால் இந்த ஜனன மரண சமுசாரத்திற் கட்டுப்படுத்துகின்ற கேவல சகலங்களினின்று விலகி யாதொரு பொருளையும் பொருந்தாத மத்தியான சூரியனுக்கெதிரில் வைக்கப்பட்டபடிகத்தினை அசங்கமாய் நிற்கின்ற அந்த நிலை மேலானது. அந்நிலையால் மோக்ஷமுண்டாகும். எ—று.

க-ரை. மனமானது கேவல சகலங்களிற்றுக் கற்று நின்றால் அந்நிலையால் மோக்ஷமுளதாம். எ—ம். (5)

125. சத்தாதி நோக்காஞ் சகநோக்கே சன்மவித் தா
மித்தை யொழித்தெங்கு மேகமாம்—புத்துணர் வு
தன்சொரூப ஞான மிஃதடையிற் சாதலுட ன்
பின்பிறப்புச் சாராமை பேறு. *

இ-ள். சத்த ஆதி நோக்காம் - [சுரோத்திராதி யிந்திரியங்களால்] சத்த முதலாகிய விஷயங்களைக் காணுதலாகிய, சகநோக்கே - பிரபஞ்சத்தின் காட்சியே, சன்ம வித்து ஆம் - பிறப்புக்குக் காரணமாம், இத்தை ஒழித்து - இப்பிரபஞ்சக்காட்சியை விடுத்து, எங்கும் ஏகம் ஆம் புத்துணர்வு - எவ்விடத்தும் பூரணமாய் ஏகமாயுண்டாகின்ற அற்புத வறிவே, தன் சொரூப ஞானம் - சச்சிதானந்தகனமாகிய தனது சொரூப ஞானமாம், இஃது அடையில் - இச்சொரூப ஞானத்தை ஒருவன் பெற்றால், பின் - இச்சொரூப ஞானத்தைப் பெற்ற பின்பு, சாதலுடன் - மரணத்தையும், பிறப்பு - ஜனனத்தையும், சாராமை பேறு - அடையாமை அவனுக்குப் பயனாம். எ—று.

பொ-ரை. சுரோத்திராதி இந்திரியங்களால் சத்த முதலாகிய விஷயங்களைக் காணுதலாகிய பிரபஞ்சத்தின் காட்சியே பிறப்புக்குக் காரணமாம். இப்பிரபஞ்சக் காட்சியை விடுத்து எவ்விடத்தும் பூரணமாய் ஏகமாயுண்டாகின்ற அற்புத வறிவே சச்சிதானந்த கனமாகிய தனது சொரூப ஞானம். இச்சொரூப ஞானத்தை ஒருவன் பெற்றால், பெற்ற பின்பு மரணத்துடன் ஜனனத்தையும் அடையாமை அவனுக்குப் பயனாம். எ—று.

க-ரை. இந்திரிய ஞானத்தை யொழித்துப்பரிபூரண ஞானம் பெற்றவனுக்கு மோக்ஷம் பயனாம். எ—ம். (6)

126. நெய்க்கடலைப் புக்கொருவெண் ணெய்ப்பூனைக் குட்டி குடித்
தொக்க விலதாக வொழித்ததென்ற—லொக்கு மே
பேதமொன்று மில்லாப் பிரஹ்மந் தனைப்பே தா
பேதமிலஞ் ஞானம் பிரிப்பு. *

இ-ள். பேதம் ஒன்றும் இல்லா - சுவகதாதி பேதங்களுள் ஒன்றுமில்லாத, பிரஹ்மந்தனை - [ஏக பரிபூரணமாயுள்ள] பிரஹ்மத்தை, பேத அபேதம் இல் - அதனிடத்துப் பேதமாகவாவது அபேதமாகவாவது இல்லாமல், [அவ்விரண்டிற்கும் வேறாய்க் கற்பிதமாயிருக்கின்ற], அஞ்ஞானம் - அஞ்ஞானமானது, பிரிப்பு - [கடல், மலை முதலிய நாநா வஸ்துக்களாகத் தோன்றுமாறு] பிரிவு செய்தது [எதனை யொக்குமெனக்கேட்கில்], ஒரு வெண்ணெய் - ஒரு வெண்ணெயென்று கூறுகின்ற, பூனைக்குட்டி - பூனைப்பறழானது, நெய்க்கடலைப் புக்கு - நெய்ச்சமுத்திரத்தையடைந்து, குடித்து - அதனைப்பருகி, ஒக்க இலது ஆக - அந்நெய் முழுதும் இல்லாததாக, ஒழித்தது என்றல் - கெடுத்தது என்று சொல்லுதலை, ஒக்கும் - ஒப்பாகும். எ—று.

பொ-ரை. சுவகதாதி பேதங்களுள் ஒன்றுமில்லாத ஏக பரிபூரணமாயுள்ள பிரஹ்மத்தை அதனிடத்துப் பேதமாகவாவது அபேதமாகவாவது இல்லாமல் அவ்விரண்டிற்கும் வேறாய்க் கற்பிதமாக விருக்கின்ற அஞ்ஞானமானது, கடல், மலை முதலிய நாநா வஸ்துக்களாகத் தோன்றுமாறு பிரிவு செய்தது எதனை யொக்குமெனக் கேட்கில், ஒரு வெண்ணெயென்று கூறுகின்ற பூனைக்குட்டியானது நெய்ச்சமுத்திரத்தை யடைந்து அதனைப் பருகி அந்நெய் முழுதும் இல்லாததாகக் கெடுத்ததென்று கூறுதலை யொப்பாகும். எ-று.

குளிர்ந்த காலத்திலும் நெய்யினிடத்தில் வெண்ணிறமும் வெண்ணெயென்னும் பெயரும் உண்மையாக இல்லையாயினும் பேதாபேத விலக்ஷணமாகக் கற்பிக்கப்பட்டிருத்தல்போலச் சிருஷ்டி காலத்திலும் பிரஹ்மத்தினிடத்து மலை ஆறு முதலிய நாமரூபங்கள் உண்மையாகவில்லையாயினும் பேதாபேத விலக்ஷணமாகக் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. கற்பனையாகிய அந்நாமரூபங்களின் மறைப்பால் அறியாதவருக்கு வாஸ்தவ சொரூபம் விளங்காமையால் அந்நாமரூபங்களை மறைத்ததென்பார் "பேதமொன்றுமில்லாப் பிரஹ்மந் தனைப்பேதா, பேதமிலஞ் ஞானம் பிரிப்பு, நெய்க் கடலைப் புக்கொருவெண்ணெய்ப் பூனைக் குட்டிருடித், தொக்க விலதாக வொழித்ததென்றவொக்கும்" என்று கூறினர்.

க-ரை. நெய்யினிடத்து வெண்மை முதலிய நாமரூப பேதம் மித்தையாயிருத்தல் போலப் பிரஹ்மத்தினிடத்து மலை ஆறு முதலிய நாமரூபபேதம் மித்தையாயிருக்கின்றன. எ-ம். (7)

127. புத்திமக வீன்று பொருட்சுகஞ்சே மித்தது தா
னெய்த்தும்மை நோக்கிலதற் கீயாது—சத்தா தி
மண்ணே யளித்துங்கண் மாண்பிழந்தீ ரீதவித்தைப் ப்
பெண்ணினைப்பின் பற்று பிழை. *

இ-ள். புத்தி மகவு ஈன்று - புத்தியென்னுங் குழந்தையைப் பெற்று, பொருள் சுகம் - பொருளாகிய பிரஹ்மானந்தத்தை, சேமித்து - மறைத்துவைத்து, அதுதான் - அப்புத்தியென்னுங் குழந்தையானது எய்த்து - இளைத்து, உம்மை நோக்கில் - உங்களைப் பார்த்தால், அதற்கு - அப்புத்தியென்னுங் குழந்தைக்கு, ஈயாது - (பொருளாகிய பிரஹ்மானந்தத்தைக்) கொடாமல், சத்த ஆதிமண்ணே அளித்து - சத்த முதலாகிய விஷயங்களென்னும் மண்ணையே உண்பித்து, உங்கள் மாண்பு இழந்தீர் - உங்களுடைய பெருமையை இழந்துவிட்டீர்கள், ஈது - இப்பெருமையிழப்புக்

குக் காரணம், அவித்தைப் பெண்ணினை - அஞ்ஞானமாகிய மனை விவை, பின்பற்ற பிழை-பின்பற்றிச் செல்லுங் குற்றமாம். எ-று.

பொ—ரை. புத்தியென்னுங் குழந்தையைப் பெற்றுப் பொருளாகிய பிரஹ்மானந்தத்தை மறைத்துவைத்து அப்புத்தியென்னுங் குழந்தையானது இனைந்து உங்களைப் பார்த்தால் அப்புத்தியென்னுங் குழந்தைக்குப் பொருளாகிய பிரஹ்மானந்தத்தைக் கொடாமல், சத்த முதலாகிய விஷயங்களென்னும் மண்ணினையே உண்பித்து, உங்களுடைய பெருமையை இழந்துவிட்டீர்கள். இப் பெருமையிழப்புக்குக் காரணம் அஞ்ஞானமாகிய மனைவியைப் பின்பற்றிச்செல்லுங் குற்றமாம். எ—று.

கு—ரை. மனமே துக்கத்துக்குக் காரணம், அஞ்ஞானத் தோடு கூடியிருத்தல். எ—ம். (௮)

128. பந்தமித்தை நீவிர் பரப்பிரஹ்மந் தக்கமெலாந்
சிந்தையிலே கேட்டுந் தெளிமினே—குந்திமகன்
றன்னையய லானெனவெண் டாழ்வொழிந்தா னெல்லெய்தி
முன்சொல்லக் கேட்ட முறை. *

இ—ள். முன் - முற்காலத்தில், குந்திமகன் - குந்திதே விக்குப் புத்திரனாகிய கன்னனென்னு மோராசன், தன்னை - [க்ஷத்திரியனாகிய] தன்னை, அயலான் என - க்ஷத்திரியனின் வேறான (இழிந்த) வனென்று, எண் - நினைத்திருந்த, தாழ்வு - இழிவினின்றும், ஒழிந்தான் - நீங்கினான், எல் - சூரியன், எய்தி - வந்து, சொல்ல - [நீ க்ஷத்திரியனென்று] உபதேசிக்க, கேட்டு - [தான் க்ஷத்திரியனென்று] அறிந்து, அம்முறை-அவ்விதம், நீவிர்- [மனிதர்களே நம்மைப் பிரஹ்மத்தினும் வேறாய்ப்பிறந்திருக்கின்ற ஜீவனாக எண்ணியிருக்கின்ற] நீங்கள், பரப்பிரஹ்மம்-[ஜீவனல்லீர்] பரிபூரணனாகப் பிரஹ்ம சொரூபராயிருக்கின்றீர், [நாங்கள் பரி

பூரணானந்த சொரூபப் பிரஹ்மமாயின் ஜனனமரண சமுசார பந்தத்தில் அகப்பட்டுத் துக்கமடைவானேன் என்று கேட்பீராயின் கூறுதும்], பந்தம் மித்தை-ஜனனாதி பந்தம் வாஸ்தவமாக இல்லை, துக்கம் எலாம் - தோற்றுகின்ற துன்ப மனைத்தும், சிந்தையவே-மனத்துக்கேயன்றி [நமக்கில்லை], கேட்டும் - [இவ்வுண்மையைச் சுருதியுங் குருவுங்கூறக்] கேட்டும், [அநுபூதியளவிற் கண்டும்], தெளிமின் - அறிந்து கொள்ளுங்கள். எ—று.

பொ—ரை. முற்காலத்திற் குந்தி தேவிக்குப் புத்திரனாகிய கன்னனென்னு மோரரசன் க்ஷத்திரியனாகிய தன்னை க்ஷத்தியரினினும் இழிந்தவனென்று நினைத்திருந்த இழிவினின்றும் நீங்கினான் சூரியன் வந்து நீ க்ஷத்திரியனென்று உபதேசிக்கத் தான் க்ஷத்திரியனென்று அறிந்து. அவ்விதம் மனிதர்களே நும்மைப் பிரஹ்மத்தினும் வேறாய்ப் பிறந்திறக்கின்ற ஜீவனாக வெண்ணியிருக்கின்ற நீங்கள் ஜீவனல்லீர், பரிபூரணானந்தப் பிரஹ்ம சொரூபமாயிருக்கின்றீர். [நாங்கள் பரிபூரணானந்த சொரூபப் பிரஹ்மமாயின் ஜனன மரண சமுசார பந்தத்திற் கட்டுப்பட்டுத் துக்கமடைவானேன் என்று கேட்பீராயின் கூறுதும்] ஜனனாதி பந்தம் மித்தை. தோற்றுகின்ற துன்பமனைத்தும் மனதுக்கேயன்றி நுமக்கில்லை. இவ்வுண்மையைச் சுருதியுங் குருவுங் கூறக்கேட்டும் அநுபூதியளவிற் கண்டும் அறிந்து கொள்ளுங்கள். எ—று.

துக்கங்கள் அவ்வவ்வாகாரமாகப் பரிணமிக்கின்ற மனத்துக்கேயன்றி அவற்றையறியுஞ் சாக்ஷி வடிவாயுள்ள நுமக்கில்லை யென்பார் "துக்கமெலாஞ் சிந்தையவே" என்றார்.

க—ரை. மனிதர்களே கன்னன் சூரியனாற்றனது உண்மைப் பிறப்பையறிந்தாற்போல, நீவிர் சுருதி குருசுவாநுபவங்களால் உமது எதார்த்த சொரூபத்தை யறியுங்கள். எ—று.

[கட்டளைக் கலித்துறை.]

129. எல்லோன் கிரணமதெல்லா விடத்து மிலங்குதல்க ண்
ணில்லாதவர்க ளறியாத வாறென வீங்குருப்பே ர்
புல்லா தொளிர்பரி பூரணந்தன்னை மெய்ப்போதவக் க
ரல்லா தவரெவ்வி தத்தானுஞ் சற்று மறிவரிதே. *

இ-ள். எல்லோன் கிரணம்-சூரியனுடைய வொளியானது, எல்லா இடத்தும் - சர்வதேசங்களிலும், இலங்குதல் - பிரகாசித்தலை, கண் இல்லாதவர்கள் - குருடர்கள், அறியாத ஆறு என - அறிந்து கொள்ளாத தன்மைபோல, ஈங்கு - இவ்வஞ்ஞான காலத்தில், உருப் பேர் புல்லாது - உருவநாமங்களைப் பொருந்தாமல், ஒளிர் - விளங்காநின்ற, பரிபூரணந்தன்னை - பிரஹ்ம சொரூபத்தை, மெய்ப்போத அக்கர் அல்லாதவர் - உண்மையாகிய ஞான நேத்திரமுடைய ரல்லாத அஞ்ஞானிகள், எவ்விதத்தானும் - எந்தவகையினாலும், சற்றும் - கொஞ்சமும், அறிவு அரிது - அறிதலருமையாம். எ—று.

பொ—ரை. சூரியனுடைய வொளியானது சர்வதேசங்களிலும் பிரகாசித்தலைக் குருடர் அறிந்துகொள்ளாத தன்மைபோல, இவ்வஞ்ஞானதசைக்கண் உருவநாமங்களைப் பொருந்தாமல் விளங்காநின்ற பிரஹ்ம சொரூபத்தை உண்மையாகிய ஞான நேத்திரமுடைய ரல்லாத அஞ்ஞானிகள் எந்த விதத்தாலும் கொஞ்சமும் அறிதலருமையாம். எ—று.

க—ரை. சூரியப் பிரகாசம் குருடருக்குத் தோன்றாமை போலப் பிரஹ்மப் பிரகாசம் அஞ்ஞானிகளுக்குத் தோன்றாது. எ—ம். (10)

130. எனக்கிது வேண்டு மெனக்கிது வேண்டுமென் றெண்
ணியெண்ணிக், கனத்திடு முள்ளந்தற் கட்டும் படை

யதிக் காதலின்றித், தினக்கரன் போன்றது வாகி விட
யத்திற் செல்லலொடு, வினைக்கட் டிலாத மனமுத்தி
மேவுவிக் குந்துணையே. *

இ—ள். எனக்கு இது வேண்டும் - எனக்கு இப்பொருள் வேண்டும், எனக்கு இது வேண்டும் - எனக்கு இப்பொருள் வேண்டும், என்று எண்ணிஎண்ணி - எனநினைத்து நினைத்து, கனத்திடும் - தாவிக்கின்ற, உள்ளம் - மனமானது, தன் கட்டும் பகை - தன்னைச் [சனன மரண சமுசாரத்திற்] பந்திக்கின்ற விரோதியாம், இக்காதல் இன்றி- இவ்வாசையில்லாமல், தினக்கரன் போன்றது ஆகி - சூரியன் போலப் பிரகாச முடையதாய், விடயத்தில் - சத்தாதி விஷயங்களில், செல்லலொடு - சென்று பற்றுதலும். வினை - கருமங்களால், கட்டு - தன்னைப் பந்த முறுத்துதலுமாகிய தொழில், இல்லாத - ஒழிந்த, மனம் - [அருவ] மனமானது, முத்தி மேவுவிக்கும் - மோக்ஷத்திற் செலுத்தும், துணை- தோழனும். எ—று.

பொ—ரை. எனக்கு இப்பொருள் வேண்டும் எனக்கு இப்பொருள் வேண்டும் என நினைத்து நினைத்துத் தாவிக்கின்ற மனமானது தன்னைச் சனனமரண சமுசாரத்திற் பந்திக்கின்ற விரோதியாம். இவ்வாசை யில்லாமல் சூரியன்போலப் பிரகாசமுடையதாய்ச் சத்தாதி விஷயங்களிற் சென்று பற்றுதலும் கருமங்களால் தன்னைப் பந்தமுறுத்துதலுமாகிய தொழி லொழிந்த அருவமனமானது மோக்ஷத்திற் செலுத்துந் தோழனும். எ—று.

வினைக்கட்டாவது தொழில் நிகழுங்காலத்தில் இத்தொழிலுக்கு நான் கர்த்தா வென்றெழுஞ் சங்கற்பமாம்.

இங்கே கூறியது போல் பகவற்கீதை "இறவாவகை தன்னுள்ளத்தை யடக்குமவனே தனக் கென்னு முறவாயுள்ளானல்

லாதார்தமக்கே பகையாயொழுகுவார்" என்று கூறுதல் காண்க.

க—ரை. ஆசையாற் றாவித்த மனம் தனக்குப் பகையும், அஃதின்றிச்சுருக்குமமாகிய மனம் தனக்குறவும் ஆம். எ-ம். (11)

131. மதுவாரி கானற் புனற்கடற் சார்ந்தம் மகிமையினைப்
புதிதா யடைந்ததென் பொய்யொக்கு மேபரி பூரணத்தாற்
றுதைதேச காலவத் தந்தமின் றாய சுகமெனுநான்
உதியாத பொய்விடயஞ் சார்ந்தின் புற்ற துரைத்திடினே *

இ—ள். பரிபூரணத்தால் - தனது பரிபூரண சுபாவத்தால், துதை - நெருங்கிய, தேசகாலவத்து அந்தம் இன்று ஆய - தேசத்தினுலுங் காலத்தினுலும் வஸ்துவினுலும் முடிவில்லாததாகிய, சுகம் எனும் நான் - சச்சிதானந்த சொரூபப் பிரஹ்மமென்று கூறுகின்ற நான், உதியாத பொய் விடயஞ் சார்ந்து - வாஸ்தவத்திலுண்டாகாத மித்தையாகிய விஷயங்களைக்கூடி, இன்பு உற்றது உரைத்திடின் - இன்பமடைந்ததாக நினைத்ததைச் சொல்லுமிடத்து, மதுவாரி - [உண்பவர்களுக்குப் பசிமரணங்களைப் போக்குவதாகிய] அமுத சமுத்திரமானது,கானல் புனல் கடல் சார்ந்து- கானல் நீரால் நிறைந்த சமுத்திரத்தைக் கூடி, அம்மகிமையினை - [தன்னைப் பருகுவார்க்குப் பசிமரணங்களைப் போக்குவதாகிய] அப்பெருமையை, புதிதாய் - அக்கானல் நீர்ச் சமுத்திரத்தைக் கூடினபின், அடைந்தது என் பொய் ஒக்கும் - பெற்றது என்று சொல்லும் பொய்யை யொப்பாகும். எ—று.

பொ—ரை. தனது பரிபூரண சுபாவத்தால் நெருங்கிய தேசத்தினுலுங் காலத்தினுலும் வஸ்துவினுலும் முடிவில்லாததாகிய சச்சிதானந்த சொரூபப் பிரஹ்மமென்று கூறுகின்ற நான், வாஸ்

தவத்திலுண்டாகாத மித்தையாகிய விஷயங்களைக் கூடி இன்ப மடைந்ததாக நினைத்ததைச் சொல்லுமிடத்து, உண்பவர்களுக்குப் பசி மாணங்களைப் போக்குவதாகிய அமுத சமுத்திரமானது, கானல் நீரால் நிறைந்த சமுத்திரத்தைக் கூடித் தன்னைப் பருகுவார்க்குப், பசி மாணங்களைப் போக்குவதாகிய அப்பெருமையை அக்கானல் நீர்ச் சமுத்திரத்தைக் கூடினபின் பெற்றது என்று சொல்லும் பொய்மை ஒப்பாகும். எ—று.

ஆனந்தம் சத்து முதலியவற்றிற்கு உபலக்ஷணம்.

க—ரை. சச்சிதானந்த சொரூபமாகிய நான் மித்தையாகிய விடயங்களைக் கூடி இன்ப மடைந்ததாக நினைத்தது மயக்கம். எ—ம். (12)

132. பித்திகை யைச்சுண மென் றோவியமென்று பேதமு ற
வத்திய சித்துக்கண் காணுங்கை பித்திகை யாயறியு ம்
புத்தி யிலானுல கென்றே ருவனிதைப் பொய்மையென்று
பத்திசெய் ஞானி யறியான் பரமெனப் பார்த்திடுமே. *

இ—ள். பித்திகையை-[சுண்ணச்சாந்தினுற் றீற்றிச் சித்திரமெழுதப்பட்டுள்ள] சுவரினை, [அதின் மீது தீற்றியுள்ள சுண்ணச் சாந்தினையும் அதின்மீது எழுதியுள்ள சித்திரத்தையும் ஒருங்கேசுவரென்றறியாமல்], சுணம் என்று - இஃது சுண்ணச் சாந்தென்றும், ஓவியம் என்று - இஃது சித்திரமென்றும், பேதம் உற - வேறு வேறு பொருளாக, அத்திய சித்து-கற்பித்து, கண்காணும் - [ஒருவனுடைய] நேத்திரேந்திரியம் அறியும், கை-அஸ்தத்தின் கண்ணுள்ள தொக்கிந்திரியமானது, பித்திகையாய் அறியும்-[தனக்குச் சுண்ண முதலிய அக்காரிதங்கள் தோன்றாமையால் அவற்றை விடுத்து]ச் சுவர்மாத்திரமாக அறியும்,] இத்திருஷ்டாந்தம்போல,]

புத்திஇலான் - அஞ்ஞானியானவன், உலகு என்று ஒருவன் - [பிரஹ்மம் பிரத்தியக்ஷமாகத் தோன்றாமையால் அதனை மலை ஆறு முதலிய நாநாபேதமாகத் தோற்றுகின்ற] பிரபஞ்சமென்று அறிவான், இதை-[நாமரூப பேதத்தால் நாநா கூறுபாடாயுள்ள]இப்பிரபஞ்சத்தை, பொய்மை என்று-[பிரஹ்மத்திற் கற்பிதமாகலின்] மித்தையென்று நிச்சயித்து, பத்தி செய் ஞானி-யாவரும் வழிபடுதற்குரிய ஞானியானவன், அறியான்-அத்தியஸ் தம் அதிஷ்டானத்தின் வேறாகாமையால் இதன் கண்ணுள்ள நாமரூப பேதங்களைப் பாராமல், பரம் எனப்பார்த்திடும் - [இந்நாமரூபங்களில் அநுசூதமாய் வியாபித்துள்ள சச்சிதானந்த சொரூபத்தைத் தனது அநுபூதியால்] பிரஹ்ம மென்றறிவான். எ—று.

பொ—ரை. சுண்ணச்சாந்திறை் தீற்றிச் சித்திரமெழுதப் பட்டுள்ள சுவரினை அதன்மீது தீற்றியுள்ள சுண்ணச் சாந்தினையும் அதன் மீதுள்ள சித்திரத்தையும் ஒருங்கே சுவரென்றறியாமல் இஃது சுண்ணச் சாந்தென்றும் இஃது சித்திரமென்றும் வேறு வேறு பொருளாகக் கற்பித்து ஒருவனுடைய நேத்திரேந்திரியம் அறியும். கையின்கண்ணுள்ள தொக்கிந்திரிய மானது தனக்குச் சுண்ணமுதலிய அக்கற்பிதங்கள் தோன்றாமையால் அவற்றை விடுத்து சுவர் மாத்திரமாக அறியும். இத்திருஷ்டாந்தம் போல, அஞ்ஞானியானவன் பிரஹ்மம் பிரத்தியக்ஷமாகத் தோன்றாமையால் அதனை நாநா பேதமாகத் தோன்றுகின்ற பிரபஞ்சமென்றறிவான். நாமரூப பேதத்தால் நாநா கூறுபாடுள்ள இப்பிரபஞ்சத்தினைப் பிரஹ்மத்திற் கற்பிதமாகலின் மித்தையென்று நிச்சயித்து யாவரும் வழிபடுதற்குரிய ஞானியானவன் அத்தியஸ் தம் அதிஷ்டானத்தின் வேறாகாமையால், இதன் கண்ணுள்ள நாமரூப பேதங்களைப் பாராமல் இந்நாமரூபங்களிலநுசூதமாய் வியாபித்துள்ள சச்சிதானந்த சொரூபத்தைத் தனது அநுபூதி வலியாற் பிரஹ்மமென்றறிவான். எ—று.

கை ஆகு பெயர், அறியான் என்பது முற்றெச்சம்.

க—ரை. ஒரே வஸ்துவை அஞ்ஞானியும் ஞானியும் முறையே. நாம ரூபக்காட்சியால் பிரபஞ்சமென்றும் சச்சிதானந்தக் காட்சியால் பிரஹ்மமென்றும் அறிவார். எ—ம். (13)

133. உள்ளன் மினெமெய் யொழிவு மிறப்பென வும்வடிவங்
கொள்ளப் படுவதுந் தாமா யிருக்கின்ற கொள்கையி ஞ
லெள்ளப் படுவதுமன் றீதன் றீதன் றெனவனைத்து ந்
தள்ளினங் கெஞ்சொரு மெய்யறி வானந்த சாகரமே. *

இ—ள். மெய் ஒழிவு - (மனிதர்களே உமது) சரீரத்தினது நாசத்தை, உம் இறப்பு என - உமது மரணமென்று, உள்ளன்மின் - நினையாதேயுங்கள், ஏனெனிற் பற்றப்படுவதும் விடப்படுவதுமாகிய அந்நிய வஸ்து வாயிருத்தலாலென்க. ஆனால் இச்சரீரம் எமது சொரூபமல்லவெனின் மற்றியாது எமது சொரூபமென்று கேட்பீராயின் கூறுதும்), உம் வடிவம் - உங்களுடைய சொரூபம் தாமாயிருக்கின்ற கொள்கையினல் - (உமது சரீரம்போல வுமக்கு வேறாகாமல்) அன்னியமாக அதாவது வேறாகாமல் இருக்குந் தன்மையால், கொள்ளப்படுவதும் எள்ளப்படுவதும் அன்று - பற்றப்படுவதும் விடப்படுவது மல்ல, (மற்றெத்தன்மைத் தெனின் அதற்கு மேற் கூறுகின்றார்), ஈது அன்று ஈது அன்று என - (உம்மாற் பார்க்கப்படும் ஒவ்வொரு அனான்ம பதார்த்தத்தையும்) இஃது யானல்ல இஃது யானல்ல என்று நேதி பண்ணி, அனைத்தும் தள்ளின் - (இவ்வாறு எல்லா அநான்ம வஸ்துக்களையும் நீக்கினல், அங்கு - (எதிரிட்டறிய அனான்ம வஸ்துக்களில்லாத) அவ்விடத்து, எஞ்சு - மிஞ்சியிருக்கின்ற ஒரு - அகண்டைகரசமாயுள்ள, மெய் அறிவு ஆனந்த சாகரம் - சத்திய ஞானனந்த சமுத்திரமாம். எ—று.

பொ-ரை. மனிதர்களே! உமது சரீரத்தினது நாசத்தை உமது நாசமென்று நினையாதேயுங்கள். ஏனெனில், பற்றப்படுவதும் விடப்படுவதுமாகிய அன்னிய வஸ்துவாயிருத்தலாலென்க. ஆனால், இச்சரீரம் எமது சொரூபமல்லவெனின் மற்றியாது எமது சொரூபமென்று கேட்பீராயின், கூறுதும். உமது சொரூபம் உமது சரீரம்போல உமக்கு வேறாகாமல் அன்னியமாயிருக்குந் தன்மையால் பற்றப்படுவதும் விடப்படுவதுமல்ல மற்றெத்தன்மைத்தெனின் அதற்கு மேற் கூறுகின்றாம். உம்மாற் பார்க்கப்படும் ஒவ்வொரு அநான்மபதார்த்தத்தையும் இஃது யானல்ல இஃது யானல்லவென்று பேதிபண்ணி இவ்வாறு எல்லா அநான்ம வஸ்துக்களையும் நீக்கினால் எதிரிட்டறிய அநான்ம வஸ்துக்களில்லாத அவ்விடத்து மிஞ்சியிருக்கின்ற அகண்டாகாசமாயுள்ள சத்திய ஞானானந்த சமுத்திரமாம். எ—று.

க-ரை. மனிதர்களே உமது சொரூபஞ் சரீரமன்று சச்சிதானந்தம். எ—ம். (14)

134\. அச்சுத யாகி யமலமு மாயெய் யுறவிடக் [illegible] ச்ச
பிச்சகன் றோற்றமட் டேயெனு ஞான மிழந்தனமே
நச்சுட லுனென்றுந் தன்ன வயலென்று நாடியவ் வை
வச்சுதன் போதன் வசத்தழிந் தாதற்குக் காரணமே. *

இ-ள். நச்சு உடல் - ஒருவன் தன்னால் விரும்பப்படுகின்ற சரீரமே, தான் என்றும் - தனது சொரூபமென்றும், அயல் - சரீரத்திற்கு வேறாயுள்ள பொன் பூமி முதலியன, தன்ன என்றும் - தன்னுடையன வென்றும். [நிச்சயித்து], நாடி - அவற்றை விச்சித்து, அ - அந்த இச்சையால், வைவச்சுதன் [வசத்து] - யமனிடத்துச் [சிக்கி], அழிந்து - இறந்து, போதன் வசத்து - அயனிடத்து [சிக்கி], ஆதற்கு - பிறத்தற்கு, காரணம் - ஏதுவானது.

அச்சுதம் ஆகி - அழிவற்றதாகி, அமலமும் ஆம் - மலமற்றதுமா யிருக்கின்ற, மெய் அறிவு இடத்து - சச்சிதானந்த வடிவப்பிரஹ மத்தினிடத்து, இச்சகம் - இப்பிரபஞ்சமானது, தோற்ற மட்டே எனும் - [கானற்சலம்போல] த் தோன்றுதல் மாத்திரமே யன்றி உள்ளதல்ல வென்றறியும், ஞானம் இழந்தமை - அறிவைப் பெற் றுக்கொள்ளாமையாம். எ—று.

பொ-ரை. ஒருவன் தன்னால் விரும்பப்படுகின்ற சரீரமே தனது சொரூபமென்றும், சரீரத்திற்கு வேறாயுள்ள பொன் பூமி முதலியன தன்னுடையனவென்றும், நிச்சயித்து அவற்றையிச் சித்து அந்த இச்சையால் நமனிடத்துச் சிக்கியிறந்து அயனிடத் துச்சிக்கிப் பிறத்தற்குக் காரணம்- அழிவற்றதாயும் மலமற்றதா யுமிருக்கின்ற சச்சிதானந்த வடிவப் பிரஹமத்தினிடத்து இந்தப் பிரபஞ்சமானது கானற் சலம்போலத் தோன்றுதல் மாத்திரமே யன்றி யுள்ளதல்ல வென்றறியும் அறிவைப் பெற்றுக் கொள்ளா மையாம். எ—று.

க-ரை. ஒருவன் பிறந்திறத்தற்குக் காரணம் பிரபஞ்சத்தில் மித்தியாபுத்தி யுளதாகாமை. எ—ம். (15)

135. சீவ சிருட்டியு மீசுரன்றன் சங்கற்பந் திரவிட் டோ
மேனவர் சிருட்டி யிமையினு முத்தன்கட் டேவர்செய்தார்
தாவி லிறைபரு ளான்செய் யான்றனைத் தான்புரியான்
மேவுற் றிடாது சடத்துவத் தாலது மித்தையதே *

இ-ள். எவர் சிருட்டி - பிரமா முதலிய யாவருடைய சிருட் டிக்கப்படு பிரபஞ்சம், இமையினும் - பொருந்தியுள வெனினும், சீவ சிருட்டியுள் - ஜீவர்களுடைய சிருட்டிகளுள், தன் — தன்னு டைய, ஓதும் - [சிருட்டியென்ற] சொல்லப்படுகின்ற, சங்கற்பம்-

(விருப்பு வெறுப்பு முதலியவாகக் கூறப்படுகின்ற) மனோவியாபாரங்களை, நீரவிட்டோன் - முற்றிலு மொழித்தவன், முத்தன் - முத்தி பெற்றவனுவன், கட்டு ஏவர் செய்தார் - [ஆனல் ஜீவர்களுக்குப்] பந்தத்தை யாவருண்டுபண்ணினவர் (என்று விசாரிக்கப்புகின்), இறை - ஈசுரன், தாஇல் - அழிவற்ற, அருள் ஆளன் - கருணையையுடையவன், செய்யான் - [ஆதலால் அவன் துக்க காரணமாகிய பந்தத்தை] உண்டுபண்ணுன், தனைத்தான் புரியான்-ஜீவன் தன்னைத்தானே பந்தித்துக் கொள்ளான், அது - அப்பந்தம், சடத்துவத்தால் - சடத்தன்மை யுடைமையால், மேவுறுவிடாது - ஜீவனைத் தானே வந்து பற்ருது, [ஆகையால்], அது - [செய்தற்குக் கர்த்தாவின்றிய] அப்பந்தமானது, மித்தை - மயக்கத்தாலாகியதாம். எ—று.

பொ-ரை. பிரமா முதலிய யாவருடைய சிருட்டிக்கப்படு பிரபஞ்சம் பொருந்தியுளவெனினும் ஜீவர்களுடைய சிருட்டிகளுள் தன்னுடைய சிருட்டி யென்று சொல்லப்படுகின்ற விருப்பு வெறுப்பு முதலியவாகக் கூறப்படுகின்ற மனோ வியாபாரங்களை முற்றிலுமொழித்தவன் முத்தி பெற்றவனுவன். ஆனல் ஜீவர்களுக்குப் பந்தத்தை யாவருண்டுபண்ணினவரென்று ஆராயப்புகின் ஈஸ்வரன் அழிவற்ற கருணையையுடையவனுகையால அவன் துக்க காரணமாயுள்ள பந்தத்தை யுண்டுபண்ணுன். ஜீவன் தன்னைத் தானே பந்தித்துக்கொள்ளான். அப்பந்தஞ் சடத்தன்மையுடைமையால் ஜீவனைத்தானே வந்து பற்ருது. ஆகையால் செய்தற்குக் கர்த்தாவின்றிய அப்பந்தம் மயக்கத்தாலாகியதாம். எ—று.

எனைய ஜீவர்களுடைய சிருட்டியுமடங்க எவர்எனப் பலர்பாலாற் கூறினர். சிருட்டி ஆகுபெயர்.

இங்கே மனத்தின் சங்கற்பம் சீவசிருட்டியென்று கூறியிருப்ப

து போலக் கைவல்லியத்தில் "அகந்தையாமபிமானங்கள் கோபங்க ளாசைகளிவையெல்லா, மிகழ்ந்த சீவனுர் சிருட்டிகளாகுங்காணீச னுர் செயலன்றே' எனவும், சங்கற்ப நாசமே முத்தியெனக்கூறி யது போல "மூவாம் பரன் சிருட்டிகளுயிர்க்கெலா முத்தி சாத னமாகுஞ், சீவனுர் செயுஞ் சிருட்டிகடங்களைச் செனிப்பிக்கும் பிணியாகுந், தாவராதி கணசித்திடிலொருவர்க்குஞ் சனனங்கணசி யாவாங், கோபமாதி கணசித்திடிற் பந்தமாங் கொடும் பிறவிகள் போமே" எனவுங் கூறியிருத்தல் காண்க.

க-ரை. மித்தையாகிய பந்தம் ஒருவனுக்குத் தனது சங்கற் ப நாசத்தால் நாசமாம். எ—ம். (16)

136. மெய்யினை மெய்யெனும் புத்தி விடான்சன்மம் விட்டு விடான், மெய்யினைப் பொய்யெனும் புத்தி யுளானின்ப வீடு விடான், ஐயமின் றாய்மன மெப்பொரு ளாகி ய ழுந்துமதன், மெய்யுரு வாமென் றருமறை கூறும் விதியினன்றே. *

இ-ள். மெய்யினை - தேகத்தை, மெய் எனும் - உண்மை யென்று நிச்சயிக்கின்ற, புத்தி விடான் - நிச்சயத்தை யொழிக் காதவன், சன்மம் விட்டுவிடான் - பிறப்பிறப்பிற் சுழலுவான், மெய்யினை-தேகத்தை,பொய் எனும்-மித்தையென்று நிச்சயிக்கும், புத்தி உளான் - நிச்சயமுடையவன், இன்பவீடு விடான் - ஆனந் த மயமாகிய மோக்ஷத்தையடைவான், [இங்ஙனமாதற்குக்காரணம் என்னையெனின்], ஐயம் இன்றாய் - சந்தேகமில்லாமல், மனம் - எவனுடைய அந்தக்கரணமானது, எப்பொருள் ஆகி - எந்தவஸ்து விஞ்ஞாகாரத்தையடைந்து, அழுந்தும் - பதிந்திருக்குமோ, [அந்த மனமுடையவன் மறுபிறப்பில்], அதன் மெய் உரு ஆம் என்று - அவ்வஸ்துவினுடைய எதார்த்த சொரூபமாகுவனென்று, அரு

மறை - அருமையாகிய வேதத்தின்கண், கூறும் - விதிக்கப்பட்டுள்ள, விதியின் - நியமமாதலால். எ—று.

பொ-ரை. தேகத்தை உண்மை யென்று நிச்சயிக்கு நிச்சய முடையவன் பிறப்பிறப்பிற் சுழலுவான். தேகத்தை மித்தையென்றெண்ணும் புத்தியையுடையவன் ஆனந்த மயமாகிய மோக்ஷத்தை யடைவான். இங்ஙனமாதற்குக்காரணம் என்னையெனின், சந்தேகமில்லாமல் எவனுடைய அந்தக்கரணமானது எந்த வஸ்துவினுகாரத்தை யடைந்து பதிந்திருக்குமோ அந்த மனமுடையவன் மறுபிறப்பில் அவ்வஸ்துவினுடைய எதார்த்த சொரூபமாகுவனென்று அருமையாகிய வேதத்தின்கண் விதிக்கப்பட்டுள்ள நியமமாதலால். எ—று.

இங்கே மனம் எப்பொருளில் அழுந்துகின்றதோ அந்த வுருவாகவே சென்மமுண்டாம் என்று கூறியதற்கு உதாரணம். பகவற்கீதை "இந்த வுடலம் விடும்பொழுதியாவன் யாதொன்றினை நினைந்தானந்தவனவே யந்தப்பாவனை யாலதனை யடையுமா, லென்றனியல்பே யெப்பொழுது மிதயத்திடை கொண்டேன் பாலாகு, சிந்தையொடும் வானமர் தொடக்கிலகளுலனை மெய் சேருதியால்" என்று கூறுதல் காண்க.

க-ரை. ஒருவன் பந்தமடைதற்கும் மோக்ஷமடைதற்கும் அவனது மனோவிருத்தியே காரணம். எ—ம். (17)

[விருத்தம்.]

137. காணி லவிகள் வணக்கி மடக்கமைக் கருந்தக் கவலையக்கத், தான மிருந்து முறைமன் மரைதனையுங் குலையத் தாக்குதல்போன், ஞானி தனைப்பூ சனைபுரிந்து நல்லோரின்ப நனல் கண்டு, மீன நிசழ்ந்து துன்புறப்ப செரிவாய் நரகத் தினைவதற்கே. *

இ—ள். கானில் - [செப்மைக்கண்ணுள்ள] சோலைகளில் வாசஞ் செய்கின்ற, அளிகள் - வண்டுகள், [தடாகத்திற்சென்று] கமலத்து - [அங்கு மலர்ந்திருக்கின்ற] தாமரை மலரினிடத்து, வணங்கி - தலைகுனிந்து, மது அருந்த - [அதன் கண்ணுள்ள] தேனைப்பருக, தவளை - மண்டூகமானது, அந்தத்தானம் இருந்தும்- அந்தத் தடாகத்தின்கண் வாசஞ்செய்தும், உணுமல் - அம்மலரி னிடத்துள்ள தேனைப்பருகாமல், மலைதனையும் - அத்தாமரை மலரையும், குலையத்தாக்குதல்போல் - வருந்தும்படி தாவித்தாவி மோதுதல்போல், நல்லோர் - மோக்ஷவிச்சையுடைய விவேகிகள், ஞானிதனை - ஜீவன் முத்தனை, பூசனை புரிந்து - [தூரதேசத்திலிருந்துந் தெரிந்துவந்து புஷ்பபலாதிகளால் விதிப்படி] ஆராதித்து [அவனுலுபதேசிக்கப்பெற்று], இன்பம் நணல்கண்டும் - பிரஹ்மானந்தமடைதலைத் தெரிந்திருந்தும், நனர் - அவிவேகிகள், எரிவாய்நரகத்து - அக்கினிசுவாலிக்கின்ற நரகத்தின்கண் [வீழ்ந்து], இனைவதற்கு - வருந்துவதற்காக, இகழ்ந்து - [அச்சீவன் முத்தனை] நிந்தித்து, துன்புறுப்பர் - வருந்தச்செய்வர். எ—று.

பொ—ரை. செப்மைக்கண்ணுள்ள சோலைகளில் வாசஞ் செய்கின்ற வண்டுகள் தடாகத்தில் சென்று அங்கு மலர்ந்திருக்கின்ற தாமரை மலரினிடத்துத் தலை குனிந்து அதன்கண்ணுள்ள தேனைப் பருக, மண்டூகமானது அத்தடாகத்தின்கண் வாசஞ் செய்தும் அம்மலரினிடத்துள்ள தேனைப் பருகாமல் அத்தாமரை மலரையும் வருந்தும்படி தாவித்தாவி மோதுதல்போல, மோக்ஷவிச்சையுடைய விவேகிகள் ஜீவன் முத்தனைத் தூர தேசத்திலிருந்துந் தெரிந்துவந்து புஷ்பபலாதிகளால் விதிப்படி ஆராதித்து அவனுலுபதேசிக்கப்பெற்றுப் பிரஹ்மானந்தமடைதலைத் தெரிந்திருந்தும், அவிவேகிகள் அக்கினி சுவாலிக்கின்ற நரகத்தின்கண் வீழ்ந்து வருந்துவதற்காக அச்சீவன் முத்தனை நிந்தித்து

வருந்தச்செய்வார். எ—று.

க—ரை. ஞானியைப் பூசித்தவர் மோக்ஷவின்பமும், தூஷித்தவர் நரகத்துன்பமும் அடைவர். எ—ம். (18)

138. தேக மவத்தை யொன்றிலிருந் தொன்றி லிலதாத் நீங்
தொழியத், தேகி யொழியா தறிவாய்நித் தியமாய்த்
திகழ விவையறிவி, வேக மில்லா ரவ்வுடலை மெய்யென்
றகந்தை மமதையுற்று, மோகிக் கின்றார் துயர்க்கடலின்
மூழ்கா தென்று மீளுவரே. *

இ-ள். தேகம் - தூலசரீரமானது, அவத்தை ஒன்றில் இருந்து - சாக்கிர மென்னும் ஓரவஸ்தையில் விளங்கியிருந்து, ஒன்றில் இலதா - சொப்பன வஸ்தையில் விளங்குதலின்றி, நீங்கு ஒழிய - நீங்கிப்போக, தேகி - ஆன்மாவானது, ஒழியாது - [எல்லா அவஸ்தைகளிலும்] இல்லாததாகாமல், அறிவாய் - (அத்தேகத்தினது உண்மையையும் இன்மையையும் அறியும்) சாக்ஷியாய், நித்தியமாய் - அதனால் எக்காலமும் உள்ளதாய் திகழ - விளங்க, இவை அறி விவேகம் இல்லார் - இவற்றை யுணர்கின்ற ஞானமில்லாதவர், அவ்வுடலை - அந்த அநித்தியமாகிய தேகத்தை, மெய் என்று - நித்தியமென்று (நினைத்து), அகந்தை மமதை உற்று - அதை யானென தென்றபிமானித்து, மோகிக்கின்றார் - மயங்குகின்றார் (இம்மயக்கமுடையார்), துயர்க்கடலில் - துக்க சமுத்திரத்தில், மூழ்காது - அழுந்திக்கிடப்பதன்றி. என்று மீளுவர் - எக்காலத்தில் சுகமாகிய கரையேறுவர் (ஓர் காலத்துங்கரையேறார்). எ—று.

பொ-ரை. தூலசரீரமானது சாக்கிர மென்னும் அவஸ்தையில் விளங்கியிருந்து சொப்பனவஸ்தையில் விளங்காமல் நீங்கிப் போக, ஆன்மாவானது எல்லா அவஸ்தைகளிலும் இல்லாததாகா

மல் அத்தேகத்தினது உண்மையையும் இன்மையையும் அறியுஞ் சாக்ஷியாய் அதனாலெக்காலமு முள்ளதாய் விளங்க, இவற்றை யுணர்கின்ற ஞானமில்லாதவர் அந்த அநித்தியமாகிய தேகத்தை நித்தியமென்று நினைத்து அதை யானெனதென் றபிமானித்து மயங்குகின்றார். இம்மயக்கமுடையார் துக்கசமுத்திரத்திலழுந்திக் கிடப்பதன்றி எக்காலத்திற் சுகமாகிய கரையேறுவர். ஓர் காலத்தும் கரையேறார். எ—று.

க-ரை. தேகான்ம புத்தியுடையார்க்கு அத்தேகான்மாக்களின் விவேகமின்மையால், துக்கமே பயனாம். எ—ம். (19)

139. குருட்டுக் கிழவி யொருத்திசற் றுங் குருடி லானைவ
ருந்தும் வண்ண, மருட்டினா ளென்பது போலும் வருந்
து மாறிங் கஞ்ஞானம், புரட்டித் துயரம் புரிந்ததென்
றல் பொய்மெய் யுமைத்துன் புறுத்தாது, இருட்டி லாநீ
ருடையறியா திருந்த குறையே பிறிதில்லை. *

இ-ள். (மனிதர்களே) இங்கு - இவ்வுலகத்தில், வருந்துமாறு - (பிறந்து மிறந்தும்) கஷ்டமடையுமாறு, அஞ்ஞானம் - (சடசுபாவமுடைய) அவித்தையானது, புரட்டித்துயரம் புரிந்தது என்றல் - புத்தியை மாறு படுத்தி எம்மைத் துன்புறுத்தியது என்று கூறுதல், குருட்டுக் கிழவி ஒருத்தி, சற்றும் - அற்பமும், குருடு இலானை - குருடில்லாத சாமர்த்தியசாலியை, வருந்தும் வண்ணம் - துன்பமடையும்படி, மருட்டினாளென்பது போலும் - மயக்கினாளென்று சொல்லுகின்ற பிராந்தி வசனத்தை யொக்கும், (ஆனால் அஞ்ஞானம் எம்மைத் துன்புறுத்த வில்லையோ வெனின் அதற்குக் கூறுகின்றார்). பொய் மெய்யுமை - மித்தையாகிய அஞ்ஞானம் சத்தியமாகிய வும்மை, துன்பு உறுத்தாது - கஷ்டப்படுத்தாது,) ஆயின் எமக்கு இத்துன்பம் வருவானேனெனின், சற்றும்)

இருட்டெனிலாரீர் - அற்பமும் அஞ்ஞான சம்பந்தமில்லாத (அறிவு வடிவாயுள்ள) நீங்கள், உமை - உங்களை, அறியாது - [அப்பிறப் பிறப்புச் சுகதுக்காதி தருமங்களை யறியும் சாக்ஷி சொரூபரென் று] விசாரித்தறியாது, இருந்த குறையே - [அத்தருமங்களையு டைய தேக மென்று மயங்கி] யிருந்த குற்றமேயன்றி, பிறிது இல்லை-உமக்கு வேறாக ஓரஞ்ஞானமிருந்து வருத்தவில்லை. எ-று.

பொ-ரை. மனிதர்களே இவ்வுலகத்திற் பிறந்து மிறந்துங் கஷ்டமடையுமாறு சடசுபாவமுடைய அவித்தையானது புத்தி யை மாறுபடுத்தி எம்மைத் துன்புறுத்தியது என்று கூறுதல், கு ருட்டுக் கிழவியொருத்தி அற்பமுங் குருடில்லாத சாமர்த்தியசாலி யைத் துன்பமடையும்படி மயக்கினளென்று சொல்லுகின்ற பிராந் தி வசனத்தையொக்கும். ஆனால் அஞ்ஞானம் எம்மைத் துன் புறுத்தவில்லையோவெனின் அதற்குக் கூறுகின்றார். மித்தையா கிய அஞ்ஞானம் சத்தியமாகிய வும்மைக் கஷ்டப்படுத்தாது. ஆ யின் எமக்கு இத்துன்பம் வருவானேன் எனின், அற்பமும் அஞ் ஞான சம்பந்தமில்லாத (அறிவு வடிவாயுள்ள) நீங்கள் உங்களை அப்பிறப்பிறப்புச் சுகதுக்க முதலிய தருமங்களையறியுஞ் சாக்ஷி வடிவமென்றறியாது அத்தருமங்களையுடைய தேகமென்று மயங்கி யிருந்த குற்றமேயன்றி உமக்கு வேறாக ஓரஞ்ஞான மிருந்து மயக் கவில்லை. எ—று.

க-ரை. ஜீவர்களே நீங்கள் பிறவித்துன்பத்தில் வருந்துதற் குக் காரணம் அவிசாரமாம். எ—ம். (20)

140. காயா திதமானசிதா காய வடிவா கீருநித் து
மாயா வணங்குற் றனமென்னன் மயக்கந் துக்க நமதன்று
மாயா மயமா மஸீதந்த மாயா மயமா மனத்ததுரை த்
தோயா தும்மைத் தோயினெரி சுடர்க்கா னலிசீ ரகித்திடுமே.

இ-ள். காய அதீதமான - [தூல சூக்கும காரணமென்னு மூன்று] சரீரங்களிலுஞ் சம்பந்திக்காமல் [அநாதி நித்திய அசங்க பரிபூரணமா யுள்ள], சிதா காயவடிவு ஆம் நீர் - சிதாகாய சொரூபாகிய நீங்கள், உதித்து மாயா - பிறந்தும் இறந்தும், அணங்கு உற்றனம் என்னல் - துக்கமடைந்தோ மென்று கூறுதல், மயக்கம் - [சரீரத்தின் தொழிலாகிய பிறப்பிறப்புக்களை உம்முடையன வாக மதித்தலால்] பிராந்தியாம், துக்கம் நமது அன்று - ஆதலால் அத்துக்கம் உம்முடையதன்று, [ஆனால் அத்துக்கம் யாவருடையதென்று கேட்பீராயின்], மாயா மயமாம் அஃது - மித்தையாகிய அத்துக்கமானது, அந்த மாயாமயம் ஆம்மனத்தது - அம்மித்தையாகிய மனத்தினுடையதேயாம், உமைத்தோயாது - [அக்காரணத்தால் அசங்கமாயுள்ள] உம்மைப் பற்றாது, [விளங்குகின்ற அத்துக்கமானது இருத்தற்கு வேறே ஆசிரயமின்மையால் எம்மையே ஆசிரயித்திருக்கிறதென்று கூறியவாறு], உம்மைத் தோயின் - [நித்தியராயுள்ள வும்மிடத்து அநித்தியமாகிய அத்துக்கம் உண்மையாகச்] சம்பந்தித்திருக்குமாயின், எரிசுடர் - சுவாலிக்கின்ற அக்கினியை, கானலின்நீர் - [அவ்விடத்து அதனோடு சம்பந்தமுடையது போலக் காணப்படும்] கானற்சலமானது, அவித்திடும் - கெடுத்துவிடும். எ—று.

பொ-ரை. தூலசூக்குமகாரணமென்னு மூன்று சரீரங்களிலுஞ் சம்பந்திக்காமல் அநாதி நித்திய அசங்க பரிபூரணமாயுள்ள சிதாகாய சொரூபாகிய நீங்கள் பிறந்தும் இறந்தும் வருத்தமடைந்தோமென்று கூறுதல் சரீரத்தின் தொழிலாகிய பிறப்பிறப்புக்களை உம்முடையனவாக மதித்தலாற் பிராந்தியாம். ஆதலால், அத்துக்கம் உம்முடையதன்று. ஆனால் அத்துக்கம் யாவருடையதென்று கேட்பீராயின், மித்தையாகிய அத்துக்கமானது அம்மித்தையாகிய மனத்தினுடையதேயாம். அக்காரணத்தால் அசங்க

மாயுள்ள வும்மைப்பற்றுது. விளங்குகின்ற அத்துக்கமானது இருத்தற்கு வேறே ஆசிரயமின்மையால் எம்மையே ஆசிரயித்திருக்கிறதென்று நீர் சங்கித்தவாறு நித்தியமாயுள்ள வும்மிடத்து, அநித்தியமாகிய அத்துக்கம் உண்மையாகச் சம்பந்தித்திருக்குமாயின், சுவாலிக்கின்ற அக்கினியை அவ்விடத்து அதனோடு சம்பந்தமுடையதுபோலக் காணப்படுங் கானற்சலமானது கெடுத்துவிடும். எ—று.

க-ரை. ஜனனமரணாதி சமுசாரதுக்கங்கள் மனோ கற்பிதமே யன்றி நித்தியமாகிய ஆன்மாவினிடத்தின்று. எ—ம். (21)

(8)வது உற்ற துரைத்தலியல் முற்றிற்று.

——:0:——

## [9] வது உறுவது கூறலியல்.

141. பையகம்பார்ப் பார்க்ககமே தோன்றுமன்றிப் புறந்
தோன்று பக்கம் பார்ப்போர்க், கையயின்றிப் புறந்
தோன்று மல்லதகந் தோன்றுதல் வடைவே போல,
கைவில்சற்சிற் சுகம்பார்ப்போர்க் கவ்வகண்டந் தோன்று
மன்றி ஞாலந் தோன்று, வையகம்பார்ப் பார்க்கதுவே
தோன்றுமன்றிப் பரம்பொருடான் வயங்கி டாதே. *

இ-ள். பை அகம்பார்ப்பார்க்கு - ஒரு பையினது உட்பக்கத்தை நோக்குவோர்க்கு, அதுமேதோன்றும் அன்றி - அதனது உட்பக்கமாத்திரம் விளங்குமல்லாமல், புறம் தோன்று - வெளிப்பக்கம் விளங்கமாட்டாது, பக்கம் பார்ப்போர்க்கு - அப்பையினது

டைய வெளிப்பக்கத்தை நோக்குவோர்க்கு, ஐயம்இன்றி - சந்தேகமில்லாமல், புறம் தோன்றும் அல்லது - வெளிப்பக்கம் விளங்குமல்லாமல், அகம் தோன்றாது - உட்பக்கம் விளங்கமாட்டாது, அவ்வடைவுபோல - அம்முறைமை யொப்பாக, கைவில் - கேதெவில்லாத, சற்சிற்சுகம் - சச்சிதானந்த [அகண்டைகாரசொரூப] த்தை, பார்ப்போர்க்கு - தரிசிப்பவர்களுக்கு, அவ்வகண்டம் தோன்றும் அன்றி - அந்த ஏக பரிபூரண சொரூபமே விளங்குமல்லாமல், ஞாலம் தோன்றா - பிரபஞ்சம் விளங்கமாட்டாது, வையகம் பார்ப்பார்க்கு - [நாமரூபமயமாகிய] பிரபஞ்சத்தைக் காண்பவர்களுக்கு, அதுவே தோன்றும் அன்றி - அந்தப்பிரபஞ்சமாத்திரம் விளங்குமல்லாமல், பரம்பொருள் - பிரஹ்ம சொரூபமானது, வயங்காது - விளங்காது. எ—று.

பொ-ரை. ஒரு பையினுடைய உட்பக்கத்தை நோக்குவோர்க்கு அதனது உட்பக்கமே விளங்குமல்லாமல் வெளிப்பக்கம் விளங்கமாட்டாது. அப்பையினுடைய வெளிப்பக்கத்தை நோக்குவோர்க்குச் சந்தேகமில்லாமல் வெளிப்பக்கம் விளங்குமல்லாமல் உட்பக்கம் விளங்கமாட்டாது. அந்த முறைமை யொப்பாகக் கேதெவில்லாத சச்சிதானந்த அகண்டைகாரச சொரூபத்தைத் தரிசிப்பவர்களுக்கு அந்த ஏக பரிபூரண சொரூபமே விளங்குமல்லாமல் பிரபஞ்சம் விளங்கமாட்டாது. நாமரூபமயமாகிய பிரபஞ்சத்தைக் காண்பவர்களுக்கு அந்தப் பிரபஞ்ச மாத்திரம் விளங்குமல்லாமல் பிரஹ்ம சொரூபம் விளங்கமாட்டாது. எ—று.

தோன்றுதென்பதற்பின் தங்கீறுகள் குறைந்து நின்றன.

உ-ரை. அகாரட்ட முடையவர்க்குப் பரம்பொருளும் புற

ஈட்ட முடையார்க்குச் சகத்துத் தோற்றம். எ-ம். (1)

142. போக்கியலால் வளிவானைப் பொருவுறு தெனினுமந்தப்
போக்கு நீங்கி, னீக்கமற்று வானுடனாய் நிற்குமது போ
னிறைந்து நிமல மாகிப், போக்குவர வறுபிரமத் துரு
வமனம் பிறிதெனினும் புணர்ப்பு நீங்கிற், சூக்குமமா
யுடனாகி யின்புதவுஞ் சமாதியின்கட் டுலங்கு மீதே. *

இ-ள். வளி - காற்றானது, போக்கு இயலால் - சலித்துச் செல்லுந் தன்மையினால், வானைப் பொருவுறாது எனினும் - ஆகாயத்தை யொப்பாகாதென்றாலும், அந்தப்போக்கு நீங்கின் - அச்சலிக்குந்தன்மை யொழிந்தால், நீக்கம் அற்று - பிரிவின்றி, வான் உடனாய் நிற்கும் - ஆகாயத்தோடு கலந்திருக்கும், அதுபோல் - அதையொத்து, நிறைந்து நிமலமாகி - பரிபூரணமாயும் நிருமலமாயும், போக்குவரவு அறு - அசலமாயுமுள்ள, பிரமத்து - பிரமசொரூபத்தில், உருவமனம் - [விடய சம்பந்தமுடைய] தூலமனம், பிறிது எனினும் - வேறென்று கூறப்படினும், புணர்ப்பு நீங்கில் - [விஷய] சம்பந்த மொழிந்த விடத்து, சூக்குமம் ஆய் - [அம்மனம்] நுண்ணிதாய், உடன் ஆகி - [பிரமத்துடன்] ஏகமாய் [அடங்கி], இன்பு உதவும் - ஆனந்தத்தைக் கொடுக்கும். ஈது - இவ்வநுபவமானது, சமாதியின் கண் - நிருவிகற்பசமாதியி லிடத்து, துலங்கும் - [அஃதுடையவனுக்கு] விளங்கும். எ-று.

பொ-ரை. காற்றானது சலித்துச்செல்லுந் தன்மையினும் ஆகாயத்தை யொப்பாகாதென்றாலும் அச்சலிக்குந் தன்மை யொழிந்தாற் பிரிவின்றி ஆகாயத்தோடு கலந்திருக்கும் அதையொத்துப் பரிபூரணமாயும் நிருமலமாயும் அசலமாயுமுள்ள பிரமசொரூபத்தில் விடய சம்பந்தமுடைய தூலமனம் வேறென்று கூறப்படினும், விடய சம்பந்தமொழிந்தவிடத்து அம்மனம் நுண்ணி

தாய்ப் பிரஹ்மத்துடன் ஏகமாயடங்கி ஆனந்தத்தைக் கொடுக்கும். இவ்வநுபவமானது நிருவிகற்ப சமாதியினிடத்து அஃதுடையவனுக்கு விளங்கும். எ—று.

க-ரை. மனந்துலத்தன்மை நீங்கிய விடத்துப் பிரஹ்ம சொரூபத்தைச்சார்ந்து சுகாநுபவந்தரும். எ—ம். (2)

வெண்பா.]

143. சற்றே யுளமசையிற் சாருஞ் சகாநுப வ
மற்றக்கா லின்ப வநுபவமாம்—பெற் ற
வுடற்றொழிலாற் றுன்புமத னோய்வாலே யின் பு
மடுப்பதிங்கி யாரறியா தார். *

இ-ள். பெற்ற - [மனிதர்களுக்குப் பிராரத்த வசத்தாற் கிடைக்கப்பட்ட, உடல்தொழிலால் - சரீரத்தாற்செய்யு முயற்சியினாலே, துன்பும் - துக்கமும், அதன் ஓய்வால் - அச்சரீரத்தாற் செய்யு முயற்சியின்மையால், இன்பும் - சுகமும், அடுப்பது - கிட்டுதலை, இங்கு - இவ்வுலகத்தில், யார் அறியாதார் - யாவருணராதவர்கள், [இத்திருஷ்டாந்தம்போல] உளம் சற்று அசையில் - மனமானது [விடயவாசனையாற்] கொஞ்சமேனுஞ் சலிக்குமானால், சுக அநுபவம் சாரும் - [அப்பொழுது] பிரபஞ்சத்தோற்றாவுளதாம், அற்றக்கால் - [அம்மனதுக்குச்] சலிப்பு நீங்கியவிடத்து, இன்ப அநுபவம் ஆம் - பிரஹ்மானந்தாநுபவம் உளதாம். எ—று.

பொ-ரை. மனிதர்களுக்குப் பிராரத்தவசத்தாற் கிடைக்கப்பட்ட சரீரத்தாற் செய்யு முயற்சியினாலே துக்கமும், அச்சரீரத்தாற் செய்யு முயற்சி யின்மையாற் சுகமுங்கிட்டுதலை இவ்வுலகத்தில் யாவருமுணராதவர்கள். இத்திருஷ்டாந்தம்போல, மனமானது விடயவாசனையாற் கொஞ்சமேனுஞ் சலிக்குமானால் அப்பொ

மூது பிரபஞ்சத்தோற்றாயுள்ளதாம். அம்மனதுக்குச் சலிப்பு நீங்கியவிடத்துப் பிரஹ்மானந்தாநுபவமுளதாம். எ—று.

க-ரை. மனமசைந்தாற் பிரபஞ்சாநுபவமும் அஃது அசையாதவிடத்திற் பிரஹ்மானந்தாநுபவமுமுளவாம். எ—ம். (3)

144. புறப்போத மஞ்ஞன் புரிவானுட் போத ஞ்
சிறப்பாய ஞானியிச்சிப் பான்—இறப்பா ம்
கடமாதிக் காட்சியாற் கட்டுமுத்தி தா ஆ
மிடவான்மக் காட்சியெய்த வே. *

இ-ள். இங்கு - இவ்வுலகத்தில், புறப்போதம் - வெளிஞானத்தை, அஞ்ஞன் - அஞ்ஞானி, புரிவான் - விரும்புவான், உள்போதம் - ஆந்தர ஞானத்தை, சிறப்பாய - உயர்வாகிய, ஞானி - ஜீவன்முத்தன், இச்சிப்பான் - விரும்புவான், (ஏனெனின் முறையே), இறப்பு ஆம் - (பார்த்திருக்க) நாசமாகின்ற, கடம் ஆதிக் காட்சியால் - குடமுதலிய பிரபஞ்சப்பொருள்களைக்காணுதலால், கட்டும் - பந்தமும், இட - (பிரபஞ்ச வஸ்துக்களாகிய அத்தியஸ்தங்களுக்கு) ஆசிரயமாயுள்ள, ஆன்மக்காட்சி - ஆன்மாவைத் தரிசித்தலால், முத்தியும் - மோக்ஷமும், எய்த - அடைதற்கு. எ-று.

பொ-ரை. இவ்வுலகத்தில் வெளி ஞானத்தை அஞ்ஞானி விரும்புவான். ஆந்தர ஞானத்தை உயர்வாகிய ஜீவன் முத்தன் விரும்புவான். ஏனெனில், முறையே பார்த்திருக்க நாசமாகின்ற குட முதலிய பிரபஞ்சப் பொருள்களைக் காணுதலாற் பந்தமும், பிரபஞ்ச வஸ்துக்களாகிய அத்தியஸ்தங்களுக்கு ஆசிரயமாயுள்ள ஆன்மாவைத் தரிசித்தலால் மோக்ஷமும் அடைதற்கு. எ—று.

க-ரை. அஞ்ஞானி பிரபஞ்ச ஞானத்தை விரும்புவான் ஞானி பிரஹ்மஞானத்தை விரும்புவான். எ-ம். (4)

145. ஓடகமு நிற்குமெங்கு மொன்றுண் டெனவோ ரி
னீடுபல வென்றோரி னிற்காதே—ஓடு மே
அன்னியத்தைச் சார்கைக் கசையா தமையா து
தன்னிலைக்கென் வேண்டுஞ் சலம். *

இ-ள். எங்கும் எவ்விடத்தும், ஒன்று உண்டு என - (பரிபூரணமாகிய பிரஹ்மம்) ஒன்றேயிருக்கிறதென்று, ஓரின் - அறியின், ஓடு அகமும் நிற்கும் - (முன் விஷயங்களில்) ஓடித்திரிந்த மனமும் அவ்வாறு ஓடாமலடங்கும், நீடுபல என்று ஓரின் — (அங்ஙனமின்றிக் கடபட முதலியவாக) விரிந்துள்ள அநேகமிருக்கிறதென்றறியின், நிற்காது - அவ்வாறு நிற்காமல், ஓடும் - (விடயங்களைக்கண்டபொழுது அவ்வவ்விடயங்களிடத்துச்) செல்லும், (ஆனால் பிரஹ்மம் ஒன்றேயுளதென்றறிதற்கு மனஞ் சலிக்க வேண்டாவோ வெனின் அதற்குக்கூறுகின்றார்), அந்நியத்தைச் சார்கைக்கு - தனக்கு வேறாகிய வஸ்துக்களையடைதற்கு, அசையாது அமையாது — சலிக்காமற் கூடாது, தன் நிலைக்கு — தனது எதார்த்த நிலையில் நிற்றற்கு, சலம் — அசைவு (தொழில்), என் வேண்டும் - எக்காரியத்தின்பொருட்டு வேண்டும் (வேண்டா). எ—று.

பொ—ரை. எவ்விடத்தும் பரிபூரணமாகிய பிரஹ்மமொன்றேயிருக்கிறதென்றறிந்தால் முன் விடயங்களிலோடித் திரிந்த மனமும் அவ்வாறு ஓடாமலடங்கும். அங்ஙனமின்றிக் கடபட முதலியவாக விரிந்துள்ள அநேகமிருக்கிறதென்றறியின், அவ்வாறு நிற்காமல் விடயங்களைக் கண்டபொழுது அவ்விடயங்களிடத்துச் செல்லும். ஆனால் பிரஹ்மம் ஒன்றே யுளதென்றறிதற்கு மனஞ்சலிக்க வேண்டாவோவெனின், அதற்குக் கூறுகின்றார். தனக்கு வேறாகிய வஸ்துக்களை யடைதற்குச் சலிக்காமற் கூடாது. தனது எதார்த்த நிலையில் நிற்றற்கு அசைவு எக்காரியத்தின் பொ

ருட்டு வேண்டும். வேண்டா. எ—று.

நிற்காது என்பது முற்றெச்சம்.

எல்லாம் பிரமமென் றறிதலும் மனத்தினது தொழிலாக விருக்கத் தன்னிலைக்குச் சலிக்கவேண்டாமென்றது பொருந்து மாறு யாதெனின் எல்லாமென்றறிந்த கற்பித அறிவும் இறந்தவி டமே தனது நிலையாகலின் மனமிறந்த அவ்விடத்தில் மனத்தின து சலிப்பு இருக்காது. ஆகலால் "தன்னிலைக்கேன் வேண்டுஞ் சலம்" என்றார்.

க-ரை. பொருளொன்றெனக் காண்டல் மனம் அசையா மைக்கும், பலவெனக்காண்டல் மனம் அசைதற்குங், காரணங்கள். எ—ம். (5)

146. மாற்ற மொழிய மனமொழிய நின்றார்க் கே
தோற்றுந் தமது சுகசொரூப—மாற் று
வருந்தி முயலாமல் மன்விடய மிச்சி த்
தருந்துமவர்க் குத்தோன்றா தாங்கு. *

இ-ள். மாற்றம் ஒழிய - வாக்கு விகாரங்கெடவும், மனம் ஒழிய - மனோவிகாரங்கெடவும், நின்றார்க்கே - [தனது நிலை யில்] நின்றவர்களாகிய ஞானிகளுக்கே, தமது சுக சொரூபம் - தம்முடைய பிரமானந்த சொரூபம், தோற்றும் - விளங்கும், ஆற்றவருந்தி - மிகவுங் கஷ்டப்பட்டு, முயலாமல் - [அவ்வானந் தத்தையடைவதற்கு] முயற்சி செய்யாமல், மன் விடயம் - [தன் னிடத்தில் வந்து] பொருந்துகின்ற விஷய போகங்களை, இச்சித் து அருந்தும் அவர்க்கு - விரும்பிப் புசிப்பவர்களுக்கு, தோன்று து - [அவ்வானந்தம்] விளங்கமாட்டாது. எ—று.

பொ-ரை. வாக்கு விகாரங்கெடவும் மனோ விகாரங்கெ டவுந் தனது நிலையில் நின்றவர்களாகிய ஞானிகளுக்கே தம்மு

டைய பிரஹமானந்த சொரூபம் விளங்கும். மிகவும் கஷ்டப் பட்டு அவ்வானந்தத்தையடைவதற்கு முயற்சி செய்யாமல் தன் னிடத்தில் வந்துபொருந்துகின்ற விஷயபோகங்களை விரும்பிப் புசிப்பவர்களுக்கு அவ்வானந்தம் விளங்காது. எ-று.

க-ரை. வாக்குமனங்களைக்கடந்து நின்றவர்க்கே பிரஹமா னந்தமடையப்படும். எ-ம். (௬)

147. நாமா ரெனவுளத்தி னாடார் பிறப்புட னே
சாமேவு மென்று சலிப்பினவை—போமோ பே
ரின்ப நயந்தா லியையுமோ மற்றிவர்க்கு த்
துன்பமே நீங்கா துறும். *

இ-ள். நாம் ஆர் என - நாம் என்பது தேகமாதேகியா வென்று, உளத்தில் - அந்தக்கரணத்தின் கண், [நாடுவார் - விசாரித்தறிந்தவர் ஞான வாயிலாகப் பிரஹமானந்த மனுபவிப்பார்], நாடார் - [அங்ஙனம்] விசாரித்தறியாதவர்கள், பிறப்புடன் சாமேவு மென்று - சனனமரண முளவாமென்று, சலிப்பின் - துக்கமடைந்தால், அவைபோமோ - அச்சனனமரணங்கள் ஒழியுமோ, பேர் இன்பம் நயந்தால் - [விசாரசீலரனுபவிக்கின்ற] பிரஹமானந்தத்தை விரும்பினால், இயையுமோ - [அவ்வானந்தம்] கிடைக்குமோ, இவர்க்கு - (தம்மை விசாரித்தறியாத) இவர்களுக்கு, துன்பமே - முற்கூறிய ஜனன மரணமாகிய துக்கமே, நீங்காது றும் - விலகாதிருக்கும். எ-று.

பொ-ரை. நாம் என்பது தேகமா தேகியா வென்று அந்தக்கா ரணத்தின் கண் விசாரித்தறிந்தவர்கள் ஞான வாயிலாகப் பிரஹமா னந்தமனுபவிப்பார். அங்ஙனம் விசாரித்தறியாதவர்கள் ஜனன மரண முளவாமென்று துக்கத்தையடைந்தால் அச்சனனமரணங்கள்

ஒழியுமோ விசாரசீலரநுபவிக்கின்ற பிரமானந்தத்தை விரும்பினுல் அவ்வானந்தங் கிடைக்குமோ, தம்மை விசாரித்தறியாத இவர்களுக்கு முற் கூறிய ஜனன மரணமாகிய துக்கமே விலகாதிருக்கும். எ-று.

நாடார் என்றதனுல் நாவோர் என்பதும் அதன் பயனும் வருவிக்கப்பட்டன.

க-ரை. தம்மை விசாரித் தறியாதவர்க்குப் பிறவித்துக்கமே யுளதாம். எ-ம். (7)

148. சத்தாதியாம் விடயத் தொன்றாகிற் றன்மன து
பெத்தமுட னேதுக்கப் பேறுநல்கு—மித்தி லொன்று
மாகா தசைவற் றிலங்கினன்றே முத்தியெ னு
மேகாந்தப் பேறுநல்கு மே. *

இ-ள். தன் மனது - (ஒருவனுக்குத்) தன்னுடைய அந்தக் கரணமானது, சத்த ஆதியாம் - சத்த முதலாகிய, விடயத்து - விஷயங்களில், ஒன்று ஆகில் - யாதாயினுமோராகா (வடிவ) த் தையடைந்தால், பெத்தமுடன்-பந்தத்தைக் கொடுப்பதோடு, துக்கப்பேறும் நல்கும் - துன்பமாகிய பயனையுங் கொடுக்கும், இத்தில் - இவ்விஷயங்களில், ஒன்றும் ஆகாது - ஓர் வடிவத்தையுமடையாமல், அசைவு அற்று இலங்கின் - சலிப்பின்றி விளங்குமானுல், அன்றே - அத்தினமே, முத்தி எனும் - மோக்ஷமென்று சொல்லுகின்ற, ஏகாந்தப்பேறு - ஒப்பற்ற இலாபத்தை, நல்கும் - கொடுக்கும். எ-று.

பொ-ரை. ஒருவனுக்குத் தன்னுடைய அந்தக்கரணமானது சத்த முதலாகிய விஷயங்களில் யாதாயினுமோர் வடிவத்தையடைந்தால் பந்தத்தைக் கொடுப்பதோடு துன்பமாகிய பயனையுங்

கொடுக்கும். இவ்விஷயங்களில் ஓர் வடிவத்தையுமடையாமற் சலிப்பின்றி விளங்குமானல் அத்தினமே மோக்ஷமென்று சொல்லுகின்ற ஒப்பற்ற இலாபத்தைக் கொடுக்கும். எ—று.

க-ரை. ஒருவனுக்குத் தன் மனது விஷயாகாரமடைந்தாற் பிறவித் துன்பத்தையும் நிராகாரமாயிருந்தால் முத்தியின்பத்தையுங் கொடுக்கும். எ—ம். (8)

149. உள்ளிலகங் காரவகை யொவ்வொன்றா கும்விடய த்
துள்ளமே பந்த முறவிக்கும்—விள்ளுமிவ ற்
றோருருவுங் கேவலமுஞ் சாரா தொளிருமன
மோரின்ப வீடுறவிக் கும். *

இ-ள். உள்ளில் - சரீரத்தினுள்ளே, விடயத்து - யாதாயினுமொரு விடயத்தைப்பற்றி, அகங்காரவகை - அகந்தை பரியந்தமாக, ஒவ்வொன்று ஆகும் - [சங்கற்ப விகற்பம் அல்லது நிச்சயம் அல்லது சிந்தனை அல்லது அகந்தையாகிய] ஒவ்வொரு வடிவமாகும், உள்ளம் - அந்தக்கரணமானது, பந்தம் உறவிக்கும் - பந்தத்தையடைவிக்கும், விள்ளும் - சொல்லாநின்ற, இவற்று - [சங்கற்ப முதலிய] இவைகளில், ஓர் உருவும் - ஓராகாரத்தையும், கேவலமும் - நித்திரையையும், சாராது - பொருந்தாமல், ஒளிரும் மனம் - விளங்காநின்ற அந்தக்கரணமானது, ஓர் இன்ப வீடு - ஒப்பற்ற ஆனந்த வடிவமாகிய மோக்ஷத்தை, உறவிக்கும் - அடைவிக்கும். எ—று.

பொ-ரை. சரீரத்தினுள்ளே யாதாயினுமொரு விஷயத்தைப்பற்றி அகந்தைபரியந்தமாகச் சங்கற்ப விகற்பம் அல்லது நிச்சயம் அல்லது சிந்தனம் அல்லது அகந்தையாகிய ஒவ்வொரு வடிவமாகும். அந்தக்கரணமானது பந்தத்தை யடைவிக்கும்.

செய்கின்ற சங்கற்ப முதலிய இணைகளில் நரகாரத்தையும் நித்திரையையும் பொருந்தாமல் விளங்குகின்ற அந்தக்கரணமான சுருப்பற்ற ஞானத்தையுடையதாகிய மோக்ஷத்தையடைவிக்கும். எ-று.

க-ரை. சரீரத்தினுள்ளே விடய சங்கற்ப முதலிய பிறழ்ச்சி மடைகின்ற மனமானது பந்தத்தையும் இப்படிப்பட்ட சலனத்தை யுஞ் சேலைத்தையும் பொருந்தாத மனம் மோக்ஷத்தையும் அடை விக்கும். எ—ம். (9)

150. இங்கு பொன்போ லாதிரப்போர்க் கியாருக் கிம்மை
யினும்
வாங்கினர்க்கு மின்பநல்கு மன்ஞான—மாங்குதிக்க ப்
பெற்றாரே சன்ம பயன்பெற்றார் பிறரெவ ரு
மற்றவரே யாவ ரறு. *

இ-ள். இங்கு - இவ்வுலகத்தில், பொன்போலாது - [பாவிப் பவருக்குத் தன்னைக் கொடுப்பதாகிய செல்வத்தை மறுமையிற் கொடுப்பதன்றி இம்மையிற் சுகங் கொடாத] பொன்னாகிய பொரு ளை போல்லாமல், இரப்போர்க்கு எவோருக்கு - யாசிக்கின்றவ ராகிய முமுக்ஷுக்களுக்குத் தன்னைக் கொடுக்கின்றவராகிய ஞானி களுக்கும், இம்மையினும் - [விதேகமுத்தியின் மாத்திரமின்றி] இச்சீவன் முத்தியினும், [பிரமானந்தத்தைக் கொடுப்பதோடு], வாங்கினர்க்கும் - தன்னைப் பெற்றுக்கொண்டவராகிய சீடர்களுக் கும், இன்பம் நல்கும் - பிரமானந்தத்தைக் கொடுக்கின்ற, மன் ஞானம் - நித்தியமாகிய பிரமஞானத்தை, உதிக்கப்பெற்றோ ரே - [தம்மிடத்து] உதயமாகப் பெற்றவரெவரோ அவரே, சன்ம பயன் பெற்றார் - [மானுடராகப் பிறந்த] பிறப்பின் பயனை அ டைந்தவராவர், பிறர் எவரும் - அதனையடையாதவர் யாவரும், அது அற்றார் ஆவர் - அப்பிறப்பின் பயனையடையாதவராவர். எ—று.

பொ-ரை. இவ்வுலகத்தில் யாசிப்பவருக்குத் தன்னைக் கொடுப்பவராகிய செல்வர்க்கு மறுமையிற் கொடுப்பதன்றி இம்மையிற் சுகங்கொடாத பொன்னுகிய பொருளை யொப்பாகாமல் யாசிக்கின்றவராகிய முமுக்ஷுக்களுக்குத் தன்னைக் கொடுக்கின்றவராகிய ஞானிகளுக்கும், விதேக முத்தியின் மாத்திரமன்றி இச்சீவன் முத்தியிலும் பிரஹ்மானந்தத்தைக் கொடுப்பதோடு, தன்னைப் பெற்றுக்கொண்டவராகிய சீடர்களுக்கும் பிரஹ்மானந்தத்தைக் கொடுக்கின்ற நித்தியமாகிய பிரஹ்ம ஞானத்தைத் தம்மிடத்து உதயமாகப் பெற்றவரெவரோ, அவரே மானுடராகப் பிறந்த பிறப்பின் பயனையடைந்தவராவர். அதனையடையாதவர் யாவரும் அப்பிறப்பின் பயனையடையாதவராவர். எ—று.

க-ரை. பிரஹ்ம ஞானம் உதிக்கப்பெற்றவரே பிறப்பின் பயனையடைந்தவர். எ—ம். (10)

151. தேகமெனக் கண்டார் திகைப்புண்டார் தம்மையின்ப
மாகமெனக் கண்டார் மயலண்டார்—மோகமதான்
முன்னவரே துக்கபந்த மூழ்குவார் முத்தியுறார்
பின்னோர் பெறுவாரப் பேறு. *

இ-ள். தேகம் எனக்கண்டார் - [தம்மைத்] தேகமென்று கண்டவர் யாவரோ அவர், திகைப்பு உண்டார் - அஞ்ஞானத்தாலாகிய மயக்கத்தை யடைந்தவராவர், தம்மை - தங்களை இன்பமாகம் எனக்கண்டார் - ஆனந்தாகாயம் (பிரஹ்மம்) என்று கண்டவர் யாவரோ அவர், மயல் அண்டார் - அஞ்ஞானத்தாலாகிய மயக்கத்தையடையார், மோகமதால் - அம்மயக்கமுடைமையால், முன்னவரே - தம்மைத் தேகமெனக் கண்டவரே, துக்கபந்தம் மூழ்குவார் - துக்ககாரணமாகிய பந்தத்தினுள்ளே யழுந்துவார், முத்தியுறார் - மோக்ஷத்தையடையார், பின்னோர் - தம்மைப் பிர

ஹ்மமென்று கண்டவர், அப்பேறு பெறுவார் - [அஞ்ஞானத்தாலாகிய மயக்கம் நீங்கினமையால்] அந்த மோக்ஷமாகிய இலாபத்தை யடைவார். எ—று.

பொ-ரை. தம்மைத் தேகமென்று கண்டவர் யாவரோ அவர் அஞ்ஞானத்தாலாகிய மயக்கத்தை யடைந்தவராவர். தங்களை ஆனந்தாகாயம் (பிரஹ்மம்) என்று கண்டவர் யாவரோ அவர் அஞ்ஞானத்தாலாகிய மயக்கத்தையடையார். அம்மயக்க முடைமையால் தம்மைத் தேகமெனக் கண்டவரே துக்க காரணமாகிய பந்தத்தினுள்ளே யழுந்துவார், மோக்ஷத்தையடையார். தம்மைப் பிரஹ்மம் என்று கண்டவர் அஞ்ஞானத்தாலாகிய மயக்கம் நீங்கினமையால் அந்த மோக்ஷமாகிய இலாபத்தை யடைவார். எ—று.

தம்மை என்பது மூன்றுங் கூட்டப்பட்டது.

க-ரை. தம்மைத் தேகமெனக் காண்பவர் பந்தத்தையும் தம்மைப் பிரஹ்மமெனக் காண்பவர் மோக்ஷத்தையும் அடைவர். எ—ம். (11)

152. பட்டிமா டொப்பப் படும்விடய முண்ணவெழு ந்
துட்ட மனத்தைத் துறவாரே—கெட் டா
ரடங்கத் துறந்த வவரேபா னந்த த்
கடங்கடலாய் நிற்பார்க டாம். *

இ-ள். பட்டிமாடு ஒப்ப - [தனக்கு எதிர்ப்படும்] பயிர்களை யெல்லாந் தின்றழிக்கின்ற எருத்துக் கொப்பாக, படும்விடயம் - தனக்கு நேர்படுகின்ற சத்தாதி விஷயங்களை, உண்ணஎழும் - புசித்தற்குக் கிளம்புகின்ற, துட்டமனத்தை - கொடிய மனத்தை, துறவாரே - ஒழிக்காதவர்களே, கெட்டார் - [பிறந்து மிறந்துங்] கெடுவார்கள், அடங்கத் துறந்த அவர் - அம்மனத்தை முற்றிலு

மொழித்தவர்கள், சடம் ஆனந்த கடலாய் - அபரிச்சின்னமாகிய சுக சமுத்திரமாக, நிற்பார்கள் - [என்றுமழியாது] இருப்பார்கள். எ—று.

பொ-ரை. தனக்கு எதிர்ப்படும் பயிர்களையெல்லாந் தின்றழிக்கின்ற எருதுக் கொப்பாகத் தனக்கு நேர்படுகின்ற சத்தாதி விஷயங்களைப் புசித்துத் திரும்புகின்ற கொடிய மனத்தை யொழிக்காதவர்களே, பிறந்து மிறந்துங் கெடுவார்கள். அம்ம னத்தை முற்றிலுமொழித்தவர்கள் அபரிச்சின்னமாகிய சுக சமுத் திரமாக என்றுமழியாதிருப்பார்கள். எ—று.

கெடுவார் என எதிர்காலத்தாற் கூறற்பாலது சுருதிப் பிரமா ணமாகிய தெளிவுபற்றிக் கெட்டார் என இறந்தகாலத்தாற் கூறப் பட்டது.

க-ரை. மனத்தைக் கெடாதவர், கெடுவார். கெடுத்தவர் சுகியாவார். எ—ம். (12)

143. எல்லாந்தா னென்றறிவான் ஞானி யிவைகடா
னல்லவய லென்றறிவா னஞ்ஞானி—தொல்லுலகந்
தோன்றும் பொழுது சுகவடிவந் தோன்றாது
தோன்றாக்காற் றோன்றுஞ் சுகம். *

இ-ள். ஞானி - ஞானியானவன், எல்லாம் - [சரமும் அசரமுமாகத் தோன்றுகின்ற இப்பிரபஞ்சம்] அனைத்தும், தான் என்று அறிவான் - பிரஹ்மமாகிய தனது சொரூபமென் றறி வான், அஞ்ஞானி - அஞ்ஞானியானவன், இவைகள் - இப்பிரபஞ் சங்கள், தான் அல்ல - தனது சொரூபமல்ல, அயல் என்று அறி வான் - தனக்கு வேறு என்று அறிவான், [ஆனால் ஞானிக்கு எப் பொழுதும் பிரபஞ்சந் தோன்றாதோவெனின் அதற்குமேற் கூற

கின்றார்], தொல் உலகம் - பழமையாகிய பிரபஞ்சமானது, தோன் றும்பொழுது - [பிரஹ்ம வித்தாகிய ஞானிக்கு] விளங்கும் காலத் தில், சகலடிவம் தோன்றாது - [தன்னுடைய] ஆனந்த சொரூப மானது விளக்கமாட்டாது, தோன்றாக்கால்-பிரபஞ்சம் விளங்காத பொழுது, சுகம் தோன்றும் - ஆனந்த சொரூபம் விளங்கும்.எ-று.

பொ-ரை. ஞானியானவன் சாரும் அசாரமுமாகத் தோன்று கின்ற இப்பிரபஞ்சமனைத்தும் பிரஹ்மமாகிய தனது சொரூப மென்றறிவான். அஞ்ஞானியானவன் இப்பிரபஞ்சங்கள் தனது சொரூபமல்ல தனக்கு வேறு என்று அறிவான் ஆனால் ஞானிக்கு எப்பொழுதும் பிரபஞ்சந் தோன்றாதோவெனின், அதற்குமேற் கூறுகின்றார், பழமையாகிய பிரபஞ்சமானது பிரஹ்ம வித்தாகிய ஞானிக்கு விளங்குங் காலத்தில் தன்னுடைய ஆனந்த சொரூபம் விளங்கமாட்டாது. பிரபஞ்சம் விளங்காதபொழுது ஆனந்த சொ ரூபம் விளங்கும். எ—று.

க-ரை. பிரபஞ்சத்தை அஞ்ஞானி தனக்கு வேறாகவும், ஞா னி தனது சொரூபமாகவுங் காண்பார். எ—ம். (18)

154. கட்டற்ற நாய்போற் கடுகி மனமோடு ந்
சுட்டறிவு நீங்காத் துணையுமே—கட்டிறந்தா ல்
வீங்கியநாண் பூட்டு விடுத்து மெழுந்தோ டா
வாக்கன்றே போலு மது. *

இ-ள். சுட்டு அறிவு - [ஒவ்வொரு விஷயங்களையும் இந்த கடம் இந்த படம் என்று சுட்டியறிகின்ற] சுட்டுணர்வானது, நீங்காத்துணையும் - ஒழியாதவளவும், கட்டு அற்ற நாய்போல் - கட் டு விடுத்த நாயைப்போல, கடுகி - வேகமாய், மனம் ஓடும் - மனம் [விஷயங்களிற்] செல்லும், கட்டு இறந்தால் - அவ்விஷயச் சுட்டு

ணர் வொழிந்தால் வீக்கிய - தன்னைக் கட்டியிருந்த, நாண் - கயிற்றினுடைய, பூட்டு விடுத்தும் - தும்பு தெரித்துவிட்ட பின்னரும், எழுந்து ஓடா - [எப்பொழுதுங் கட்டுற்றிருந்த வாசனையால்] எழுந்து தன் தாயிடத்துச்செல்லாத, ஆக்கன்றுபோலும் - பசுவின் கன்றை யொப்பாகும். அது - சுட்டுணர்வு நீங்கிய அம்மனது. எ—று.

பொ-ரை. ஒவ்வொரு விஷயங்களையும் இஃது கடம் இஃது படம் என்று சுட்டியறிகின்ற சுட்டுணர்வு ஒழியாதவளவும் கட்டு விடுத்த நாயைப்போல வேகமாய் மனம் விஷயங்களிற் செல்லும். அவ்விஷயச்சுட்டுணர்வொழிந்தால் தன்னைக்கட்டியிருந்த கயிற்றினுடைய தும்பு தெரித்து விட்ட பின்னரும் எப்பொழுதுங் கட்டுற்றிருந்த வாசனையால் எழுந்து தன் தாயிடத்துச் செல்லாத பசுவின் கன்றை யொப்பாகும், சுட்டுணர்வு நீங்கிய அம்மனது. எ—று.

க-ரை. மனது சுட்டுணர்வுள்ள வரையும் அடக்கினும் நில்லாது. சுட்டுணர்வு நீங்கிய பின்னர் விடயத்திற் செலுத்தினுஞ் செல்லாது. எ—ம். (14)

155. தன்னிடத்தி லில்லாச் சராசரங்க ளிற்பன வு
மன்னவற்றிற் றனிருக்கு மற்புதமும்—பின்னமறக் க்
காண்பானை யின்பநிலை காண்பானிக் காட்சியி லா
னாண்பாடுஞற்றி யுழலும். *

இ-ள். தன் இடத்தில் இல்லா - பிரஹ்மமாகிய தன்னிடத்திற் [பரமார்த்தமாக] வில்லாத, சர அசரங்கள் நிற்பனவும் - சரம் அசரமென்னு மிருவகைப் பிரபஞ்சங்களும் [கயிற்றினிடத்துப் பாம்பு முதலியனபோல அத்தியஸ்தமாய்] இருப்பனவும்,

அன்னவற்றில் - [சர்ப்ப தண்ட பூமாலை முதலிய அத்தியஸ்த வஸ்துக்களில் கயிறு வியாபித்திருத்தல் போல அத்தியஸ்தமாயுள்ள] அவ்விருவகைப் பிரபஞ்சங்களிலும், தான் இருக்கும் அற்புதமும் - பிரஹ்மமாகிய தான் வியாபித்திருக்கின்ற ஆச்சரியமும், பின்னம் அற - பிரதி பந்தமில்லாமல், காண்பானே - [அபரோக்ஷமாகப்] பார்ப்பவனே, இன்ப நிலை காண்பான் - பிரஹ்மானந்த நிலையை அநுபவிப்பவனுமவன், அக்காட்சி இலான் - அந்த ஞானமில்லாதவன், ஊண்பாடு உளுற்றி - [சரீர நிருவாகத்தின் பொருட்டுச் செய்கின்ற] உணவிற்குரிய முயற்சிகளைச் செய்து, உழலும் - [பிறந்து மிறந்துத்] திரிவான். எ—று.

பொ-ரை. பிரஹ்மமாகிய தன்னிடத்திற் பாமார்த்தமாக வில்லாத சாம் அசாம் என்னும் இருவகைப் பிரபஞ்சங்களும் கயிற்றினிடத்துப் பாம்பு முதலியனபோல அத்தியஸ்தமாயிருப்பனவும் சர்ப்பம் தண்ட பூமாலை முதலிய அத்தியஸ்தவஸ்துக்களில் கயிறு வியாபித்திருத்தல்போல அத்தியஸ்தமாயுள்ள அவ்விருவகைப் பிரபஞ்சங்களிலும் பிரஹ்மமாகிய தான் வியாபித்திருக்கின்ற ஆச்சரியமும் பிரதிபந்தமில்லாமல் அபரோக்ஷமாகப் பார்ப்பவனே பிரஹ்மானந்த நிலையை அநுபவிப்பவனுமவன். அந்த ஞானமில்லாதவன் சரீர நிருவாகத்தின் பொருட்டுச் செய்கின்ற உணவிற்குரிய முயற்சிகளைச் செய்து பிறந்து மிறந்துத் திரிவான். எ—று.

இங்கே கூறியதுபோலப் பகவற் கீதையில் "ஒழியாவெல்லாவுயிர்களுந் தன்னுள்ளே காணுமவற்றுள்ளே, கழியாதெங்குந்தானின்ற பரிசுந்தெரியக்காணுமால்" என்று கூறியிருத்தல் காண்க.

க-ரை. தான் அதிட்டானமாயிருத்தலையும் தன்னிடத்துப் பிரபஞ்சம் அத்தியஸ்தமாயிருத்தலையும் உள்ளவாறு அபரோ

மாக வறிந்தவன் பிரஹ்மானந்த நிலையை அடைவான். எ-ம்.(15).

156. ஆசைப்பேய் வாய்ப்பட் டலைந்து சுழலுமன
நேசித் திருத்துகினு நில்லாதே—யாசையினைப்
போக்கி லதுபின் புறத்திலடித் தோட்டுகினு
நீக்காதா னந்த நிலை. *

இ-ள். ஆசைப்பேய் வாய்ப்பட்டு - இச்சையென்னும் பிசாசினிடத்தகப்பட்டு, அலைந்து சுழலுமனம் - [அஃது இழுத்துச் செல்லும் விடயங்கள் தோறும்] வருந்தி யுழலுகின்ற மனத்தினை, நேசித்து - நண்பு கொண்டு, இருத்துகினும் - [விடயங்களிற் செல்லலாகாதென்றறிவுறுத்தி] அடக்கினுலும், நில்லாது - நிற்க மாட்டாது, (அங்ஙனமாய மனத்தினை நிறுத்த முடியாதோ வெனின் அவற்கு மேற்கூறுகின்றார்). ஆசையினைப்போக்கில் - இச்சையாகிய பேயை ஒழித்துவிட்டால், பின் - பின்னர், புறத்தில் - விடயங்களிற் செல்லுமாறு, அடித்து ஓட்டுகினும் - வெறுத்துத் தள்ளினுலும், அது - அம்மனமானது, ஆனந்த நிலை - (தானடைந்துள்ள) பிரஹ்மானந்தானுபவத்தினின்றும், நீக்காது - நீங்க மாட்டாது. எ—று.

பொ-ரை. இச்சை யென்னும் பேயினிடத் தகப்பட்டு அஃது இழுத்துச் செல்லும் விடயங்கள் தோறும் வருந்தியுழலுகின்ற மனத்தினை நண்பு பாராட்டி விடயங்களிற் செல்லலாகாதென்றறிவுறுத்தி அடக்கினுலும் நிற்கமாட்டாது. அங்ஙனமாய மனத்தினை நிறுத்தமுடியாதோ வெனின் அதற்கு மேற்கூறுகின்றார். இச்சையாகிய பேயை ஒழித்துவிட்டால் பின்னர் விடயங்களிற் செல்லுமாறு வெறுத்துத் தள்ளினுலும் அம்மனம் தானடைந்துள்ள பிரஹ்மானந்தானுபவத்தினின்றும் நீங்காது. எ—று.

நீங்காது எனற் பாலது எதனை நோக்கி வலித்து நின்றது.

க-ரை. மனஞ்சலித்தற்கும் நிற்றற்குங் காரணம் இச்சை யுண்மையும் இன்மையுமாம். எ-ம். (16)

157. மாடேறி னோர்க்கு மனவெழுச்சி நீங்கினன்றி
வீடேறு மாறு விளையாதே—நாடோறு
மற்ப மற்ப மாகவா னாலுமஃ தற்றொழியிற்
கற்பிதம்போம் வீடுறுமக் கால். *

இ-ள். மாடேறினோர்க்கும் - இடபவாகன மேறுதல் முதலியவாகச் சொல்லப்படுகின்ற சிவசாருப்பிய மடைந்தவர்களுக்கானாலும், மன எழுச்சி - மனோ முயற்சியானது, நீங்கின் அன்றி - நீங்கினாலல்லாமல், வீடு ஏறும் ஆறு - மோக்ஷமடையுமார்க்கம், விளையாது - பயன்படாது, நாள்தோறும் - தினந்தினமும், அற்பம் அற்பம் ஆக ஆனாலும் - கொஞ்சங் கொஞ்சமாகவாகிலும், அஃது - அம்மனோ முயற்சியானது, அற்று ஒழியில் - கெட்டுப்போமாகில், கற்பிதம்போம் - கற்பித வஸ்துக்கள் நீங்கும், அக்கால் - அக்கற்பித வஸ்துக்கள் நீங்கியபொழுது, வீடு உறும் - மோக்ஷமுண்டாகும் எ—து.

பொ-ரை. இடபவாகன மேறுதல் முதலியவாகச் சொல்லப்படுகின்ற சிவசாருப்பிய மடைந்தவர்களுக் கானாலும் மனோ முயற்சி நீங்கினாலல்லாமல் மோக்ஷமடையுமார்க்கம் பயன் படாது. தினந்தினமுங் கொஞ்சக்கொஞ்சமாகவாகிலும் அம்மனோ முயற்சியானது கெட்டுப்போமாயிற் கற்பித வஸ்துக்கள் நீங்கும். அஃது நீங்கியபொழுது மோக்ஷமுண்டாகும். எ-று.

க-ரை. மனோவிர்த்தி நீங்காதவர்க்கு மோக்ஷமுண்டாகாது. எ-ம். (17)

[கட்டளைக் கலித்துறை.]

158. விடயா னுபவ முறுங்கா லறிபவன் மேவறி வு
விடயங் களிற்றம்மை வேறாகக் காணும் விவேகிக ளே
அடைவார் பரானந்த மிப்பேதஞ் சற்று மறியகில்லார்
கெடுவா ரிவர்க்கப் பரானந்த முத்தி கிடைப்பரிதே. *

இ-ள். விடயம் - விஷயங்கள், அநுபவம் உறுங்கால் - அநுபவப்படுங் காலத்தில், அறிபவன் - ஞாதிரு (காண்பான்), மேவு அறிவு - பொருந்திய ஞானம் (காட்சி), விடயங்களில் - ஞேயம் (காணப்படுபொருள்) ஆகிய இவற்றிற்கு, வேறு ஆக - அந்நியமா (சாக்ஷியா) க, தம்மை - தங்களை, காணும் - அறிகின்ற, விவேகிகளே - அறிவுடையவர்களே, பர ஆனந்தம் அடைவார் - பிரஹ்மானந்தத்தை யடைவார்கள், இப்பேதம் - இவ்வேறுபாட்டினை, சற்றும் அறியகில்லார் - கொஞ்சமேனு முணராதவர்கள், கெடுவார் - [பிறந்திறந்தலாகிய] கேட்டினை அடைவார்கள், இவர்க்கு - திரிபுடியின் பேதந்தெரியாத இவர்களுக்கு, அப்பர ஆனந்தமுத்தி - அந்தப் பேரின்ப மயமாகிய மோக்ஷம், கிடைப்பு அரிது - கிடைக்காது. எ—று.

பொ-ரை. விஷயங்கள் அநுபவப்படுங் காலத்தில் ஞாதிரு பொருந்திய ஞானம் ஞேயம் ஆகிய இவற்றிற்குச் சாக்ஷியாகத் தங்களையறிகின்ற அறிவுடையவர்களே பிரஹ்மானந்தத்தை யடைவார்கள். இவ்வேறுபாட்டினைக் கொஞ்சமேனு முணராதவர்கள் பிறந்திறந்தலாகிய கேட்டினை யடைவார்கள். திரிபுடியின் பேதந் தெரியாத இவர்களுக்கு அந்தப் பேரின்ப மயமாகிய மோக்ஷங் கிடைக்காது. எ—று.

க-ரை. விஷயானுபவ காலத்திற் றோன்றுகின்ற திரிபு

டிகளுக்கு வேறாகத் தம்மைக் காண்பவர் பிரஹ்மானந்தத்திற்குரியவராவர். எ—ம். (18)

159. ஓரோர் விடயத் துறுநசை யானவ்வி யாதியுயி ர்
சோர விறக்குந் துயரறிந் தேயுஞ் சுகமடைவா ன
பாரோரவ் வைந்து விடயமுஞ் சேரப் பரிந்தருந் த
னீரா லுறுவ தழலாற் கொளவெனு நீர்மையொப் பே.*

இ-ள். ஓர் ஓர் விடயத்து - [சத்த முதலாகச் சொல்லப்பட்ட] ஒவ்வொரு விஷயங்களில், உறும் நசையால் - உண்டாகின்ற விருப்பத்தினால், நவ்வியாதி உயிர் - மான் முதலாகிய பிராணிகள், சோர - தளர்வடைந்து, இறக்கும் - மடிகின்ற, துயர் அறிந்தும் - துக்கத்தை [ஆகமப் பிரமாணத்தினாலும் பிரத்தியக்ஷப் பிரமாணத்தினாலும்] தெரிந்திருந்தும், சுகம் அடைவான் - [நீங்காத] ஆனந்தத்தைப் பெறும்பொருட்டு, பாரோர் உலகத்திலுள்ள அஞ்ஞானிகள், அவ்வைந்து விடயமுஞ் சேர - அந்தப் பஞ்ச விஷயங்களையு மொருங்கே, பரிந்து அருந்தல் - விரும்பிப் புசித்தல், [எதுபோலுமெனில்], நீரால் உறுவது - புனலா லடையக் கூடிய தாகசாந்தி முதலிய பயனை, அழலால் கொள எனும் - அக்கினியா லடைதற்கு நினைக்கின்ற, நீர்மை ஒப்பு - தன்மைக் கொப்பாகும். எ—று.

பொ-ரை. சத்த முதலாகச் சொல்லப்பட்ட ஒவ்வொரு விஷயங்களிலுண்டாகின்ற விருப்பத்தினால் மான்முதலாகிய பிராணிகள் தளர்வடைந்து மடிகின்ற துக்கத்தை ஆகமப் பிரமாணத்தினாலும் பிரத்தியக்ஷப் பிரமாணத்தினாலுந் தெரிந்திருந்தும், நீங்காத ஆனந்தத்தைப் பெறும்பொருட்டு உலகத்திலுள்ள அஞ்ஞானிகள் அந்தப் பஞ்ச விஷயங்களையு மொருங்கே விரும்பிப் புசித்

தல் எதுபோலுமெனில், புனலாலடையக்கூடிய தாகசாந்தி முதலிய பயனை அக்கினியா லடைதற்கு நினைக்கின்ற தன்மைக்கொப்பாகும். எ—று.

பிரஹ்ம ஞானத்தாலடையக்கூடிய ஆனந்தத்தைத் துக்கத்தைத் தரும் விஷயானுபவத்தாலடையக் கருதுதலால் "நீராலுறுவதழலாற்கொளவெணு நீர்மை யொப்பு" என்றார்.

ஓரோர் விடயத் துறுநசையால் நவ்வியாதி யுயிர், சோரா விறக்குந் துயரறிந்து என்றதற் குதாரணம்.

## பாகவதம்.

"மடந்தையர் மொழியுங் கானமுங் கேட்டு மன்னவன் மகன்றலை மணந்தான், கடந்திரி கலையின் கோடுபெற் றுயர்ந்த கருதருந் தவனெனக் கேட்டும், மடந்திகழ் மதிமான் வேட்டுவன்கானம் பகர்செவி மடுத்தவன் வலை மேற், கிடந்தன கண்டும் வெவ்விசை கேளேன் கேட்ப தந்நாமகீர்த்தனமே" எனவும்

"துதிதரு வயவர் படுகுழி செலுத்துந் துகளறு பிடியை யுள்ளுவந்து, மதகரி தழுவி வயவர்கை வசமாய் வயங் குதல் கண்டு மட் டொழுகுந், ததைமலர்க் குழலார் த னகிரி தழுவிதணப்பரி தாய் மதன் வசமாய், விதலை யின் மனமா மயக்குறு மென்ன விடுத்தனன் புணர்ச்சி மற் றன்றே" எனவும்

"ஒளிகொளும் விளக்கி னழலுறுக் கண்டு முணவுகொ ளெனவதிற் கழன்று, விளிவுறும் பசிய பதங்கமும்

கன்றி வெய்துறீஇக் கொழுமெனக் கருதிக், கெளிவு கொண் முனிவ ராயினுங் காளிற் சிந்தைகொண்டனு தின மருந்தக், களிகொளுங் கருங்கண் மடந்தைய ருறுவல் கருத்தொடுங் காண்கில னம்ப" எனவும்
"வஞ்சமெஞ் சினமாய்த் தண்டினின் வளர்ந்த வஞ்சவையுன் பெற வடைந்து, அஞ்சத லடைந்த மீன்குபூக் கண்டு தன்னுமை வகைபெறும் வாயும், பஞ்சரமென்றுந் தடனுழை வதற்காய்ப் பசிக்கன றணிப்பதற் கன்றி, அஞ்சவை யினைவென் றுணைசரி விழைந்தே யருந்துக வொழிந்தன னடிகில்" எனவும்
"ஒருமை மலரை யுவந்துமென் முருகுண் டுறைதரு பொருதைசாரும் பிரவின், விரிகெழுந் துவிய மரைகப்பட்டு விளிந்தது கண்டு" எனவும் அன்றியும்
பாசோரசங்கைக்கு விடயமுஞ் சேரப் பரீக்ஷருக்க லென்றதற் குதாரணம்.

"முத்தமேமொளி பாதிபி லொருகுண முன்னி ம்
பந்தமோடிட ருற்றிறந் தனபல வென்று ன்
இந்து சேர்குணங் களுமொருந் காசரி னடைந்தோர்க்
குய்க்கு போறெறி யுண்டுகொ லோமதிக் குரைக்கில்"
எனவுங் கூறியிருத்தல் காண்க.

க-ரை. துக்கநிவிர்த்தியை விரும்பினான் பிரமானந்தத்தை யடையாத விஷயங்களை அநுபவிக்கச் சாதகாந்தியை விரும்பின வம் பிரகுந்தாக நியகுந்தைச் கொப்பாரும். ஏ—ம்.

160. கோடாது கொடியகப் பரம்புரிக் காதுங் குரையுப ற்
கேடார் மலர்கொண் டருச்சனை பாதி பெற்றுழி று

டோடா துளத்தை நிறுத்தித்த முண்மை யுணர்தலிலார்
வீடெ டெய்தா ரெய்திடுவரென் றலது வீவுறுமே. *

இ-ள். உளத்தை ஓடாது நிறுத்தி - மனத்தினை விஷயங்களிற் செல்லவொட்டாமல் நிற்கச்செய்து, தம் உண்மை - தம்முடைய எதார்த்த சொரூபத்தை, உணர்தல் - விசாரித்தறிதல், [நேரே மோக்ஷ சாதனமாயிருக்க], இலார் [அங்ஙனம் விசாரித்தறியுந் தன்மை] யில்லாதவர்கள், கோடானு கோடி - அளவற்ற, அறம்புரிந்தாலும் - தருமங்களைச்செய்யினும், குலவும் - விளங்காநின்ற, அரற்கு - சிவபிரானுக்கு, ஏடு ஆர் மலர் கொண்டு - இதழ் பொருந்திய புஷ்பங்களைக்கொண்டு, அருச்சனை ஆதி இயற்றினும் - அருச்சித்தல் முதலிய ஆராதனைகளைச்செய்தாலும், வீடு எய்தார் - மோக்ஷமடையமாட்டார்கள், எய்திடுவர் என்றால் - யாதாயினுமோர் பதவியை அடைவரென்று கூறின், அது வீவுஉறும் - கருமத்தாலாகிய அப்பதவியானது அழிந்துவிடும். எ-று.

பொ-ரை. மனத்தினை விஷயங்களிற் செல்லவொட்டாமல் நிற்கச்செய்து தம்முடைய எதார்த்த சொரூபத்தை விசாரித்தறிதல் நேரே மோக்ஷசாதனமாயிருக்க அங்ஙனம் விசாரித்தறியுந் தன்மையில்லாதவர்கள் அளவற்ற கருமங்களைச் செய்யினும் விளங்காநின்ற சிவபிரானுக்கு இதழ்பொருந்திய புஷ்பங்களைக்கொண்டு அருச்சித்தல் முதலிய ஆராதனைகளைச் செய்தாலும் மோக்ஷமடையமாட்டார்கள். யாதாயினுமோர் பதவியை அடைவரென்று கூறின் கருமத்தாலாகிய அப்பதவியானது அழிந்துவிடும். எ—று.

க-ரை. கருமத்தாலாகிய பதவி அழியும். எ-ம். (20)

**161.** மன்னிய வின்ப வடிவாயொன் றாய்நின்ற வத்துவுங்கா
ணன்னிய லன்னிய மாமின்பப் பேற்றை யுதவில தே

துன்னுஞ் சடவுரு வாய்ப்பல வாகி யுளவிடயந்
தன்னிற் றுயர்தரு மென்கைசொல் லாமற் றுலங்கிடுமே.

இ-ள். மன்னிய - நிலைபெற்ற, இன்பவடிவாய் - சச்சிதானந்த கனமாயும், ஒன்றாய் - ஏகமாயும், நின்றவத்துவும் - வியாபித்திருக்கின்ற பிரமசொரூபமும், உன்னிடில் - [ஒருவனுக்கு மனத்தால்] நினைக்கப்படின், அன்னியமாய் - வேறாகி, இன்பப் பேற்றை - ஆனந்தாநுபவத்தை, உதவு இலதேல் - கொடாதென்றால், உன்னம் - அம்மனமானது, சடவுருவாய் பலவாகி உள - அசித்தசடதுக்கமயமாகியும் அநேகமாகியுமிருக்கின்ற, விடயம் தன்னில் - சத்தாதி விஷயங்களைப் பொருந்தினால், துயர்தரும் என்கை - [அவ்விடயங்கள்] துக்கத்தைக் கொடுக்குமென்பது, சொல்லாமல் துலங்கிடும் - சொல்லாமல் அதன் அருத்தத்திறனாலேயே விளங்கும். எ-று.

பொ-ரை. நிலைபெற்ற சச்சிதானந்த கனமாயும் ஏகமாயும் வியாபித்திருக்கின்ற பிரமசொரூபமும் ஒருவனுக்கு மனத்தால் நினைக்கப்படின் வேறாகி ஆனந்தாநுபவத்தைக் கொடாதென்றால் அம்மனமானது அசித்தசடதுக்கமயமாகியும் அநேகமாயுமிருக்கின்ற சத்தாதி விஷயங்களைப் பொருந்தினால் அவ்விடயங்கள் துக்கத்தைக் கொடுக்குமென்பது சொல்லாமல் அதன் அருத்தத்திறனாலேயே விளங்கும். எ—று.

இன்பம் சத்த முதலியவற்றிற்கும் சடம் அசித்த முதலியவற்றிற்கும் உபலக்ஷணங்கள்.

க-ரை. மனத்தின் தொழிலெல்லாந் துக்கமே தரும். எ-ம். (21)

162. நாடி யநேகநூல் கற்றுங் கேட்டு நல்லறிவைத்
தேடிமுற் றுய்ந்து தெளிதலும் பூவினர் சித்தமெய்ப்பாய்
பாடறு மங்க ளடையையு ளார்க்கும் பரிசுத்தமாங்
கோடி நடையர்க் குறுப்போய் துயருந் தொடர்புவனே.

இ-ள். அருங்கலை நாடி - கிடைத்தற்கு அருமையாகிய ஞான நூல்களை விரும்பி, கற்றலுங் கேட்டலும் - அப்பியசித்தலும் பிறர்படிக்கச் சிரவணஞ் செய்தலும், தேடி - [நல்லாசிரியரை] விசாரித்துத் [தரிசித்து], நல் அருத்தம் - [அந்நூல்களிலுள்ள] உண்மையாகிய அருத்தங்கள், முற்று [உம்] ஆய்ந்து - முழுமையும் [அவர் முன்னிலையாக] ஆராய்ந்து, தெளிதலும் - அறிதலும், பூவினர் - உலகத்தவருடைய, சித்தம் மெய்க்கப் பாடலும் - மனமானது மெய்ச்சும்படி பாடுதலும் [ஆகிய இவைகள்], அங்ஙன் நடையை உள்ளார்க்கு - அச்செயல்களுக்குரிய ஒழுக்கமுடையவர்களுக்கு, பரிசுத்தமும் - சித்த சுத்தியையும், கோடும் நடையர்க்கு - மாறுகிய ஒழுக்கம் உடையவர்களுக்கு, உறுப்பு ஒய்துயரும் - [அத்தொழில்களைச் செய்யும்] கருவிகட்குத் தளர்ச்சியுண்டாகின்றதாகிய துன்பத்தையும், கொடுப்பன - உண்டுபண்ணுவனவாம. எ—று.

பொ-ரை. கிடைத்தற்கு அருமையாகிய ஞான நூல்களை விரும்பி அப்பியசித்தலும் பிறர் படிக்கச் சிரவணஞ் செய்தலும் நல்லாசிரியரை விசாரித்துத் தரிசித்து அந்நூல்களிலுள்ள உண்மையாகிய அருத்தங்கள் முழுமையும் அவர் முன்னிலையாக ஆராய்ந்தறிதலும் உலகத்தவருடைய மனமானது மெய்ச்சும்படி பாடுதலுமாகிய இவைகள் அச்செயல்களுக்குரிய ஒழுக்கமுடையவர்களுக்குச் சித்த சுத்தியையும் மாறுகிய ஒழுக்கமுடையவர்களுக்கு அத்தொழில்களைச் செய்யுங் கருவிகட்குத் தளர்ச்சியுண்டாகின்றதாகிய துன்பத்தையும் உண்டுபண்ணுவனவாம். எ—று.

முற்றும் என்பதின் உம்மை விகாரத்தாற் றொக்கது.

க-ரை. ஞான நூல் பழகல் முதலிய சற்கருமங்களும் நல்லொழுக்கமுடையார்க்கே சித்தசுத்தியைத் தரும். எ—ம். (22)

163. இன்பந் தொழிலி லிடத்துள தாமெனி லெத்தொழிலுந்
துன்பல் லாமற் சுகந்தரு மோவதைச் சூழ்ச்சி யுணர்
இன்புத்தி யாற்கண் டொழித்தின்ப மெய்வர் விசாரமிலார்
வன்பவ சாகர மாகர மாவுற்று மாய்குவரே. *

இ-ள். இன்பம்-சுகமானது, தொழில் இல் இடத்து -[மனம் வாக்குக் காயங்களாலாகின்ற எவ்வகை] முயற்சியுமில்லாதவிடத்தில் உளது ஆம் எனில்- உண்டாகுமென்று பெரியோர் கூறுவாராயின், எத்தொழிலும்-[அம்மன வாக்குக் காயங்களாலாகின்ற]எந்த முயற்சியும், துன்பம் அல்லாமல் - துக்கத்தை [தருமே] யல்லாமல், சுகந் தருமோ - இன்பத்தைக் கொடுக்குமோ, [கொடாது], அதை - தொழில் சுகங் கொடாதென்பதை, சூழ்ச்சி உணர் - ஆராய்ச்சியுடையவர், இன்புத்தியால் கண்டு - விவேக புத்தியினாலறிந்து, ஒழித்து - [அம்முயற்சிகளை முற்றும்] நீக்கி, இன்பம் எய்வர் [ஆன்மவிசாரஞ் செய்து ஞான வாயிலாக] மோக்ஷ சுகத்தை யடைவர், விசாரம் இலார் – அவ்விசார மில்லாதவர்கள், வன்பவ சாகரம் — வலிய பிறவிச்சமுத்திரத்தை, ஆகர மாவுற்று - உறைவிடமாக வடைந்து, மாய்குவர் - வருந்துவார். எ-று.

பொ-ரை. சுகமானது மனவாக்குக் காயங்களாலாகின்ற எவ்வகை முயற்சியுமில்லாத விடத்தில் உண்டாகுமென்று பெரியோர் கூறுவாராயின் அம்மன வாக்குக் காயங்களாலாகின்ற எந்த முயற்சியுந் துக்கத்தைத் தருமேயல்லாமற் சுகத்தைக் கொடுக்குமோ கொடாது. தொழில் சுகங்கொடா தென்பதை ஆராய்ச்சியுடையவர் விவேக புத்தியினாலறிந்து அம்முயற்சிகளை முற்றும் நீக்கி ஆன்ம விசாரஞ்செய்து ஞானவாயிலாக மோக்ஷ சுகத்தை யடைவார். அவ்விசார மில்லாதவர் வலிய பிறவிச் சமுத்திரத்தை யுறைவிடமாக வடைந்து வருந்துவார். எ-று.

தொழிலை விடுத்து இன்பம் எய்வர் என்றதால் இடையே விசாரமும் ஞானமும் வருவிக்கப்பட்டன.

க-ரை. விவேகிகள் தொழிலைத் துன்பந் தருவதென விடுத்து ஆன்ம விசாரஞ் செய்து ஞான வாயிலாக மோக்ஷ சுகமடைவார். எ—ம். (13)

[விருத்தம்.]

163. நாம வுருவ மெவ்வளவவ் வளவே நாட்ட மனந்தடிக்கு
நாம வுருவம் விடுத்தகண்ட நாட்டம் வரிலம்மனநசிக்கு
நாம வுருவப் பற்றளவே நலிவு தருபந் தத்தள வா
நாம வுருவப் பற்றொழியின் நல்லின் புருவாம் வீடுறுமால்

இ-ள். நாம உருவம் - நாமரூப வஸ்துககளில், நாட்டம் - விருப்பம், எவ்வளவு - எவ்வளவிற்றோ, அவ்வளவு - அவ்வளவிற்கு, மனந்தடிக்கும் - மனந் தூலிக்கும், நாம உருவம் - [வஸ்துக்களிலுள்ள] நாமரூபங்களை, விடுத்து - நீக்கி, அகண்ட நாட்டம் வரில் - [அவ்வஸ்துக்களில்] ஏகமாயுள்ள சச்சிதானந்த சொரூப சாக்ஷாத்காரம் வந்தால், அம்மனம் நசிக்கும் - அத்தன்மையாகிய பழக்கமுடைய மனதுக்குத் தூலத்தன்மை கெடும், நாம உருவப் பற்று அளவு - நாமரூப வஸ்துக்களில் அபிமானம் எவ்வளவோ அவ்வளவு, நலிவுதரு - வருத்தத்தைக்கொடுக்கின்ற, பந்தத்து அளவு ஆம் - பந்தத்தினுடைய அளவாகும், நாம உருவப்பற்று ஒழியின் - நாமரூப வஸ்துக்களிலுண்டாகின்ற அபிமானம் நீங்கினல், நல் இன்பு உரு ஆம் - மாட்சிமை பொருந்திய ஆனந்தமயமாகிய, வீடு உறும் - மோக்ஷம் பொருந்தும். எ—று.

பொ-ரை. நாமரூப வஸ்துக்களில் விருப்பம் எவ்வளவிற்றோ அவ்வளவு மனந் தூலிக்கும். வஸ்துக்களிலுள்ள நாம ரூபங்க

லா நீக்கி அப்பஸ்தாக்களில் ஏகபாயுள்ள சச்சிதானந்த சொரூப சாக்ஷாத் காரம் உத்தால் அத்தன்மையாகிய பழக்கமுடைய மனத்துக் கலந்தன்மை கெடும். நாமரூப வஸ்துக்களில் அபிமானம் எய்யானவோ அம்மனவு வருத்தத்தைக் கொடுக்கின்ற பந்தத்திலுடைய அளவாகும். நாமரூப வஸ்துக்களிலுண்டாகின்ற அபிமானம் நீங்கிலும் மாட்சிமை பொருந்திய ஆனந்தமயமாகிய மோக்ஷம் பொருந்தும். எ-று.

க-ரை. நாமரூபக் காட்சி பந்தத்தையும் சச்சிதானந்தக் காட்சி மோக்ஷத்தையுந் தரும். எ-ம். (24)

165. நினைப்பே படைப்பா மற்றது நீங்க மறத்தல் துடைப் பாகும், நினைப்பின் றாகிற் படைப்பில்லை நீங்கின் மறப்பு துடைப்பில்லை, நினைப்பு மறப்பு முளவளவும் நீங்கா தமரும் பந்தமெலா, நினைப்பு மறப்பு மிறந்தவளவே நிமலா னந்த வீடுறுமால். *

இ-ள். நினைப்பு படைப்பு ஆம் - [மனத்தால் யாதாயினுமோர் பொருளைச்] சங்கற்பித்தல் [பிரபஞ்சத்துடைய] சிருட்டியாம், மற்றையது நீங்க - அச்சங்கற்ப வஸ்து நீங்குமாறு. மறத்தல் - மறந்துவிடல், துடைப்பு ஆகும் - [பிரபஞ்ச] சங்காரமாம், நினைப்பு இன்று ஆகில் - சங்கற்பித்தல் இல்லையாகில், படைப்பு இல்லை - [பிரபஞ்ச] சிருட்டியில்லை, மறப்பு நீங்கின் - மறப்பில்லையாகில், துடைப்பு இல்லை - (பிரபஞ்ச) சங்காரமில்லை, நினைப்பும் மறப்பும் - சங்கற்பித்தலும் அதனை மறத்தலும், உள அளவும் - இருக்கும் வரையும், பந்தம் எலாம் - பந்தங்களனைத்தும், நீங்காது அமரும் - அழியாமலிருக்கும், நினைப்பும் மறப்பும் - சங்கற்பித்தலும் மறத்தலும், இறந்த அளவு - ஒழிந்தகாலத்தில், நிமல ஆனந்த வீடு உறும் - பரிசுத்தமுடைய ஆனந்தமயமாகிய மோக்ஷம்

பொருந்தும். எ—று.

பொ—ரை. மனத்தால் யாதாயினு மொருபொருளைச் சங்கற்பித்தல் ஜீவனுடைய சிருட்டியாம். அச்சங்கற்ப வஸ்து நீங்குமாறு மறத்தல் ஜீவனுடைய சங்காரமாம். சங்கற்பித்தலில்லையானல் ஜீவனது சிருட்டியில்லை. மறப்பில்லையானல் ஜீவனது சங்காரமில்லை. சங்கற்பித்தலும் அதனை மறத்தலும் இருக்கும்வரையும் பந்தங்களனைத்தும் அழியாமலிருக்கும், சங்கற்பித்தலும் மறத்தலும் ஒழிந்தகாலத்தில் பரிசுத்தமுடைய ஆனந்தமயமாகிய மோக்ஷம் பொருந்தும். எ—று.

ஜீவர்களுக்கு அகந்தை மமதை விஷயங்களிலுண்டாகின்ற அபிமானத்தா லெழுகின்ற காமக் குரோகாதிகளே பந்தமென்றும் ஜீவன் சிருட்டி யென்றுஞ் சொல்லப்படும், அவற்றுள் அகந்தை (யானென்றுண்டாகும் விருத்தியின்) விஷயஞ் சரீரமும் மமதையின் விஷயம் (எனதென்னும் விருத்தியின் விஷயம்) தார புத்திராதிகளுமாம். இவ்விருவகை விஷயங்களுக்கும் அனுகூலமாகிய வஸ்துக்களிடத்து இராகமும் பிரதிகூலமாகிய வஸ்துக்களிடத்துத் துவேஷமும் உளவாம். அவற்றுள்ளும் இராகமுளதாவது அனுகூல விஷயாகாரமடைந்த அந்தக்கரணத்திலும் துவேஷமுளதாவது பிரதிகூல விஷயாகாரமடைந்த அந்தக்கரணத்திலுமாம். ஆதலால் அவ்விராகத் துவேஷங்களுக்குக் காரணம் அனுகூலப் பிரதிகூல விஷயங்களின் சங்கற்பமும் அவற்றின் (இராகத்துவேஷங்களின்) இன்மைக்குக் காரணம் அவ்விஷயங்களின் சங்கற்ப மின்மையுமாம். ஆகவே இராகத்துவேஷாதியாகிய விஷய சங்கற்பம் ஜீவசிருட்டியும் அச்சங்கற்பமின்மை அவற்றின் நிவிர்த்தி வடிவ சங்காரமுமா மென்பார் "நினைப்பே படைப்பா மற்றையது நீங்க மறத்தல் துடைப்பாகும்" என்று கூறினர். இராகத் துவேஷாதிகள் ஜீவ சிருட்டி யென்பதற்கும் ஜீவசிருட்டியே பந்தம் என்பதற்கும் முறையே உதாரணம்.

## கைவல்லியம்.

"நிகழ்ந்த வீசனார் சிருட்டியுஞ் சீவனார் சிருட்டியும் வெவ்வேறு, சகந்த னிற்பொது வீசனார் சிருட்டிகள் சராசரப் பொருளெல்லா, மகத்தை யாமயி மானங்கள் கோபங்க ளாசைகளிவையெல்லா, மிகழ்ந்த சீவனார் சிருட்டிக ளாகுங் காணீசனார் செயலன்றே" எனவும் "மூவராம் பரன் சிருட்டிகளுயிர்க்கெலா முத்தி சாதனமா குஞ்,சீவ னார்செயுஞ் சிருட்டிக டங்களைச் செனிப்பிக்கும் பிணியாகுந், தாவ ராதிக ளைசித்திடி லொருவர்க்குஞ் ச னனங்க ளசியாவாம், கோவமாதிக ளைசித்திடிற் பந்த மாங் கொடும்பிறவிகள் போமே"

எனவுங் கூறியிருத்தல் காண்க.

க—ரை. மனிதருக்குத்தமது சங்கற்பாதிகளாற் பிறப்பும் அவற்றின் நாசத்தால் மோக்ஷமும் உளவாம். எ—ம். (௨௫)

166 பணத்தின் தொடர்பிற் றியத்தொடர்பு மாய்ப்பொர்க் கடையுந் தன்மையதாந், தனியானந்த மட்மாய்வு சா சார்க் ககலுந் தன்மையதாம், புனைமா மணியை யடக்க ரிக்குப் பொருந்துந்தன்மை யதுந்திமிர, மினமே லுமி ழுங் கட்செவிக்கு விலகுந் தன்மையது மாப்போல். *

இ—ள். திமிரம் — இருளானது. புனைமாமணியை — அழகும் பெருமையும் பொருந்திய இரத்தினத்தை, அடக்கு அரிக்கு — உள்ளே அடக்கி வைத்திருக்கின்ற பாம்பிற்கு, பொருந்துந் தன்மையதும் — சாருந்தன்மையுடையதும், மின — பிரகாசித்தபடி, மேல் - தனக்கு முன்னிடத்தில், உமிழும் - உமிழ்ந்து வைத்திருக்கின்ற, கட்செவிக்கு - பாம்பிற்கு, விலகுந்தன்மையதும் - [நீ

ரத்தில்] நீங்குந்தன்மையுடையதும், ஆம்போல் - ஆதல்போல, தனி ஆனந்தம் - ஒப்பற்ற பிரஹ்மானந்தமானது, மனத்தின் தொடர்பு - [விஷயங்களோடு] மனத்திற்குண்டாகுஞ் சம்பந்தத்தையும், இந்தியத்தொடர்பு - சுரோத்திராதியிந்திரியங்களுக்குண்டாகும் சம்பந்தங்களையும், மாய்ப்போர்க்கு - கெடுப்பவர்களுக்கு, அடையுந்தன்மையது ஆம் - அநுபவிக்கப்படுந் தன்மையுடையதாம், அம்மாய்வு சாரார்க்கு - விஷயங்களோ டுண்டாகும் அம்மனத்தின் சம்பந்த நாசத்தையும் இந்திரியங்களின் சம்பந்த நாசத்தையும் பெறாதவர்களுக்கு, அகலுந்தன்மையது ஆம் - நீங்குந்தன்மையுடையதாம். எ—று.

பொ-ரை. இருளானது அழகும் பெருமையும் பொருந்திய இரத்தினத்தை உள்ளே அடக்கி வைத்திருக்கின்ற பாம்பிற்குச் சாருந்தன்மை யுடையதாய்ப் பிரகாசிக்கும்படி தனக்கு முன்னிடத்தில் உமிழ்ந்து வைத்திருக்கின்ற பாம்பிற்குத் தூரத்தில் நீங்குந் தன்மையுடையதுமாதல்போல ஒப்பற்ற பிரஹ்மானந்தமானது விஷயங்களோடு மனத்திற்குண்டாகும் சம்பந்தத்தையும் சுரோத்திராதி யிந்திரியங்களுக்குண்டாகுஞ்சம்பந்தங்களையும் கெடுப்பவர்களுக்கு அநுபவிக்கப்படுந் தன்மையுடையதாம். விஷயங்களோடுண்டாகும் அம்மனத்தின் சம்பந்த நாசத்தையும் இந்திரியங்களின் சம்பந்த நாசத்தையும் பெறாதவர்களுக்கு நீங்குந்தன்மை யுடையதாம். எ-று.

விஷயப்பிரத்தியக்ஷத்தில் சுரோத்திராதி யிந்திரியங்களின் சம்பந்தம் அந்தக்கரணத்தின் சம்பந்தமின்றி யுண்டாகாதாயினும் மனோராச்சிய வியவகாரத்திலுளதாகும் அந்தக்கரண மாத்திரத்தின் வியாபாரமும் ஜீவபோதமாமென்றறிவித்தற்கு "மனத்தின் தொடர்பு" எனப்பிரித்துக்கூறினர்.

கு-ரை. இரத்தினத்தையுடைய நாகத்திற்கு அவ்விரத்தினத்

னைத யுள்ளேயடக்குதல் இருட் சம்பந்தத்தினாலும், அதனை வெளிப் படுத்துதல் அவ்விருளின் நீக்கத்தினாலுங் காரணமாதல்போல, ஜீவ போத இழப்பு பிரஜ்ஞானானந்தானுபவத்தினாலும் ஜீவபோத இருப்பு அவ்வநுபவ முண்டாகாமைக்குங் காரணங்களாம். வ-ர். (26)

167. இக்கத் தூண்டி லிரைகவரி னிதுவே யிறுதி விளைக்கு
மெனச், சிந்தித் தறியா ததைக்கவர்ந்து சிக்கி யுடல்
விட்டொழிமீன் போ, லந்தோ கொடிய துயர்க்கேது
வாமென் றறியா ரவ்விடய, பந்தத் தழுந்திப் பிறப்பாழி
படிந்து மடிந்து சுழலுவரே. *

இ-ள். இக்கத் தூண்டில் இரை - இத்தூண்டிலினது முள்ளின் கண் கோக்கப்பட்டிருக்கின்ற வுணவினை, கவரின் - கிரகித்தால், இதுவே - இக்கிரகித்ததுவே, இறுதி விளைக்கும் என - [எமக்கு] மரணத்தை யுண்டாக்குமென்று, சிந்தித்து அறியாது - நினைத்துணராமல், அதைக்கவர்ந்து - அத்தூண்டிலினது முள்ளின் கண்ணுள்ள இரையை வாயாற் பற்றி, சிக்கி - அத்தூண்டில் முள்ளின்கண் அகப்பட்டு, உடல் விட்டு - தமது சரீரங்களை விடுத்து ஒழிமீன்போல் - மாளுகின்ற மீன்கூட்டங்களைப்போல, அந்தோ - ஐயோ, கொடிய துயர்க்கு - கொடுமையாகிய துக்கத்துக்கு, ஏது ஆம் என்று - காரணமாகுமென்று, அறியார் - உணரமாட்டாத மனிதர்கள். அவ்விடய பந்தத்து - அத்துக்ககாரணமாயுள்ள விஷயங்களாகிய பந்தத்தினுள்ளே, அழுந்தி - மூழ்கி, பிறப்பு ஆழிபடிந்து - [அதனால்] பிறவிச்சமுத்திரத்தினுள்ளே வீழ்ந்து, மடிந்து சுழலுவர் - கெட்டலைவார்கள். எ-று.

பொ-ரை. இத்தூண்டிலினது முள்ளின் கண் கோக்கப் பட்டிருக்கின்ற வுணவினைக் கிரகித்தால் இக்கிரகித்ததுவே எமக்கு மரணத்தை யுண்டாக்குமென்று நினைத்துணராமல் அத்தூண்டிலினது முள்ளின் கண்ணுள்ள இரையை வாயாற்பற்றி அத்தூண்

டில் முள்ளின் கண் அகப்பட்டுத் தமது சரீரங்களை விடுத்து மாளு கின்ற மீன் கூட்டங்களைப்போல ஐயோ! கொடுமையாகிய துக் கத்துக்குக் காரணமாகுமென்று உணரமாட்டாத மனிதர்கள் அத் துக்க காரணமாயுள்ள விஷயங்களாகிய பந்தத்தினுள்ளே மூழ்கி அ தனால் பிறவிச்சமுத்திரத்தினுள்ளே வீழ்ந்து கெட்டலைவார்கள். எ-று.

தூண்டில் ஆகுபெயர்.

க—ரை. விடயங்களைத் துக்க காரண மென்றறிந் தொழிக் காமல் அநுபவிப்பவர்கள் பிறப்பிறப்பின்கண்ணின்று நீங்கார்.எ-ம்.

168. வாளொான் றரிய வீரனுக்கு மருவு செறுநர்வலி தொ லைக்கு, மாளுந் திறமை யறு சிறுவற் ககலாத் துன்பே யடைவிக்குங், கோளில் வைராக் கியற்குமுத்தி கூடுஞ் சுகமு மனமொன்றே, நாளு மாசை யுடையோற்கு நல் கும் பிறவித் துயரமுமே. *

இ-ள். வாள் ஒன்று - வாளாயுதமொன்றுதானே, அரிய வீ ரனுக்கு - [பகைவரால் வெல்லுதற்கு] அருமையாகிய யுத்த வீர னுக்கு, மருவு செறுநர் - [தன்னிடத்துக்] கிட்டிய பகைவர்களு டைய, வலி தொலைக்கும் - பலத்தைக் கெடுக்கும், ஆளும் திறமை அறு - [அவ்வாளாயுதந்தன்னை யெடுத்து] ஆளுதற்குப் பலமில்லா த, சிறுவர்க்கு - பாலனுக்கு, [உறுப்புக்களை வெட்டிக் கொள்ளு தல் வாயிலாக], அகலாத்துன்பே - நீங்காத் துக்கத்தையே, அ டைவிக்கும் - உண்டாக்கும், [அதுபோல], மனம் ஒன்றே - மன மாகிய ஒருகருவிதானே, கோள் இல் - இடையூறற்ற, வைராக்கி யற்கு - வைராக்கியமுடையவனுக்கு, முத்தி கூடும் சுகமும் - மோக்ஷத்திற் கிடைக்கின்ற ஆனந்தத்தையும், நாளும் - அநுதின மும், ஆசையுடையோர்க்கு - [விஷய] இச்சை யுடையவனுக்கு,

பிறவித்துயாமும் - ஜனனத்தாலாகிய துன்பத்தையும், நல்கும் - கொடுக்கும். எ-று.

பொ-ரை. வாளாயுத மொன்றுதானே பகைவரால் வெல்லு தற்கு அருமையாகிய யுத்தவீரனுக்குத் தன்னிடத்துக்கிட்டிய பகைவர்களுடைய பலத்தைக் கெடுக்கும், அவ்வாளாயுதந்தன்னை எடுத்தாளுதற்குப் பலமில்லாத பாலனுக்கு உறுப்புக்களை வெட்டிக் கொள்ளுதல் வாயிலாக சீங்காத்துக்கத்தையே உண்டாக்கும். அதுபோல மனமாகிய ஒரு கருவிதானே இடையூறற்ற வைராக்கிய முடையவனுக்கு மோக்ஷத்திற்கிடைக்கின்ற ஆனந்தத்தையும் அநுதினமும் விஷய இச்சையுடையவனுக்கு ஜனனத்தாலாகிய துன்பத்தையும் கொடுக்கும். எ-று.

க-ரை. வாளொன்றுதானே வீரனுக்குச் சுகத்தையும் பாலனுக்குத் துக்கத்தையும் கொடுத்தல் போல மனம் ஒன்று தானே விடய விச்சையில்லாதவனுக்குப் பிரஹ்மானந்தத்தையும் அவ்விச்சையுடையவனுக்குப் பிறவித்துன்பத்தையுங் கொடுக்கும். எ-ம். (28)

166. எண்ணு முடலந் தாமெனவெண் ணிழிபா லந்தோ பி றந்தனம்பின், மண்ணு குவமென் றுள்ளி யுள்ளி மயங்க வேண்டா மியங்கு சிவ, நண்ணு முளதகூய சுகாக் தன் னி னனுகி நல்லடிமை, பண்ணு மின்னீர் துயரொழித்துப், பரமா னந்த மடைவீரே. *

இ-ள். எண்ணு உடலம் - தாமென்று கருதத்தகாத சரீரத்தை, தாம் என எண் - தமது சொரூபமென்று நினைத்த, இழிபால் - கெட்ட எண்ணத்தினாலே, அந்தோ - ஐயோ, பிறந்தனம் - [இவ்வுடலின்கண்] ஜனித்தோம், பின் - இனி, மண் ஆகுவம் என்

று - [இறந்து] மண்ணுய் விடுவோ மென்று, உன்னி உன்னி - நினைத்து நினைத்து, மயங்க வேண்டாம் - மனக்கலக்கமடைய வேண்டாம், அக்ஷய நகரம் தன்னில் - சிங்கிலிபட்டியில், இயங்கு சிவம் - [அன்பர்கள் நிமித்தம் மானுடச் சட்டை தரித்துச்] சஞ்சரிக்கின்ற பிரஹம சொரூபமானது, (முத்தானந்த ஞானதேசிக மூர்த்தியானது), நண்ணு உளது - எழுந்தருளியிருக் கின்றது, நணுகி - அவ்விடத் தடைந்து, நல் அடிமை பண்ணுமின் - மோக்ஷ சுகத்தைக் கொடுக்கின்ற அம்மூர்த்தியின் திருவடிக்குத் தொண்டு செய்யுங்கள், நீர் - முமுக்ஷுக்களாகிய நீங்கள், துயர் ஒழித்து - பிறவித்துக்கத்தை நீக்கி, பரம ஆனந்தம் - உயர்ந்த சுகமயமாகிய மோக்ஷத்தை, அடைவீர் - பெறுவீர்கள். எ-று.

பொ-ரை. தாமென்று கருதத்தகாத சரீரத்தைத்தமது சொரூபமென்று நினைத்த கெட்ட எண்ணத்தினுலே ஐயோ! இவ்வுலகத்தின்கண் ஜனித்தோம் இனி இறந்து மண்ணுய்விடுவோம் என நினைத்து நினைத்து மனக்கலக்கமடைய வேண்டாம். அக்ஷய நகரத்தின் கண் அன்பர்கள் நிமித்தம் மானுடச் சட்டை தரித்துச் சஞ்சரிக்கின்ற பிரஹம சொரூபமானது (முத்தானந்த ஞானதேசிக மூர்த்தியானது) எழுந்தருளியிருக்கின்றது. அவ்விடத்தடைந்து மோக்ஷ சுகத்தைக் கொடுக்கின்ற அம்மூர்த்தியின் திருவடிக்குத் தொண்டு செய்யுங்கள். முமுக்ஷுக்களாகிய நீங்கள் பிறவித்துக்கத்தை நீக்கி உயர்ந்த சுகமயமாகிய மோக்ஷத்தைப் பெறுவீர்கள். எ-று.

க-ரை. முமுக்ஷுக்களே முத்தானந்த ஞானதேசிக மூர்த்திக்குத் தொண்டு செய்து மோக்ஷசுகம் அடையுங்கள். எ-ம். (29)

**170.** சிதம்பரமுஞ் சிவப்பிரகா சமுமுத்தா னந்தமுமாந் தே
சிகேச, சிதில்சத் துமெய்யறிவின் மயமெயரான் மூன்

றேனு மேக மாகி, யதிதகினை முப்பெயர்கண் மருவி
டினு மொருபொருளா மென்னி யென்ற, னிதயமிவ் லருவ
வாவ ரடிவாழி வாழியென்று மிந்நூன் மாகேதா. *

இ-ள். எதிரில் சத்து - பாரமார்த்திக சத்து, மெய் அறிவு - குன்றாத சித்து, இன்பம் - விட்டுநீங்காத ஆனந்தம், [என்னுமிவை கள்], பெயரால் மூன்றேனும் - நாமங்களினாலே மூவகையாயிருப் பினும், ஏகம் ஆகி - சொரூபத்தாலொன்றேயாகி, வதிதல் என - இருத்தல் போல, சிதம்பரமும் - சிதம்பரமென்னுந் திருநாமத்தை யும், சிவப்பிரகாசமும் - சிவப்பிரகாசமென்னுந் திருநாமத்தையும், முத்தானந்தமும் - முத்தானந்தமென்னுந் திருநாமத்தையும், ஆம் தேசிக ஈசர் - [உடையவர்கள்] ஆகிய குரு மூர்த்திகள் மூவரும், முப்பெயர்கள் மருவிடினும் - [சரீரமாகிய உபாதியைக்கொண்டு] மூன்று திருநாமங்களைப் பொருந்தினும், ஒரு பொருளா - வியாபக சச்சிதானந்த வடிவ ஒரே வஸ்துவாக, என்தன் - என்னுடைய, இதயம்மன்னி இலகுறுவர் - இருதயத்தில் நிலைபெற்று விளங்கு வார்கள், இவர் அடி வாழி - இவர்களுடைய திருவடிகள் [எக்கா லமும்] வாழ்க, இந்நூல் என்றும் வாழி - இந்த ஆத்மபோத வி ளக்கமென்னுஞ் சாஸ்திரமும் எக்காலமும் வாழ்க. எ-று.

பொ-ரை. பாரமார்த்திக சத்து, குன்றாத சித்து, விட்டுநீங் காத ஆனந்த மென்னுமிவைகள் நாமங்களால் மூவகையாயிருப்பி னும் சொரூபத்தாலொன்றேயாகி யிருத்தல்போலச், சிதம்பர மென்னுந் திருநாமத்தையும் சிவப்பிரகாசமென்னுந் திருநாமத் தையும் முத்தானந்தமென்னுந் திருநாமத்தையும் உடையவர்களா கிய குருமூர்த்திகள் மூவரும் சரீரமாகிய வுபாதியைக்கொண்டு மூன்று திருநாமங்களைப் பொருந்தினும் வியாபக சச்சிதானந்த வடிவ ஒரே வஸ்துவாக என்னுடைய இருதயத்தில் நிலைபெற்று விளங்குவார்கள். இவர்களுடைய திருவடிகள் எக்காலமும் வாழ்

க. இந்த ஆத்துமானந்த விளக்கமென்னுஞ் சாஸ்திரமும் எக்காலமும் வாழ்க. எ-று.

க-ரை. நூலாசிரியர் தமது குருமூர்த்திகளையும் கிரந்தத்தையும் வாழ்த்தினது. எ-ம். (30)

(9) உருவது கூறலியல் முற்றிற்று.

ஆத்துமாநந்த விளக்க மூலமும் காண்டிகை யுரையும் முற்றின

## பாட்டு முகக் குறிப்புச் செய்யுள்.

திருநாவு மைபின்னை தமப்பிறந்தான் செறிகள் பொன்
சொரிந்த பெண்ணிக்கு போப்பா மன்று, இந்
திரன் வைநகர்க் கோருராவெர் ததையவுடை காவேரி
விராபோக்கு வின்று பகைமை, மறுகோடா யாவா
சை பற்றுதிலக் கன்னுடன் நீக செய்து கொட்டியிச்
சை யுட்ட செப்பொ, கருமொல்லா மன்றுவெங் குங்
கன்றும் வெப்பிறந்த பர்சி வேசலின் குன்று
மென்ன. (1)

மெய்யரின் பாபட்ட வத்திசொா நசிந்தியுர் மெ
ரிசங்க நிர்ரவிரியே ராபன் விடயர், நல்லிமுற்றி மிச்
சை கொபட்டு விடபலிரான்திறன் தெவிடசட்டு மனைபார்த்த
வுன்றுபா கொரிசன் பக்க, செரன்றுர நு பொன்னி
கன்னி சகரிபர காணற்றுளமுமன்னுபத்தர நாகங் கட
வி வீர, மிர்சர நிதயாக்ல விசேகநர்னா பேகவயன்
ன சொருபரன்ட சானனதாலு சிற்சொரான்டோர். (2)

அன்னியசெற் றிரகத்தில் வேடவிட பயப்பா லிரச்சி
புனி திருப்ப விடய மட்டு செப்புர், பன்று மழ
குற வான மாக்குமறை வுள்ளம் பற் சவைாயின்பகன்
மா தாரா கில்லா, இன்பேய மற்றுரா வென்றுமின்ப
வொன்றுமொழிச் சர்சிதாத்து மாசர்க் கரைபோட்டாக,
மன்னசர்க்க செப்பாக்கி பக்கமிவ்வொ வெனக்கோ
து மாரித்திறுள்ளனசா வெ ளிதுமைய. (3)

சிருகாளி தேககுருட் டுக்கிழவி காயாதீத ஸையபோக்கி சற்றேறபுறப் போத வோட, திருமாற்ற நாமாசக் கா மள்ளி னிங்கு தேக பட்டிபெல்லா கட்டற்ற தன்னியானை வருமாடே விடயானு வோரோர்கோ டானுபன்னி நாடு சின்ப நாமனின மனத்தி னிந்த, அருவாளொன் றெண் ணைவு சிதம்பரமு மிவைக ளாத்துமாநந் தவிளக்கத் தின் முதற் குறிப்பே. (4)

முதற் குறிப்புச் செய்யுள் முற்றிற்று.

# பாட்டு முதற்குறிப்பகராதி.


| பாட்டு. | பாட்டு நெ. | பக்க நெ. | பாட்டு. | பாட்டு நெ. | பக்க நெ. |
|---|---|---|---|---|---|
| அச்சமுடமாகி | 134 | 199 | இந்தியமன்று | 51 | 77 |
| அஞ்ஞானந் | 117 | 174 | இல்லாதகானல் | 115 | 172 |
| அடபடிறும் | 105 | 157 | இன்பதுமபாலை | 112 | 168 |
| அண்டமனறு | 92 | 138 | இன்பக்கொழி | 163 | 235 |
| அண்டோர் | 96 | 144 | இன்பேபடிவு | 116 | 123 |
| அத்திகோலா | 49 | 74 | இப்பப்பிரதிமையோ | 119 | 177 |
| அந்தக்கரணம் | 84 | 128 | இன்னங்குருவா | 2 | 3 |
| அரவவ்வறிவா | 19 | 28 | ஈங்குபொன் | 150 | 219 |
| அருக்கற்கொளி | 15 | 21 | உட்டணக்குட் | 34 | 51 |
| அல்லுயிர்பசுவுட் | 28 | 41 | உண்ணுடிவார் | 37 | 55 |
| அன்னமே | 14 | 19 | உள்ளாந்தனை | 110 | 165 |
| ஆசைப்பேய் | 156 | 226 | உள்ளன்பிலேமா | 133 | 198 |
| ஆசையனலே | 27 | 40 | உள்வெளியும் | 52 | 78 |
| ஆத்துமாவி | 122 | 181 | உள்ளிலக்கை | 149 | 218 |
| ஆனந்தபரம் | 108 | 163 | உன்னைப்புறமு | 68 | 105 |
| இப்பாத்துமா | 44 | 68 | உன்னைப்புறநு | 45 | 69 |
| இச்சையொழி | 33 | 50 | ஊனிலையும் | 5 | 8 |
| இந்தக்கானம் | 167 | 241 | ஊழுபடா | 72 | 110 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எங்குநிறை | 106 | 159 | கடலிற்செறு | 82 | 124 |
| எங்கும்பரபொ | 38 | 56 | கட்டற்ற | 154 | 223 |
| எட்டியெட்டி | 61 | 96 | கட்டி ஞாநில் | 65 | 101 |
| எண்ணம்பிரி | 90 | 136 | கண்ணுறுநட | 6 | 9 |
| எண்ணுவுடலர் | 169 | 243 | கண்ணூந்செவி | 39 | 57 |
| எந்தவிடயம் | 17 | 24 | கல்லாவினின்பா | 113 | 169 |
| எப்பொழுது | 35 | 53 | கனாவிரசம் | 88 | 132 |
| எல்லாந்தா | 153 | 222 | கன்னிச்சவி | 74 | 112 |
| எல்லிமெல | 101 | 152 | காணாற்கரிய | 93 | 139 |
| எல்லோன் | 129 | 193 | காயாதிகமா | 140 | 207 |
| எள்ளுச்சு | 63 | 99 | காணாற்சல்மா | 77 | 117 |
| எனக்கிது | 130 | 193 | காணில்விக | 137 | 203 |
| என்றும் | 118 | 176 | குணமுங்குறிப | 78 | 119 |
| ஏகாசல | 56 | 83 | குருட்டுக்கிபூவி | 139 | 206 |
| ஒட்டாதபோ | 124 | 187 | குளிரகற்று | 4 | 6 |
| ஒட்டிருப்பதறி | 32 | 47 | கூத்தில் | 98 | 147 |
| ஒருநாழிகை | 16 | 23 | கோடானுகோடி | 160 | 231 |
| ஒருபெருருவ | 13 | 18 | கோடுதொறும் | 25 | 36 |
| ஒன்றாகினை | 120 | 179 | சங்கற்பமே | 53 | 79 |
| ஓடகமு | 145 | 214 | சச்சிதானந்த | 121 | 180 |
| ஓயார்தோடு | 26 | 38 | சத்தாகிநோக் | 125 | 188 |
| ஓரோர்வி | 159 | 229 | சத்தாகியாம் | 148 | 217 |
| ககனங்காவ | 75 | 114 | சர்க்கரையை | 123 | 185 |
| கங்குலெல்லோ | 10 | 15 | சற்றேறயுளம் | 143 | 212 |

| பாட்டு. | பாட்டு இ-ர் | பக்க இ-ர். | பாட்டு. | பாட்டு இ-ர் | பக்க இ-ர். |
|---|---|---|---|---|---|
| சிதம்பர மு | 170 | 244 | நாகஞ்சரி | 81 | 122 |
| சில்லோர | 95 | 142 | நாடிய சுக்க | 162 | 233 |
| சிவிருட்டு | 135 | 200 | நாமவர்ந்து | 164 | 236 |
| சீசேவசர் | 43 | 68 | நாமமோவன | 147 | 218 |
| செருப்புடை | 91 | 137 | நிர்மயசொ | 54 | 80 |
| செல்லுமிட | 31 | 46 | நிராகாரமா | 21 | 31 |
| செற்றிற்றாவி | 97 | 146 | நீ ஒப்பேப | 165 | 237 |
| சொற்றுடை | 8 | 12 | நிண்மாறு | 47 | 72 |
| சொப்பனத்தா | 50 | 76 | நிரவிடியுத்து | 83 | 126 |
| ஞானமடைக்கா | 94 | 141 | நீநிழிற்றி | 20 | 29 |
| தத்துவமசி | 41 | 60 | நெய்த்தட்டில | 126 | 189 |
| தப்பவுடலே | 18 | 26 | பனைசவமெ | 24 | 35 |
| தயைப்பிரகா | 3 | 4 | பஞ்சமலை | 111 | 167 |
| தன்னிடத்தி | 155 | 224 | பழுப்பாழி | 100 | 150 |
| திருட்டுற்றிரி | 103 | 154 | பட்டுமலேட | 152 | 221 |
| தின்னத்தனையு | 29 | 44 | பற்றற்றிலை | 80 | 121 |
| தேகமவத்தை | 138 | 205 | பற்றுமிற்றை பாரவ | 42 | 67 |
| தேகம்மனைக்க | 151 | 220 | பற்றுமிற்றைநீசி | 128 | 191 |
| தேவருளலி | 85 | 129 | பரக்குமுற்ற | 71 | 108 |
| கல்லவழுத்து | 86 | 130 | பழுத்தபீட் | 107 | 160 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பார்த்தனிட | 67 | 104 | மனத்தின் | 166 | 239 |
| பாலொடு | 69 | 106 | மனத்தே | 66 | 103 |
| பிச்சைசக்கலே | 60 | 95 | மனம்வேறு | 1 | 2 |
| பித்திகையை | 132 | 196 | மன்னிய | 161 | 232 |
| பிரமைத்தாரோ | 76 | 116 | மன்னுமனிய | 79 | 120 |
| பிரியமுடன் | 55 | 82 | மாடேறி | 157 | 227 |
| புத்திமகளின்று | 127 | 190 | மாதாரக | 114 | 171 |
| புலியின்றோல் | 102 | 153 | மாற்றமொழி | 146 | 215 |
| புறப்போதமஞ் | 144 | 213 | முற்றிப்புறத்து | 59 | 93 |
| பெண்ணினை | 9 | 14 | மெய்யினை | 136 | 202 |
| பேசுமெதி | 89 | 134 | மெல்லவடை | 46 | 70 |
| பையகம் | 141 | 209 | யாவுந்தோ | | 1 |
| பொய்யான | 11 | 15 | வாக்குமனு | 109 | 164 |
| பொல்லாமன | 36 | 54 | வாளொன்ற | 168 | 242 |
| பொன்னிற | 73 | 111 | விக்ஷேப | 87 | 131 |
| பொன்னை | 7 | 10 | விடயமன்று | 99 | 149 |
| போக்கியலா | 142 | 211 | விடயமென்று | 64 | 100 |
| போக்குவர | 22 | 32 | விடயமொன்றும் | 104 | 156 |
| மட்டறவெங் | 48 | 73 | விடயமொன்றே | 62 | 97 |
| மண்டுகச் | 30 | 45 | விடாகார | 58 | 89 |
| மண்ணுதிகடா | 70 | 107 | விடயானுபவ | 158 | 228 |
| மண்ணுதியா | 12 | 16 | வின்னுள்ள | 23 | 33 |
| மண்ணீரழல் | 57 | 87 | வெய்யிற்பூ | 40 | 59 |
| மதுவாரி | 131 | 195 | | | |

# ஆத்துமாநந்த விளக்கம்

## பரிசோதனைப் பத்திரம்.

---

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 7 | 10 | குடவாழ்வாம் | குடிவாழ்வாம் |
| 13 | 7 | மோகத்தை | மோகத்தைக் |
| 18 | 18 | இரண்டையம் | இரண்டையும் |
| 19 | 24 | பிறன்றசடம் | பின்றுசடம் |
| 22 | 17 | பிரகாசம் | பிரகாசம் |
| 23 | 24 | ஒழியுமின | ஒழியுமின் |
| 24 | 17 | 16 | 2 |
| 26 | 22 | கிட்டவன் | விட்டவன் |
| ,, | 24 | ஆகிய | ஆதிய |
| 28 | 10 | அவநடய | அவற்டய |
| 39 | 20 | நீகக | நீங்க |
| 71 | 2 | யற்நிலங்கு | நிலங்கு |
| 80 | 2 | ஆகமா | ஆத்துமா |
|  | 26 | விடமையையும் | வின்மையையும் |
| 84 | 14 | விளக்கத்தரல் | விளக்கத்தால் |
| 85 | 26 | இருக்கின்றது | இருக்கின்றன |
| 86 | 11 | சொரூபமாக | சொரூபமாகிய |
| 87 | 25 | விவேகதகி | விவேகத்தி |
| 88 | 12 | எகாக்கிர | ஏகாக்கிர |
| 89 | 26 | இத்திரிய | இந்திரிய |
| 90 | 2 | தன்னைச் (சாக்ஷி) | தன்னை (ச்சாக்ஷி) |
| 93 | 21 | யுரி | யுரிய |
| 125 | 5 | இதனைகற் | இதனைக் |

| | | | |
|---|---|---|---|
| 155 | 21 | எனம் | எனப் |
| 164 | 26 | யமைமந்த | யமைத்த |
| 167 | 8 | சஷா | சக்ஷா |
| 177 | 16 | மோஷ | மோக்ஷ |
| 196 | 23 | நேந்திரேந்திரியம் | நேத்திரேந்திரியம் |
| 198 | 17 | அன்னியமாக | அனனியமாக |
| | 24 | அவ்கு | அங்கு |
| 199 | 7 | அன்னிய | அனனிய |
| 204 | 23 | மலனரயும் | மலரையும் |
| 217 | 16 | மோராகா | மோராகார |
| 219 | 7 | பொறுந்தாத | பொருந்தாத |
| 229 | 5 | சேராவிறக்குக் | சோராவிறக்துக் |
| 241 | 1 | உற்றதுரைத்தலியல் | உறுவதுகூறலியல் |
| 243 | 1 | உற்றதுரைத்தலியல் | உறுவதுகூறலியல் |
| | 18 | 166 | 169 |
| 245 | 1 | உற்றதுரைத்தலியல் | உறுவதுகூறலியல் |